ஆகிறது, ஆணை அறிவிக்கிறதென்ன; *க. (விபீஷணன்) பரமபராஜ்ஞாஶாதிஶப்தம்போலே விரோதி விபீஷணனென்றாய், ராவணாதிகளை பயப்படுத்துவேனென்று நினைத்திருங்கோளென்று ஸர்வ பயஶக்திதானாகிலுமாம். *உ. (விபீஷணன்) "பீஷாஸ்மாத்வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய:" என்றும் -"பயம் பயானாம் பீஷணம்" என்றும் - பரமபயஜ்ஞருமாய், ஸர்வபயஜ்ஞருமான பெருமாள் பரிகரத்துக்கும்வேறொருவர்க்கும் பயப்படவேணுமோ? *ங. (விபீஷணன்) ஆணையுஞ்செங்கோலும் நடத்துகைக்கு, "மஹாபாணி:" என்று-ஒருதடிகாரனென்றுசொல்லுங்கோள்-அன்றிக்கே, *ச. (விபீஷணன்) என்று-ஸர்வஜ்ஞனென்று அறிவிக்கமாட்டீர்கோளாகில், "உத்பாத மஹாபாணி:" என்று-கையுந்தடியுமா யொருத்தன் பயப்படும்படி. நின்றானென்றாகிலுஞ் சொல்லுங்கோள். §நிதானஜ்ஞனை ஶிஷ்யக்கின்முன் வ்யாயிஸ்தன் தான்பண்ணின ஸர்வஶங்களைச்சொல்லி அதுக்கிடாக பரிஹரித்துக் கொள்ளுமாப்போலே, "நிவாத

---

§ நிதானஜ்ஞனை - ரோகஸ்வரூபமறிந்தவனை.

ணம் ஜோஷஜம்ஹிஷக்" என்றும்-"மருத்துவனாய் நின்றமாமணிவண்ணன்" என்றும்-பேசப்படுகிற ஸர்வஜ்ஞன் முன்பு ஸம்ஸாரிஷ்வஹோஷத்தை முன்னிட்டு ரக்ஷித்துக்கொள்ளுமத்தனைபோக்கி, நன்மையை முன்னிடுகைக்கொன்றுமில்லையிறே. ஆகையாலே,*ரு.(விபீஷணம்) "நநிஹிதம்கஶ்சித் தவஸ்வியோரக்ஷஸஹஸ்ரஶோயந்நாயாவ்யாயி" என்றும்-"கொன்றேன்பல்லுயிரைக்குறிக்கோளொன்றிலாமையினால்" என்றும்-என்னுடைய பூர்வவ்ருத்தஜாதங்களிவையென்னுங்கோள்.

*சு.(விபீஷணம்)"ராக்ஷஸம்வ்யஸநம்வ்ருத்தம்ஹ்ருதாரம்யஃவரிதம் ஜேஜ" என்றும் "உவர்த்தநீர்போல வென்றனுற்றவர்க் கொன்றுமல்ன்" என்றும்,ஸோதரனான ராவணனகப்பட வெருவும்படி பண்ணின தோஷதூஷி னென்னுங்கோள்.

உன்னுடைய வ்ருத்தஜாதங்களிவையாகில் பெருமாள் திருமுன்பே யறிவிக்கும்படி என்னென்னில்; *க.(உபஸ்திதம்) "தூராவாரோஉவிஸர்வஸ்ரீக்ருதஸ்தோநாஸ்திகஃ வாரா|ஸரோஶ்ருயேதாதிதேவம் ஶ்ரயாஶரணம் யதி| நிவேதயஷம் விஜிதம்ஜனாம்" என்கிறபடியே முன்னப்படியேயாகிலும், ஸமவதாஶ்ரயணம் பண்ணினால் நிவேதஷனாயிற்றிருப்பது; அப்படிக்கு, * தூயோமாய்வந்துநின்றோமென்றுஞ் சொல்லுங்கோள்.*உ.(விபீஷணவுபஸ்திதம்) முன்னேவந்துநின்றேனென்னுங்கோள். நாலடியும்வந்துபெருமாளுக்கு உபகரித்தேனென்றுசொல்லுங்கோள்.வாராதேஜலதியிலேயிருந்து ஶரணமென்றேனாகில் கடற்கரை மடுவின்கரைப்பட்டதுபட்டு அரைகுலையத்தலைகுலைய அவர்வந்து விழவேண்டாவோ?*ந.(உபஸ்திதம்) எல்லைக்குள்ளேவந்தபின்பு "ஸ்திதோஉஸ்மிதஸஞ்ஸஹஃ" என்னும்படிநிலைபெற்றேன்.*ச.(உபஸ்திதம் நிவேதயத)"என்னிலைமையுரையாய்" என்கிறபடியே,என்னுடைய வ்யவஸ்திதியை அறிவியுங்கோள். *ரு. (உபஸ்திதம் நிவேதயத)மதியாத்தனமாக வடுத்துக் கொடுபுகுராதே திருவுள்ளம் பார்த்துப்புகுரவேணுமே என்று உங்களருகேநிற்கிற நிலையைச் சொல்லுங்கோள். *சு.(உபஸ்திதம் நிவேதயத)எதிர்சூழல் புக்குத்திரியாதபடி $ உடுத்தணித்தாக வந்தபடி சொல்லுங்

$ உடுத்தணிக்காக - அசேதனம்போல் பாதந்திரனாய்.

கோள். * எ. (உபாஸ்ரிதம் நிவேதயத) தக்தாமைத்தேடிக்கொடுக்கச் செய்தேயும், "ஜநநீ ப்ரதிக்ஷ்யாத்ஸாத்ய ஸம்ஸிவாஸோஷ்டிர்க்" என்றும்-"ஓடினேனேடி" என்றும்-பிறகிட்டுப்போமவர்களை அறிவித்த நீங்கள் இருந்தவிடந்தேடி நானேவந்த வென்னை அறிவிக்கலாகாதே. *அ. (விபீஷணோபஸ்ரிதம் நிவேதயத) ராவணன் தம்பியாய் நடுவேயோரிடத்திலே யிருந்து ஆள்வரவிட்டு ஸாமிவிஷ்ரும்பண்ணிச் செய்யலாம்படிக்குப் பிடியாள்கொண்டு பின்னைவருகையன்றிக்கே, "உன்னையெய்தியென் தீவினைகள் தீர்ந்தேன்" என்றும்-"பொன்னடியை யடைந்துய்ந்தேன்" என்றும்-"ஆலின்மேலாலமர்ந்தா னடியிணைகள்" என்றும் சொல்லுகிறபடியே, ஸமம் பின்னே பட்டதும் படைப்புகுர்ந்துகொண்டு நின்ற நிலையை விண்ணப்பஞ்செய்யுங்கோள்.

ஆகவித்தால் ஸமவக் ஸரோஸ்ரயணம் பண்ணுவார்க்கு ஸாமவதர் முன்னிலையாகப் பெறவேணுமென்னும் அர்த்தஞ்சொல்லிற்றாயிற்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்,

யுத்தகாண்டம். கஎ-ம் ஸர்க்கம் - கசு-ம் ஸ்லோகம்.

அவதாரிகை. மஹாராஜர், பெருமாள் பக்கல் பரிவாலே ஸ்ரீ விபீஷணாழ்வானுடைய அனுகூல பாஷணங்களை விப்ரலம்ப மென்று புத்திபண்ணி தந்நிரஸநார்த்தமாகப் பெரியபதற்றத்தோடே கூட பெருமாளுக்கு ஒருவார்த்தை விண்ணப்பம்செய்தாரென்கிறது.

உஅ. ஏதத்து வசநம் ஸ்ருத்வா ஸுக்ரீவோ லகுவிக்ரம: |
லக்ஷ்மணஸ்யாக்ரதோ ராமம் ஸம்ரப்த இதமப்ரவீத் ||சக||

அர்த்தம். ஸுக்ரீவ: - ஸுக்ரீவன், ஏதத் - இந்த, வசநம் - சொல்லை, ஸ்ருத்வா - கேட்டவுடனே, லகுவிக்ரம: - சீக்கிரமாகபராக்ரமித்தவராய், லக்ஷ்மணஸ்ய - லக்ஷ்மணனுடைய, அக்ரத: - எதிரில், ராமம் - ஸ்ரீராமனைக்குறித்து, ஸம்ரப்த: - பரபரப்புடன், இதம் - இந்தவார்த்தையை, அப்ரவீத் - சொன்னார்.

வ்யா. (ஏதத்வசநம்ஸ்ருத்வா) "ராகவம்ஸரணம்கத:" என்கிற அவ்வார்த்தையைக்கேட்டதற்குப் பின்பு மஹாராஜர்வேறு

பட்டரென்கிறது, "விஜயிஷ்வா ஹநூமதே" என்கிறவிடத்தில் வானரனுமல்லன் ராக்ஷஸனுமல்லன், சத்ருவென்று நிர்ணயித்தபோது கூச்சத்தாற் பிறந்த விக்ருதிபோலன்றிறே; இதுதான் வாயகைத்தை மறைத்துப் பெருமாள்தன்னை ஸ்நேஹதென்று ஸ்வீகரிக்கும் வார்த்தையைச்சொல்லி அம்முகத்தாலே நலியவந்தானென்று பிறந்த விக்ருதியிறே. (ஏவமுக்த்வா) இவன் சரணாகதி பெருமாள் செவிப்படுமாகில் பின்பு மீட்கவொண்ணாது; காமந்த ஸ்வபத்துக்கு முற்படவேணுமென்று சடக்கெனப் போனரென்கிறது. (லக்ஷ்மண ஸ்ரீஸமூதத்) தம்மோபாதி பரிவரான இளையபெருமாள் ஸந்நிதியிலே. அவரும் ஸ்நேஹபக்ஷியானவராகையாலே அவரையுங் கூட்டிக்கொள்ளுகிறார். "ஹதவ்யோ தோஷமாப்னோதி" என்றவரிறே. (ராமம்) "ராவணம் சரணங்கத:" என்கிற வாக்ய ச்ரவணத்தாலுண்டான ஸந்தோஷத்தாலே ஸ்ரீராமராயிருக்கிறவரை. (ஸம்ரப்த) பெருமாளுக்கு மிவர்போகிறவழியை ஸ்வீகரிக்கவொண்ணாதபடி@ அடர்த்துக்கொண்டு. அதாகிறது-ராஜ்யம் விட்டுப்போந்து §குவால்நாளுண்டோ? ராஜநீதியைமறந்ததோ? இவ்விடம் ஜனஸ்தானமன்றோ? ராவணன்செய்யு மநீதிகளறியவில்லையோ? ஒருத்தன் சரணமென்னுங் காட்டில் இவற்றைமறந்ததோ? என்றாற்போலே சொல்லுகை. (அப்ரவீத்) வந்தவன் ராக்ஷஸேந்த்ரனாயிருந்தான்; ஸ்நேஹபாஷணமும் பண்ணினன்; இவனாயிருக்கிறானேவென்று ஸந்தேஹித்துப் பெருமாளுக்கு இவன்வரவு சொல்லுகையன்றிக்கே, சத்ருவென்றே நிச்சயித்து தசவதிஹாரத்துக்காகச் செய்யவேண்டும் ஹிதத்தைச்சொன்னர். பெரியபெருமாளைப் பேரிட்டு இளையபெருமாளைநோக்கி அடர்த்து வார்த்தை சொன்னாற்போலே சொன்னரென்னவுமாம்.

தாத்பர்யம்....சுக்ரீவன், விபீஷணனுடைய இச்சொல்லைக்கேட்டு சீக்கிரம் எழுந்து ஸ்ரீராமலக்ஷ்மணர்களிடம் சென்று பெருமாளைப் பார்த்து பரபரப்புடன் இந்தவார்த்தை சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

@ அடர்த்துக்கொண்டு - மேல்விழுந்து. § குவால்நாளுண்டோ - அநேகநாளாயிற்றோ.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௧௮-ம் ஸ்லோகம்.

ஸமுதாயிகை. இவர்களால் நம்மை யொன்றும் செய்யவொண்ணாதபடி தேவர் மந்த்ராதிகளிலே ப்ரவர்த்திக்கவேணுமென்று சொல்லி அவ்வளவிலே நில்லாத பரிவாலே பத்ராஶாஸநம் பண்ணுகிறார்.

மந்த்ரே வ்யூஹே நயே சாரே யுக்தோ பவிதுமர்ஹஸி |
வாநராணாஞ்ச பத்ரந்தே பரேஷாஞ்ச பரந்தப || ௪௨

அர்த்தம். பரந்தப - சத்ருக்களைத் தபிப்பிக்கிறவரே! மந்த்ரே - யோசனையிலும், வ்யூஹே - ஸேநாவிந்யாஸத்திலும், நயே - உபாயத்திலும், சாரே - தூதிலும், யுக்த: - பராக்கில்லாதவராக, பவிதும் - ஆகுகைக்கு, அர்ஹஸி - யோக்யராகிறீர். தே - உமக்கும், வாநராணாஞ்ச - வானரர்களுக்கும், பரேஷாஞ்ச - இதரர்களுக்கும், பத்ரம் - மங்களமுண்டாகட்டும்.

வ்யா. (மந்த்ரே) நீதிவித்துக்களான ஸசிவரோடே ரஹஸி ராஜகார்யம் நிரூபிக்கை. (வ்யூஹே) யுத்தயோக்யமான ஸேனைகளை நிலையிலே நிறுத்துகை. (நயே) ஸாமாத்யுபாயத்தாலே கார்யம் நடத்துகை. (சாரே) பராபிப்ராய பரிஜ்ஞாநார்த்தமாக நிபுணரான சாரர்களை ஏவுகை. (யுக்தோ பவிதுமர்ஹஸி) முன்போலே நமக்கெதிராரென்று இருக்கவொண்ணாது; ராஜக்ருத்யங்களிலே அவஹிதராகையோக்யம். தைவபௌருஷங்களிலே பௌருஷத்தை ப்ரதாநத்தாலே சொல்லி, அதுக்கு தைவஸஹாயத்தை ஆஶாஸிக்கிறார் உத்தரார்த்தத்தாலே. (பத்ரந்தே) ஸர்வலோக நாயகரான தேவர்க்கு மங்களமுண்டாகவேண்டும். (வாநராணாஞ்ச) "ராகவார்த்தே பராக்ராந்தா ந ப்ராணே குர்வதே தயாம்" என்றிருக்கும் வாநரமஹாராஜாதிகளுக்கும். (பரேஷாஞ்ச) அல்லாத ருக்ஷாதிகளுக்கும் பத்ரமுண்டாகவேணும். (வாநராணாம் பரேஷாஞ்ச விஷயே மந்த்ரவ்யூஹநயசாரே யுக்தோபவிதுமர்ஹஸி) வாநரங்களுடையவும் சத்ருக்களுடையவும் விஷயமாக மந்த்ராதிகளிலே அவஹிதராகவேணும். (பத்ரந்தே) இவரிப்போது பத்ரமாக நினைக்கிறது சரணமென்றவனைக் கைக்

கொள்ளாதொழிகை. (ராகவ) ஶத்ருக்களுடைய ஸேனைக்கூட்டம் மண்ணுண்ணும்படியன்றோ தேவர் ப்ரதாபமிருக்கும்படி. இத்திருநாமம் யதார்த்தமாகவேணும். ௪௨.

தாத்பர்யம்.—தேவரீர் முன்போலிருக்கக்கூடாது. தூதனால் சத்ருபலத்தை யறிந்து தன் மந்திரிகளோடு யோசித்து, ஸேனையை வ்யூஹமாய் வைத்து, நாலுஉபாயங்களையும் செலுத்தி, இப்படி ஜாக்ரதையாய் இருக்கவேண்டும். நமக்கெல்லாருக்கும் மங்களமுண்டாகட்டும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம்-௪௩-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. சிலர் ஶரணாகதராய் வந்தார்களாகில் நீரிப்படி ஸந்தேஹிக்க வுமக்கு வந்ததென்னென்ன; இவர்கள் ஶரணாகதரேனும் விஶ்வஸிக்கவொண்ணாதென்கிறார்.

மூ. ப்ரச்சந்நசாரிணோ ஹ்யேதே ராக்ஷஸா: காமரூபிண: |
ஶூராஶ்ச நிக்ருதிஜ்ஞாஶ்ச தேஷு ஜாது ந விஶ்வஸேத் || ௪௩

ஏதே - இந்த, ராக்ஷஸா:-அரக்கர்கள், ப்ரச்சந்நசாரிண: - மறைந்து நடக்கிறவர்களாயும், காமரூபிண: - இஷ்டமான ரூபத்தையுடையவர்களாயும், ஶூராஶ்ச-பராக்ரமிகளாயும், நிக்ருதிஜ்ஞாஶ்ச-வஞ்சகமான உபாயத்தை யறிந்தவர்களாயும், ஹி - இருக்கிறார்களன்றோ? தேஷு - அவர்களிடத்தில், ஜாது - ஒருகாலும், ந விஶ்வஸேத்-நம்பிக்கை செய்யக்கூடாது.

வ்யா. (ஏதே ப்ரச்சந்நசாரிண:) ஏதே-என்று ப்ரத்யக்ஷவிஷயமானவர்களை ப்ரச்சந்நசாரிண:-என்கிறபடி யென்னென்னில்; இவர்கள் காண்கிறவளவல்லர்; || பதிபடை யுண்டென்னும் நினைவாலே. (ஏதே) இவர்களுடைய ஆகாரமே அவிஶ்வஸநீயதையைச் சொல்லித்தாரா நின்றதென்கை. இவர்கள் நாலைந்துபேர்வந்து நம்மைச் செய்வதென்னென்னில்; (ஶூராஶ்ச நிக்ருதிஜ்ஞாஶ்ச) நேர்கொடு நேர் நலியமாட்டார்களாகிலும் வஞ்சிக்க விரகறிவார்கள். உமக்கு செவ்வையிலுண்டான வஹியோம மித்தனையும் வஞ்சனத்தி

|| பதிபடை - மறைந்தஸேனை.

லே உண்டு காணுமவர்களுக்கு-(த்வேஷ்யஜாதம் ந விஶ்வஸேத்) ஆன பின்பு, ஆயிரம் ப்ரவ்ருத்தி பண்ணினாலு மவர்கள்பக்கல் நிரபேக்ஷனா யிருக்குமவன் விஶ்வஸிப்பானல்லன். ௪௩

தாத்பர்யம்-இந்த ராக்ஷஸர்கள், தங்களுக்கிஷ்டமான சரீரத்தை எடுத்துக்கொண்டு மறைந்திருந்து பிறரை வஞ்சிக்கச் சூரர்களாகையாலே இவர்களிடத்தில் நம்பிக்கை வைக்கக்கூடாது.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம். ௧௭ - ம் ஸர்க்கம் ௨௦ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. அத இவனல்லனாகில் இவனாராய்வந்தான்; வந்தவன்தான், அவஹிதரான நம்பக்கல் செய்யுங்கார்யமென்னென்னில்; அவற்றைச்சொல்லுகிறது. ப்ரணிதி: இத்யாதியாலே.

௨௦. ப்ரணிதீ ராக்ஷஸேந்த்ரஸ்ய ராவணஸ்ய பவேதயம் |
அநுப்ரவிஶ்ய ஸோऽஸ்மாஸு பேதம் குர்யாந்ந ஸம்ஶய: || ௪௪

அர்த்தம். அயம் - இவன், ராக்ஷஸேந்த்ரஸ்ய - அரக்கர்களுக்கு அரசனான, ராவணஸ்ய - ராவணனுடைய, ப்ரணிதி: - *கூடசாரியாக, பவேத் - ஆவான். ஸ: - அப்படிப்பட்டவன், அஸ்மாஸு - நம்மிடத்தில், அநுப்ரவிஶ்ய - புகுந்து, பேதம் - நம்மில் ஒருவர்க்கொருவரில் த்வேஷம்வரும்படியான உபாயத்தை, குர்யாத் - பண்ணுவன். ந ஸம்ஶய: - ஸந்தேகமில்லை.

வ்யா. (அயம் ப்ரணிதிர்பவேத்) நீர் ஶரணாகதனாக ப்ரமிக்கிற விவன், ராவணன் வரவிட்டா னொருத்தனாகக்கடவன். ஒருத்தனை கில் முதலிலே தன்னை அமைத்துக்கொண்டு புகுருமதொழிய, "விபீஷண இதி ஶ்ருத:" என்றும்-"விபீஷணோऽப்யுபஸ்தித:" என்றும்-"ராகவம் ஶரணம் கத:" என்றும்-தன்னை வெளியிட்டுக்கொண்டு ஶரணம்புகுருமோ? ஶரணமென்று புகுந்தார்சிலர் ஶத்ருசெய்யுங்கார்யத்தைச் செய்வார்களோ வென்னில், (ராக்ஷஸேந்த்ரஸ்ய ராவணஸ்ய) "வசஸ்ய ந்யாஸ்யஸ்ய ந்யாஸ் ஸம்பூர்ண ந்யாஸ" என்கிறபடியே, தான் வேறொருத்தனாயிருக்க வேறொருத்தனாகச்சொல்லி, கார்ய கா

* கூடாசாரி - மறைந்துவந்ததூதன்.

ஸ்தத்திலே வேறொருவனாகச் செல்லும் தௌர்ஜந்யத்துக்கு நிர்வாஹ
கனான ராவணன்மதித்துவரவிட்டானாகக்கடவன், ஆனால், தான்பு
குந்து செய்வதென்னென்னில்; (ஹோஷ்டா ஸ்வாநுப்ரவிஸ்ய) நமக்கு
ப்ரதிகூலனானவன் நம்பக்கலிலே அநுகூல வேஷத்தோடே ப்ர
வேசித்து. (ஹேதும்ஸ்மாஹ) "ஸுஹ்ருத்தம் ஸர்வம் ஸர்வம் நஹ" என்
றிருக்கும் தேவரையும்என்னையும் எதிரிகளாம்படி பண்ணும்.(நஸம்
ஸய:)ராவணஸம்பந்தத்தாலேஶத்ருவாக நினைக்கும்படி யிருக்கிற
விவன் ஶரணம்புகுந்தான். ஆனால் அநுகூலனோ ப்ரதிகூலனோ
வென்றுஸம்ஶயிக்கவன்றோவடுப்பதுஎன்ன; அது வேண்டா; ஜாதிஷ்ரு
க்ருதியாகையாலே அநுகூல்யம் ஸம்பவியாது; வஞ்சகனாயேவந்தா
னென்று நிஶ்சிதம். ௨௨.

தாத்பர்யம் - சரணம் புகுந்த விவன், மாயாவிகளுக்குத்தலைவ
னான ராவணனாஜ்ஞையாலேவப்பட்டு இங்கே வந்தவனாகையால், இவ
ன் நம்ஸைந்யத்தில் நல்லவன்போல் சேர்ந்து; நம்மிலொருவர்க்கொ
ருவரில் த்வேஷத்தை யுண்டுபண்ணி நம்மை உபத்ரவம் செய்வன்.
இதில் ஸம்சயமில்லை.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௨௪ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. நாம் ஸாவதாநராயிருக்க நம்பக்கலிலே இவ
னுக்கு ப்ரஹரணம் பண்ணலாயிருக்குமோவென்ன; அதில் அவகா
ஶம் பெற்றிலனாகில் அநுகூலனென்று நாம் விஶ்வஸிக்குமளவும்
நம்மோடே ஒரு நீராகக்கலந்து இடம்பெற்றதொருபோதிலேதானே
ப்ரஹரிக்கிலும் ப்ரஹரிக்கும் என்கிறார்.

௭௪. அயவாஸ்ய ஸ்வயமேவ ஹி ரந்த்ரமாஸாத்ய புத்திமாந் |
அநுப்ரவிஶ்ய விஶ்வஸ்தே கதாசித் ப்ரஹரேதபி. || ௨௪.

அர்த்தம். அயவா - இல்லாவிட்டால், புத்திமாந் - கூர்மை
யான புத்தியையுடைய, ஏஷ: - இந்தவிபீஷணன், அநுப்ரவிஶ்ய -
புகுந்து, விஶ்வஸ்தே-நம்பிக்கையுடையவனாகப்பண்ணப்பட்டவளவில்,
ஸ்வயமேவ - தானே, ரந்த்ரம் - அவகாசத்தை, ஆஸாத்ய - அடைந்து,
கதாசித் - ஒருகாலத்தில், ப்ரஹரேதபி-அடித்தாலும் அடிப்பன்.

வ்ய. (ஸ்வயம்) ஹேதும்ஸம்ஶ்ரிதா:-என்கிற வக்ஷத்தை வ்யாவர்த்திக்கிறது. (ஸ்வாஶ்ரயாத்வேஷ:) என்னைக்கொண்டும்மை நலிதல், உம்மைக் கொண்டு என்னை நலிதல் செய்யவிடம் பெற்றிலனாகில், தானே நலியிலும் நலியும். எப்போது இவன் நலிவதென்னில்; (காலம் விஶ்ரு விஶ்வஸ்ய) நாம் விஶ்வஸிக்குமளவும் காலம்கமாய் நம்மோடே ஒரு நீராகக்கலந்து நாம் விஶ்வஸித்தவளவிலே. விஶ்வஸித்தாலும் நஞ்சேர்த்தியிலேயிவனுக்கு நலிய அவகாசமுண்டோவென்னில்; (சித்ர ஶாஸ்த்ர) நாம் விஶ்வஸியாதபோது இவனுக்கிடமன்றிக்கே ஒழியுமித்தனை போக்கி, விஶ்வஸித்தால் அவனுக்கு நலியஇடமரிதோ? (பு³த்³தி⁴ ஶாலீ) இடமில்லாவிடிலும் காணவல்ல பு³த்³திகூர்மையையுடையனென்கை. ரக்ஷணயத்நத்தில் அவஹித வ்யதீக்ஷரான உமக்குள்ள பு³த்³தியோமத்தளவுண்டு காணும் இவனுக்கு வாஹிம்ஸையிலே. (க்ஷாந்தி வ்யஹரேத³வி) இடம்பெற்ற வொருபோதிலே வ்யஹரிக்கிலும் வ்யஹரிக்கும். ஸ்வயம்-இவன் ராவணனுடைய வ்ருணியிராதுமன்றிக்கே, ராவணன் தான் முன்பு ஸந்ந்யாஸிவேஷங் கொண்டு நலிந்தாற்போலே, ஶரணாக³த வேஷத்தைக்கொண்டு நம்மோடே கலந்து, நாம் விஶ்வஸித்தவாறே இடம்பெற்றபோதிலே நலியவந்தானாகவுங் கூடுமென்றுமாம். சரு.

தாத்பர்யம் - இவன் நம்மில் ப்ரவேசித்து, நமக்கனுகூலன்போலிருந்து, நாமிவனை நம்பினபோது தன்னுடைய தீவ்ரபுத்தியால் நம்முடைய துர்ப்பலஸமயத்தை யோசித்துப்பார்த்து, அக்காலத்தில் தானே ஹிம்ஸிக்கலாம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்³த⁴காண்ட³ம், கஎ - ம் ஸர்க்³கம், உஉ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. நாமெதிரிகள்மேலே எடுத்துவிட்டவளவிலே, அத்தலையில்நின்றும் செவ்வியனாய் வந்தவன் அடியற்று வந்தானாக வேணும்; அவனை ஸ்வீகரிக்கை ராஜநீதியன்றோ? ராஜாக்களாயிருக்கிறவுமக்கு இதறியவேண்டாவோவென்ன; அது நீதியன்றென்கிறார்.

௨௮. மித்ராடவீபலஞ்சைவ மௌலம்ப்ருத்யபலம் ததா |
ஸர்வமேதத்பலம் க்ராஹ்யம் வர்ஜயித்வா த்விஷத்பலம் || ௪௬.

அர்த்தம். த்விஷத்பலம் - சத்ருபலத்தை, வர்ஜயித்வா - விட்டு, மித்ராடவீபலம் - ஸ்நேஹித ஸம்பந்தமான பலமென்ன, காட்டு ஜனங்களுடைய பலமென்ன, மௌலம் - குலபரம்பரையில் வந்த தாஸ வர்க்கமென்ன, ததா - அப்படி, ப்ருத்யபலம் - சம்பள ஆட்கள்பல மென்ன, ஏதத் - இந்த, ஸர்வம் - ஸமஸ்தமான, பலம் - பலமா னது, க்ராஹ்யம் - எடுத்துக்கொள்ளத்தக்கது,

வ்யா. (மித்ரபலம்) அதாவது-ஸமஸ்தவஸ்துக்கள்வராயிருக்கை. ததா காமந்தகே-“ஔரஸம்மித்ர ஸம்பந்தம் ததாவம்சக்ரமாகதம் | ர க்ஷகம் வ்யஸநேப்யச்ச மித்ரம்ஜ்ஞேயம் சதுர்விதம்.”(அடவீபலம்) வ நப்படை.(மௌலம்)பித்ருபிதாமஹக்ரமாகதமான தாஸவர்க்கம். (ப்ருத்யபலம் ததா) கூலிப்படை. (ஸர்வமேதத்பலம்க்ராஹ்யம்) இ ந்த சதுர்விதபலமும்க்ராஹ்யம். (வர்ஜயித்வாத்விஷத்பலம்) சத்ரு பலம் க்ராஹ்யமன்று. ததாகாமந்தகே-“ அமித்ரம் தமேவமித்ரம் மித்ராமித்ரஞ்சதஃ பரம்” இத்யாதி. இதுக்கொரு சாஸ்த்ரம் வேணு மோ? அவன்மேலே அம்புபடக்கண்ண நீர் பாயுமிவனையோ? நமக்கு பலமாகக் கொள்ளுவது. ௪௬.

தாத்பர்யம் - ஸ்நேஹிதர்கள், வேடர், தாஸர்கள், கூலியாட்கள், ஆகிற இவர்களுடைய பலத்தை ஸ்வீகரித்து, சத்ருபலத்தை விட வேணும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௨௯ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. வர்ஜயித்வா த்விஷத்பலம்-என்று ஸார்வஜ்ஞ்யத்தா லேசுநாசிக்கக்கடவோமோ? அங்குத்தை நசையற்றுப் போந்த வன் விஶ்வஸநீயனன்றோ? ஆனால் அவனை பரிக்ரஹிக்கத்தட்டென் னென்ன; அங்குத்தைநசையற்றுப்போராமைக்கும், அத்தாலே விஶ்வ ஸநீயனல்லாமைக்கும் ஹேதுக்களைச் சொல்லுகிறது. வ்யக்தோத்யா இத்யாதியாலே.

௨௦. ஜாத்யா ராக்ஷஸோஹ்யேஷ ப்ராதா(அ)மித்ரஸ்ய தேவ விபோ |
ஆகதஶ்ச ரிபோ: பக்ஷாத் கதமஸ்மிம்ஶ்ச விஶ்வஸேத் || ௪௭.

அர்த்தம். விபோ-ஸ்வாமியே! ஏஷஹி-இவன்தான், ஜாத்யா-பிறப்பால், ராக்ஷஸோ தேவ-அஸுரனன்றோ; அமித்ரஸ்ய-சத்ருவினுடைய, பக்ஷாத் - பக்கத்திலிருந்து, ஆகத: -வந்தவனன்றோ; அஸ்மிம்ஶ்ச-இவனிடத்திலும், கதம்-எப்படி, விஶ்வஸேத் - நம்பிக்கை செய்யலாம்.

வ்யா. (ஜாத்யா ராக்ஷஸோஹ்யேஷ:) பிறப்பாலே ராக்ஷஸனென்னுமிடமுமக்குஸம்ப்ரதிபந்நமே; ஆனால் அவனை ஸ்வீகரித்து விஜாதீயரான நம்மைப்பற்ற ஸம்ஹாவனையுண்டோ? (ஹி) ஸம்ப்ரதிபத்தௌ. (ப்ராதா(அ)மித்ரஸ்ய) "ப்ராதாஸமித்ரம் ஆபந்ந:" என்று-நம் ஶத்ருவுக்கு ஶரீரமென்று சொல்லலாம்படியிருக்கிறஅவனன்றோ? (தேவ) "ராவணஸ்யாநுஜோ ப்ராதா" என்று-தன்வாயாலே சொல்லுகையாலே-ப்ரஸித்தமன்றோ? நீரும் ப்ராதாவைவிட்டன்றோ நம்மைப்பற்றினதென்ன; (ஆகதஶ்ச ரிபோ: பக்ஷாத்) என்னைப்போலே, நிரஸ்தனாய் வந்தவனன்றே; அவனோலக்கத்தினின்றும் வந்தவனன்றோ? (விபோ) முதலிகளென்ன ஆராய்ச்சியைக் கைவிடாதேகொள்ளீர். (கதமஸ்மிம்ஶ்ச விஶ்வஸேத்) இப்படி அவனை ஸ்வீகரிக்கைக்கு அநேக ஹேதுக்கள் உண்டாயிருக்க, என்ன ஹேதுவாஹாஸங்கொண்டு இவனை விஶ்வஸிப்பது. ௪௭.

தாத்பர்யம் - இந்தவிபீஷணன்; பிறப்பிலோ ராக்ஷஸன்; நமக்கு சத்ருவான ராவணனுக்கு உடன்பிறந்தவன்; வந்ததோ சத்ருஸைந்யத்திலிருந்து; இப்படியிருக்க இவனை எப்படி நம்பலாம். ஸ்வாமி! நீரே யோசித்துப் பாரும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம் - ௧௭ - ம் ஸர்க்கம், ௨௪ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. அவன் தன்னை பரிஹரிக்கையாலே நசையற்று தூதனாய் ஶரணம்புகுந்து வந்தானென்று விஶ்வஸிக்கத் தட்டென்னென்ன; அந்த ப்ரதிபத்தி விப்ரலம்ப க்ருதை என்னுமிடத்தை - ஸஹேதுகமாகச் சொல்லுகிறார்.

௨௰. ராவணேந ப்ரணிஹிதம் தமவேஹி நிசாசரம் |
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம் க்ஷமவதாம் வர || ௪௮

அர்த்தம். க்ஷமவதாம்வர-யுக்தமறிவார்க்குத் தலைவரானவரே! தம் - அந்த, நிசாசரம் - ராக்ஷஸனை, ராவணேந - ராவணனென்கிற ராக்ஷஸனால், ப்ரணிஹிதம்-கூடசாரியாக நியமிக்கப்பட்டவனாய், அவேஹி- அறியும், அஹம் - நான், தஸ்ய - அவனுடைய, நிக்ரஹம் - வதத்தை, க்ஷமம் - யோக்யமாக, மந்யே - நினைக்கிறேன்.

வ்யா. (தம் நிசாசரம் ராவணேந ப்ரணிஹிதம்) நீர் அநுகூலனாக ப்ரமிக்கிறவனை நமக்கு சத்ருவான ராவணனாலே ப்ரணிதிகர்மத்திலே நியுக்தனாக ப்ரதிபத்திபண்ணீர். (அவேஹி) உமக்கிவன் ப்ரணிதியென்னுமிடம் தோற்றுகிறதில்லையாகில், என்பக்கலிலே ஒரு ஸர்வஜ்ஞவ்யக்தி பண்ணியருளீர். அறியாதவை எல்லார்க்குங் கேட்டறியவேணும். ஆனால், இவனைச் செய்யவடுப்பதென்னென்ன; (தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம்) நானவனுடைய நிக்ரஹமே யுக்தமென்று நினைக்கிறேன். இவனையுள்ளபடி அறிந்தநான், வஞ்சகனான விவனுடைய நிக்ரஹமே யுக்தமென்று அறுதியிட்டேனென்கை. ஸம்சயவிபர்யயமுண்டானவிடத்தில் வ்ருத்தமேகசரணமென்னுமிடம் சாஸ்த்ரஸித்தம்-"யே தத்ர ப்ராஹ்மணாஸ் ஸம்மர்சிநோ யுக்தா ஆயுக்தா அலூக்ஷா தர்மகாமாஸ் ஸ்யுர் யதா தே தத்ர வர்த்தேரந் ததா தத்ர வர்த்தேதா:" "ஸர்வஜ்ஞ விதாய விதிர் ஆயாஸ" "யஸ்யாஜ்ஞாம் தாஸ்யாம்யஹம்" "நாஹம் ஜாநே" (க்ஷமவதாம்வர) யுக்தங்களெல்லா மறிவார்க்குத்தலைவரல்லீரோ? யுக்தங்களெல்லாமறிந்தருள வேண்டாவோ. அயவா- (தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம்) என்கிறபோது, அவ்வளவிலும் பெருமாளுடைய திருவுள்ளத்தில் விரக்கத்தைக்கண்டு, உம்முடைய க்ஷமைக்கு அக்ஷமனானவிவனோ விஷயம்; ஸுக்ரீவனன்றோ விஷயமென்கிறானென்றுமாம். ௪௮

தாத்பர்யம் - ராவணாஸுரன் நம்பலத்தை யறிகைக்காக இந்த விபீஷணனைத் தூதுவிட்டானென்று அறியும். நானிவனைக்கொல்வதேயுக்தமென்று நினைக்கிறேன். நீர்யுக்தங்களை விசாரிக்கவல்லமர்த்தராகையாலே இதை யோசிக்கவேணும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், கஎ - ம் ஸர்க்கம், உ௫ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. தஸ்யாபாஹம் நிக்ரஹம் மந்யே - என்று-ப்ர ணிதியவதம் யுக்தமென்னக்கடவீரோ வென்ன ; கேவலம் ப்ரணி திமாத்ரமே யன்று; ஆஷக்ருதியாகையாலே இடம்பெற்றவிடத்திலே நலியக்கூடுமாகையாலே கொல்லத்தட்டில்லை என்கிறார். ராக்ஷஸ: இத்யாதியாலே.

௩௰. ராக்ஷஸோ ஜிஹ்வயா பு்த்யா ஸந்திஷ்டோ(அ)யமுபஸ்திதா: ।
ப்ரஹர்த்தும் மாயயா சந்நோ விஶ்வஸ்தே த்வயி சாநக ॥௨௬

அர்த்தம். அநக - தோஷமில்லாதவரே! அயம்-இந்த, ரா க்ஷஸ: - அஸுரன், ஜிஹ்வயா - குடிலமான, பு்த்யா-புத்தியாலே, ஸந்திஷ்ட: - அனுப்பப்பட்டவனாய், த்வயி - நீர், விஶ்வஸ்தே - நம்பின வளவில், ப்ரஹர்த்தும்-அடிப்பதற்கு,உபஸ்தித:-கிட்டிவந்தவனாய், மாயயா - கபடத்தால், சந்ந: - மறைக்கப்பட்டவனாயிருக்கிறான்.

வ்யா. (அயம்ராக்ஷஸ:) ராவணப்ரணிதியாய் வந்த ராக்ஷஸன், கேவலம் ப்ரணிகார்யத்தளவிலே வ்யாபரிப்பானாய் வந்தானல் லன். என்செய்ய வந்தானென்னில் ; (ஜிஹ்வயா பு்த்யா ஸந்தி ஷ்ட: ப்ரஹர்த்தும் உபஸ்தித:) குடிலபு்த்யாப்ரேரித: ஸன் ப்ரஹர்த்தும்உபஸ்தித: - ராக்ஷஸராகிறார் குடிலபுத்திகளென் னுமிடம் நமக்கு ஸுப்ரஸித்தமன்றோ? ராவணேந ஸந்திஷ்ட: குடி லபு்த்யா உபஸ்தித:-என்னவுமாம். நம்மையிங்ஙனே நலியலாயி ருக்குமோவென்னில் ; (மாயயாசந்ந:) க்ருத்ரிமத்தாலே தன்னைம றைத்துவந்தவனாகையாலே நலியலாம். அதாகிறது - ஶரணாகத வேஷத்தாலே தன் ஸ்வரூபத்தை மறைத்துவருகை. எப்போதி வன் நலிவதென்னில் ; (விஶ்வஸ்தேத்வயி) இவன் அகவாயாராயாதே உக்திமாத்ரத்தைக்கொண்டு ஶரணாகதனென்று உம்மை அவன் அதீநமாக்கினவளவிலே. (ஶப்தத்தாலே லக்ஷணாதிகளையும் ஸமு ச்சயிக்கிறது. “ அஹம்ஜீவிதம்ஜஹ்யாம் ” என்று - ஸுஸ்ரீதர்க்கு அழிவுக்கிட்ட வடிவாகத் தம்மை நினைத்திருப்பாரென்று பார்த்து, உமக்கு நெஞ்செரியும் லக்ஷணாதிகளையும் நலியுமென்கிறார். (அநக)

ஸ்வதந்த்ரனாகையாலே பிறர்பக்கல் தோஷங்காணவறியீர் ; நான் சொல்லவாகிலும் அறிந்தருளீர். ௪௯,

தாத்பர்யம் - ஸ்வாமி! தேவரீர் தோஷமறியாதவராகையாலே, ராவணன் தன் குடில புத்தியாலிவனை யனுப்பினானென்று இவன் தோஷத்தை யறியவில்லை. கபடோக்தியால் தன்ஸ்வபாவத்தை மறைத்து நமக்கெல்லாருக்கும் நம்பிக்கையைப் பிறப்பித்துப் பின்பு நன்றாய் நம்மை நலிவதற்கு ஸமீபத்தில் வந்திருக்கிறான்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௨௯ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. ஸ்நிக்தவேஷவஞ்சகமாக நம்பக்கலிலே ஶரணம்புகுந்த இவன்பக்கலிலே தோஷத்தை நினைத்து ஆராய்கை நமக்குப் போருமோவென்னில்; ஶத்ருவானவன்நம்மை நலிகைக்காக ஶரணம்புகுந்தால், இவனை ஆராயாதே ஸ்வீகரித்தால் மஹாநர்த்தம் விளையுமென்கிறார் ப்ரவிஷ்ட: இத்யாதியாலே.

௨௯. ப்ரவிஷ்டஶ்ஶத்ருஸைந்யம் ஹி ப்ராஜ்ஞஶ்ஶத்ருரதர்கிதஃ |
நிஹந்யாதந்தரம் லப்த்வா உலூகாநிவ வாயஸாஃ || ௫௦

அர்த்தம். அதர்கிதஃ - பரிசீலிக்கப்படாத, ஶத்ருஃ - த்வேஷியானவன், ஶத்ருஸைந்யம் - எதிரிஸேனையை, ப்ரவிஷ்டோ ஹி - நுழைந்தவனாய், ப்ராஜ்ஞஃ - அந்தரங்கதையை யடைந்தவனாய், அந்தரம் - அவகாசத்தை, லப்த்வா - அடைந்து, வாயஸாஃ - காகம், உலூகாநிவ - கோட்டானைப்போலே, நிஹந்யாத் - கொல்லுவன்.

வ்யா. (அதர்கிதஶ்ஶத்ருஶ்ஶத்ரு ஸைந்யம்ப்ரவிஷ்டோ ஹி) இவன் அநுகூலனோ ப்ரதிகூலனோவென்று ஆராயாதே அநுகூல வேஷத்தாலே ஶத்ருஸைந்யத்தை ப்ரவிஷ்டனாய்க் கொல்லும். ஸஸைந்யனானவனை ஒருத்தனாய்க் கொல்லப்போமோவென்னில்; (ப்ராஜ்ஞஃ) அந்தரஜ்ஞனாய் ப்ராஜ்ஞனான ஶத்ருவானவன் ஶத்ரு ஸைந்யத்தை நலியும். ஒருதிரளை யொருவனால் நலியப்போமோ வென்னில்; (அந்தரம்லப்த்வா நிஹந்யாத்) ஸ்வாபாதிகளுண்டானவள

விலே கொல்லும். ஸஹஜ ஶாத்ருவத்துக்கும், ஒன்றே சுநேகத்தை நஶிப்பிக்குமென்னுமிடத்துக்கும் த்ருஷ்டாந்தஞ்சொல்லுகிறார். (உலூகாநிவவாயஸ:)காகமொன்றுமே தனக்கு ஸஹஜஶத்ருக்களான திவாபீதங்களைத் தனக்கவகாசமான சுஹஸ்ஸிலே நலியுமாப்போலே. ருo.

தாத்பர்யம்.—வந்தசத்ருவினுடைய குணகுணங்களை ஆராயாவிடில், அவன் எதிரிஸேனையில் புகுந்து, அவர்களுக்கந்தரங்கன்போலிருந்து, தன்னிடத்தில் விச்வாஸத்தைச்செய்வித்துக்கொண்டு, எதிரிகள் பாக்காயிருக்கும் ஸமயத்தில், காகமானது, பகலில் கண்தெரியாத கோட்டான்களை நலிவதுபோல், ஒருவனுயிருந்தே அந்த ஸேனையைக்கொல்லுவன்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், கஎ - ம் ஸர்க்கம், உஎ - ம் ஶ்லோகம்

அவதாரிகை. இப்படி யிவனால் ஸஹோத்தவமாக வருமநர்த்தத்தை விண்ணப்பஞ்செய்திருக்கச் செய்தேயும், பெருமாளுக்கவன்பக்கல் தண்ணளிமாறாதேயிருக்கையாலேஸிதஸீசனைச் ‡ சினந்தோற்றித் தாமே இவனுடையவயத்தை ஸூசிப்பிக்கிறார்,வய்யுதாமித்யாதியாலே.

உ௭. வய்யுதா மேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவைஸ்ஸஹ |
ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்ராதா ஹ்யேஷ விபீஷண: || ருக.

அர்த்தம். ஏஷ: இந்தவிபீஷணன், ஸசிவைஸ்ஸஹ- மந்திரிகளோடுகூட, தீவ்ரேண - க்ரூரமான, தண்டேந - சிக்ஷையால், வய்யுதாம் - கொல்லப்படட்டும். ஹி - ஏனென்றால், ஏஷ: - இந்த, விபீஷண: - விபீஷணன், ந்ருஶம்ஸஸ்ய - கொடியனான, ராவணஸ்ய - ராவணனுடைய, ப்ராதா - ஸஹோதரன்,

வ்யா. (ஏஷவய்யுதாம்) இவனைக்கட்டி யிட்டுவைத்தல், ஜாமீனைப்போலே மேலே ஓரநர்த்தத்தை விளைக்கும்படி கொடுத்த அம்போடேவிடுதல் செய்யக்கடவோமல்லோம்; கொன்றேவிடுவோம். (தீவ்ரேணதண்டேந) கொல்லுமிடத்திலும் ஓரம்பாலே ⊕ ஊதினாற்போலே கொல்லுகையன்றிக்கே, தலையிலே முடிவைத்தாற்போலே சிங்க விளக்கெரிக்கக்கடவோமென்கை. (ஸசிவைஸ்ஸஹ) நம்மை

---

‡ சினம் - கோபம். ⊕ ஊதினாற்போலே- அறுத்தாற்போல்.

நலிகைக்குக் கூட்டுப்படையாய் வந்தவர்களைத் தலையறுத்து இவன் கையிலே கொடுத்துப் பின்பு இவனைக்கொல்லக்கடவோம். தீவ்ர ஊணத்தாலே நலிகைக்கு ஹேதுசொல்லுகிறது மேல். (அஸ்ய விபீஷணஸ்ய ராவணஸ்ய நృஶம்ஸஸ்ய ப்ராதா ஹி) இவன் ஸாயகனென்னுமிடம் விஹிதமாயிருக்க, க்ரூரகர்மாவான ராவணனுடைய ப்ராதா வென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நமிறே. * சுரிகுழற்கனிவாய்த்திருவினைப்பிரித்த க்ரூரகர்மாவிறே. அவன் பெற்ற தாயையும் தகப்பனையும் சேரவிருக்கப்பொறாதவனிறே. உடலையு முயிரையும் பிரித்தாற்போலே, நித்யாநபாயிநியான பிராட்டியையும் பெருமாளையும், கடலொருபுறமும் மலையொருபுறமுமாகவு மாக்கினபையலுக்கு, "ப்ராதாஸ்யாத்ததிருதராத்துந:" என்கிறபடியே, ஸஹபாவமென்று சொல்லலாம்படி ஸ்ரத்தாஸந்நனன்றோ? (ஹி) ஸம்ப்ரதிபத்தௌ- இது, ப்ரணிபியென்றும் ஶத்ருவென்றுஞ் சொல்லுகிற ஸர்வஜ்ஞ வசநத்துக்கு உபயுக்தி. ருக.

தாத்பர்யம்:—இந்த விபீஷணன், க்ரூரகர்மங்களைப் பண்ணி, லோகத்துக்குக்கண்டகனாயிருக்கிறராவணனுடையஸஹோதரனாகையாலே, நம்ஸேனையில் புகுவதற்கு முன்னமே, இவனோடு ஸஹாயமாய் வந்த ராக்ஷஸர்களை இவன் முன்னே சித்ரவதம் செய்து, பின்பு இவனையும் துண்டு துண்டாய் அறுத்துக்கொன்று விடுவோம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம். கஎ - ம் ஸர்க்கம், உஅ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. இப்படி பெருமாளைக்குறித்து விண்ணப்பஞ் செய்தவிடத்திலும் பெருமாளுக்கவன் பக்கலுண்டான வாத்ஸல்யத்தைக்கண்டு, இனி அவரருளிச்செய்யும் வார்த்தைக்கநுகூலமாக வார்த்தை சொல்லக்கடவோமென்று பேசாதே யிருந்தாரென்கிறது மேல்.

௨௮. ஏவமுக்த்வா து தம் ராமம் ஸம்ரப்தோ வாஹிநீபதி: ।
வாக்யஜ்ஞோ வாக்யகுஶலம் ததோ மௌநமுபாகமத் ॥ ௫௨

அர்த்தம். தத: - அதுக்குப்பிற்பாடு, ஸம்ரப்த: -பரபரப்போடு கூடின, வாக்யஜ்ஞ:-வசனங்களை வ்யர்த்தமாகாதபடி சொல்லவறிந்த, வாஹிநீபதி: - ஸேனைக்கு நாயகனான ஸுக்ரீவன், வாக்யகுஶலம் - வசனத்தில் நிபுணரான, தம் - அந்த, ராமம் - ஸ்ரீராமனைக் குறித்து, ஏவம் - இப்படி, உக்த்வா - சொல்லி, மௌநம் - பேசாமலிருக்கையை, உபாகமத் - அடைந்தார்,

வ்யா. (ஏவமுக்த்வா து) து-ஶப்தத்தால், ஸ்வாக்யாநாதரமும் விபீஷண பக்ஷபாதமும் பெருமாள் திருமுகத்தில் தோற்றினவாறே பயத்தாற்பிறந்த வேறுபாட்டைச் சொல்லுகிறது. (தம் ராமம்) ஸ்வாக்யாநாதரமும் விபீஷண பக்ஷபாதமும் தோற்றவிருந்த பெருமாளை. (ஸம்ரப்த:) பெருமாள் திருவுள்ளத்தைப் பின்செல்லாதே வ்யவஸ்திதராய் ஸாக்ஷேபித்துச்சொன்ன. (வாஹிநீபதி:) பரிவில்வந்தால், அவர்களுக்கு நிர்வாஹகரென்றுசொல்லலாம்படி இருக்குமவர். இத்தால்இவர்வார்த்தை முதலிகளுக்கெல்லாமிஷ்டமென்று கருத்து. (வாக்யஜ்ஞ:) பெருமாளுக்கு மறுநாக்கெடுக்கவொண்ணாதபடி சொல்லும்வார்த்தைகளை யறியுமவர். (வாக்யகுஶலம்) வக்ரவிந்யாஸத்தையறிந்து அத்தைப்புரட்டித் தன்னினைவிலே விழும்படிவார்த்தைசொல்லவல்லவரை. (தத:) இனிஇவர்வார்த்தை சொல்லுமதொழியத் தாஞ்சொல்லும் வார்த்தையடையச் சொல்லுகையாலே. (மௌநமுபாகமத்) அருளிச்செய்யும் வார்த்தைக்கு அவஸரப்ரதாநம்பண்ணியிருந்தார். ௫௨.

தாத்பர்யம்:—பிறரால் மறுக்க வொண்ணாதபடி சொல்லவல்ல ஸுக்ரீவன், தன் ஸைந்யத்துக்கெல்லாமிஷ்டமான இந்த வார்த்தையைப்பரபரப்புடன், ஸ்வமதமேஸித்தாந்தமாம்படிசொல்ல ஸமர்த்தரான பெருமாளைக்குறித்துச்சொல்லி பின்பு அவருடைய அபிப்ராயத்தைக் கேட்போமென்று மௌநமாயிருந்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், கஎ-ம் ஸர்க்கம், உகூ-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. மஹாராஜர் வ்யவஸ்திதராகையாலே நம்வார்த்தை கேட்கமாட்டாரென்று, பெருமாள், திருவடி முதலானோரைக்குறித்து வார்த்தை யருளிச்செய்கிறார்.

உகூ. ஸுக்ரீவஸ்ய து தத்வாக்யம் ஶ்ருத்வா ராமோ மஹாபல: |
ஸமீபஸ்தாநுவாசேதம் ஹநுமத்ப்ரமுகாந் ஹரீந் ‖ ருக.

அர்த்தம். மஹாபல: - அப்ரதிஹதமானபராக்ரமத்தையுடைய, ராம: - ஸ்ரீராமன், ஸுக்ரீவஸ்ய - ஸுக்ரீவனுடைய, தத் - அந்த, வாக்யம் - சொல்லை, ஶ்ருத்வா - கேட்டு, ஸமீபஸ்தாந் - பக்கத்திலிருக்கிற, ஹநுமத்ப்ரமுகாந் - ஆஞ்சநேயரைப்ரதானமாகவுடைய, ஹரீந் - வானரர்களைக்குறித்து, இதம் - இத்தை, உவாச - சொன்னார்.

வ்யா. (ஸுக்ரீவஸ்ய தத்வாக்யம் ஶ்ருத்வா து) விப்ரதிபந்நத்தைச் சொன்னாலு மிவர்வார்த்தையன்றோவென்று ஸ்வீகரிக்கவேண்டியிருக்குமவருடைய யுக்தியுக்தமான வார்த்தையைக்கேட்டு. து ஶப்தத்தாலே, இவர்வார்த்தை கேட்டபின்பு பெருமாள் திருவுள்ளத்திற்பிறந்த விஶேஷத்தைச் சொல்லுகிறது. அதாகிறது - நாம்கைவிட்டார்க்கு மிவர் உளரென்றிருந்தோம்; இவருங் கைவிடும்படியான ஆகிஞ்சந்யதஶையை ப்ராப்தரான விபீஷணனுக்கு நாமல்லது இல்லையாகையாலே என்று திருவுள்ளத்திற்பிறந்த பக்ஷபாதம். (ராமோ மஹாபல:) மஹாராஜர்சொன்ன யுக்திகளாற்கலங்காத (*) திண்மையையுடையரானாரென்கை. (ஸமீபஸ்தாந்) மஹாராஜர்வார்த்தை கேட்டுநின்ற முதலிகளை. (ஹநுமத்ப்ரமுகாந்) மஹாராஜரோபாதி வ்யவஸ்திதராயிருக்கச்செய்தேயும், கருத்தறிந்து காரியம் செய்யவல்லரான திருவடிமுதலானோரை. (ஹரீநுவாச) "ப்ரியேணைவ ஸேநாபதிநா" என்று-ஸேனை முதலியார், பெருமாள் திருவுள்ளம் (ǂ) மதித்துவிண்ணப்பஞ்செய்யத்திருக்கண்களாலே அநுமதிபண்ணிப்

(*) திண்மை - நிலை, உறுதி. (ǂ) மதித்து - நிச்சயித்து.

போருமது தவிர்ந்து, ராகோரத்துக்குக் கடவராகில் குரங்குகளாக வும் அவர்களநுமதியை யபேக்ஷித்துத் தாம் வார்த்தைகேட்கவுமாய் விழுவதே ! என்று ஐஷிகொண்டாடுகிருன். (ஐதமேவாவ) தங் காரிய $ வறுதிக்குவேண்டும்வார்த்தையை சுநஹாரம்கேட்க வ்ராவு மாயிருக்க,மஹாராஜருடைய வெஹவ வ்யகாஸகமான வார்த்தை யைச் சொன்ஞர். ருந.

தாத்பர்யம்:— தன்னை யாச்ரயித்தவர்களுக்கு ஒரு குறைவும் வாராதபடி ரக்ஷிக்கத்தக்க த்ருடாத்ய வஸாயத்தையும் பலத்தையுமு டையவரான பெருமாள், ஸுக்ரீவனிப்படிசொன்னவார்த்தையைக் கேட்டு நாம்நேரில் சொல்லில் கேட்கமாட்டானென்றறிந்து அங்க ருகிருந்த ஆஞ்சனேயர் முதலானோரைக்குறித்து இதைச்சொன்னுர்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுஜகாண்டம். கஎ - ம் ஸர்க்கம், நப - ம் ஶ்லோகம்.

கவதாரிகெ. மஹாராஜர் தம்பக்கல் வ்ரேமாதிஶயத்தாலே சொன்னவார்த்தையென்று திருவுள்ளம்பற்றி அதைக்கொண்டாடு கிறுர்.

மூ. யதுக்தம் கவிராஜேந ராவணாவரஜம்ப்ரதி |
வாக்யம்ஹேதுமதர்த்யஞ்ச ஹவத்ஸிரவி தச்ச்ருதம் || ருசு.

அர்த்தம். கவிராஜேந - வானரராஜனை ஸுக்ரீவனுலே, ராவணாவரஜம்ப்ரதி-ராவணன் தம்பியான விபீஷணனைக்குறித்து, ஹேதுமத்- உபபத்தியையுடைத்தான, அர்த்யஞ்ச-ப்ரயோஜநத்தில் நின்றும் போகாமலுமிருக்கிற, யத் - எந்த, வாக்யம்- வசனமானது, உக்தம் - சொல்லப்பட்டதோ, தத்-அது, ஹவத்ஸிரவி- உங்களாலும், ச்ருதம் - கேட்கப்பட்டது.

வ்யா. (யத்வாக்யமுக்தம்) மஹாராஜர்நமக்கு நல்லர்போலே நா மும் நல்லோமாகிலிறே அவ்வார்த்தைக்குப் ❀ பாசுரமிடலாவது;ய துக்தம்-என்னு மித்தனை. (கவிராஜேந) குழைச்சரக்குடையார் இதுக்கு என் வருகிறதோவென்று அஞ்சி வார்த்தைசொல்ல வ்ரா வுமிறே. கபிவா - (கவிராஜேந யதுக்தம்) தம்முடைய முதன் மை தோற்றச்சொல்லப்பட்ட வார்த்தை யாதொன்று ; “ ஸம்ரய மிதஶ்ப்ரவீத் ” என்று-அடர்ந்து வார்த்தைசொல்லிற்று. (ராவ

$ அறுதிக்கு - நிர்ணயத்துக்கு. ❀ பாசுரம் - வசனம்.

ணாஉவாஜம்வ்ருதி) ராவணஸம்பந்தத்தைப்பார்த்தால் இப்படி கல ங்கி வார்த்தைசொல்லுகைக்குத் தட்டில்லை யென்று இவருடைய கலக்கத்துக்கு ஹேதுசொல்லுகிறார். (ஹேதுமத்) "வ்யக்தாஃ" என்று வ்யக்திஜ்ஞாநமாயிருக்கையன்றிக்கே,ராவணாஉவாஜக்ஷா ஜ உவவத்தி யுக்தமாயிருக்கை. (அத்யர்த்தம்) ஒருத்தருடைய பரிவி லே வார்த்தைசொன்ன ப்ரகாரமென்று கேட்டார்க்கெல்லாம் ப்ரத்யக்ஷமாயிருக்கை. (வ) ஶப்தத்தாலே, "அந்யவந்நயமாஸரீ" என்றாற்போலே, மற்று முண்டான வசநங்களை ஸமுச்சயிக் கிறது. (ஹவஜ்ஞீரவிதவ்யாதக்) கவி - ப்ருஷ்டை - முதலிகளால் கேட்கப்பட்டதில்லையோ? ஶ்ருதமாகில் ஒன்றை நியமியாதே க நாவிஷ்க்ருதராயிருக்கை ப்ராப்தமோவென்று கருத்து. ஸாஉகநய ப்ரஶ்நமாய், ஸ்வைக்யத்துக்குக் கூட்டும்படி கநயஸஹிதமாய் ப்ரஶ்நம் பண்ணுகிறாரென்றுமாம். ருச.

தாத்பர்யம்:—விபீஷணன் நமக்கு சத்ருவான ராவணன் தம்பி என்று இவனை நம் கோஷ்டியில் சேர்க்காமைக்குத்தகுந்த யுக்தியுத் தமாயும் எல்லாரு மாசைப்படும்படியாயும் மதுரமாயும் சொன்ன ஸுக்ரீவன் வார்த்தைகளை நீங்களும் கேட்டீர்களன்றோ?

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம். கஎ - ம் ஸர்க்கம், ருக - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. ஹவஜ்ஞீரவிதவ்யாதக் - என்று நிர்ணயாபே க்ஷமான வார்த்தையைக்கேட்டு, உஸயவாதஜ்ஞரான நாம் நிர்ண யிக்கை யுக்தமோ என்று முதலிகள் நினைவாக, இவ்வளவில், ஸு ஹ்ருத்த்தாலே உவதேஶம் யுக்தமென்கிறார் ஸுஹ்ருதா ஐத்ராதி யாலே.

உ௬. ஸுஹ்ருதா ஹ்யர்த்தக்ருச்ச்ரேஷு யுக்தம் புத்திமதா ஸதா ।
ஸமர்த்தநாஉபி ஸந்தேஷ்டும் ஶாஶ்வதீம் பூதிமிச்சதா ॥ ருரு

அர்த்தம். அர்த்தக்ருச்ச்ரேஷு-கார்யஸங்கடங்களில், புத்திமதா-தீவ்ரபுத்தியையுடைய, ஸதா - ச்ரேஷ்டனான, ஸமர்த்தேந - வல்ல மையுடையனான, ஶாஶ்வதீம் -ஸ்திரமான, பூதிம் - செல்வத்தை, இச்சதா - ஆசைப்படுகிற, ஸுஹ்ருதா ஹி- நன்மனமுடைய ஸ்நே ஹிதனாலே,ஸந்தேஷ்டும்-உபதேசிக்கைக்கும், யுக்தம்-யோக்யம்.

வ்யா. (ஸுஹ்ருதாஹி) "ஶோகநாஶம் ஸதீதி ஸுஹ்ருத்" அபிதாநத்திலும் ஶோகநத்தை ஶம்ஸிக்குமவனிறே ஸுஹ்ருத்தாவான். ஒருத்தனுடைய அநர்த்தத்தில் நெஞ்செரிவுடையனாயிருக்குமவனால், (அர்த்தக்ருச்ச்ரேஷு) கார்யாகார்யநிர்ணய ஸங்கடங்களில். "ராவணம் ஶரணம் கத:" என்று வந்த விபீஷணாழ்வான், தன்னை ஸ்வீகரியாதொழியில்பிழையாதானாயிருந்தான்; "தஸ்யாஹம் நிக்ரஹே ஸக்த:" என்கிற மஹாராஜர், ஹிம்ஸியாதொழியில் பிழையாதாராயிருந்தார்; இப்படியான ஸங்கடத்தில். (யுக்திமதா) இதுகார்யமும் இதுஅகார்யமும். என்று நிர்ணயிக்க க்ஷமனாயிருந்துள்ளவனாலே. (ஸமர்த்தேந) நிர்ணயித்தபடியே எதிரியால் மறுநாக்கெடுக்கப்போகாமல் தள்ளிச்சொல்லஶக்தனானவனாலே. (ஶாஶ்வதீம் பூதிமிச்சதா) ஒருவனுக்குநித்யஸித்தமான §விபூதியை ஆகாங்க்ஷித்திருந்தவனாலே. இப்போது இவர் ஶாஶ்வதியான பூதியாகநினைத்திருக்கிறது, ஶரணாகதஸம்ரக்ஷணஸம்பவ ராகவாநுபந்தத்தை யஶஶ்ஶரீரத்தை ஶாஶ்வதியாக நினைத்திருக்கிறவராகையாலே, நம் ஶரீரத்துக்கு என் வருகிறதோவென்றிருக்கும் மஹாராஜர் அஶாஶ்வதியான பூதியை இச்சிக்கிறாரென்று நினைக்கிறார். (ஸதா) வாக்யைக்யவாக்யயோஜநனாயிருந்துள்ளவனாலே. (ஶாஶ்வதீம்பூதிமிச்சதாஸதா) ஶாஶ்வதியான பூதியைஇச்சித்து, அதுஉண்டானால், அத்தால்தான்உளராயிருந்துள்ளவனாலேஎன்றுமாம். (கபிஶ்ரேஷ்டம் யாசஷ்டே) கபிஶ்ரேஷ்ட: கபயாராமேண-வஶம்வியனானஸுஹ்ருத்தாலே, "ஆகேஶக்ரஹணாந்மித்ரம்" என்கிறபடியே, ஹிதஞ்சொல்லுகையுக்தம். இஶ்லோகத்தால், ஆஶ்ரிதர்ஸுஹ்ருத்வதிகளன்றிக்கே க்ஷாஹகராலும், அந்தக்ஷாஹம் அவர்களாலே க்ஷிக்கவேணுமென்கிற பெருமாளுடைய ஆஶ்ரிதவாத்ஸல்யஞ்சொல்லிற்று. ௫௫.

தாத்பர்யம்:—ஒவ்வொன்றுக்கொன்று விருத்தங்களாயும் அவை இரண்டும் செய்தேயாக வேண்டியுமிருக்கிற ஸங்கடமான கார்யகாலத்தில், யுக்தாயுக்த மறியத்தக்க புத்திமானையும் நினைத்தபடி நடத்த ஸமர்த்தனையும், நச்வரத்தில் கண்வையாமல் அழிவில்லாமலிருக்கிற ஸம்பத்தையே இச்சிக்கிறவனையும் நொந்தாரைக் கண்டால் பொறுக்கமாட்டாதமனமுடைய வனையுமிருக்கிற உத்தமனை ஸ்நேஹிதனுக்கு, வந்தஸங்கடம் நீங்கும்படிசெவ்வையாய் விசாரித்துச் சொல்லுகை யுக்தமன்றோ?

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

---

§ விபூதியை - ஸம்பத்தை, மேன்மையை.

அவதாரிகை. இப்படி பெருமாளருளிச் செய்தவாறே முத லிகள் ஸோபசாரமாகத் தந்தாம் மதத்தை விண்ணப்பஞ்செய்தா ரென்கிறது இதி தேஷு இத்யாதியாலே.

௬௦. இதி தே வாநரஸ்ரேஷ்டா ஸ்வம் ஸ்வம் மதமதந்த்ரிதா: |
ஸோபசாரம் ததா ராமமூசுர் ஹிதசிகீர்ஷவ:|| ருசு.

அர்த்தம். இதி – என்று, ஏவம் - இப்படி, வாநரஸ்ரேஷ்டா:- கேட்கப்பட்ட, தே- அந்த வானரர்கள், அதந்த்ரிதா: – ஜாக்ரதையு டையவர்களாய்க்கொண்டு, ஹிதசிகீர்ஷவ:-நன்மையைப்பண்ண வேணுமென்று இச்சித்தவர்களாய், ததா - அப்போது, ராமம் - ஸ்ரீராமனைக்குறித்து, ஸோபசாரம் - ஸ்தோத்ரத்தோடே கூடிக் கொண்டிருக்கும்படி, ஸ்வம்ஸ்வம்மதம் - தங்கள் தங்கள் மதத்தை, ஊசு: - சொன்னார்கள்.

வ்யா. (இதி தேஷு) ப்ரகாரவாசியான இதிசப்தத்தாலும், உ க்தவ்யப்ரகாரத்தையும் அநுயப்ரகாரத்தையுஞ்சொல்லுகிறது. (வாநரஸ்ரேஷ்டா) வாநரஸ்ரேஷ்டமாவது - வாநர ஸ்ரேஷ்டமாதல், வ ரிஷிகள் ஸ்ரேஷ்டமாதல். வாநரஸ்ரேஷ்டமாவது-நேர் நேர் கேட்கை யன்றிக்கே தன்னிலேவிழும்படிகேட்கை.விபீஷணாகமநப்ரகாரம் மஹாராஜரைப்போலே உங்களுக்கு இஷ்டமோஅநிஷ்டமோ என்று நேர் நேர் கேட்கையன்றிக்கே, "ஸர்வேஷாம் ஸுஹ்ருதாமேவ ஸ்ரோதும் இச்சாமி" என்று - ஸாமாந்யேந கேட்கை. ரிஷிகள்ஸ்ரேஷ்டமாவது-அவி ஸ்வஸத்தாலேவந்த ஸாமாந்யப்ரஸ்நம். அதாகிறது- அநுஸரித்துக் கேட்கை. ஆகவித்தால், தம்மேன்மைதோற்ற ப்ரஸ்நம் பண்ணுகை யன்றிக்கே, ஆசார்யனை ஶிஷ்யர்கள் கேட்குமாப்போலே கேட்கை' கேட்டத்துக்குக் கருத்து, அறிகையும்கார்யநிர்ணயத்துக்கு வேண் டுமளவுடைமையும். (ஸ்வம்ஸ்வம்மதம்) "தேஷாஞ்ஜாதாநி ஸர்வஸோ" என்று மஹாராஜர் மதத்தில் விழும்படியாக பரீக்ஷாஹேதுவாக ஸங்களாலே தந்தாமுடைய மதத்தை. (அதந்த்ரிதா:) ராமகார்யத்தி லே ஸாவதாநராயுள்ளார். (ஸோபசாரம்)பெருமாளுடைய பெரு மையைப்புகழ்ந்துகொண்டு. (ததா) பெருமாளுக்குத் தாங்கள் ஹி

தஞ்சொல்லுகை அபேக்ஷிதமான உக்தியிலே. (ஹிதகாங்க்ஷிண: பெருமாளுடைய ப்ரியமொருதலையாகிலும், ஹிதத்தைப் ¶பேணுவார் உக்தியுடையராயிருக்குமவர்கள். (ராமஸ்தவ:) ௫௬.

தாத்பர்யம். இந்தப்படி ஸ்ரீராமன், வானரர்களை க்ரமமாகக்கேட்க, அவர்களும் பெருமாளுக்கு ஹிதத்தையே நினைந்து, வேறிடத்தில் பாரக்கைவிட்டு, ஸ்ரீராமனை ஸ்தோத்ரம்பண்ணிக்கொண்டு, தங்கள் தங்கள் மதத்தை யறிவித்தார்கள்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம். ௧௭ - ம் ஸர்க்கம், ௩௩ - ம் ச்லோகம்.

அவதாரிகை. தந்தாமுடைய மதத்தைச்சொல்லுவார்களாக நினைத்துக்கீழில் ஸோபவாதம் - என்று ப்ரஸ்துதமான ப்ரகாரத்தைச் சொல்லுகிறார்கள் மேல் இரண்டு ச்லோகத்தாலே. அதில் முதல் ச்லோகத்தால், ஸர்வஜ்ஞராயிருக்கச்செய்தே எங்களைக் கேட்கிறது, ஆச்ரிதர் சொல்லிற்றல்லது செய்தருளாரென்கிற ஏற்றம் ஸர்வர்க்குண்டாகைக்காகவிறே என்கிறது.

௩௦. அஜ்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித் த்ரிஷு லோகேஷு ராகவ ।

ஆத்மாநம் பூஜயந் ராம ப்ருச்சஸ்யஸ்மாந் ஸுஹ்ருத்தயா ॥ ௩௭.

அர்த்தம். ராகவ - ரகுகுலத்திற்பிறந்த ஸ்ரீராமனே! தே - உமக்கு, த்ரிஷு - மூன்றுவிதமாயிருக்கிற, லோகேஷு - ப்ராணிகளிடத்திலே, அஜ்ஞாதம் - தெரியாதவம்சம், கிஞ்சித் - கொஞ்சமும், நாஸ்தி - இல்லை. ராம - ஸ்ரீராமனே! ஆத்மாநம் - தன்னை, பூஜயந் - ப்ரகாசிப்பியாநின்றுகொண்டு, ஸுஹ்ருத்தயா - ஸ்நேஹத்தாலே, அஸ்மாந் - எங்களை, ப்ருச்சஸி - கேட்கிறீர்,

வ்யா, (த்ரிஷுலோகேஷு தே அஜ்ஞாதம் கிஞ்சிந்நாஸ்தி) அநந்தவ்ரதிகஸ்ருஷ்டய: கோடித்ரயபர்வமரியிருந்துள்ள வேதகர் நிமித்தமாக ஸர்வஸர்வஜ்ஞராயிருந்துள்ள தேவர்க்கு, அவர்களுடைய ஸர்வ ஸஹாவங்களென்ன, உத்கர்ஷாபகர்ஷவிஷயமென்ன, த்யாஜ்யோபாதேய விஷயமென்ன, இவற்றில் அஜ்ஞாதமாயிருப்பதொன்றில்லை. அஜ்ஞாதம் நாஸ்தி - என்று வ்யதிரேகத்தாலே

¶ பேணுவார்- இச்சிக்கிறவர்கள்.

சொல்கிறது, ஆநுகூல்யத்துக்காக. (ராகவ) இந்த ஸர்வஜ்ஞமென்ன, ரக்ஷ்யரக்ஷணஸ்வபாவங்களென்ன, இவை யெல்லாம் ஸர்வஜ்ஞத்வத்தால் வந்ததென்கை. "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்:" என்னக்கடவதிறே. (ராம! ஸுஹ்ருத்யர்த்தம் த்ருஷ்டார்த்தம் ப்ரஜப்யதிஷ்டஸி) ஸுக்ரீவர்க்கு நன்மையே எண்ணுந்திருவுள்ளத்தையுடையீரென்கிற இம்மஹாகுணத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக ஆரம்பித்தீர். இத்தாலும் ஸுக்ரீவர்சொன்னபடி யல்லது செய்யாரென்று தேவர்க்கு வரும் ஏற்றத்தை லோகம் கொண்டாடுகைக்காக, ஸர்வஜ்ஞரானதேவரீர், ஜ்ஞாநத்துக் ||கடைவில்லாததிர்யக்ஜாதியான எங்களைக் கேட்டருளுகிறதித்தனை. ருள.

தாத்பர்யம். ஸ்ரீராமனே! அநுகூலனென்றும் ப்ரதிகூலனென்றும் மத்யஸ்தனென்றும் மூன்றுவிதமான சேதனர்களில் அவரவர்கள் ஸ்வரூபஸ்வபாவங்களை நீர் நன்றாயறிந்திருந்தீர், உமக்கிவைகளில் தெரியாதது ஒன்றுமில்லை. ஆகிலும், ஆச்ரிதபாரதந்த்ர்யமென்னும் தம்முடைய மஹாகுணத்தை லோகத்தாருக்கறிவிக்கைக்காக எங்களை ஆலோசனை கேட்கிறீர்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், கஎ-ம் ஸர்க்கம், சஅ-ம் ஸ்லோகம்.

அவதாரிகை. ஸுக்ரீவதாத்பர்யமாகச் செய்யவேண்டுமவை தேவர்க்கு ஒருத்தரைக்கேட்டுச் செய்யவேண்டாதேயிருக்க, எங்கள் பக்கலிப்படி ஸம்ப்ரச்னம் பண்ணிவைத்தீர்; இது என்ன ஸ்வபாவமென்று தங்கள் விஸ்ரம்பாதிசயத்தாலே சொல்லுகிறார்கள், த்வம்ஹி இத்யாதிநா.

உ௦. த்வம்ஹிஸத்யவ்ரதச்சூரோதார்மிகோத்ருடவிக்ரம: |
பரீக்ஷ்யகாரீஸ்ம்ருதிமாந்நிஸ்ருஷ்டாத்மாஸுஹ்ருத்ஸுச || ருஅ.

அர்த்தம் த்வம்ஹி - நீர்தான், ஸத்யவ்ரத: - ஸபலமான ஸங்கல்பத்தையுடையவர்; சூர: - பராக்ரமத்தை யுடையவர்; தார்மிக: - தர்மிஷ்டர்; த்ருடவிக்ரம: - சலிக்கத்தகாதவ்யாபாரத்தையுடையவர்; பரீக்ஷ்யகாரீ- ஆலோசித்துச்செய்யுமவர்; ஸ்ம்ருதிமாந்- முன்பறிந்தவற்றை மறவாதவர்; ஸுஹ்ருத்ஸு- மித்ரர்களிடத்தில், நிஸ்ருஷ்டாத்மா- வைக்கப்பட்ட கார்யங்களையுடையீராயிருந்தீர்.

|| அடைவுயோக்யதை.

த்ர. (ஸ்வச) வக்ஷ்யமாண குணாஶ்ரயமான தர்மியுடைய வைலக்ஷண்யஞ்சொல்லுகிறது. ஸாத்த்விகர்க்கு குணாதீநமிறே ப்ரேமோத்கர்ஷமும்; இவ்விடத்திலே குணோத்கர்ஷமும் ஸ்வாஶ்ரயத்தைப்பற்றியிருக்குமென்கை. "குணாதத்தம் ஶோபதே" என்றாரிறே ஆழ்வான். (ஹி) கீழுக்தமான ஸாமர்த்ய ப்ரதிபாதநஸூசகம். (ஸத்வ்ருத்த:) அசோப ஸஜ்ஜந:. அதாகிறது-"ஸஹ யம்ஸ்வயம்ஸமேதேஷ்வா ஆபாதேஷ்வபந்தம் ஸ:" என்று - ஆஶ்ரிதஸம் ரக்ஷணஸஜ்ஜம் அசோபமாயிருக்கை. (ஶமந:) அந்த ரக்ஷணத்துக்கு விக்நம்வந்தால், அவற்றை யழியச்செய்யும் ஹிம்ஸாஸாமர்த்யமும், ஶமநமும். (தார்மிக:) அதுதான் $செவ்வைப்பூசலாலேயாயிருக்கை. அதவா - அந்த ரக்ஷணதர்மமும் ஸ்வப்ரயோஜநத்துக்காயிருக்கை யன்றிக்கே, தத்ரக்ஷணைக ஸ்வபாவமா யிருக்குமென்றுமாம். (க்ருதவித்ய:) க்ருதவ்யாபார: - செய்ததொன்றை ஒருத்தராலு மழிக்கவொண்ணாமை. அதாகிறது - ஆஶ்ரிதர் தங்களாலும் பிறராலும் அழிக்கவொண்ணா திருக்கை. (பரீக்ஷ்யகாரீ) ஆஶ்ரிதா தர்மமாக ப்ராப்தமிக்குமிடத்தில் பார்த்துச்செய்கை. அதாகிறது-பிறரால்வரும் விரோதத்தை விக்ரமத்தாலழிப்போம்; அவன் தன்னால்வரும் விரோதத்தைப் பொறையாலே அழிப்போமென்று பார்த்துச்செய்கை. "ஆபஸ்யைஶ்வர்யவாதேந" "யஸ்யாம் த்ருதாம் தம யஶஸ்ஸ்வணாம் வமாஹ:". (ஸ்ம்ருதிமாந்) முன்புபிறந்த ஜ்ஞாநம் அவஸரே ஸ்ம்ருதிவிஷயமாகை. அதாகிறது - ஆஶ்ரிதர் பெருஞ்ஜா பண்ணும் அபராதத்தைப் பொறுக்கைக்கடி, இவனடியிற் பண்ணின ஆநுகூல்யத்தையேநினைத்திருக்கை. (நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்தம:) ஆஶ்ரிதர் பக்கலிப்படி ஸர்வஸ்வ்ய் காரர க்ஷகராயிருக்கச்செய்தே, தேவர் காரியம் ஆஶ்ரிதரிட்டவழக்காம்படி அவர்கள் பக்கலிலே ஸமர்ப்பித்து வைத்தீர். கீழுள்ள குணங்களை †உண்டறுக்கிலும் இம்மஹாகுணத்தை ஒருத்தராலு முண்டறுக்கப் போ

$செவ்வைப்பூசலாலே-தர்மயுத்தத்தாலே. †உண்டறுக்கிலும்-கரைகண்டாலும்.

மோவென்று கருத்து. ச ஶப்தத்தால், அநுக்தமான குணங்களை ஸமுச்சயிக்கிறது. ௫௮.

தாத்பர்யம், தேவரீர், சரணாகதரக்ஷணமே பரமப்ரயோஜநமாகவெண்ணி, அது ஸபலமாம்படி ஸங்கல்பித்து, அதுக்குவந்தவிரோதங்களைத் தம் ஸாமர்த்யத்தால்போக்கி, அந்த வ்யாபாரம் ஒருவராலும் சலிப்பிக்கவொண்ணாதபடி செவ்வையா யாலோசித்துச் செய்து, தாம்முன்பு பண்ணின ப்ரதிஜ்ஞையை மறவாமல், தன்னை ஆச்ரிதர்களுக்குப் பரதந்த்ரராக்கியிருந்தீர்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம் ௩௫-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. இப்படி தேவர்கார்யத்தை அஸ்மதிஷ்டவழக்காக்கிவைத்தீரென்பது யாதொன்று; அத்தாலே தேவருடைய ஸசிவராயிருந்துள்ள அங்கதப்ரமுகர் நால்வருந் தனித்தனியே தங்கள் கருத்துக்களை விண்ணப்பஞ்செய்யக்கடவர்கள்; அது எங்களுக்கெல்லாங் கருத்தாகக்கடவது என்று, மேல் விண்ணப்பஞ்செய்யப் புகுகிற நாலு முதலிகளையு மொழிந்தா‡ரடங்கச்சொல்லுகிறார்கள்.

௨௦. தஸ்மாதேகைகஶஸ்தாவத் ப்ருவந்து ஸசிவாஸ்தவ ।
ஹேதுதோ மதிஸம்பந்நா ஸம்ஸத்ப்ராஜ்ஞா புநஸ்ததா ॥ ௫௯.

அர்த்தம். தஸ்மாத்-ஆகையால், மதிஸம்பந்நா: - புத்திமான்களாயும், புநஸ்ததா-அப்படியே, ஸம்ஸத்ப்ராஜ்ஞா-சொல்ல நிபுணர்களுமான, தவ-உம்முடைய, ஸசிவாஸ்தவ-மந்திரிகள் எல்லாரும், ஹேதுத: - காரணங்களோடு, ஏகைகஶ: - ஒவ்வொருவராய், ப்ருவந்து - சொல்லட்டும்.

வ்யா. (தஸ்மாத்) தேவரை அஸ்மத்பரதந்த்ரராக்கி அடியோங்கள் சொன்னபடிசெய்யக்கடவதாக எங்களை வைத்தவைப்பாலே. (ஏகைகஶ:) தனித்தனியே தந்தாமுடைய கருத்துக்களை விண்ணப்பஞ் செய்யக்கடவர்கள். (தாவத் ப்ருவந்து) முந்துறமுன்னம்

‡ அடங்க - எல்லாரும்.

எல்லாரும் விண்ணப்பஞ்செய்யக்கடவர்கள்; கார்யவேளையிலே திரு வுள்ளமானபடி செய்தருளுகிற தென்கை. (தவஸசிவா:) ஸ்ரீ தாரக்ஷணஹேதுபூதத்திலே தீக்ஷிதராயிருக்கிற தேவர்க்கு ஸஹாயம் பண்ணுகிறவர்கள். இப்படி தாங்கள் சொல்லுகிறது, பெருமாள், ஸ்ரீராமரக்ஷணத்துக்கு ஸஹகாரியாகத் தங்களை நினைத்திருக் கையாலே. (ஹேதுஜ்ஞா:) ப்ரதிவக்தங்களென்று பெருமாளுக்கு உபேக்ஷிக்கவொண்ணாதபடி ஸஹேதுகமாக. (ப்ருதக்ப்ருதக்) கார்யநிர்ணயத்தில் தனித்தனியேநிர்வணரென்கை, (யதோக்த ஸர்வே) யாதொருபடி நிர்ணயித்தார்கள்; அப்படியே பின்பு பெருமாள் திருவுள்ளத்திலேபடும்படி ப்ரதிபாதநஸமர்த்தராயிரு க்குமவர்கள். இப்படி முதலிகள், இவர்கள் நால்வர் வார்த்தையை யும் பெருமாள் மனோவிக்கைக்காக ப்ரஸம்ஸித்து விண்ணப்பஞ்செய் தார்கள். ௱௯.

தாத்பர்யம், தேவரீர் ஆச்ரித பரதந்த்ரராகையாலே, தேவருக் காச்ரிதர்களான அங்கதன் முதலானோர், கார்யாகார்ய நிரூபணத்தில் குசலபுத்திகளுமாய், நிச்சயித்தபடி சொல்லவும் ஸமர்த்தர்களுமா கையாலே, இந்தகார்யத்தைத்தனித் தனியே தகுந்தகாரணங்களைக் கொண்டு நிர்ணயித்துச் சொல்லட்டும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்கம், ௩௧ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. அநந்தரம் ஸர்வஜ்ஞராய் யுவராஜாவா யிருந்துள்ள அங்கதப்பெருமாள் தம்முடைய மதத்தை உபந்யஸிக்கி றார் இத்யுக்தே இத்யாதியால்.

௱. இத்யுக்தே ராகவாயாத மதிமா நங்கதோऽக்ரத:।
விபீஷணபரீக்ஷார்தமுவாச வசநம் ஹரி:॥ ௩௦.

அர்த்தம். அத - அதுக்குப்பிற்பாடு, இதி - இந்தப்ரகாரம், உக்தே-சொல்லப்பட்டவளவில், அக்ரத: - முதலில், மதிமாந்- புத் திமானான, அங்கத: - அங்கதனென்கிற, ஹரி:-வானரமானவர், ராக வாய - ஸ்ரீராமன்பொருட்டு, விபீஷணபரீக்ஷார்தம் - விபீஷ ணனுடைய சோதனத்தையே ப்ரயோஜனமாகவுடைய, வசநம் - வார்த்தையை, உவாச - சொன்னார்.

வ்யா- (ஜ்ஞாதும்) எல்லாருக்குமிவர்கள் நால்வருமே √கடவராக முதலிகள் விண்ணப்பஞ்செய்துள்ளவிடத்தில். (ராவணாச்ரயதோஷ நிவ்ருத்திதயா) (ஸர்வைஸ்ஸமேத்தார் காரும் ஒருகுரங்கினுடைய வார்த்தைகொண்டு*ஈடறுக்கும்படியாவதே என்றுபெருமாளுடைய ஸுசீலதாவாத்ஸல்யத்தை ஐஷிகொண்டாடுகிறான் (ஸ்ருதா உ ஹு த:) என்கிறது-பரியட்டமுறையாலேமஹாராஜர்க்கு ப்ரதமவராகையாலும், முதலிகளெல்லார்க்கும் ப்ரதானராகையாலும். (மஹாப்ராஜ்ஞ:) பரியட்டமுறையொழியகார்ய நிர்ணயத்துக்குப்பரிகரமான ஜ்ஞானாதிகுணத்தையுடைய அநகுப்பெருமாள். (விபீஷணபரீக்ஷார்த்தம்) ஸ்வயந்தாம்- என்றார் மஹாராஜர்: நத்வஜேயம் - என்னு மளவாயிருந்தது பெருமாள் திருவுள்ளம்: இவையிரண்டும் ஆராயாமற்செய்கை யுக்தமல்லவென்று பரீக்ஷார்த்தமாகவார்த்தையைச் சொல்லுகிறார். ௬௦.

தாத்பர்யம். இப்படிச்சொன்னவளவில், இளையராஜாவான அங்கதன் புத்திமானுகையாலே, எல்லாருக்கும்முன்னே, விபீஷணன் அபிப்ராயத்தை யாராய்ந்து பின்பு செய்யவேண்டுமத்தை நிச்சயிக்கவேணுமென்று பெருமாளைக்குறித்துச் சொல்லுகிறார்,

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம் - ௧௭ - ம் ஸர்க்கம், ௬௧ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. ஶத்ருபக்ஷத்தினின்றும்வந்த விபீஷணன் ஸஹஸா விஶ்வாஸயோக்யனல்லன், ஶங்க்யனென்கிறார். ஶத்ரோ: இத்யாதியால்.

௬௧. ஶத்ரோ: ஸகாஶாத் ஸம்ப்ராப்த: ஸர்வதா ஶங்க்ய ஏவ ஹி |
விஶ்வாஸயோக்ய: ஸஹஸா ந கர்தவ்யோ விபீஷண:|| ௬௧.

அர்த்தம். விபீஷண: - விபீஷணன், ஶத்ரோ: ஸகாஶாத் - சத்ருவிடத்தில் நின்றும், ஸம்ப்ராப்த: - வந்தவன். ஸர்வதா - ஸர்வப்ரகாரத்தாலும், ஶங்க்ய ஏவ ஹி - ஸந்தேஹிக்கத்தக்கவனேயன்றோ? ஸஹஸா - சீக்கிரமாய், விஶ்வாஸயோக்ய: - நம்பத்தகுந்தவனாக, ந கர்தவ்ய: - பண்ணத்தகுந்தவனல்லன்.

√ கடவராக-ஸமர்த்தராக. * ஈடறுக்கும்படி-நிச்சயிக்கும்படி.

ப்ர. (ஶத்ரோஸ்ஸகாஶாத்ஸம்ப்ராப்த:) ஜ்யேஷ்டாதிக்ரமத்தாலே நாமக்ரஹணம்பண்ணாதே, ஶத்ரு:-என்கிறார். ஸர்வேஶ்வரனை ஶத்ருக்களென்றிறே ததீயர் நினைத்திருப்பது. ததீயருடைய ஶத்ருக்களைத்தனக்கு ஶத்ருவாகவிறே அவன்தானும் நினைத்திருப்பது. இதிறே ஶேஷஶேஷிகளுக்கு அந்யோந்யம் பரிவு இருக்கும்படி. அல்லது, ஸ்வஶத்ருக்களென்று சிலரை மதிப்பார்களிறே. (ஸகாஶாத்ஸம்ப்ராப்தோ ஹி) அவன் ஶத்ருவாகில் இவனுக்கென்னென்ன; அவனோலக்கத்தினின்றும் வந்தவனென்னுமிடம் தேவர்க்கும் ஸம்ப்ரதிபந்நமன்றோ? ஆனபின்பு, அவன் கார்யத்துக்கு வந்தானாகக்கூடாதோ? (ஸர்வதாஶங்க்யனவ) ஆகையால் ஸர்வப்ரகாரத்தாலும் ஶங்க்யனே. வத்யன் என்னாதொழிந்தது, பெருமாள் திருமுகத்திலிவன் மேலுண்டான தண்ணளியாலே. அவன் ஸகாஶத்தில் நின்றும் வந்தபடியாலும், அவன் தம்பியென்று தானேசொல்லுகையாலும், ராக்ஷஸஜந்மமானபடியாலும், விஶ்வஸிக்கைக்கு ஒரு ஹேதுவில்லை. (விஶ்வாஸயோக்யஸ்ஸஹஸா நகர்தவ்ய:) ஶரணமென்று வந்தவன் விஶ்வாஸயோக்யனல்லனோவென்று பெருமாள் அபிப்ராயமாக, அப்படி தன்னாலும் சடக்கென விஶ்வஸிக்கைக்கு யோக்யனல்லன். அது எத்தாலே என்னில்; (விபீஷண:) பரஹிம்ஸையாலே ஸர்வலோகபயங்கரனானவன் பண்ணின ஶத்ருஶரணாகதியாகையாலே, நம்மை நலிகைக்கு இந்த கோஷ்டியிலே விலைச்செல்லும் வார்த்தையைச் சொல்லிவந்தானாக ஸம்பாவனையுண்டு. ஆகையால், ஸஹஸாவிஶ்வஸிக்கவடுக்காது. ஶங்கிக்கவடுக்குமென்கை. சூக

தாத்பர்யம். இவன் எதிரியான ராவணனிடத்திலிருந்து வந்தவனாகையால் எவ்விதத்திலும் சங்கிக்கும்படியாயே இருக்கிறது. விசாரியாமல் இவனை நம்பக்கூடாது. ஏனென்றால், ஜனங்களை ஹிம்ஸித்து பயப்படுத்துகிறவனென்று ப்ரஸித்தமானபேரையுடையனாய் வந்தான்,

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுாஜகாண்ணம், கஎ - ம் ஸமஂம், ௬அ - ம் ஶ்லோகம்.

கவதாரிகை. ஆதிஂதோற்றவந்து ஶரணம்புகுந்தவனை விஶ்வஸிக்கவேண்டாவோவென்று ராஜாஉஹிவ்ராயமாக, ஶரணாமதனுனலும் ஸஹஸா விஶ்வாஸயோமஹ்யனல்லனென்னு மிடத்தை ஸஹேதுகமாக வ்ருதிவாதித்து, விஶ்வஸித்தால்வரும் கநத்ஂத்தைச் சொல்லுகிறது.

உ௬. ஸாஜயிகவாஉஉதஹாவம ஹி வாஙி ஶஂபாஜயஃ |
வ்ருஹாஙிவ ரஸேூஷு ஸோாஉநத்ஂஸதக்ருதோஹவேகஃகூஉ

அர்த்தம். ஶஂபாஜயஃ-துஷ்டபுத்தியுடையவர்கள், ஆதஹாவஂ - தம்முடைய அபிப்ராயத்தை, ஸாஜயிகவா-மறைத்துவைத்து, வாஙிஹி - ஸஞ்சரிக்கிறார்களன்றோ? ரஸேஷு - கெட்டஸமயத்தில், வ்ருஹாஙிவ - நன்றாய் மர்த்திக்கிறார்கள். ஸஃ - அந்த, கநத்ஂஃ - கெடுதலை, தக்ருதஃ- அவனால்செய்யபட்டதாய், ஹவேகஂ- ஆகும்.

வ்ர். (ஶஂபாஜயஃஆதஹாவம ஸாஜயிகவாவாஙி) (ஶஂபாஜயஃ) ஜஷ்டபாஜயஃ - காஉஸவ்ருகுதிகளாகையாலே ராக்ஷஸர் ஜஷ்டபாஙிகளாயிறே யிருப்பது. (ஆதஹாவம ஸாஜயிகவா) நலியக்கடவதாக நிஶ்யித்து வருகிற தன்நினைவைமறைத்து. (வாஙி) ஸாயுவவாஙி- தங்களுடைய ஹாவஜோஷத்துக்கெதிர்த்தட்டான கநகூஉவேஷத்தைக்கொண்டு வ்யவஹரியாநிற்பர்கள். (ஹி)வாயகரான ராக்ஷஸர் கநகூஉவேஷத்தோடே ஸஞ்ஶரிப்பரென்னுமிடம், ஶ்ரீவன் பக்கலிலும் ராவணன் பக்கலிலும் நமக்கு கநஹஉதமன்றோ? இவ்வளவால் ஸஹஸாவிஶ்வாஸ யோமஹ்யனல்லனென்னுமிடத்தைச் சொல்லுகிறது. ஸ்வஜோஷத்தை மறைத்து கநகூஉவேஷத்தோடே தான் வந்தால் அவன் நம்மைச் செய்வதென்னென்ன ; (வ்ருஹாஙிவாரேூஷு) இடங்களிலே நலியாநிற்பர்கள். அதாகிறது - தனியிருப்பு, கநுவாதை, தன்னோடே ஒரு நீராகக்கலக்கை, இவையிறே. (ஸோாஉநத்ஂஸதக்ருதோஹவேகஃ) கநத்ஂம், ஸஹஸாவிஶ்வஸித்தவனுடைய ஹஉமாகக் கடவது.

தாத்பர்யம்.—தாமஸ ஸ்வபாவமுடையவர்கள், பரஹிம்ஸை செய்வதிலுண்டான தங்கள் அபிப்ராயத்தை வெளியிடாமல் உள்ளே வைத்துக்கொண்டு ஸமயத்தை ஆராய்ந்து கொண்டிருப்பர்கள்; எதிரிக்குக்காலம் தாழ்ந்தபோது செவ்வையாய்ஹிம்ஸித்துத் தங்கள் நினைவை நிறைவேற்றிக்கொள்வர்கள். இப்படிப்பட்ட அநர்த்தம், யோசியாமல் உடனே நம்பினவனுடைய பலமாயிருக்கும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்³த⁴காண்ட³ம், ௧௭-ம் ஸர்க்³க³ம், ௩௪-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. இவனுடைய த்யாகோ³பாதா³நத்துக்*குறுப்பான பரீக்ஷா ப்ரகாரத்தைச் சொல்லுகிறது.

௩௪. கு³ணதோ³ஷௌ விநிஶ்சித்ய வ்யவஸாயம் ப⁴ஜேத ஹி |
கு³ணதஸ்ஸங்க்³ரஹம் குர்யாத்³தோ³ஷதஸ்து விஸர்ஜயேத் || ௩௪

அர்த்தம்.—கு³ணதோ³ஷௌ - குணதோஷங்களை, விநிஶ்சித்ய - நன்றாய் நிர்ணயித்து, வ்யவஸாயம் - உத்யோகத்தை, ப⁴ஜேத ஹி - அடையவேண்டியதன்றோ? கு³ணத꞉ -குணமிருந்தால், ஸங்க்³ரஹம் - ஸ்வீகாரத்தை, குர்யாத் -பண்ணக்கடவன்; தோ³ஷதஸ்து - தோஷமிருந்தாலோ, விஸர்ஜயேத் - விடக்கடவன்.

வ்யா. (கு³ணதோ³ஷௌவிநிஶ்சித்ய) இவனைப்பரிக்³ரஹித்து ஒருகார்யத்திலே நியோகித்தால் இவனால்வரும் ப்ரயோஜனங்களை நிஶ்சயித்து. (வ்யவஸாயம்ப⁴ஜேத ஹி) த்யாக³பரிக்³ரஹ வ்யவஸாயத்தைப்பண்ணுவது. இப்படி பரீக்ஷியாதே ஸஹஸைவ த்யாக³பரிக்³ரஹம் கார்யமல்ல. (ஹி) இது நீதிஶாஸ்த்ரப்ரஸித்³த⁴மன்றோ? நீர் அறியாததொன்றன்றே. (கு³ணதஸ்ஸங்க்³ரஹம் குர்யாத்³தோ³ஷதஸ்து விஸர்ஜயேத்) நங் கார்யம் முற்றுச் செய்யுந்தனையும் கு³ணவானாகில் பரிக்³ரஹிப்பது; நங் கார்யத்தைக்கெடுக்குந்தனையும் கு³ணஹீநனாகில் கடுகவிடுவது. கு³ணங்கண்டு வைத்தே பரிக்³ரஹியாதொழிந்தால், இவனாற் கொள்ளுங் கார்யம் இழக்கவருமிறே. தோஷங்கண்டு விட்டிலனாகில் ஸந்நாஶத்தோடே தலைக்கட்டுமிறே. ஆகையாலே, விஸர்ஜயேத்-என்கிறது. ௩௪.

---

* உறுப்பான - ஹேதுவான.

தாத்பர்யம்.—வந்தவன், நல்ல எண்ணமுடையவனோ? கெட்ட எண்ணமுடையவனோ? என்று ஆலோசித்துப் பிற்பாடு கார்யங்களில் யத்நிக்கவேண்டியது. அதாவது நாம் செய்யுங்கார்யங்களில் அநுகூலனாகில் நம்மோடு சேர்த்துக்கொள்ளவேண்டியது. கெடுதி செய்வனாகில் விடவேண்டியது. இது தர்மசாஸ்த்ரத்தில் சொல்லப்படுகிறது. இதை தேவர் அறியீரன்றோ?

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௬௰ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. *கட்டடங்க குணவானாயிருத்தல் தோஷனாயிருத்தல் செய்வாரொருத்தரில்லையாகையாலே, த்யாகபரிக்ரஹங்களுக்கு இவை ஹேதுவாகமாட்டாதென்ன; தத்தாரதம்யங்களைக் கொண்டு த்யாகோபாதாநங்களைப்பண்ணத் தட்டில்லையென்கிறார்.

௬௰. யதி தோஷோ மஹாம்ஸ்தஸ்மிந் த்யஜ்யதாமவிஶங்கித꞉ ।
குணாந்வாபி பஹூந் ஜ்ஞாத்வா ஸங்க்ரஹ꞉ க்ரியதாம் ந்ருப ॥

அர்த்தம்,—ந்ருப - ஜனங்களை ரக்ஷிக்கிற ராஜாவே ! தஸ்மிந் - அவனிடத்தில், தோஷ꞉ - கெட்டநடத்தை, மஹாந் யதி - அதிகமாயிருந்தால், அவிஶங்கித꞉ - ஸம்சயிக்கப்படாதவனாய், த்யஜ்யதாம் - விடப்படட்டும், பஹூந் - அநேகங்களாயிருக்கிற, குணாந் வாபி - நன்னடத்தைகளையாவது, ஜ்ஞாத்வா - அறிந்து, ஸங்க்ரஹ꞉ - அங்கீகாரம், க்ரியதாம் - பண்ணப்படட்டும்.

வ்யா. (ந்ருப) நாடாள இட்டுப்பிறந்த தேவர்க்கு இந்த நீதி நாங்களுபதேசிக்கவேணுமோ? தேவர்க்கு ஸம்ப்ரதிபந்நமன்றோ? (தஸ்மிந் தோஷோமஹாந்யதி அவிஶங்கித த்யஜ்யதாம்) தோஷம் மஹானாயிருக்குமாகில், அல்பமான குணம் அத்தாலே அபிபூதமாகையாலே அது ஜீவிக்கமாட்டாது. ஆகையாலே, அந்த குணலேசங்கொண்டு ஸ்வீகாரம் கர்த்தவ்யமன்று; ||கண்ணற்று விடப்படும். (குணாந்வாபி பஹூந் ஜ்ஞாத்வா ஸங்க்ரஹ꞉ க்ரியதாம்) அப்படியே, குணங்குவாலாயிருக்குமாகில், அத்தாலே அபிபூதமான அல்பதோஷந் தலையெடுக்கமாட்டாமையாலே, அந்த தோஷத்தைக்கொண்டு கைவிடக்கடவோமல்லோம்; ஸ்வீகாரங் கர்த்தவ்யம்.

---

* கட்டடங்க - பரிபூர்ணமாய். || கண்ணற்று - தயையில்லாமல்.

தாத்பர்யம். எல்லாரிடத்திலும் குணதோஷங்களிரண்டும் கலந்திருந்தாலும், எவனிடத்தில்தோஷமதிகமாயிருக்கிறதோ; அவனுடைய அல்பமானகுணம்ப்ரகாசியாதாகையால் அவனை யோசியாமல்விடவேணும். எவனிடத்தில் குணமதிகமாயிருக்கிறதோ; அவனுடைய அல்பதோஷம் கார்யகரமாகாதாகையால், அவனைச் சேர்த்துக்கொள்ளவும். இந்தராஜநீதிகள் ராஜாவான தேவர்க்குத்தெரியாதா?

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௪௧ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. இப்படி ஸுக்ரீவப்பெருமாள் ஸ்வமதத்தை ப்ரதிபாதித்து நின்றவளவிலே, அந்த கோஷ்டியில் த்விதீயரான ஶரபர் ஸ்வமதத்தை உபபாதிக்கிறார்.

அத ஶரபஸ்ய நிஶ்சித்ய ஸாத்யம் வசநமப்ரவீத் |
க்ஷிப்ரமஸ்மிந் நரவ்யாக்ர சார: ப்ரதிவிதீயதாம் || ௪௫.

அர்த்தம்:—அத-அதுக்குப்பிறபாடு, ஶரப:-சரபர், ஸாத்யம்-செய்யத்தகுந்ததை, நிஶ்சித்ய - நிர்ணயித்து, வசநம் - வார்த்தையை, அப்ரவீத் - சொன்னார். நரவ்யாக்ர - புருஷஷ்ரேஷ்டனே! அஸ்மிந் - இவனிடத்தில், க்ஷிப்ரம் - விளம்பியாதபடி, சார: - தூதன், ப்ரதிவிதீயதாம் - விடப்படட்டும்.

வ்யா. (ஶரபஸ்ய) பரியட்டமுறையால் ஸுக்ரீவப்பெருமாளுக்கநந்தரம் வக்தாவாயிருந்துள்ள ஶரபர் மதம் கீழிற் பக்ஷத்தைக் காட்டில் ஸாஶங்கதையினாலே வந்த விசேஷத்தைச்சொல்லுகிறது, அதஶப்தத்தாலே. (ஸாத்யம்வசநம் நிஶ்சித்யாऽப்ரவீத்) வசநத்துக்கு ஸாத்யத்தையாவது - அர்த்தத்தினுடைய கர்த்தவ்ய ஶக்யதை. (ஸாத்யம்நிஶ்சித்யவசநமப்ரவீத்) செய்யக்கடவபடியை நிஶ்சயித்து வார்த்தை சொன்னாரென்னவுமாம். (நரவ்யாக்ர) தேவர் ஆண்புலியன்றோ? வந்தவனுடைய*தண்மை பாராதே $நோக்கக்கடவதோ? ஆனால் செய்யக்கடவதென்னென்ன? (அஸ்மிந்சார: ப்ரதிவிதீயதாம்) அநுஷ்டேயம் ஶாஸநமென்று ஸம்ஶயாக்ராந்தனை இவன் பக்கலிலே இவனுடைய ஸ்வரூப நிர்ணயார்த்தமாக சாரன் விடப்படுவான். (க்ஷிப்ரம்) அநுகூலனாகில் இவனுடைய பரிக்ரஹத்தில் விளம்பியாதபடி சடக்கென விடப்பார்ப்பது. ௪௫.

---

* தண்மை - தாழ்மை. $ நோக்கக்கடவதோ-கடாக்ஷிக்கலாமோ.

தாத்பர்யம். அங்கதப்பெருமாள் சொன்னபிற்பாடு சரபர், இன்னது செய்யவேண்டுவதென்று தான்முன்னம் நிச்சயித்துக்கொண்டு பெருமாளைப்பார்த்துச்சொன்னார். என்னவென்றால்; இவன்நடத்தை நமக்குத்தெரியாதாகையால் அதையறிகைக்காக முந்துறத்தூதுவிடவேணும். தேவர் புருஷஶ்ரேஷ்டராகையால் இவன் தாழ்மை பாராமல்ப்ரவர்த்திக்கக்கூடாது.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௬௨ - ம் ஶ்லோகம்.

௬௫. ப்ரணிதாய ஹி சாரேண யதாவத் ஸூக்ஷ்மபுத்திநா ।
பரீக்ஷ்ய ச தத꞉ கார்யோ யதாந்யாயம் பரிக்ரஹ꞉ ॥ ௬௬.

அர்த்தம்.—ப்ரணிதாய-அனுப்பி, ஸூக்ஷ்மபுத்திநா-கூர்மையான புத்தியையுடைய, சாரேண - தூதனாலே, யதாவத்-க்ரமமாக, பரீக்ஷ்ய - சோதித்தும், தத꞉ - அதுக்குப்பிற்பாடு, யதாந்யாயம் - க்ரமத்தை அதிக்ரமியாமல், பரிக்ரஹ꞉ - அங்கீகாரம், கார்ய꞉-பண்ணத்தக்கது. (ஹி) இதுப்ரஸித்தந்தான்.

வ்யா. (ப்ரணிதாய) இவன் சென்று அவன் வ்ருத்தபரீக்ஷணம் பண்ணலாம்படி அவனோடே ஸஹ்ருதனாய் பரீக்ஷிக்கக்கடவன். ‘ப்ரணிதாநம் ஸமாதாநம் ஸமாயிஷ்வ ஸமாஸூத்ரதா꞉’’ என்னக்கடவதிறே. (ஸூக்ஷ்மபுத்திநா சாரேண யதாவத்பரீக்ஷ்ய) இங்கித நிமித்தங்களாலே அவனுடைய குணதோஷங்களை அறியவல்ல புத்திமானான சாரனாலே அவனுடைய குணதோஷங்களை நிஶ்சயிப்பதுஞ்செய்து, (ஹி) கண்ணிட்டுக்கண்டாற்போலே சாரமுகத்தாலே அறிய வேணுமென்னுமிடம் ராஜாவான உமக்குத்தெரியாதோ? ‟ராஜாநஶ்சாரசக்ஷுஷ꞉’’ என்னக்கடவதிறே. (யதாந்யாயம் பரிக்ரஹஸ்து தத꞉ கார்ய꞉) அநுகூலனாகில் ஶரணாகதனை அங்கீகரிக்கும் ப்ரகாரத்தாலே இவனை பரிக்ரஹிக்கை பின்பு கார்யம். ஸஹஸாகார்யமன்றென்று கருத்து. ‘‘குணதஸ்ஸங்க்ரஹம் குர்யாத்தோஷதஸ்து விஸர்ஜயேத்’’ என்று விகல்பியாதே, ‘‘பரிக்ரஹ꞉ கர்தவ்ய꞉’’ என்றது, அவன் பக்கல் பெருமாளுக்குண்டான தண்ணளியைப்பற்ற.

தாத்பர்யம்:—நா மனுப்பினதூதன் எதிரியோடு கலந்திருந்து, இங்கிதங்களாலும் வேறு சேஷ்டைகளாலும் அவனுடைய நடத்தையறிந்துவந்தால், பின்பு நாமாலோசித்து, அனுகூலனாகில் இவனை ந்யாயமாய் அங்கீகரிப்பது யோக்யம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

• யாஸகாண்டம், கஎ - ம் ஸர்க்கம், சங - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. ஸுக்ரீவாஷ்டியில் த்ருதீயரான ஜாம்பவ மஹாராஜர் ஸ்வமதத்தை உபந்யஸிக்கிறார்.

உ௭. ஜாம்பவாம் ஸ்த்வத ஸம் வேக்ஷ்ய ஶாஸ்த்ரபுத்த்யா விசக்ஷணः ।
வாக்யம் விஜ்ஞாபயாமாஸ குணவத் தோஷவர்ஜிதம் ॥ கூஎ.

அர்த்தம்.—அத - அதுக்குப்பிற்பாடு, விசக்ஷணः-புத்திமானான, ஜாம்பவாந்து-ஜாம்பவா னென்பவர், ஶாஸ்த்ரபுத்த்யா - சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டபுத்தியாலே,ஸம்வேக்ஷ்ய - செவ்வையாய் நிரூபித்து, தோஷவர்ஜிதம் -தோஷத்தால்விடப்பட்ட, குணவத்-குணத்தையுடைய, வாக்யம் . வசனத்தை, விஜ்ஞாபயாமாஸ - சொன்னார்.

வ்யா. (ஜாம்பவாந்ஸ்த்வத) அத- என்கிறஇது, முன்புபோலே. து - என்கிறது - முன்புத்தைப்பக்ஷங்கள் போலன்றிக்கே, அவஶ்யம் பரிக்ரஹணீய னென்கிற விஶேஷத்தைச் சொல்லுகிறது. (விசக்ஷணः) அங்கதஶரபாதிகளும் நீதிஶாஸ்த்ரஜ்ஞராயிருக்க, விசக்ஷணः - என்கிறது, இவருக்கு நீதிஶாஸ்த்ரத்திலுண்டான அவகாஹநாதிஶயத்தாலே, (ஶாஸ்த்ரபுத்த்யாஸம்வேக்ஷ்ய) பெருமாள் திருவுள்ளத்தைப்பாராதே ஶாஸ்த்ரபுத்தியினாலே அழகிதாகநிரூபித்து. (குணவத்தோஷவர்ஜிதம்வாக்யம்) வாக்யத்துக்கு குணவத்தையாவது-ஸ்வாமித்திலும் பெருமாளுக்கும் ஸந்தேஹமற்றிருக்கை. தோஷவர்ஜிதமாகையாவது -ஒருபக்ஷத்தை அபவதித்துச் சொல்லாதொழிகை. (விஜ்ஞாபயாமாஸ). கூஎ.

தாத்பர்யம்:—சரபர் சொன்ன வருத்தரம், ஜாம்பவானென்பவர், நீதிசாஸ்த்ரத்தில் நிபுணராகையால், சாஸ்த்ரவச்யமான தன் புத்தியைக்கொண்டு செய்யவேண்டுமதை நிச்சயித்து, இரண்டுபக்ஷத்துக்கும் பொதுவாய் ஸந்தேஹமில்லாமலிருக்கும்படி சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௪௪-ம் ச்லோகம்.

அவதாரிகை. அவ்வார்த்தையின்னதென்கிறது மேல்.

௨௯. பஹுவைராத்வா வாத்வா ராக்ஷஸேந்த்ராத் விபீஷண: |
அதேசகாலே ஸம்ப்ராப்த: ஸர்வதா ஶங்க்யதாமயம் ॥ ௧௮.

அர்த்தம்:—விபீஷண: - விபீஷணன், பஹுவைராத் - கட்டப்பட்டத்வேஷத்தையுடையனுமாய், வாத்வா-கபடியுமாய், ராக்ஷஸேந்த்ராத் - அஸுரராஜாவான ராவணனிடத்தினின்றும், அதேசகாலே - வரத்தகாததேசத்தில் வரத்தகாதகாலத்தில், ஸம்ப்ராப்த: - வந்தான். அயம்-இவன், ஸர்வதா-எல்லாப்படியாலும், ஶங்க்யதாம் - யோசிக்கப்படட்டும்,

வ்யா. (பஹுவைராத்வாவாத்) க்ருத்ரிமஶத்ருவின்பாடு நின்றும். அதாவது-ஸர்வலோகஶரண்யரான பெருமாளுடையதிருவுள்ளம் புண்படும்படி தானே சூழ்த்துக்கொண்டவனென்கை. ஶத்ருக்கள் இரண்டு படிப்பட்டிருப்பர்கள், "ஸஹஜ: கார்யஜஶ்சைவ த்விவித: ஶத்ருருச்யதே | ஸஹஜஸ்ஸ்வகுலோத்பந்ந இதர: கார்யஜஸ்ஸ்ம்ருத:" என்று. இவன் கார்யஶத்ருவாகையாலே உபேக்ஷ்யஸஹனென்று கருத்து. ஸஹஜஶத்ரு செய்யுமவற்றுக்கு ஶத்ருபாவ உண்டாகையாலே, *ஏற்கக்கோலி வரிஹரிக்கலாம், (வ்ராத்வ:) என்று - வஞ்சகனென்றுமாம், (ராக்ஷஸேந்த்ராத்) ஹிம்ஸகஜாதிக்கு நிர்வாஹகனாயிருக்குமவன்பக்கல் நின்றும். (விபீஷண: அதேசகாலே ஸம்ப்ராப்த:) அவனப்படியானால், இவன் நிர்தோஷனாகத்தட்டென்னென்னில்; ராவணன்வரும் தேசமுமன்று, காலமுமன்று. எங்ஙனேயென்னில்; இவன் ராவணனில் பிராட்டியைப் பிரிந்த ஐஶ்வர்யஹீநியிலே வரவேணும். இவன் வருங்காலமுமத்வே. அங்ஙனன்றிக்கே, யுத்தைக்கு ப்ரத்யாஸந்நமான கடற்

* ஏற்கக்கோலி - முன்பே ஆலோசித்து.

கரையிலே வந்தான். ஸகாலே வருகையாவது - *அடைமதிட்பட்ட தசையிலே நம்மை நலிகைக்கு விரகுபார்த்துவந்தான். பகலிலே வரலாயிருக்க ராத்ரியிலே வந்தானென்றுமாம். (ஸர்வதாஸங்க்யு தாவ்யு) ஆகையால், உக்தஸர்வப்ரகாரத்தாலும் இவன் ஸர்வாத்மநாய்வந்தாலும் ஸங்கிக்கப்படுவானொருவனென்று கருத்து. ௩௮.

தாத்பர்யம்:—வந்த விபீஷணன், நமக்குக்கார்யசத்ருவும் வஞ்சகனுமான ராவணன் பக்கத்திலிருந்துவந்தான்; அதுவுமன்றிக்கே, இவன் வருகைக்கு யோக்யமான தேசகாலங்கள் தப்பி, லங்கைக்கு ஸமீபமான இடைவெளியிலே நாமிருக்க இப்போது வந்தான். ஆகையால் இவன் விஷயத்தில் நன்றாய் யோசிக்கவேணும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧ள - ம் ஸர்க்கம், ௩௯ - ம் ஸ்லோகம்.

அவதாரிகை. அநந்தரம் வைநதேயர் ஸ்வமதத்தை உபந்யஸிக்கிறார்.

௩௯. ததோ வைநதேய ஸம்ப்ரேக்ஷ்ய நயாநயகோவிதः |
வாக்யம் வசநஸம்பந்நோ பபாஷே ஹேதுமத்தரம் || ௩௯

அர்த்தம்.—ததः - அதுக்குப்பின்பு, நயாநயகோவிதः- ந்யாயாந்யாய நிர்ணயத்தில் பண்டிதனான, வசநஸம்பந்நः-சொல்லுகையில் ஸமர்த்தனான, வைநதேய - மைந்தரென்பவர், ஸம்ப்ரேக்ஷ்ய - நிச்சயித்து, ஹேதுமத்தரம்-யுக்தியுடையவைகளில் ஸ்ரேஷ்டமான, வாக்யம் - உக்தியை, பபாஷே - சொன்னார்.

வ்யா. (ததோவைநதேய) தச்ஸப்தத்தாலே, "ஸர்வதாஸங்க்யதாவ்யு" என்று விடுமளவன்றிக்கே, அநுகூலராகக் கூட்டிக்கொண்டு ஆராயக்கடவதான விஸேஷத்தைச்சொல்லுகிறது. (நயாநயகோவிதः) ந்யாயாந்யாயநிஸ்சயத்தில் ஸமர்த்தனாயிருந்துள்ளவன். (வசநஸம்பந்நः) கேட்டாரெல்லார்க்கும் செவிச்செல்லவும் நெஞ்சிலேபடும்படியாகவும் நிஸ்சயித்தப்படியே வாய்விடவல்லனாகை. (ஹேதுமத்தரம்)"ஹேதுமத்வசநம்"என்கிற மஹாராஜர் வார்த்தையிற்காட்டில்உத்க்ருஷ்டமாயிருக்கை. (ஸம்ப்ரேக்ஷ்யவாக்யம் பபாஷே)ஸங்கநீயனென்றும் ஆராயும்படிஇன்னதென்றும் நிஸ்சயித்து வார்த்தைவிண்ணப்பஞ்செய்தார். ௩௯

* அடைமதிட்பட்ட-முற்றுகைபோட்ட.

தாத்பர்யம்:—ஜாம்பவான் சொன்னபின்பு, ந்யாயமிது, இது அந்யாயமென்று நிரூபிக்கையில் குசலரும் நிரூபித்தபடி எல்லாருக்கும் செவியிலும் மனஸ்ஸிலும் படும்படி சொல்ல சக்தருமான மைந்தர், இவனை ஆராயும் விதமின்னதென்று நிச்சயித்து, மிகவும் யுக்தியுக்தமான வார்த்தையைச்சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௫௯-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. அதில் ஆராய்ந்து கைக்கொள்ளவேணுமென்னுமிடத்தை ஸம்ப்ரதிபத்திபண்ணி, ஸர்வஜ்ஞதாயா - என்னாதே ஆராயும்படி சொல்லுகிறார்.

௫௯. வசநம் நாம தஸ்யைஷ ராவணஸ்ய விபீஷண: |
ப்ருச்ச்யதாம் மதுரேணாயம் ஶநைர்நரபதீஶ்வர ॥ ௬௦

அர்த்தம்.—நரபதீஶ்வர - ராஜாக்களுக்கு ராஜாவானவரே! ஏஷ: - எதிரிலிருக்கிற, அயம் - ப்ரஸ்துதனான, விபீஷண: - விபீஷணன், தஸ்ய - அந்த, ராவணஸ்ய - ராவணனுடைய, வசநம் - வாக்யத்தை, ஶநை: - மெள்ள, மதுரேண - இனியசொல்லால், ப்ருச்ச்யதாம் - கேட்கப்படட்டும்.

வ்யா. அதில் ஆநுகூல்யத்தைக்கூட்டிக்கொண்டு நம்மிலொருத்தனுக்கி வார்த்தை கேட்கவடுக்கும். கேட்கும்படி என்னென்னில்; (ஏஷவிபீஷண: தஸ்யராவணஸ்யவசநம்ப்ருச்ச்யதாம்) நமக்கு ஶத்ருவான ராவணன் நம்பக்கலிலே என்ன சொல்லியிருக்கிறானென்று கேட்பது. (ஶநைர்மதுரேணாயம் ப்ருச்ச்யதாம்) கேட்கும்போது இவன் நம்மை *அசிராதபடிபதறாதே ஆறி இனியபேச்சாலே கேட்கப்படும். (நரபதீஶ்வர) ஸம்போதநத்தில் ராஜாக்களுக்கு நிர்வாஹகரான தேவர்க்கிறேஇவ்வ்யாபாரத்தாலே கேட்குமிடம் நீதியென்னுமிடந்தெரிவது. ௬௦

தாத்பர்யம்:—இந்த விபீஷணனை நம்மோடு சேர்த்துக்கொண்டு நம்மை ஸந்தேஹியாதபடி பொறுத்திருந்து, இனிமையான சொல்லாலே, நம் சத்ருவானராவணன் நம்மைக்குறித்து என்சொல்லிக்கொண்டிருக்கிறான் என்று கேட்கவேணும். ராஜாதிராஜனான தேவர்க்கு இப்படி கேட்டறிவதே ந்யாயம்.

---

*அசிராதபடி - ஸந்தேஹியாதபடி.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௪௭-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. இப்படியாலே ஆராய்ந்து கைக்கொள்ளவேணுமென்கிறது மேல்.

௪௭. பாவமஸ்ய து விஜ்ஞாய ததஸ்தத்த்வம் கரிஷ்யஸி।
யதி துஷ்டோ ந துஷ்டோ வா புத்திபூர்வம் நரர்ஷப॥௪௭

அர்த்தம் — நரர்ஷப - நரச்ரேஷ்டனே! துஷ்டோயதி - கெட்டவனாகிலுமாம்; நதுஷ்டோவா - யோக்யனாகிலுமாம்; அஸ்ய - இவனுடைய - பாவம் - நினைவை, தத்த்வத: - உள்ளபடி, விஜ்ஞாய - அறிந்து, த்வம் - நீர், புத்திபூர்வம் - திருவுள்ளத்திற்றோன்றபடி, கரிஷ்யஸி - செய்வீர்.

வ்யா. (யதிதுஷ்டோ நதுஷ்டோவா அஸ்ய பாவம் தத்த்வதோ விஜ்ஞாய த்வம் புத்திபூர்வம் கரிஷ்யஸி) மஹாராஜர் நினைவின்படியே துஷ்டனாகவுமாம்; தேவர் நினைவின்படியே அதுஷ்டனாகவுமாம்; இருவர் நினைவும் அப்ரயோஜகம்; நான் சொன்னப்ரகாரத்தாலே இவனுடையநினைவை உள்ளபடியறிந்து கைக்கொள்ளவேணும்; உக்திமாத்ரமேபோராது. இவனை இன்னானென்றறிந்தால், பிறர்கருத்தோடே கூட்டிச்செய்தருளவேண்டா; தேவர் திருவுள்ளத்தின்படியே செய்தருளுகிறது. உக்திமாத்ரமேகொண்டு ஸ்வீகரிக்கை கர்த்தவ்யமன்றென்று கருத்து. (நரர்ஷப) எதிர்த்தலையினுக்தியின் சீர்மையைப்பார்க்க அமையுமோ? தேவருடைய சீர்மையைப்பாராதொழிகிறது என்னென்று கருத்து. ௭௧.

தாத்பர்யம்:—இவன் யோக்யனுமாகலாம்; அயோக்யனுமாகலாம்; அதை இருந்தபடி அறியமுடியாது. ஆகையால், நான் சொன்னபடி இவன் மனஸ்ஸையதார்த்தமாயறிந்து, பின்பு தேவரீர் திருவுள்ளத்தில் எப்படி தோற்றுகிறதோ; அப்படி செய்யலாம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௪௮-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. இவர்கள் நால்வருடைய கருத்தும் எல்லார்க்கு மிஷ்டமாகையாலே எல்லாரும் பேசாதிருந்தார்களாகையாலே, வத்யதாம் - என்றவரோடே, ஆராயவேணுமென்றவரோடு வாசியற, இவர்கள் வார்த்தை கேட்ட பெருமாள் திருவுள்ளந்தளர்ந்து திருமே

ணி வெளுக்கிறபடியையுங்கண்டு, திருவடி, நாயகஸ்ரீமான பெரு மாள் உளராகவேணுமென்று முன்புள்ள வார்த்தைகளை ஸுவித்து விஜ்ஞாபநத்தை விண்ணப்பஞ்செய்கிறான். பெருமாள் திருவுள்ளத்துக்கு ஸந்தோஷமாகையாலே திருவடிவார்த்தையைக் கொண்டாடுகிறான் ஜஷி, முதல் ஶ்லோகத்தாலே.

௧௭. அத ஸம்ஸ்காரஸம்பந்நோ ஹநூமாந் ஸசிவோத்தம: ।
உவாச வசநம் ஶ்லக்ஷ்ணமர்த்தவந் மதுரம் லகு ॥ ௭௨.

அர்த்தம்,—அத - அதுக்குப் பின்பு, ஸம்ஸ்காரஸம்பந்ந: - ஞானவாஸனையால் பரிபூர்ணரான, ஸசிவோத்தம:- இதரமந்திரிகளைக் காட்டிலும் ச்ரேஷ்டரான, ஹநூமாந் - ஆஞ்சனேயர், ஶ்லக்ஷ்ணம் - இணைந்திருக்கிற, அர்த்தவத் -ப்ரயோஜநத்தை யுடைத்தாயிருக்கிற, மதுரம் - இனிமையாயிருக்கிற, லகு-ஸங்க்ரகமாயிருக்கிற, வசநம் - வாக்யத்தை, உவாச - சொன்னார்-

வ்யா. (அத) பூர்வோக்தப்ரகாரேண ஸாந்த்வநமென்னுதல்; விஜ்ஞாபநாநந்தரமென்னுதல். (ஸம்ஸ்காரஸம்பந்ந:) ஶாஸ்த்ரங்களிலும் ராஜகார்யங்களிலுமுண்டான விஶேஷபரிசயத்தாலே வ்யுத்பத்த்யாதிகளிலும் ஸம்பிரதாயாதிகளிலுமுண்டான ஜ்ஞாநவாஸனை யால் குறைவற்றவன். (ஹநூமாந் ஸசிவோத்தம:) பெருமாளுக்கு அதிஶயத்தை விளைக்கப்புகுகிறவனாகையாலே ராஜகார்யநிர்வாஹகரில் உத்க்ருஷ்டதமன். (ஶ்லக்ஷ்ணம்) பதவாக்யாதிகள் ஸஜாதமாயிருக்கை. ஶப்தத்துக்கு அர்த்தத்துக்குமுண்டான ஸஜாதியைச் சொல்லிற்றாகவுமாம். (அர்த்தவத்) ஶப்தத்தளவு மன்றிக்கே அர்த்தமிருக்கை. விலக்ஷணமான அர்த்தத்தை யுடையதென்றுமாம், ப்ரயோஜநவஹ்யமா யிருக்குமென்னவுமாம். அதாவது - பெருமாளைப் பெறுகையும், ஸ்ரீவிபீஷணாழ்வானைப் பெறுகையும், ஸுக்ரீவர் ப்ரப்ருதிகள் கலக்கந்தீருகையும். (மதுரம்) நிரர்த்தகமாயிருந்ததே யாகிலும் பாசுரம் இனிதாயிருக்கை. (லகு) அர்த்தம் ஸங்க்ரஹமாம்படி பாசுரம் பரப்பற்றிருக்கை. (வசநமுவாச) இவனுடைய வார்த்தை அநுஷ்டாநபர்யந்தமாகாதபோது அநர்த்தமாகையாலே, "ஸுநயவசநம்" என்றாற்போலே யிருக்கிற வார்த்தையைச் சொன்னான். எல்லா விடத்திலும் இப்படியேயிறே இவனுடைய உக்திவாதுர்யம். "ஸம்ஸ்காரக்ரமஸம்பந்நாமத்ருதாமவிலம்பிதாம் । உச்சாரயதி கல்யாணீம் வாசம் ஹ்ருதயஹர்ஷிணீம்" என்று. ௭௨

தாத்பர்யம். இப்படி நால்வரும் சொன்ன பிற்பாடு, ராஜதந்த்ரங்களுக்கு நிர்வாஹகராயும், சாஸ்த்ரங்களிலும் ராஜகுலத்திலும் பரிசயம் பண்ணினவராகையால் லௌகிகவைதிக கார்யங்களிலுண்டான நைபுண்யத்தையுடையருமான திருவடி, முன்பின்னுக்கு விரோதமில்லாமலும், கார்யஸாதகமாயும், செவிக்கினிமையாயும், நெஞ்சில்படும்படி ஸங்க்ஷேப மாயுமுள்ள வாக்யத்தைச்சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௬௫-ம் ச்லோகம்.

அவதாரிகை. திருவடி, பெருமாளுடைய நினைவே தனக்கு விஷயமாகையாலே, உம்முடைய நினைவை ஒருவராலும் நிர்ணயிக்கவொண்ணாதென்று பெருமாளைக்கொண்டாடுகிறான்.

௬௫. ந பவந்தம் மதிச்ரேஷ்டம் ஸமர்த்தம் வததாம் வரம் |

அதிசாயயிதும் சக்தோ ப்ருஹஸ்பதிரபி ப்ருவந் || ௭௩

அர்த்தம்:—மதிச்ரேஷ்டம் - புத்தியினால் உத்க்ருஷ்டராய், ஸமர்த்தம் - வல்லமையுடையருமாய், வததாம் - வாக்மிகளுக்குள்ளே, வரம் - ச்ரேஷ்டருமான, பவந்தம் - உம்மை, ப்ருஹஸ்பதிரபி - குருவும், ப்ருவந் - சொல்லாநின்றுகொண்டு, அதிசாயயிதும் - மேலிடுகைக்கு - ந சக்த: - ஸமர்த்தனல்லன்.

வ்யா. எதுக்காகவென்னில்; நம் நினைவேற்கும் கருத்தனைப் பெற்றோமாகாதேயென்று பெருமாள் விசாரிக்கைக்காக. (மதிச்ரேஷ்டம்) த்யாஜ்யோபாதேயங்களென்ன, கர்த்தவ்யாகர்த்தவ்யங்களென்ன, இவற்றினுடைய நிஷ்கர்ஷத்தில் ப்ரசஸ்தராயிருக்கை. (ஸமர்த்தம்) நிர்ணயித்தபடியே செய்து தலைக்கட்டும் ஸாமர்த்யத்தையுடையராயிருக்கை. (வததாம்வரம்) செய்யுமிடத்தில் இசையாதாருமிசையும்படி நெஞ்சில்பட வார்த்தை சொல்ல வல்லவர்களில் தலைவராயிருக்கை. (பவந்தம்) அவ்வளவேயோ; ப்ரக்ருதமான அர்த்தங்களுக்கு உபயோகியாய் அதிசயமாயிருந்துள்ள கல்யாணகுணங்களால் வசிகரணரல்லீரோ? (அதிசாயயிதும் நசக்த: ப்ருஹஸ்பதிரபி ப்ருவந்) அதிஜாதத்தை வ்யக்தமாய்ச்சொல்லுகிற ப்ருஹஸ்பதியும் தேவரை அதிசயிக்கும்படி வார்த்தை சொல்லுவானொன சக்தனல்லன். அதிசயிக்கையாவது-நின்றநிலையைப்போக்கை. கதோபாதிக ளசக்தரென்னுமிடம் கிம்புநர் ந்யாயஸித்தமென்று கருத்து.

எ௩

தாத்பர்யம். தேவரீர், கார்யங்களைப்பரிசீலித்து நல்லது தீயது இது வென்று நிர்ணயிக்கையில் ப்ரசஸ்த புத்தியுடையவர். நிர்ணயித்தவர்த்தத்துக்கு விக்நங்கள் நேரிடினும் அவற்றைப் போக்கி நிறைவேற்றும்படியான வல்லமை யுடையவர். தான்செய்தவைகளை எல்லாருடைய நெஞ்சில் படும்படி உரைக்கவல்லவர். இப்படிப்பட்ட தேவரீருடைய நினைவை அங்கீகரிக்க, வக்தாவான ப்ருஹஸ்பதியாலும் முடியாது. என்று ஸ்ரீராமனைக்குறித்துச்சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்

யுத்தகாண்டம், கஎ - ம் ஸர்க்கம், ருo - ம் ச்லோகம்.

அவதாரிகை. ஸ்வஸிதாந்தமான விபீஷணஸம்ருத்தியை வ்யுத்பாதிக்கைக்காக ஸர்வோத்தவக்ஷணத்துக்குக் காரணத்தை மஹாராஜரைக்குறித்துச் சொல்லுகிறான்.

ருo. ந வாதாந் நாட்விஸஜ்ஜஷ்டாந் நாட்யிக்யாந் நவ காமதா: |
வக்ஷ்யாமி வசநம் ராஜந் யதார்த்தம் ராமஸௌவாத் || எசு,

அர்த்தம்:—ராஜந் - ஸ்வாமியே! வாதாத் - விஜிகீஷுசொல்லும் வாக்யத்தால், நவக்ஷ்யாமி - சொல்லப்போகிறேனில்லை. ஸஜ்ஜஷ்டாத் - அஸூயையால், நவக்ஷ்யாமி-சொல்லப்போகிறேனில்லை, அயிக்யாத் - பெரியதனத்தால், நவக்ஷ்யாமி - சொல்லப்போகிறேனில்லை. காமதஷு - பக்ஷபாதத்தினாலும், நவக்ஷ்யாமி - சொல்லப்போகிறேனில்லை. ராமஸௌவாத் - பெருமாளிடத்திலுண்டான மேன்மையால், யதாத்தம் - எப்படியிருக்கிறதோ அதை அதிக்ரமியாமல், வசநம் - வாக்யத்தை, வக்ஷ்யாமி-சொல்லப்போகிறேன்.

வ்யா. (நவாதாத்) என்னுடைய வாதஸாமர்த்ய ப்ரகாசநார்த்தமாக விஜிகீஷுதயா சொல்லுகிறேனல்லேன். (நாட்விஸஜ்ஜஷ்டாத்) நம்ஸகாசத்தில் சிலர் வார்த்தை சொல்லுகையாவதென்னென்கிறபொறாமையாலே சொல்லுகிறேனல்லேன். (நாட்யிக்யாத்) நான்எல்லாரிலும் அயிகனாய், என்வார்த்தையாலே கார்யந்தலைக்கட்டவேணுமென்று சொல்லுகிறேனல்லேன். (நவகாமத:) வருகிறவன்பக்கல் ஸ்நேஹத்தினாலே சொல்லுகிறேனல்லேன். விபீஷணன்பக்கல் எனக்கொரு பக்ஷபாதமுண்டாய், அத்தாலே இது செய்தருளவேணுமென்று சொல்லுகிறேனல்லேன். அவன்பக்கல் ஒரு ப்ரயோஜனத்தைக்கணிசித்துச் சொல்லுகிறேனல்லேன். தோன்

ரிற்றுச்சொல்லுகிறேனல்லே னென்னவுமாம். தான் இத்தனை பரிஹரித்துச்சொல்லவேண்டுகிறதற்கு ஹேது சொல்லுகிறது. (ராஜநு) ராஜஹ்ருதயத்துக்கு விருத்தமான கார்யந்சொல்லுமிடத்தில் இத்தனை பரிஹரித்துச்சொல்லவேணுமிறே. (யதார்த்தவசநம் வக்ஷ்யாமி) யதாவஸ்திதார்த்தமான வார்த்தையைச்சொல்லுகிறேன். முதலிகளுடைய மதங்கள் தோஷயுக்தமாகையாலே, அதிருந்தபடி சொல்லுகிறேனென்னுதல்; விபீஷணாழ்வான் ஸாதுவாயிருக்கையாலே, ஸாதுவை உள்ளபடி சொல்லுகிறே னென்னுதல். ஸ்வாமிஹ்ருதயத்துக்கு வ்யதிரிக்தமாகில் யதார்த்தந்தான்சொல்லக்கடவதோவென்னில்; (ராமகௌரவாத்) பெருமாளுடைய சீர்மையாலே சொல்லுகிறேன். நான் யதார்த்தமிருந்தபடி சொல்லிற்றிலேனாகில் பெருமாளை உமக்குக் கிடையாதென்னு மத்தாலே சொல்லுகிறேனென்று கருத்து. ௭௪.

தாத்பர்யம். எங்களுக்குஸ்வாமியான மஹாராஜரே! நான், ஒருவரைஜயிக்கவேணுமென்றுவது, ஒருவரிடத்திலஸூயையினாலாவது, நான் பெரியனென்ற வபிமானத்தாலாவது, ஒருப்ரயோஜனத்தையபேக்ஷித்து பக்ஷபாதத்தினால் தனக்குத்தோற்றின படியாவது சொல்லப்போகிறேனில்லை. பெருமாளுடைய குணங்களைப்பார்த்து முன்சொன்ன பக்ஷங்களிலுள்ள குணதோஷங்களை உள்ளபடி சொல்லுகிறேன். என்று ஸுக்ரீவமஹாராஜனைக்குறித்துச் சொல்லுகிறார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௫௧-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. ப்ரதமமான அங்கதப்பெருமாள் மதத்துக்கு தோஷத்தைச்சொல்லுகிறான், அர்த்தாநர்த்த இத்யாதியாலே.

௫௧. அர்த்தாநர்த்தநிமித்தம் ஹி யதுக்தம் ஸசிவைஸ்தவ ।
தத்ர தோஷம் வ்யவஸ்யாமி க்ரியா ந ஹ்யுபபத்யதே ॥ ௭௫

அர்த்தம்:— தவ - உம்முடைய, ஸசிவை: - மந்திரிகளாலே, அர்த்தாநர்த்தநிமித்தம் - லாபநஷ்டங்களை ஹேதுவாகவுடைய, யத் - எந்த வாக்யமானது, உக்தம் - சொல்லப்பட்டதோ; தத்ர - அந்தபக்ஷத்தில், தோஷம் - தோஷத்தை, வ்யவஸ்யாமி - நன்றாய்ப்பார்க்கிறேன். (ஏனென்றால்) க்ரியா - பரீக்ஷைபண்ணுகை, நோபபத்யதே ஹி - ஹேதுவையுடையதன்றன்று ?

வ்யா. (ஸ்வல்பேந ப்ரயோஜநேந ஸ்வாமிஹிதப்ரவ்ருத்தி) ப்ரயோஜநாந் ப்ரயோஜனங்களை இவனுடைய ஸ்வாமிஹிதகாரங்களுக்கு ஹேது வென்று யாதொன்று சொல்லப்பட்டது. (தவஸசிவைஃ) தேவருடைய ப்ரக்ருதியறியாதே ஸாஸ்த்ரத்தைப்பார்த்துச் சொன்னரென்கை. பஹுவசநத்தாலே ஸுக்ரீவப்பெருமாள் பக்ஷத்தாரெல்லார்க்கும் அவருடைய வாக்யமேகமதமென்று சொல்லுகிறது. அவர்பக்கல் கௌரவமில்லையாலென்றுமாம், கார்யமல்லாமையால் நிஷேதிக்கிறனித்தனை; அவர்பக்கல் கௌரவமில்லையிற் குறையில்லையென்கை. (தத்ர தோஷம் ப்ரபஸ்யாமி) ஸவஹிதமாகச் சொன்ன மதத்திலே தோஷந்தோற்றுநின்றது. அந்த தோஷமேதென்னச் சொல்லுகிறன்; (க்ரியா நஹ்யுபபத்யதே) க்ரியா-பரீக்ஷா க்ரியா. அந்த பரீக்ஷாக்ரியை ஸம்பவியாதென்கிறது. ௬௫

தாத்பர்யம். விபீஷணனிடத்தில் குண குணங்களைப்பார்த்துப் பின்பவனைச் சேர்த்துக்கொள்ளுகையாவது விட்டு விடுகையாவது செய்யலாமென்று சொன்ன அங்கதப்பெருமாள் மதம், குணகுணங்கள் பரீக்ஷிக்கமுடியாதாகையால், சரியன்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யாஜ்ஞவல்கம், ௧௭ - ம் ஸர்கம், ௬௫ - ம் ஸ்லோகம்.

அவதாரிகை. ஸம்பவியாதென்னுமிடத்தை உபபாதிக்கிறதுமேல்.

௬௬. நாதே நியோகமாத்ரேண ஸாமர்த்யம் அவபோத்தும் ந ஸக்யதே |
ஸஹஸா விநியோகோ ஹி தோஷவாந் ப்ரதிபாதி மா ‖

அர்த்தம்.—நியோகமாத்ரேண-(ஒருகார்யத்தில்) ஏவுகையாலேயல்லது, ஸாமர்த்யம்-ப்ரயோஜநத்தையுடைத்தா யிருக்கையானது, அவபோத்தும் - அறிகைக்கு, நஸக்யதே-முடியாது. ஸஹஸா - சீக்கிரத்தில், விநியோகோஹி -ஏவுகையோவென்றால், மா-என்னைக்குறித்து, தோஷவாந் - தோஷத்தையுடையதாக, ப்ரதிபாதி - தோற்றுகிறது.

வ்யா. (நியோகமாத்ரேண ஸாமர்த்யம் அவபோத்தும் நஸக்யதே) ஸாமர்த்யமாவது-ஸக்தி ப்ரயோஜநஸாவஃ. அந்த ப்ரயோஜந ஜ்ஞாநார்த்தமாக நியோகிக்கத்தட்டென்னெனில்; (ஸஹ

ஸாவிநியோமோஹி தோஷவாநுவ்ருத்திஸாத்ரா) இவனால் ப்ரயோஜநமுண்டென்றறியாதே சடக்கென ஏவுதோமாகில் காரியத்துக்கு அநர்த்தமாமென்று தோற்றுநின்றது. ப்ரயோஜநமுண்டென்றறிந்தாலல்லது ஏவவொண்ணுது; ஏவினாலல்லது ப்ரயோஜநமறியவொண்ணுது. ஆக, இதரேதராஶ்ரய தோஷமாகையாலே பரீக்ஷாக்ரியையகொவவனெந. ௭௬.

* தாத்பர்யம். ஏனென்றால், இவனை நம்கார்யத்திலேவினாலல்லது இவன் நன்மை தெரியாது; நன்மையை யறியாமல் கார்யத்திலேவக்கூடாது. ஆகையால் பரீக்ஷை செய்யக்கடவதல்ல.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௫௩-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. அநந்தரம் ஹநுமான் மதத்தை உபக்ஷிக்கிறான்.

௫௦. ஸாரவ்யாணிஹிதம் யாக்யம் யத்யாக்யம் ஸசிவைஸ்தவ |
அர்த்தஸ்யாஸம்பவாத் தத்ர காரணம் நோபபத்யதே ௭௭

அர்த்தம்:—ஸாரவ்யாணிஹிதம் - தூதுவிடுகை, யாக்யம்-யோக்யம் (என்று) தவ - உம்முடைய, ஸசிவை: - மந்திரிகளாலே, யத் - எதுவானது, உக்தம் - சொல்லப்பட்டதோ ; தத்ர - அந்த மதத்தில், அர்த்தஸ்ய - ப்ரயோஜனத்தினுடைய, அஸம்பவாத் - இல்லாமையாலே, காரணம் - ஹேதுவானது, நோபபத்யதே - யோக்யமாயில்லை.

வ்யா. (ஸாரவ்யாணிஹிதம்யாக்யம் யத்யாக்யம் தவஸசிவை:) ப்ரணியாநம்-ஸாவேநிஷா. (தத்ர காரணம் நோபபத்யதே:) அந்த மதத்தில் காரணமுபபந்நமன்று. ஹேதுஸம்பந்நமென்கை. (அர்த்தஸ்யாஸம்பவாத்) இவன் ப்ரத்யக்ஷித்து நிற்கையாலே இவன் பக்கல் ஸாரனுக்கு அர்த்தம்மில்லாமையாலே. *அபவா,(அர்த்தஸ்யாஸம்பவாத் காரணம்நோபபத்யதே)அர்த்த ஶப்தத்தாலே ஸாமதாநபேத: ப்ரமாஸாதிகள் சொல்லப்பட்டன. (காரணம்) ஸாரவ்யாபார:-அதாகிறது-"வணிக் க்ருஷிவபோஷிக்ஷ்யாக:" இத்யாதிகள். ௭௭.

---

* இது பாடாந்தரத்தைப்பற்றி

தாத்பர்யம். தூதனைவிட்டு இவன் நன்மை தீமைகளை யறிந்து பின்பு யுக்தமானபடி செய்யலாமென்று சரபர்சொன்னதும், இவன் எதிரேநிற்கையாலே, தூதன் போய் செய்யவேண்டும்வ்யாபார மொன்றுமில்லாமையாலே, யுக்திமத்து அன்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௬௪ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. ஸ்ரீஜாம்பவந்மஹாராஜர்பக்ஷத்தை தூஷிக்கிறான்.

௨௭. அதேஶகாலே ஸம்ப்ராப்த இத்யயம் யத்விபீஷண: |
விவக்ஷா தத்ர மேஸ்தீயம் தாம் நிபோத யதாமதி || ௭௮.

அர்த்தம்:— அயம் - இந்த, விபீஷண: விபீஷணன், அதேஶகாலே - வருகைக்கு யோக்யமில்லாத நிலத்திலே அப்படிப்பட்ட காலத்திலே, ஸம்ப்ராப்த: - வந்தான்; இதி - என்று யத்-எது சொல்லப்பட்டதோ; தத்ர - இந்த மதத்தில், மே - எனக்கு, இயம் - இந்த, விவக்ஷா - சொல்லவேணுமென்கிற இச்சை, அஸ்தி - இருக்கிறது. தாம் - அதை, யதாமதி - அறிந்தபடி, நிபோத - கேளும்.

வ்யா. (அயம்விபீஷண:) "ஸோஹம் பருஷிதஸ்தேந" "தாஸவச்சாவமாநித:" என்று-ராவணனாலே அவமாநிதனாய், "தஸ்யாஹமநுஜோ ப்ராதா விபீஷண இதிஶ்ருத:" என்று - ஸ்வநிகர்ஷத்தை முன்னிட்டுக்கொண்டு, "ராகவம்ஶரணம்கத:" என்று - தேவர்திருவடிகளிலே ஶரணம்புகுந்து நிற்கிற விபீஷணன். (அதேஶகாலேஸம்ப்ராப்த இதி த்வத்ஸசிவைருக்தம், தத்ர மே இயம் விவக்ஷாஸ்தி, யதாமதி தாம் நிபோத) இப்பக்ஷத்தில் எனக்கு இந்த விவக்ஷை உண்டாகாநின்றது; நானறிந்தபடி சொல்ல அவற்றைக் கேட்டருளவேணும். யச்சப்த:-தச்சப்தார்த்தம். முன்புள்ள பக்ஷத்திற்காட்டில் இப்பக்ஷத்துக்குண்டான தூஷணவிஶேஷத்தைச்சொல்லுகிறது. ௭௮

தாத்பர்யம். இந்த விபீஷணன், வரவேண்டுமிடம் தவிர்ந்து. லங்கைக்கு ஸமீபத்தில் மைதானத்தில் நாமிருக்க இப்போது வந்தவனுகையால் விச்வஸநீயனல்லனென்று சொன்ன ஜாம்பவமஹாராஜர் மதத்திலும் எனக்கு ஒரு விஷயம் சொல்லவேணுமென்று தோற்றுகிறது; எனக்குத்தெரிந்தவரையில் சொல்லுகிறேன்; அதைக்கேட்கவேணும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்,

யுத்தகாண்டம், கள - ம் ஸர்க்கம், ருரு - ம் ஶ்லோகம்.

அவதாரிகை- அந்த விவக்ஷை இன்னதென்கிறது மேல்.

ருரு.—ஸர்வஜ்ஞ தேஶ꞉ காலஶ்ச ஹவதீஹ யதா ததா ।
புருஷாத் புருஷம் ப்ராப்ய ததா தோஷ கு்ணாவபி ॥

அர்த்தம். இஹ- இங்கே, ஸ꞉ - இவன் வரவுக்கு யோக்யமான, தேஶ꞉ - தேசமும், ஸ꞉ - அப்படிப்பட்ட, காலஶ்ச - ஸமயமும், ஸர்வஜ்ஞ꞉ - இதுவே. யதா - எப்படி, ஹவதி - ஆகிறதோ ; ததா - அப்படிப்பட்ட, (விவக்ஷையைக்கேளும்). புருஷாத்- அதமபுருஷனைக்காட்டிலும், புருஷம்-உத்தமனான புருஷனை, ப்ராப்ய - அறிந்து, ததா - அப்படியே, தோஷ கு்ணாவபி - கெடுதியையும் நன்மையையும், ப்ராப்ய - அறிந்து, (வருகையுக்தம்.)

வ்யா. (இஹஸர்வஜ்ஞதேஶ꞉ காலஶ்சயதாஹவதி ததாதாம் நிபோத)இதிவக்ஷ்யமாணாந்வய꞉. யாதொருகாலத்திலே யாதொரு தேஶத்திலேவந்தான் ; இவன் வரவுக்கு இதுவே தேஶமும், இதுவே காலமும், யாதொருபடியாம் ; அப்படிப்பட்ட விவக்ஷை கேட்டருளவேணும். எங்ஙனேயென்னில் ; (புருஷாத் புருஷம்ப்ராப்ய ததாதோஷகு்ணாவபி) தந்நிவ்ருத்தியாகையாலே ஹிம்ஸையே யாத்ரையான ராவணனைக்காட்டில், ஸர்வாத்மராகையாலே பரரக்ஷணமே யாத்ரையாயிருக்கிற தேவரை ப்ராப்ய ராகவபுத்திபண்ணி. ப்ராப்ய-புத்த்வா. (ததாதோஷகு்ணாவபி) அவனை அவ்வளவிலேவிட்டுப் போராதொழிந்தால் வரும் தோஷத்தையும் தேவரீரைப்பற்றினால்வரும் நன்மையையும் புத்திபண்ணி. தோஷமாவது-அவனுடைய க்ருத்யத்துக்கு ஸஹகாரியாய், அந்த ப்ராதிகூல்யத்தோடே முடிந்து போகை. நன்மையாவது- யாஜ்ஞிகரோடே கூடப்பெறுகையும், அதின் பலமான தேவர் திருவடிகளில் கைங்கர்யமும். இந்த வைஶிஷ்ட்யஜ்ஞாந முடையவனுக்கு வருகை யுக்தம். எகூ,

தாத்பர்யம்:—நீசனான ராவணனைக்காட்டிலும் தேவர் உத்தமனென்றும், ராவணன் ஸஹவாஸத்தால்வரும் கெடுதியையும் தேவர் ஸம்பந்தத்தால்நேரிடும் நன்மையையும் அறிந்தவனுக்கு இத்தேசத்தில் இக்காலத்தில் வருகையே யுக்தம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௫௬-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. கிஞ்ச.

ஶ்லோ.— தௌராத்ம்யம் ராவணே த்ருஷ்ட்வா விக்ரமம் ச ததா த்வயி ।
யுக்தமாகமநம் தஸ்ய ஸத்ருஶம் தஸ்ய புத்தித: ॥ ௮௦.

அர்த்தம். ராவணே - ராவணனிடத்தில், தௌராத்ம்யம் - கெட்ட நடத்தையையும், ததா - அப்படியே, த்வயி - உம்மிடத்தில், விக்ரமம் - பராக்ரமத்தையும், த்ருஷ்ட்வா - பார்த்து, தஸ்ய - அந்தவிபீஷணனுடைய, புத்தித: - புத்திக்கு, ஸத்ருஶம் - தகுந்த, தஸ்ய - அவனுடைய, ஆகமநம் - வரவு, யுக்தம் - யோக்யம்.

வ்யா. (ராவணே தௌராத்ம்யம் ததா த்வயி விக்ரமம் ச த்ருஷ்ட்வா, தஸ்யாகமநம் யுக்தம்) தேவர் திருவுள்ளத்திலே புண்படும்படி ராவணன்பண்ணின தண்மையைக்கண்டு, துராத்மாக்களை ஸநாயாஸேந கொல்லவல்ல ஆண்பிள்ளைத்தனத்தை தேவரீர்பக்கலிலே கண்டு வருகை யுக்தம். (தஸ்யபுத்தித்ஸத்ருஶம்) ந்யாயத்திலே ஸஞ்சரிக்குமவன்புத்திக்கும் ஸத்ருஶம். ராவணன்தன்னைக் கொல்லப்புக, உபேக்ஷ்யம் யுக்தமல்லவென்றவனுகையாலே கைக்கொண்டானிறே. ௮௦.

தாத்பர்யம்:—ராவணன் செய்யும் நீசக்ருத்யத்தையும், தேவரிடத்தில் துஷ்டநிக்ரஹஸாமர்த்யத்தையும் கண்டு ந்யாயாந்யாயங்களில் யோசனையுள்ள, விபீஷணன், இப்போதுராவணனைவிட்டு இங்கேவருகையுக்தந்தான்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௫௭-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. அநந்தரம் மைந்தபக்ஷத்தை தூஷிக்கிறான்.

ஶ்லோ.— அஜ்ஞாதரூபை: புருஷைஸ்ஸ ராஜந் ப்ருச்ச்யதாமிதி ।
யதுக்தம் தத்ர மே ப்ரேக்ஷா காசிதஸ்தி ஸமீக்ஷிதா ॥ ௮௧.

அர்த்தம். ராஜந் - ஸ்வாமியே! அஜ்ஞாதரூபை: - அறியத்தகாத அபிப்ராயத்தையுடைய, புருஷை: - புருஷர்களால், ஸ: - அந்த விபீஷணன், ப்ருச்ச்யதாம் - கேட்கப்படட்டும்; இதி - என்று, தவ - உம்முடைய, ஸசிவை: - மந்திரிகளாலே, யத் - எந்தவசநம், உக்தம் - சொல்லப்பட்டதோ? தத்ர - அந்தபக்ஷத்தில், மே - எனக்கு, ஸமீக்ஷிதா - நன்றாய்ப்பரிசீலநம்பண்ணப்பட்ட, காசித் - ஒரு, ப்ரேக்ஷா - யுக்தி, அஸ்தி - இருக்கிறது.

வ்யா. (அஜ்ஞாதரூபை: புருஷை: ஸ ராஜா) அஜ்ஞாதாநி வ்யா புருஷை:. தந்தாம் நினைவை எதிரிகள் அறியாதபடி மறைத்துச்சொன்ன புருஷர்களாலே. (ஸப்ரஹ்ருஷ்டாதிதி தத்த்வஸ்ய வித்வை: யத்யபி ஸம்ஹாரம் ஜநு) தேவர் ராஜாக்களானல், வக்தாக்கள் ஸாஹஸ்த்தாக்களென்றால் ந்யாயபஹிஷ்கமான வார்த்தையைக் கேட்கக்கடவதோ வென்கை. (தத்ர ஸமீக்ஷிதா பேக்ஷாகாவிதஸி) இம்மதத்திலே நீதிவிரோதத்தைப்பற்றி என்னால் நிரூபிக்கையாயிருப்பதொரு புத்தியுண்டு. அக.

தாத்பர்யம். தன்னபிப்ராயத்தை மறைத்து எதிரியினபிப்ராயத்தையறியவல்ல புருஷர்களை அனுப்பி இவனபிப்ராயத்தை யறியவேணுமென்ற மதத்திலும் எனக்குச்சொல்லவேண்டிய ஒரு அபாதிதமான யுக்தியுண்டு.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், கள - ம் ஸர்க்கம், ருஅ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. அது என்னென்ன இன்னதென்கிறான்.

௩௰ — ப்ரஹ்ருஷ்டோ நா விஸ்ருஜேத ஸஹஸா புத்திமாந் வச: |
தத்ர மித்ரம் ப்ரதுஷ்யேத மித்யாப்ருஷ்டோ ஸம்ப்ரமாயதே ||

அர்த்தம். புத்திமாநு-பூர்வோத்தரங்களை யறியவல்ல புத்தியுடையவன், ப்ரஹ்ருஷ்டோ நர:-கேட்கப்பட்டவனைக்கொண்டு, வச: - ப்ரதிவசநத்தைக்குறித்து, ஸஹஸா-சீக்கிரமாய், விஸ்ருஜேத - மிகவும் ஸங்தேஹிப்பன். தத்ர-அவ்வளவில், மித்யாப்ருஷ்ட: - பொய்யேகேட்கிறவனுக்கு, அஸம்ப்ரமாயது - ஸ்ரமமின்றிக்கேவந்த, மித்ரம் - ஸ்நேஹிதன், ப்ரதுஷ்யேத-தூஷிதனுவான்.

வ்யா. (ஸஹஸாவச: ப்ரஹ்ருஷ்டோ நஸ்புத்திமாநு விஸ்ருஜேத) தன்னை ஸ்வீகரிப்பதற்கு முன்னே ராவணன் வசநத்தை ப்ரஶ்நம் பண்ணினால், இது ஸ்வீகாரத்துக்குப்பின்பு கார்யவிசாரஸமயத்திலே கேட்குமதுவென்று அறியும் புத்தியோகத்தை யுடையவன், ஸந்நிகர்ஷத்தை முன்னிட்டுஶரணம்புக்க நம்பக்கலிலே ஶத்ருபுத்தியைப்பண்ணினுரோவென்று மிகவும் ஶங்கிக்கும். ஶங்கையில் வரும் அநர்த்தத்தைச்சொல்லுகிறது மேல் அர்த்தத்தாலே. (தத்ர) ஶங்கித்தவளவிலே. (மித்யாப்ருஷ்ட:) ஒன்றை நினைத்து ஒன்றைக் கேட்குமவனுக்கு. (ஸம்ப்ரமாதம் மித்ரம் ப்ரதுஷ்யேத) இருங்க

முடவன் தலையிலே மத்தெ குதித்தாற்போலே, அநாயாஸேந வந்த மித்ரம் இழக்கவரும். (மித்ராவ்ருஷ்டு) என்று பரமமானபோது மித்ரவிஶேஷணமாய், பொய்யே சிலவற்றைக் கேட்கிற மித்ரமென்றுமாம். ௮௨.

தாத்பர்யம்:— வசந ஸந்தர்ப்பங்களை அறியவல்ல புத்திமானை ஸ்வீகரிக்கைக்குமுன்பே ராவணன்வ்ருத்தத்தைக்கேட்டால், நம்மை இவர்கள் சத்ருவாகவெண்ணினார்களென்று ஸந்தேஹிப்பன், அவனப்படி ஸந்தேஹித்தால், நமக்கு ஸுலபமாய் வந்தமித்ரனைநாமிழப்போம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௫௯ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. மித்ரத்தை இழக்குமளவேயன்று; அவன் நினைவு ஆராயவுமொண்ணாதென்கிறான்.

௨௯,— அஶக்யஸ்ஸஹஸா ராஜந் பாவோ வேத்தும் பரஸ்ய வை ।
அந்தஸ்ஸ்வபாவைர்கீதைஸ்தைர் நைபுண்யம்பஶ்யதா ப்ருஶம் ॥

அர்த்தம். ராஜந் - ஸ்வாமியே! ப்ருஶம் - மிகவும், நைபுண்யம் - ஸமர்த்தனாயிருக்கையை, பஶ்யத: - பார்க்கிற, பரஸ்ய - எதிரியினுடைய, அந்தஸ்ஸ்வபாவை: - உள்ளேமறைந்திருக்கிற அபிப்ராயத்தையுடைய, தை: - அந்த, கீதை: - சொற்களாலே, பாவ: - அபிப்ராயம், ஸஹஸா - சீக்கிரத்தில், வேத்தும் - அறிகைக்கு, அஶக்ய: - ஸாத்யமன்று.

வ்யா. (பரஸ்யவைபாவ ஸஹஸாவேத்துமஶக்ய:) பரிசயத்தாலே அந்யனுடைய ஹ்ருதயத்தையறியுமதொழிய, சடக்கென அறியப்போகாது. எங்ஙனேயென்னில்; (ப்ருஶம்நைபுண்யம் பஶ்யத: பரஸ்ய அந்தஸ்ஸ்வபாவை கைஸ்தீதைர்: பாவ: வேத்துமஶக்ய:) துஷ்டஸ்வபாவனாய் ஸாமர்த்யத்தை நிபுணமாகப்பார்க்கிறவனுடைய மஹாபிப்ராயமான உத்தரவசநங்களாலே பாவம் அறியப்போகாது. (அந்தஸ்ஸ்வபாவை:) தன்னுடைய பாவம் வசநத்திலே தோற்றாதே நெஞ்சிலேகிடக்கை. (ராஜந்) நீதிஜ்ஞரான தேவர்க்கு அஜ்ஞாதமுண்டோவென்கை. நீ உன்னுடைய பாவத்தை மறைத்து ப்ரஶ்நம் பண்ணினவோபாதி, அவனுந்தன்னுடைய பாவத்தை மறைத்துத்தான் உத்தரம்சொன்னால் அறியப்போமோ அவனுடைய பாவமென்கை. ௮௩.

தாத்பர்யம்:—எதிரி, தன்கார்யத்தில் ஸமர்த்தனானால், தன்னினைவை வெளியிடாதபடி நாம்கேட்டதற்கு உத்தரம் சொல்லுவன்; ஆகையால் சீக்கிரத்திலவன்னினைவறிய முடியாது.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௬௰-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. இப்படி பரசேத்தை நிரஸநம்பண்ணி ஸ்வஸித்தாந்தத்தை உபந்யஸிக்கிறான்.

௬௰.— நாஸ்ய ப்ருவதோ ஜாது லக்ஷ்யதே துஷ்டபாவதா ।
ப்ரஸந்நம் வதநம் சாபி தஸ்மாந்மே நாஸ்தி ஸம்ஶய:॥ அ௬

அர்த்தம். அஸ்ய-இவன், ப்ருவத:-சொல்லுகிறவளவிலும், ஜாது - ஒருகாலும், துஷ்டபாவதா - கெட்டநினைவை யுடைத்தாயிருக்கை, ந லக்ஷ்யதே - காணப்படுகிறதில்லை. வதநம் - முகமும், ப்ரஸந்நம் - கலக்கமின்றிக்கே இருக்கிறது. தஸ்மாத் - ஆகையால், மே - எனக்கு, ஸம்ஶய: - ஸந்தேஹம், நாஸ்தி - இல்லை.

வ்யா. (அஸ்ய ப்ருவத: துஷ்டபாவதா ஜாது ந லக்ஷ்யதே) இவன்வார்த்தை சொல்லுகிற விடத்தில் துஷ்டபாவமொரு ஒருகாலுங்காணப்படுகிறதில்லை. அநாதரேஷஷ்டீ. (ஜாது) துஷ்டபாவனாகில் தன்தோஷத்தைமறைத்தாலும் ஓரளவுகளிலே ப்ரகாஶிக்கும்; இவன்பக்கல் ஸர்வாத்மநாந் தோற்றுகிறதில்லை. துஷ்டபாவமாவது-துஷ்டனுடைய வேஷ்டை. அதாவது-தேவவிகாரம்; ஸ்வேத கம்பாதி:, மதி:, நிரீக்ஷணம், ஆலோகநம், இவை தொடக்கமானவை துஷ்டசேஷ்டிதங்களாக ஶாஸ்த்ரங்களிலே ப்ரஸித்தம். ததாஹ யாஜ்ஞவல்க்ய: - "தேஶாத்தேஶாந்தரம் யாதி ஸ்ருக்விணீ பரிலேடிச | லலாடம் ஸ்வித்யதே சாஸ்ய முகம் வைவர்ண்யமேதி ச ॥ பரிஶுஷ்யத் ஸ்கலத்வாக்யோ விருத்தம் பஹு பாஷதே । ஸ்வபாவாத் விக்ருதிம் கச்சேத் மநோவாக்காய கர்மபி:" இத்யாதி:. தேநாபி - "பாஹ்ய ர்விபாவ்யதே லிங்கை ரந்தர்கதம் மநோ ந்ருணாம் । ஸ்வரவர்ணேங்கிதாகாரை ஶ்சக்ஷுஷா சேஷ்டிதேந வா ॥ ஆகாரை ரிங்கிதை ர்கத்யா சேஷ்டயா பாஷிதேந வா। நேத்ரவக்த்ரவிகாரைஶ்ச க்ருஹ்யதேऽந்தர்கதம்

த்மந:'' இத்யாதி:. இவன்பக்கல் து³ஷ்டலிங்கங்களில்லாமையேயன்று; ஶாந்தனென்னுமிடத்துக்கு லிங்கமுண்டென்கிறான், (ப்ரஸந்நம் வத³நஞ்சாபி) என்கிற வாக்யத்தாலே. இவனுடைய முக²ம் ப்ரஸந்நமாயே இராநின்றது. வழியடியுண்டவன் தாய் முக²த்திலே விழித்தாற்போலே; இவன் முக²ம் குளிர்ந்தன்றோ இருக்கிறது. முக² ப்ரஸாத³ம் ஶாந்தலிங்க³மாக ப்ரஸித்³த⁴ம். யதா² ஶ்ரீகிஷ்கிந்தா⁴காண்டே “ந முகே² நேத்ரயோர்வாபி லலாடே ச ப்⁴ருவோஸ்ததா² । அந்யேஷ்வபி ச ஸர்வேஷு தோ³ஷ: ஸம்விதி³த: க்வசித்” இதி. (தஸ்மாந்நாஸ்தி ஸம்ஶய:) இவன்பக்கத்தில் தோ³ஷாபா⁴வத்தாலும், ஶாணசேஷ்டா வைலக்ஷண்யத்தாலும், “ஸர்வதா² ஶங்க்ய ஏவ ஹி” “ஸர்வதா²ஶங்க்யதாமயம்” என்று-முதலிகளுக்குண்டான ஸம்ஶயம் எனக்கு இல்லையென்கிறான். ௮௪.

தாத்பர்யம்:—இந்த விபீஷணன் சொல்லும்போது இவனிடத்தில் துஷ்டசேஷ்டைகள் கொஞ்சமும் தெரிகிறதில்லை-முகமும்ப்ரஸந்நமாயே யிருக்கிறது. மனஸ்ஸில்கௌடில்ய மிருந்தால் முகத்தில் தோற்றாமலிராது; ஆகையால் இவனிடத்திலெனக்கு ஒரு ஸம்சயமும் கிடையாது.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்³த⁴காண்டம், ௧௭-ம் ஸர்க³ம், ௬௫-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. இவன் வந்தபடியாலும் வார்த்தை சொன்னபடியாலும் எனக்கேயல்ல, இவனளவில் ஸர்வர்க்கும் ஶங்கிக்க இடமில்லையென்கிறான்.

௮௫.— அஶங்கிதமதி: ஸ்வஸ்தோ² ந ஶட²: பரிஸர்பதி ।
ந சாஸ்ய து³ஷ்டா வாக³பி தஸ்மாந்நாஸ்தீஹ ஸம்ஶய: ॥ ௮௫

அர்த்த²ம். ந ஶட²: - துஷ்டனாகாத இந்த விபீஷணன், அஶங்கிதமதி: - ஸந்தேஹிக்கப்படாத புத்தியையுடையவனாய், ஸ்வஸ்த²: - பயமில்லாதவனாய், பரிஸர்பதி - ஸமீபத்தில்வருகிறான். அஸ்ய - இவனுக்கு, து³ஷ்டா வாக் - தோஷத்தையுடைய வசநம், நாஸ்தி - இல்லை. தஸ்மாத் - ஆகையால், இஹ - இவன்விஷயத்தில், ஸம்ஶய: - ஸந்தேஹம், நாஸ்தி - இல்லை.

வ்யா. (அஶங்கிதமதிஸ்ஸ்வஸ்த:) முதலிகள், "ஶாஸ்தா நீதிஶாஸ்த்ரஸ்ய ஶாஸ்தா" என்று - தன்னைக்குறித்துக் கல்லுந்தடியுமான வளவிலும், பலியில் இவர்கள்பக்கல் வ்யதிகரத்தையும் ஶங்கையின்றிக்கே வந்தான். (ந ஶட: பரிஸர்பதி) பரிஸர்பணமாவது-பரிஸ்ரம்பணம். தனக்குஓர் அபாஶ்ரயந்தேடி வருவாரைப்போலே கிட்டவந்தான். (ராக்ஷஸோபஹ்ருதி) என்று-நம்மைமதியாதே மேலிட்டுவந்தானென்று முதலிகளும் பயப்படும்படியிறே கிட்டிக்கொண்டு நின்றது. இப்படியோ துஷ்டஸ்வபாவருடையபடி யிருப்பது. (ந சாஸ்ய துஷ்டா வாக் சாபி) இவன்வார்த்தைவ்யாபாரத்தில் தளப்பமில்லை. துஷ்டருடையவார்த்தை வ்யாபாரம் ஸ்வப்ராதிகூல்யஸூசகமாயிறே யிருப்பது. (தஸ்மாத், இஹ, நாஸ்தி ஸம்ஶய:) எனக்கேயல்ல, அஸ்மதாதிஶங்கிகளுக்கும் இவன் விஷயத்தில் ஶங்கைவேண்டா. அ௨.

தாத்பர்யம். இவன் துஷ்டனுகில், இவனுக்குப்ப்ராதிகூலத்தைப் பண்ணயத்நித்த நம்ஸைந்யத்தில் ப்ரதிகூலபுத்தியில்லாமலும் பயமில்லாமலும் வரமாட்டான்; சொல்லும்போது தழதழத்தல்லதுசொல்லான்; இவனிடத்தில் இக்குணங்களில்லாமையால் இவனை ஸந்தேஹிக்கவேண்டுவதில்லை.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௬௩ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. அவன் விப்ரலம்பத்தை மெய்யாக நினைத்துச் சொல்லுகிறுயென்று முதலிகளுடைய நினைவாகச்சொல்லுகிறன்.

ஶ்லோ.— ஆகார ஶ்சாத்யமாநோபி ந ஶக்யோ விநிகூஹிதும் |
பலாத்தி விவ்ருணோத்யேவ பாவ மந்தர்கதம் ந்ருணாம் ॥ அ௩.

அர்த்தம். ஆகார:-சரீரவிகாரம், சாத்யமாநோபி-மறைக்கப்பட்டாலும், ந்ருணாம் - மனுஷ்யர்களுடைய, அந்தர்கதம்-உள்ளிருக்கிற, பாவம் - அபிப்ராயத்தை, பலாத் - பலத்தினுலே, விவ்ருணோத்யேவ-ப்ரகாசிப்பித்தேநிற்கும். ஹி-ஆகையால், விநிகூஹிதும் - மறைக்க, ந ஶக்ய: - ஸாத்யமன்று.

வ்யா. (ஆகார:) ஶரீரவிகாரம், (சாத்யமாநோபி) சாதிக்கக்கடவதாக இவன் ப்ரவர்த்தித்தாலும். (ந ஶக்யோ விநிகூஹிதும்) ஶக்தனு கந்யாகரித்திருக்கையாலே இவனுல்மறைக்கப்போகாது.

மறைக்கப் போகாமைக்கு ஹேது சொல்லுகிறது. (ந்யூனாதே மக்நம்ஸாவம்ஸமாதிவ்யேனாசேத்யவ) இவன் மறையாநிற்கச்செய்தேயும் இந்த விகாரம் ஸ்வபாவத்தாலே பராஷின ஸம்ஸவித்துத் தனக்கடியாய் நமக்குத் தோற்றுதேயிருக்கும்ஸாவதோஷத்தை ப்ரகாசிப்பியாநிற்கும். (ஹி)ஹேதௌ-ஸவ்யாரணத்தால் தப்பாதென்கை. ஸுத்ரோநா: - "ஆகாரைரிங்கிதைர்கத்யா" இத்யாதி.

தாத்பர்யம்:—ஒருவனுக்குக்கெடுதி நினைவிருந்தால், அது அவன்சரீரத்தில் காணும விகாரத்தால் தெரியும். அந்த விகாரத்தை இவன்மறைக்கயத்நித்தாலும் மறைக்கப்போகாமல் உள்ளிருக்குமபிப்ராயத்தை வெளிப்படுத்தியே விடும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௬௬ - ம் ச்லோகம்.

அவதாரிகை. இப்படி விபீஷணமாய் தைவாதீநமான ஸித்தத்தை விக்ரஹித்து,தேவருடைய ரக்ஷகத்வத்தையும் அவனுடைய வரவையும் ஸபலமாக்கியருளவேணுமென்று விஜ்ஞாபநத்தை நிகமிக்கிறார். அ௭.

௬௬.— தேசகாலோபபன்னம்ச காரியம் கார்யவிதாம் வர |
ஸபலம் குருதே க்ஷிப்ரம் ப்ரயோகேணாபிஸம்ஹிதம் ||

அர்த்தம். கார்யவிதாம்-கார்யத்தை யறிந்தவர்களுக்கு, வர - ஸ்ரேஷ்டனே ! தேசகாலோபபந்நம் - தேசகாலங்களுக்குயோக்யமான, கார்யம் - செய்யத்தக்கதை, ப்ரயோகேண - அனுஷ்டானத்தோடே, அபிஸம்ஹிதம் - யுக்தமாக்கி, க்ஷிப்ரம் - சீக்கிரத்தில்; ஸபலம் - லாபத்தோடுகூடியதாய், குருதே - பண்ணுகிறான்.

வ்யா. (தேசகாலோபபன்னம்சகார்யம்க்ஷிப்ரம்ப்ரயோகேணாபிஸம்ஹிதம் தேவஸபலம் குரு) (தேசகாலோபபன்னம்ச) என்று-அவன் வரவுக்கு தேசகாலங்கள் யோக்யமானாற்போலே, தேவருடைய விக்ரஹத்துக்கும் யோக்யமான தேசகாலங்களென்கை. (கார்யம்) கர்த்தவ்யம். ஸ்வீகாரரூபகர்த்தவ்யமென்கை. (க்ஷிப்ரம்ப்ரயோகேணாபிஸம்ஹிதம்தேவஸபலம்குரு) "ஆஜஹார

ஊஹமேதேந" என்று - அவன் தடித்துவந்த வரவுக்கு ஸத்ருஶ மாம்படி சடக்கென வேணும். (கார்யவிதாம்வர) கார்யாந்தமுமாகவும் கர்த்தவ்யங்களை யறியுமவர்களுக்குவரணீயரன்றோ தேவர். அதவா (தேஶகாலோபபந்நஞ்ச கார்யம் ஸுப்ரயோகேணாபி ஸம்ஹிதம்ஸபலம் காலே) கர்த்தவ்யஜ்ஞாநமுடைய புருஷன், தேஶகாலங்களுக்கு உசிதமான கர்த்தவ்யங்களை ப்ரயோகேண அபிஸம்ஹிதமாக்கி ஸபலமாகப்பண்ணுநிற்குமிறே யென்றுமாம். (கார்யவிதாம்வர) கர்த்தவ்யஜ்ஞாநமுடையார்ப்படி. இதுவாறால் அவர்களுக்கு வரணீயரான தேவர்க்கு அநுஷ்டாநமின்றிக்கே யொழியக்கடவதோ. ௮௭.

தாத்பர்யம்:—கார்யவிமர்சையுள்ளவன், தேசகாலங்களுக்குசிதமாகக்கார்யத்தை யனுஷ்டித்து அதின் பலத்தையடைடவன்; கார்யவிமர்சிகளில் தலைவரானதேவர் அதை உபேக்ஷிக்கலாமோ?

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௯௪, ௯௫-ம் ஶ்லோகங்கள்.

அவதாரிகை. பந்துக்களையும் ஐஶ்வர்யத்தையும் விட்டு வெறுமனே நம்பக்கல் இத்தையே ப்ரயோஜநமாக வரக்கூடுமோ வென்னில்; அது கூடாதென்றிருந்தீராகிலும் ராவணநிரஸநபூர்வகமாக நம்பக்கலிலே ராஜ்யத்தை யபேக்ஷித்துவரக்கூடும்; அப்போதும் பரிக்ராஹ்யனென்கிறான் உத்யோகமித்யாதியால்.

ஊ௭. உத்யோகம் தவ ஸம்ப்ரேக்ஷ்ய மித்யாவ்ருத்தம் ச ராவணம் |
வாலிநம் ச ஹதம் ஶ்ருத்வா ஸுக்ரீவம் சாபிஷேசிதம் || ௮௮.
ராஜ்யம் ப்ரார்த்தயமாநஶ்ச புத்திபூர்வமிஹாகத: |
ஏதாவத்து புரஸ்க்ருத்ய வித்யதே தஸ்ய ஸங்க்ரஹ: || ௮௯.

அர்த்தம். — தவ - உம்முடைய, உத்யோகம் - யத்நத்தையும், மித்யாவ்ருத்தம் - கெட்டசர்யையையுடைய, ராவணம் - ராவணனையும், ஸம்ப்ரேக்ஷ்ய - பார்த்து, ஹதம் - அடிக்கப்பட்ட, வாலிநம் - வாலியையும், அபிஷேசிதம் - பட்டாபிஷேகம் பண்ணப்பட்ட, ஸுக்ரீவம் - ஸுக்ரீவனையும், ஶ்ருத்வா - கேட்டு, ராஜ்யம் - தேசத்தை, ப்ரார்த்தயமாந: - அபேக்ஷித்தவனாய், புத்திபூர்வம் - அறிவை முன்னிட்டு, இஹ - இங்கே, ஆகத: - வந்தான், ஏதாவத் - இவ்வளவையே, புரஸ்க்ருத்ய - முன்னிட்டு, தஸ்ய - இவனுடைய, ஸங்க்ரஹ: - ஸ்வீகாரம், வித்யதே - செய்யத்தக்கதாயேயிருக்கிறது.

வ்யா. அவன் — ராஜ்யாஸ்ரயணம் பண்ணிவருகைக்கு ஹேது சொல்லுகிறது. (தவோத்யோகம் ஸம்வேக்ஷ்ய) கரதூஷணத்ரிஸிராக்கள் முதலான பதினாலாயிரம் ராக்ஷஸரையும் மூன்றேமுக்கால் நாழிகையிலே தனியே அழியச்செய்த தேவர், வெளிநிலமான கடற்கரையிலே ஸந்நிவேசமாக இட்டுக்கொண்டிருக்கிற ஒருபாட்டைக் கண்டு. (த்ருஷ்ட்வா வ்ருத்தஞ்ச ராவணம், வாலிநஞ்ச ஹதம் ஸ்ருத்வா ஸுக்ரீவஞ்சாபிஷேசிதம் ராஜ்யம் ப்ரார்த்தயமாநஸ்து புத்திபூர்வமிஹாகத:) தேவர்க்கு எதிரியான ராவணனுடைய மாயா வ்யாபாரத்தையும், ராவணனிலும் அதிப்ரபலனான வாலியை ஓரம்பாலே உம்மையாஸ்ரயித்த தம்பிக்காக அழியச்செய்தபடியைக் கேட்கையாலும், வாலியினுடைய ராஜ்யத்தில் உமக்கு நசையின்றிக்கே தம்பிக்கே கொடுத்தபடியாலும், ராவணனை யழியச்செய்து ராஜ்யத்தைத் தருவாரென்று ராஜ்யகாங்க்ஷியாய்க்கொண்டு வருகையாலே ஸஜ்ஜனல்லன்; ஸங்க்ராஹ்யன். (ஏதாவத்து புரஸ்க்ருத்ய யுஜ்யதே ஸ்யஸங்க்ரஹ:) நமக்கு அப்படியே ப்ராப்தவாய் வந்தானென்னுமிடம் உம்முடைய ஸந்நிவேசத்துக்கு ஸஜ்ஜநீயனானாலும், ஏதாவந்மாத்ரத்தை முன்னிட்டாகிலும் இவனுடைய ஸங்க்ரஹம் கார்யமே. ப்ரயோகத்தில் தாத்பர்யம் ஸந்தேஹாஸ்பதம், வாக்யத்தில் தாத்பர்யம் அவதாரணார்த்தம். ௬௫, ௬௬.

தாத்பர்யம்:—பிறர்க்குச் செய்யவரிதான தேவர் யத்நத்தையும், ராவணன் மாயையையும் பார்த்து, தேவர் துஷ்டனான வாலியைக்கொன்று அவன் ராஜ்யத்தை ஆஸ்ரிதரான மஹாராஜர்க்குக்கொடுத்தீரென்று கேட்டு, அப்படியே தன் தமையனைக் கொன்று தனக்கு ராஜ்யத்தைக்கொடுப்பீரென்றெண்ணி இங்கேவந்தான்; இவ்வளவை முன்னிட்டாவது இவனை யங்கீகரிக்கவேணும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௬௬-ம் ஸ்லோகம்.

அவதாரிகை. ஆக இப்படி லோகவ்யவஸ்தையாலும் இவன் ஸங்க்ராஹ்யனென்னுமிடத்தைச் சொல்லி, மேல் இவனுடைய பாவஸுத்தியை உபபாதித்துக்கொண்டு உக்தத்தை நிகமிக்கிறான்.

௬௮. யதாசக்தி மயோக்தம் து ராக்ஷஸஸ்யார்ஜவம் ப்ரதி ।
ப்ரமாணம் த்வம் ஹி சேஷஸ்ய ச்ருத்வா புத்திமதாம்வர ॥

அர்த்தம்.—ராக்ஷஸஸ்ய-ராக்ஷஸ ஜாதியான விபீஷணனுடைய, ஆர்ஜவம் ப்ரதி - குடிலமில்லாமையைக்குறித்து, மயா - என்னாலே, யதாசக்தி - புத்திபலத்தை அதிக்ரமியாமல், உக்தம் - சொல்லப்பட்டது. புத்திமதாம் - புத்திமான்களுக்கு, வர - ஸ்ரேஷ்டரே! த்வம் - நீர், ச்ருத்வா - கேட்டு, சேஷஸ்ய - ஸமஸ்தத்துக்கும், ப்ரமாணம் ஹி - நிர்ணயிக்கத்தகுந்தவரன்றோ?

வ்யா. (ராக்ஷஸஸ்யார்ஜவம்ப்ரதி) முதலிகள் ஜாதிதோஷத்தைப்பற்றி சங்கிக்கிற இவனுடைய ஆர்ஜவத்தைக்குறித்து. (மயா) வானரமாத்ரமான என்னாலே. (யதாசக்தி உக்தம்) யதாமதி சொல்லப்பட்டது. (புத்திமதாம்வர) ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளையும் ஸாக்ஷாத் அறியும் தேவரீரேயிறே இவனுடைய சுத்தியறிகைக்கு சக்தர். (ச்ருத்வா சேஷஸ்ய ப்ரமாணம் த்வம் ஹி) இவனுடைய குணாதிக்யமென்ன, ஸாரமென்ன, ஸ்வீகாரமென்ன, இவை நான் விண்ணப்பஞ்செய்யக்கேட்டாலும் அவையெல்லாவற்றுக்கும் நிர்ணாயகர் தேவரீரேயிறே. ச்ருதியை ஸ்ம்ருதி பின்செல்லுமாப்போலே, அடியோங்கள் தேவரீர் திருவுள்ளத்தைப் பின் செல்லுமித்தனையென்று கருத்து. ௬௮.

தாத்பர்யம்:—வானரர்கள், இவன் ஜாதியைப்பார்த்து இவனை துஷ்டனென்கிறார்கள்; நான், ஸ்வபாவத்தினால் இவன் துஷ்டனல்லன் அநுகூலனென்று என்புத்தியுள்ளவரையில் யோசித்துச்சொன்னேன்; இவைகளையறிய தேவர் ஸமர்த்தராகையால் இவையெல்லாவற்றையும் தேவரீரே நிச்சயிப்பீரன்றோ?

இதி ஸ்ரீயுத்தகாண்டே ஸப்ததச: ஸர்க்க:.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௧-ம் ச்லோகம்.

அவதாரிகை. முற்பட மஹாராஜர் வார்த்தையாலே ஸ்வஸத்தைஸ்வஸ்தரான பெருமாள், இப்போது திருவடிவார்த்தையாலே ப்ரதிஷ்டிதராய், முதலிகளைக்குறித்து ஒருவார்த்தைசொன்னரென்கிறது முதல் ச்லோகம்.

௩௦. ஸ ராம: ப்ரஸந்நாத்மா ச்ருத்வா வாயோஸ் ஸுதஸ்ய ஹ |
ப்ரத்யபாஷத ஸ்வயூதிஷ்டை: ச்ருதவாநாத்மநி ஸ்திதம் || ௯௧.

அர்த்தம் — ஸ - அதுக்குப்பிற்பாடு, ஸ்வயூதிஷ்டை: - ஸ்வமதத்தில் நின்றும் சலிப்பிக்கத்தகாதவராய், ச்ருதவாந் - கேட்கப்பட்ட உபாக்யானங்களையுடையரான, ராம: - ஸ்ரீராமன், வாயோஸ் ஸுதஸ்ய - வாயுவின் பிள்ளையான ஹநுமானுடைய, (சொல்லை), ச்ருத்வா - கேட்டு, ப்ரஸந்நாத்மா - நிர்மலமானமநஸ்ஸையுடையராய், ஆத்மநி - தன்மநஸ்ஸில், ஸ்திதம் - இருந்ததை, ப்ரத்யபாஷத - பதில்சொன்னார்.

வ்யா. (ஸ ராம:) ஸநாதநம் பெருமாள்உளரானார். அதாகிறது-ரக்ஷகத்வமே ஸ்வரூபமாகையாலே, ரணமென்றபோதே ரக்ஷிக்கப்பெறாத ஸ்வரூபஹாநிபோகை. ஸம்ஸாரிசேதநனுக்கு ஸம்வித் ஜ்ஞாநாஜ்ஞாநங்களாலே ஸத்தாஸத்தாவங்கள்போலேயிறே, ரக்ஷகனுக்கு ரக்ஷகத்வஸித்தியாலே ஸத்தாவமும், தத்அஸத்வத்தாலே அஸத்தாவமும். ஸர்வாச்ரயணத்துக்கு ஸ்வாமமாக ஸம்ப்ரதிபத்த் திருமகளுய்வந்து அவதரித்த தாம் ஆச்ரயணோந்முகனுய்வந்தவனை விஷயீகரியாமையாலே இலராய், திருவடி வார்த்தையாலே யுளரானரென்றுமாம். (ப்ரஸந்நாத்மா) ப்ரஸந்நசேதா: - யதிர்யுண்டானவாறே யதிர்முண்டாயிற்று. அதாவது-சேஷராஜர் வார்த்தையாலே கலங்கின திருவுள்ளம் ப்ரஸந்நமாய், “நிலைபெற்றென் னெஞ்சம்பெற்றதுநீடுயிர்” என்கிறபடியே, ஸ்வபாவத்தில்ஆச்ரித ரைப்போலே யானென்கை. (வாயோஸ்ஸுதஸ்ய ஆத்மநிஸ்திதம். ச்ருத்வா) ஸர்வப்ராணிப்ராணஹேதுவான வாயுவினுடைய தந்யனோவேதஸ்நேஹத்தாலே யதாஹ்ருதனான ஸுக்ரீவனுடைய நெஞ்சிற் கிடந்ததைக்கேட்டு.(ஸாத்மநிஸ்திதம் வாயோஸ்ஸுதஸ்ய ச்ருத்வா) தம்முடைய திருவுள்ளத்திற்கிடந்தபடியே திருவடிசொல்லக்கேட்டு என்றுமாம். (ஹ) ஒருவன், ஸ்வரக்ஷகனுக்குத் தன் வார்த்தையாலே ரக்ஷகனுவதே! என்று ஆச்சர்யப்படு கொண்டாடுகிறன். (ஸ்வயூதிஷ்டை:) ஸம்ஸ்வபக்ஷங்களாலே அப்ரதிஷ்டராய் ஸ்வஸித்தாந்த ஸம்ஸ்தைரானர். (ச்ருதவாந்) வஸிஷ்டாதிகள் பக்கல் தமக்குண்டான ச்ருதங்கள் உதவிற்று. அதாவது-கபோத கண்வோபாக்யாநாதிகள். (ப்ரத்யபாஷத) முதலிகளைக்குறித்து ப்ரதிவசநசீரானர். (ஆத்மநிஸ்திதம் ப்ரத்யபாஷத) என்றுமாம். தம்முடைய திருவுள்ளத்திற்கிடந்த அர்த்தத்தை முதலிகளுக்கு அருளிச்செய்தார்,

தாத்பர்யம்:—அங்கதன்முதலானார் ஸ்வமதத்துக்குவிருத்தமாக உபந்யஸித்தயுக்திகளுக்குக் கலங்காமல் ஸ்வமதத்திலுறுதியையுடையராய், வஸிஷ்டாதிபெரியோர்களிடத்தில் சரணாகத ஸம்ரக்ஷணம்பரம தர்மமென்று உபாக்யான முகங்களால் கேட்டறிந்தவருமான ஸ்ரீராமன், ஹநுமான் சொன்னவார்த்தையைக் கேட்டுப்பின்பு ப்ரஸந்நஹ்ருதயராய்த், தந்திருவுள்ளத்திலிருந்த வார்த்தையை முதலிகளுக்கு உத்தரமாகச்சொல்லியருளினார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௨-ம் ஶ்லோகம்.

அவதாரிகை, உங்கள் வார்த்தையை நான் கேட்டவோபாதி இவன் விஷயமாக நான் சொல்ல நினைக்கிற வார்த்தையையுங் கேட்டுத்தரவேணுமென்று முதலிகளை இரக்கிறார்.

௨௭. மமாபி து விவக்ஷாஸ்தி காசித்ப்ரதிவிபீஷணம் |
ஶ்ரோதுமிச்சாமி தத்ஸர்வம் பவத்பி: ஶ்ரேயஸி ஸ்திதை: ‖ ௯௨.

அர்த்தம்.—விபீஷணம்ப்ரதி - விபீஷணனைக்குறித்து, மமாபி - எனக்கும், காசித் - ஒரு, விவக்ஷா - சொல்லவேணுமென்கிற இச்சை, அஸ்தி - இருக்கிறது. ஶ்ரேயஸி - யசஸ்ஸிலே, ஸ்திதை: - நிலைநின்ற, பவத்பி: - உங்களாலே, தத் - அந்த, ஸர்வம் - எல்லாவற்றையும், ஶ்ரோதும் - கேட்கப்பட்டதாக, இச்சாமி - ஆசைப்படுகிறேன்.

வ்யா. (மமாபி து) எல்லாரிலுந் தம்முடைய மதத்துக்குண்டான விசேஷத்தைச் சொல்லுகிறார். (காசித்விவக்ஷாஸ்தி) ஒரு விவக்ஷை யுண்டாகாநின்றது. (விபீஷணம்ப்ரதி)-விபீஷணனைக் குறித்து ஒரு விவக்ஷை யுண்டாகாநின்றதென்கை. (தத்ஸர்வம்ஶ்ரோதுமிச்சாமி) விவக்ஷாமதமாய், "மித்ரபாவேந" என்று தொடங்கி, ஸர்வஶாஸ்த்ரஸாரஜ்ஞமான அர்த்தஜாதத்தை இதுவே அர்த்தமென்று ஸ்வீகரித்திக்கொளாகிலுஞ் செவிதாழ்க்க வமையுமென்று இரக்கிறார். (ஶ்ரேயஸிஸ்திதைர்ப்பவத்பி:) என்னுடைய ஶ்ரேயஸ்ஸிலேநிலைநின்றத்தாலே ஸத்தை யுண்டாகாநின்றுள்ள உங்களாலேயென்றுமாம்.

தாத்பர்யம்:—விபீஷணன் விஷயமாக எனக்கும் ஒன்று சொல்லவேணுமென்று தோற்றுகிறது. நீங்கள் என்னபிவ்ருத்தியைக்கோருகிறவர்களாகையால், உங்களுடன்யோசித்துச் செய்யவேணுமென்று இச்சிக்கிறேன். இதை நீங்கள் கேட்கவேணும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௩-ம் ஸ்லோகம்.

அவதாரிகை. அநந்தரம் கடற்கரையிலே வாநரஸமாஜத்திலே பெருமாள் ப்ராணிப்ரணதரக்ஷணைகஸ்வபாவமான தன் ப்ரக்ருதியை ப்ராஸங்கிகமாக வெளியிடுகிறார்.

௩. மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந ।
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத் அகர்ஹிதம் ॥

அர்த்தம். மித்ரபாவேந - விஸ்வாஸயோக்யனுடைய வ்யாபாரத்தாலே, ஸம்ப்ராப்தம் - நெருங்கிவந்தவனை, கதஞ்சந - ஒருபடியாலும், ந த்யஜேயம் - விடஊஹைகூட எனக்கில்லை, தோஷோ யத்யபி - தோஷமிருந்தாலும், தஸ்ய - அவனுக்கு, ஸ்யாத் - கார்யஸாதகமாகும்; ஏதத் - இவன்பரிக்ரஹம், ஸதாம் - ஸத்புருஷர்களுக்கு, அகர்ஹிதம் - நிந்த்யமாகமாட்டாது.

வ்யா. (மித்ரபாவேந). "மிதாத் த்ராயத இதி மித்ரம்" என்று வ்யுத்பத்தியானபோது, ஸ்வேஷ்டன் பண்ணின உபகாரத்தை விஸ்மரித்து, அதுக்கு ஸத்ருசமான ப்ரத்யுபகாரம் பண்ணமுடியாமையாலே இம்மித்ரசப்தத்துக்கு அதுபொருளன்று. மித்ரபாவம் - விஸ்வஸநீயத்வம். "தஸ்மிந் மித்ரே விஸ்வாஸ:" என்னக்கடவதிறே. அதாவது - ஸ்வநிக்ஷேபார்த்திவைசகமாக, "ராகவம் ஸரணம் கத:" என்கை. அது விப்ரலம்பகர்க்கும் பொதுவன்றோவென்னில்; (பாவேந) பாவ: - க்ரியா. விஸ்வஸநீயருடைய உக்திவ்யாபாரமே அமையும். (ஸம்ப்ராப்த:) இந்த உக்தி ஸமுத்ரக்கரையிலேயானால், அரைகுலையத் தலைகுலைய மடுக்கரையிலே சென்றாற்போலே நமக்குச் செல்லவேண்டியிருக்க, இங்கேவந்து சொன்னவிடம் நம்காரியமன்றோ செய்தது. (ந த்யஜேயம்) இவன்வந்த வரவு தன்னையே ஸ்லாகிக்கவேண்டியிருக்க விடஸம்பாவனையில்லை. ஸம்பாவநாயாம் லிங். விடஸம்பாவனையுண்டாகிலன்றோ ஆராயவடுப்பது. விட ஸம்பாவனையின்றிக்கேயொழிகிறதென்னென்னில்; இவனைவிட்டால் உளராவார்க்கன்றோ ஆராயஸம்பாவனையுள்ளது. பரீக்ஷியாதே ஸ்வீகரிக்குமவர்கள் தந்தாமை உபேக்ஷித்து ஸ்வீகரிக்கிறார்களன்றோ? உம்மை உபேக்ஷித்து அவனை ஸ்வீகரிக்கப்பார்த்தீராகில், உம்மைவிட்டு தரிக்கமாட்டாத எங்களை விடுகையன்றோ? அதாவது ஏதென்னில்; (கதஞ்சந) அப்படி ஈக்ஷணங்களைச்செய்யவும் இவனை விடேனென்கிறார். ராவணப்ராதா, ராக்ஷஸன் ஸோகக்ஷயகரனென்னுமிடம் ஸம்ப்ரதிப

ணம்; அஸ்த்யயமேஹ நாதி அநர்ஹராவாகவுங் கூடும்; இப்படிதோஷயுக்தராயிருக்கிற இவனை ஸம்வ்யவஹாரத்தாலும் விடோமென்கிறதென்னென்னில்; (தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்) தோஷங்களிவனுக்குண்டேயாகிலும், ஶரணாகதிக்கு ஜந்மவ்ருத்தநியதியில்லாமையாலே ப்ரவ்ருத்திபண்ணின இவன்பக்கல் என்பக்ஷத்தால் தோஷமில்லை. (தஸ்ய பக்ஷே விதோஷ:, ததாபி ந த்யஜேயம்) வயஹேதுநாதிகரூரவென்று உங்கள் பக்ஷத்தாலே தோஷமுண்டேயாகிலும், நான் அவனைவிடேன். இவனை துஷ்டனென்றறிந்திருக்கச்செய்தே ஸ்வீகரித்தால்நாட்டார் கர்ஹியார்களோவென்னில்; (ஸதாமேதத் அகர்ஹிதம்) ஸ்வாநேஹயஶ்லிகளான உங்களுக்கு கர்ஹா விஷயமேயாகிலும், ஸத்துக்களுக்கு இவன் ஸ்வீகாரம் அகர்ஹிதமாகக்கடவது. அதவா,(தோஷோ யத்யபி) தோஷமுண்டாகில் அவனுடைய தோஷமன்றோ(ஸ்யாத்)ப்ராயஶ்சித்தநாயாமிதி-நாம் ப்ராயஶ்சித்தித்திருக்குமதன்றோ. ராவணனை ரக்ஷித்தால் அது ராவணத்துக்கு விலையாய், துஷ்டனை ரக்ஷித்தோமென்கிற ஏற்றம் நமக்குக்கிட்டுமோ? நிரூபித்து, “யஸ்ய தாஸ்”-என்கிறநீரே ராவணனென்கிறீரே. அதவா, (தோஷோ யத்யபி) நம்மை நலியநினைத்து நாம் ஸ்வீகரிக்கைக்காக, “ராகவம் ஶரணம் கத:” என்றானாகில், (தஸ்ய ஸ்யாத்) அவன் நினைத்த காரியத்தலைக்கட்டிற்றாகிறது. மேல் அபோதோபாதாநமாகையாலே இதுவே பொருளாக உசிதமென்று பட்டரருளிச்செய்வர். அஶ்ரித்ஸநேஹ,“தஸ்யாபி வயஸ்யம் ப்ரவணம் நவ்ரதிவ்யஸ்தி”இதி. இப்படி துஷ்டராயிருக்கிறவனை விடாதொழிகிறது-விடில்ப்ரத்யவாயமுண்டென்றோ; பரிதோஷாஸங்கலிக்காகவோ; பாவகஷயார்த்தமாகவோ வென்னில் ; (ஸதாமேதத் அகர்ஹிதம்) இவையொன்றுமல்ல. ஸந்தோஷியில் நம்மை சீச்சீ யென்னுகைக்காக. ஸத்துக்களாகிறார், தந்தாமையழிய மாறியாகிலும் பிறரைநோக்கும் அபோத விஶ்வாமித்ராதிகள்.

இதற்கு தனிஶ்லோக வ்யாக்யாநம்

அவதாரிகை.

பெருமாள் தர்ப்பவிருந்தாரென்று ஆறியிருக்கை யன்றிக்கே படைகூட்டிக் கடற்கரையிலே குறுகவிட்ட வநசரம், ராவண

னும், தன் பந்துக்களையும் ஸசிவ ஸாமந்த புரோஹித வர்க்கத்தையும் திரட்டிக் குறுகவிருந்து கார்யவிசாரம் பண்ணுகிறவளவிலே, ப்ரஹஸ்த மஹாபார்ஶ்வ இந்த்ரஜித் ப்ரப்ருதிகளானவர்கள், அவன் சோற்றையுண்டு அவனுக்கு ருசிதங்களைச் சொல்ல, இதுக்கு ராவணனும் மேலெழுத்திட்டு, தோளும் மார்பும் பார்த்து $இறுமாந்திருக்க, "நிஶாசரேந்த்ரஸ்ய நிஶம்ய வாக்யம் ஸ கும்பகர்ணஸ்ய ச கர்ஜிதானி | விபீஷணோ ராக்ஷஸராஜ முக்யம் உவாச வாக்யம் ஹிதமர்த்தயுக்தம்" என்று விடவொண்ணாக் §குடற்றுடக்கைப் பார்த்து, இவனுடைய அனர்த்தமும் தன்னுடையதாகக் கருதிச் சடக்கென இத்தை ப்ரஶமிப்பிக்கவேணுமென்கிற பாஞ்சியாலே, "யாவந்ந க்ருஹ்ணந்தி ஶிராம்ஸி பாணா:" என்று சடக்கென இவனிசையும்படி ப்ரத்யய ப்ரஸாதமாக, "ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ" என்று ஶ்ரிய:பதியாய் ஸர்வ ஸஹஸ்ராகாரரானவர்க்கு †எலிவெலும்பனை நீ கொடுக்க வேண்டுவதில்லை, அவர் தம்முடைய உடைமையை அவரதாக இசையவமையும்; என்று வார்த்தை சொல்ல, இத்தைக்கேட்ட இந்த்ரஜித்தானவன், "கிந்நாம தே தாத கநிஷ்ட வாக்யம் அநர்த்தகம் சைவ ஸுபீதவச்ச | அஸ்மிந் குலே யோபி பவேந்ந ஜாத: ஸோபீத்ருஶம் நைவ வதேந்ந குர்யாத்" இளையவர் சொன்ன வார்த்தை யிருந்தபடியென்; கார்யத்திலும் இளமை தோற்றியிருந்தது; இக்குலத்திற் புகுந்தவர்களு மிவ்வார்த்தை சொல்லுவார்களோ என்று நெகிழவார்த்தைசொல்ல, "பாத்ரப்ரவாதே ந ஹி ராவணஸ்ய ஸுத இந்த்ரஜித் ப்ரவோட வியஶத்ரு:" என்று-வாடா! ராவணனுக்குப் பெருமாளோ ஶத்ரு; மோர்வ வ்ராவும்போலே மகனென்று பேரையிட்டு உள்ளே நின்று கழுத்தறுக்கிற நீயன்றோ ஶத்ரு; "ஸுஹ்ருத்வவ்யஸ்ய ஸர்வார்த்திஶ" என்று-ஶத்ருக்களைத் தலையறுக்கப்பார்க்கி லுன்னையல்லவோ தலையறுக்க வடுப்பது; என்றாற்போலே சிலவார்த்தைகளைச் சொல்ல, "ஸுப்ரவிஷ்டம் வாக்யம் ராவண: காலசோதித:" என்று தொடங்கி, ராவணன், கோபித னாய் மகனுக்குப்பரிந்து, "ஜாநாமி ஶீலம் ஜ்ஞாதீநாம் ஸர்வலோகேஷு ராக்ஷஸ | ஹ்ருஷ்யந்தி வ்யஸநேஷ்வேதே ஜ்ஞாதீநாம் ஜ்ஞாதய: ஸதா || ப்ரதாநம் ஸாதநம் வைத்யம் தர்மஶீலஞ்ச ராக்ஷஸ |

$ மிகவும்ஸந்தோஷித்திருக்க. § குடற்றுடக்கை-சரீரஸம்பந்தத்தை,
† எலிவெலும்பனை - துர்ப்பலனை.

ஜாதயோஹ்யவ நந்யே ஸமம் வஸிஷ்டவத்ஸிவ ॥ நித்யஸ்நாநா ஸம்ஸ்ரீஷ்டாவ்யங்கேஷாதாயிநஃ | வ்ருத்தஸ்ஸம்யஷ்டயா வேதாம ஜாதயஸ்ஸ்ஸயாவஹாஃ” என்று-ஜாதிகளுடைய ஸ்ரீமத்ரிரியோமோ? “ஸ்ருயந்தே ஹ்யஸ்மிந் ஸ்ரீமதாஸ்லோகாஃ வத வதேநகவிஸ” இதுக்குச்சில உவகைகளையும் சொல்லி, “யோ உத்ய ஹேஸ்வடவியம் பூயாஜ்ஞாகேந்த்ரிஸாவர । கஷ்ஸிந்த்ரஹ ஸ்வேதுந ஹநேஷ தாஸ்யம் யிகஸ்பவாம்ஸநம்” என்று-உன்னை யொழியவேறொருத்த னிந்த வார்த்தை சொன்னானாகில், இப்போதே வேலின்முனையிலே யாதல், ஆனையின் கொம்பிலேயாதல், கழுவின் தலையிலே யாதலா யொழிக்தானிறே; “நதாராக்ஷஸ வேஷதஃ” என்னும்படி இக்குலத்துக்கு † இழுக்காய்ப்பிறந்தாய்; உன்னை நாம்வேண்டோம்; என்கண்முகப்பில்நின்றும் ஓடிப்போவென்ன; இவரும், ஜ்யேஷ்ட வவநாதி ஒஷ நம்பண்ணலாகாதென்று, “உத்பபாத மஹாவாணிஸ்தஸ்ஸி ஸஹராக்ஷவைஃ” என்று-ஸம்ஸாரஸாகரத்தைக் கடக்கைக்கு ஒருதெப்பம்போலே யிருக்கிற மஸ்ஸையும் தாமுமாய், கரசரணாத்யவயவங்கள்போலே யிருக்கும் நாலு ராக்ஷஸரும் தானுமாய் ராவணனை விட்டபோதே எல்லாருக்கும் மேலானனென்றுதோற்றும்படி கிளம்பி, “கஜஸிக்ஷமதஸ்ஸ்ரீமாந்” என்கிறபடியே, மேல்பெறப்புகுகிற ஸஜ்ஜ ஸ்ஸாத்தாக்கடியுண்டாம்படி § விஷ்ணுபதத்தைப்பற்றி “கஜமா ஸஹஸ்ரதேந” என்றும்- “வரம்பொழிவந்தொல்லைக் கூடுமினோ” என்றும்-“ஒல்லை நீபோதாய்” என்றும்-பிறருபதேசிக்கவேண்டாதபடி தானே சடக்கெனவந்து, “யத்ராஸஸ்லக்ஷணஃ” என்று - விஸேஷணஹரதரான இளையபெருமாள் திருமேனியிலே சாய்ந்து பெருமாளிருக்கிறவிடத்திலே, “நாகணைமிசை நம்பிரான் சரணே சரணமக்கு” என்றும் - “மமநஸ்ஸம்ஸஹீஸாஸ்ய ஷஷ்ஸ்ரவத்ர நராயிவாஃ” என்றும்-தலைக்காவலிலிருக்கிறவர்கள் காவல்துடிப்பாலே ஆகாசத்திலே தோற்றினபோதே கண்டு, ஸஹாராஜரநுஸதியோடே, “ஸாஜாநஸ்ஸிஸெஸஜாம்ஸு” என்று-கல்லுந்தடியுங் கொள்ள, “உவாவவ ஸஹாவ்யாஜ்ஞ ஸ்ஸூரண ஸஹதாஸஹாநு” என்

---

† இழுக்காய்-நீசனாய்.

§ விஷ்ணுபதத்தை-ஆகாசத்தை. பகவச்சரணத்தை.

றும்-"மரங்களு மிரங்கும்வகை மணிவண்ண ஓவென்று கூவுமால்" என்றுஞ் சொல்லுகிறபடியே, "ஸாலாநாஞ்ஶ்ருதி" என்று-இவர்க ளெடுத்தமரத்தோடு, "வாஸுதேவதரு" என்றும்-"ப்ருஹத்தரு" என்றும்-"நிவாஸவ்ருக்ஷ:" என்றுஞ் சொல்லுகிற பெரியமரத்தோடு வாசியற நெஞ்சிலே இரக்கம்பிறக்கும்படி பெருமிடறுசெய்து கூப் பிட்டு, "ராவணோ நாம துர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர:। தஸ்யாஹமநுஜோ ப்ராதா விபீஷண இதி ஶ்ருத:" என்று-ஸ்வதோஷத்தை முன்னிட்டு, "நிவேதயத மாம் க்ஷிப்ரம் ராகவாய" என்று-ராக்ஷஸர் நிமித்தமாக அஞ்சினார்க்குப்§ புகலிடமான குடிப்பி றப்புள்ள பெருமாளுக்கு, "சஞ்சலம் ஹி மந:" என்றும்-"நின்றவா நில்லாநெஞ்சு" என்றுஞ் சொல்லுகிறபடியே, நெஞ்சிலாநுகூ ல்யம் பிரிவதற்குமுன்னே அறிவியுங்கோள்; "விபீஷணோபஸ்தி தம்" "அன்றேவந்தடைந்தேன்" என்கிறபடியே, நெஞ்சிலீரமில்லை யாகிலும் கையிலீரமுலருவதற்குமுன்னே வந்தேனென்று வார்த்தை சொல்ல, "ஏதத்து வசநம் ஶ்ருத்வா ஸுக்ரீவோ லகுவிக்ரம:। லக்ஷ்மணஸ்யாக்ரதோ ராமம் ஸம்ரப்தமிதமப்ரவீத்" மஹாராஜ ரும், "ஸ்வரேணாஹ தா" என்று-அவன் கூப்பிட்டகுரல் பெருமாள் செவியில் படுவதற்குமுன்னேசென்று விலக்கவேணுமென்று கடுந டையிட்டோடி, ராவணாநுஜனாயிருப்பானொரு ராக்ஷஸன்வந்தான், வருகிறவிடந்தன்னில், "ஶரணம்" என்று- வ்யவஸாயத்தைப்பண் ணினான்; இப்படிக்குவந்து தோற்றி [illegible] பண்ணுதல் நலிதல் செய்யவந்தான், "தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம்" என்று-கழுத்தி லும் காலிலும் கோக்க வடுக்குமென்பது; அதுபெருமாள் பொறு த்தவாறே, "வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவைஸ்ஸஹ" என்று-இவனைக்கொன்று போகடவமையுமென்ன, இத்தைக்கேட்ட பெருமாள், "யதார்த்தம் கவிராஜேந ராவணாவரஜம் ப்ரதி। வாக்யம் ஹேதுமதார்த்தஸ்ய ஸுபத்தம் ஶ்ரவிதம் ததா" என்று- ‡வ்யாக்ர வாநர

---

§ புகலிடமான - ரக்ஷகமான.

‡ ஒருபுலி, காட்டில் ஒருமனுஷ்யனைத்துரத்த, அவனோடி ஒருமரத்தி ன்மேலேற, அம்மரத்தின்மேலொருவாநரத்தைக்கண்டு பயப்பட, வா நரம் நீபயப்படவேண்டாவென்று அபயதாநம்பண்ண, பின்புஇவனி னைப்பால் அங்கு நித்ரைபோகையில், புலி, இவனிடத்திலநேகதோ ஷங்களைச் சொல்லி மித்ரபேதம் பண்ணியும் வாநரமிவனை விடாம லிருக்க, பின்புவாநரம் நித்ரைபோகும்போது புலி இவனைமித்ரபேத ம்பண்ண, இவனதைக்கேட்டுவாநரத்தைக்கீழேதள்ள, அதுகீழேவிழா மல் கொம்பைப்பிடித்து நிற்க, அப்பொழுது இவன்பயப்பட, இவனு க்கு அபயதாநம் பண்ணி ரக்ஷித்தது.

ரஸம்வாதத்திலே ஶரணாகதஸம்ரக்ஷணம் பண்ணின நீங்களும் ஶ ரணாகதவத நிமித்தமாக உங்கள் நாயனார் சொன்னவார்த்தைகளைக் கேட்டிகோளோ? "யதா ஸுக்ஷ கபிராஜேந" நெருப்பென்ன வாய் வேமென்று ஐயப்படுவாரைப்போலே ஶ்ரீராமராஜர்சொன்ன பாசு ரம் தம்மால நுபாஷிக்கவும் போகாமையாலே "யத்" என்கிறார். "உக்தம்" தோழனுரித்தை நினைப்பது மன்றிக்கே சொல்லுவதுஞ் செய்வதே! "கபிராஜேந" செல்வர் சொல்ல வஞ்சாரென்றுண் டிறே. "கபிராஜேந" இவர் ரக்ஷகராக நன்றாக வுண்ணவிருந் தீர்கோள். "கபிராஜேந" ஜாதிப்ரயுக்தமான அறிவு கேடும், வைஶ்ரூத்தால்வந்த அறிவுகேடும், இரண்டுமுண்டிறே. "கபி ராஜேந ராவணாவரஜம் ப்ரதி" தந்தமயனைக்கொன்று முடிசூ டினதாம் கிடீர் இப்படிக்குவந்த ராவணன்தம்பியைச்சொல்லுகிறார் என்றருளிச்செய்ய, "ஜாம்பவம்ஶரபவ்ருஷ்டாஸ்தே ஸம் ஸம் ஃதமதி ந்ருதா:" என்று-முதலிகளும் தந்தாம் நினைவுகளைச்சொல்ல, இவை பெருமாள் திருவுள்ளத்துக்கு அஸஹ்யமாக, இத்தையறிந்த திருவடி யும் இப்பக்ஷங்களையெல்லாம் அநுபபத்திகளாலே தூஷித்து, "விபீ ஷணன் நிர்தோஷன் ஸ்வீகார்யன்" என்று ஸிதாந்திக்க, இத்தாலே வசநவஸ்தனாலே ஶ்யஸ்தாகரானபெருமாள், "ஶ்ருத்வா விதஸ்ய விவக்ஷாட ஸ்திகா வித்ரதி விபீஷணம். ப்ரத்யுவாச தஸ்வம் ஹவ ஸ்ஶ்ரூயஸிஸிதை:" என்று-நாமும் சிலவார்த்தைசொல்லப்பா ராநின்றோம்; முதலிகளித்தைக்கேட்டுத் தரவேணுமென்று நீர்மை யாலே யபேக்ஷித்து, ஸதோஷனுகிலுமாம் நிர்தோஷனுகிலுமாம்; ஶரணாகதனனவனை ஒருகாலும் விடுவதில்லையென்று ஸ்வஸிந்தா ந்தத்தை யருளிச்செய்கிறார்.

இவ்விபீஷண ஶரணாகதி தனக்கு, "அஹமஸ்ம்யபராதாநாமாலயோऽகிஞ்சநோऽகதி:। த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி: ॥ ஶரணாகதி:" என்கிற ஶரணாகதிலக்ஷணமுண்டோவென்னில்; லக்ஷணம் நேராக உண்டு. "ராவணோ நாம துர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர:। தஸ்யாஹமநுஜோ ப்ராதா விபீஷண இதி ஶ்ருத:" என்று-ஸ்வயஸ்ஜித்தமாயும் ராவ ணஸம்பந்தத்தாலும் தனக்குண்டானதோஷஸமயத்தையைச்சொ

ன்னபடியாலே, "ஸஹஸ்ரவராயா நாஶ்ரய:" என்னு அங்கமும் சொல்லுகிறது. பெருமாள் தமக்கு பாஜஸாஹாய்யத்துக்காக அழைத்துவிடவந்தவனன்றிக்கே, "ராஜ்யம் ப்ரார்த்தயமாநஸ்து புத்திபூர்வமிஹாகத:" என்று - தான் ராஜ்யம்வேண்டியவனாய், இங்குத்தைக்கொரு உபகாரமில்லாமையாலே, "அகிஞ்சந:" என்னு அங்கஞ் சொல்லுகிறது. "ஸோऽஹம் பருஷிதஸ்தேந தாஸவச்சாவமாநித:" என்றும் "த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச" என்றும் - ப்ராதாவான ராவணனோடே ஷிக்கப்பட அநந்யனாய்ப்போந்தபடியாலே, அநந்யகதித்வம் சொல்லுகிறது. "ராகவம் ஶரணம் கத:" என்று பெருமாளையே உபாயமாகப்பற்றினபடியாலே "த்வமேவோபாய பூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி: | ஶரணாகதி:" என்னு அங்கத்தைச்சொல்லுகிறது. ஆகையாலே லக்ஷணம் புஷ்கலம்.

மஹாபாரதத்திலே க்ருஷ்ண சரம ஶ்லோகம்போலே, ஸ்ரீராமாயணத்துக்கு மிதொரு சரமஶ்லோகமாய் முடிவாகையாலே சரமமாகிறது. ஆகையாலே, சரமஶ்லோகமாகிறது. இங்கு ஸமுதாயத்திலே சரமமாம்படி யென்னென்னில் ; ஸூத்ரங்களல்ல இவ்விடத்தில் சரமத்வத்துக்கு ப்ரயோஜகம்; அங்கு கர்மாத்யுபாயங்களைப்பார்க்க முன்னே விதித்து, பின்பு சரமோபாயமாக ப்ரபத்தியை விதிக்கையாலே சரமமாகவிருந்தது. இங்கும் அநேக ஶரண ப்ரவ்ருத்திகள் விபீஷணஸ்வீகாரத்தைத் தனித்தனியேசொல்ல, அவற்றை ஸர்வ பக்ஷீகரித்து சரமமாக ஸிஷாதித்த ஶ்லோகமாகையாலே சரமமாகிறது. அங்கும் ப்ரத்யக்ஷனான ஐஶ்வர்யனுக்கிற்று; இங்கும் ப்ரத்யக்ஷனான ஐஶ்வர்யனுக்குகிறது, அங்கும் ஸேனைக்கு நடுவேநின்று சொன்னவார்த்தை; இங்கும் ஸேனைக்கு நடுவேநின்று சொல்லுகிறவார்த்தை; அங்கும் ஶோகநிவ்ருத்திக்காகச்சொன்னவார்த்தை. இங்கும்ஶோகநிவ்ருத்திக்காகச்சொல்லுகிறவார்த்தை. அங்குமொரு கோபாலவாக்யம்; இங்குமொரு§கோபாலவாக்யம். அங்கும், "யச்ச்ரேய: ஸ்யாந்நிஶ்சிதம் ப்ரூஹி தந்மே" என்று - ஶ்ரேயஸ்ஸைக்கேட்கச் சொன்னவார்த்தை; இங்கும், "ப்ராப்தவிஹாஸிதவாம் ஸர்வஶ்ரேயஸி ஸ்திதை:" என்று - ஶ்ரேயஸ்ஸைக் கேட்கச்சொல்லுகிறவார்த்தை.

---

§ கோபாலன் - பூமியைப்பாலநம்பண்ணுகிறராஜா.

அங்கு சரமஶ்லோகத்தில் இங்கு சரமஶ்லோகத்துக்கு வாசியுண்டு. அங்கு கேட்கிறவனுக்குத் தேர்மேலெழநின்று சொன்னவார்த்தை; இங்குநிலத்திலேயிருந்து ப்ரதிஷ்டிதராய்ச் சொல்லுகிறவார்த்தை. அங்கு, "மாம் வ்ரஜ" என்று-தன்னைப்பற்றென்று ஶரண்யனாசைபட்டபடி சொல்லிற்று; இங்கு, "ப்ரபந்நாய" என்று-எதிரி*யுடன் பட்டுப்பற்றினபடி சொல்லுகிறது. அங்கு, "தர்மாந் பரித்யஜ்ய" என்று-தர்மத்யாகம் பண்ணிற்று; இங்கு, "பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச" என்று-தர்மித்யாகம் பண்ணுகிறது. அங்கு, "ஷோடஶஸ்த்ரீஸஹஸ்ராணி" என்று-பஹுதாரபரிக்ரஹம் பண்ணினவன் வார்த்தை; இங்கு, "ந ராம: பரதாராம்ஶ்ச சக்ஷுர்ப்யாமபி பஶ்யதி" என்று-ஏகதாரவ்ரதன் வார்த்தை. அங்கு, "பேதைக்குப்பொய்குறித்து" என்றும்-"ஒருவர்க்கும் மெய்யனல்லை" என்றும்-அஸத்யனான க்ருஷ்ணன் வாக்யம்; இங்கு, "ஸத்யவாக்ய:" என்றும்-"ராமோ த்விர்நாபிபாஷதே" என்றும்-ஸத்யனான ராமன் வாக்யம். அங்குக் கையுமுழவுகோலுமான ஸாரதிவாக்யம்; இங்குக்கையும் வில்லுமான தாஶரதிவாக்யம், அங்கு ஶரணாகதாத்யவஸாயம் சொல்லிற்று; இங்கு ஶரண்யாத்யவஸாயம் சொல்லுகிறது. அங்கு, "ஶரணாகதனை பாபங்களில் நின்றும் விடுவிப்பேன்" என்றது; இங்கு, "நான்விடேன்" என்கிறது. அங்கு "ஸதோஷனை விடுவிப்பேன்" என்றது. இங்கு, "தோஷவானானாலும் விடேன்" என்கிறது. அங்கு, காயாஞரஸாவியான துஷ்கரஹமுஞ்சொல்லிற்று; இங்கு, ஸுகரமான த்ருஷ்டஹமுஞ்சொல்லுகிறது. அங்கு, ப்ரதிபந்தகமின்றிக்கே இருக்க ரக்ஷித்தபடி சொல்லிற்று, இங்கு, ப்ரதிபந்தகமுண்டாயிருக்கச் செய்தேயும் ரக்ஷித்தபடி சொல்லுகிறது.

இனி இஶ்லோகத்தால், பாஶிவமவதுகமாகிலுமாம், சுபாஶிவமவதுகமாகிலுமாம்; நம்மைப்பற்றினவர்களை தோஷமுண்டேயாகிலும் விடுவதில்லையென்கிறார். 'இதெல்லாம்நீர்செய்யவேண்டுவது உம்மைபந்துபக்ஷிபண்ணிவந்துபற்றினாலன்றோவென்ன;* க.(ஸக்ருதேவ ப்ரபந்நாய) ஸோதரப்ராதாவான ராவணனையும்விட்டு நம்மையே பந்துவாகவந்துபற்றிநிற்கிற நிலைகண்டீரோயென்கிறார்.

---

* உடன்பட்டு-ஸம்மதித்து.

*௨. (மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்) நத்யஜேயம் மித்ரபாவேந. "ப்ராப்தஶ்ஶத்ருஸ்த்யக்தவ்ய:" என்று தோழனார் ஶத்ருவென்று சொல்லாதாகச் சொன்னார்; மித்ரனையேவந்தான்காணும். *௩. (மித்ரபாவேந) ⊕ ஒற்றனாய்வந்தானல்லகாணும்; மித்ரனாய்வந்தான். *௪. (மித்ரபாவேந) "மித்ராத்த்ராயத இதி மித்ரம்" என்று-பண்ணின உபகாரத்தையளவிட்டு அதுக்கு ஸத்ருஶமான ப்ரத்யுபகாரம் பண்ணுகையிறே மித்ரஸ்வபாவமாகிறது; அப்படிக்குத்தாடகா தாடகேய விராத கரதூஷண கபந்த ப்ரப்ருதிகளைக்கொன்று கூறையாடி ப்ராதிகூல்யம்பண்ணி ஒரு உபகாரம் பண்ணாமையாலே ப்ரத்யுபகாரம் பண்ணவேண்டுவதில்லை. தேவரீர்தா முபகரிக்கப் பார்த்தீராகில், "ஸஷ ஸர்வஸ்வதஸ்யோபவிஷ்ஜ:" என்றும் - "போகம் நீயெய்திப்பின்னும் நம்மிடைக்கேபோதுவாயென்றபொன்னருள்" என்றுஞ்சொல்லுகிறபடியே, கொடுத்தருளுவது உபயவிபூதியாதல், விபூதிநாதனை தேவரையாதலாயிருக்கு மிதுக்கு ஸத்ருஶமாகப் பண்ணலாவதொரு ப்ரத்யுபகாரமில்லாமையாலே, மித்ரபாவமிவனுக்குண்டானபடியென்னென்ன; அது கேளீர் - மைத்ர்யாவது - பரஸ்பரஸ்நேஹமான சித்தவ்ருத்திவிஶேஷம்; ஆனபின்பு, நம்முடையபக்கலிலே இத்தனை ☼ உந்மேஷங்களைக்கண்டால் பொறாமை பண்ணுகையன்றிக்கே இசைந்திருந்த சித்தவ்ருத்திதான்காணும் மித்ரபாவமாவது. அன்றிக்கே, * ௫. (மித்ரபாவேந) என்று - "ஞிமிதா ஸ்நேஹநே" என்கிற தாதுவிலேயாய், ஸ்நேஹியாகையாலே ரக்ஷிக்கவந்தானென்றுமாம்.* ௬. (மித்ரபாவேந) இதுதானவன் பாவஶுத்தி சொன்னோமத்தனைபோக்கி, நம் பாவஶுத்தியைப்பார்த்தால் இத்தனையகவாய் வேண்டாகாணும். "ஸாவோர்யாக்ரியாவேஷா ஸம்ப்ரவ்ருத்திவ்ரயாயதேஷு" என்கிறவசனங்களிலே ஸாவஶ்யமாய்,*௭ (மித்ரபாவேந) என்றது ஸ்ரீமையாய், ஸ்ரீமையாவதுதான் ஸர்வப்ரயுக்தவேஷாவிஶேஷமிறே. இவன் ராஜாவின் தம்பியாய்ச்செருக்கின் மிகுதியாலே, மித்ரமானார்வேஷ பரிக்ரஹம் பண்ணி எழுதியணிந்து வரவுமாம். அன்றிக்கே, *௮. (மித்ரபாவேந) என்கிறது - க்ரியையாய், பாவிவ்ருத்தியின்றியி

⊕ ஒற்றனாய்-தூதனாய். ☼ உந்மேஷங்களை-அதிசயங்களை.

லே வாயஸகாஸிவேப்ரிதரைப் போலே ✿ கோல்விழுக்காட்டிலே ஸித்ரமானார் செய்யுஞ்செயலைச்செய்தாரென்றாகவுமாம். அன்றியி லே, * கூ. (ஸித்ரஸாவேந) என்று வேஷெஷியாய், ஸ்நேஹமில்லை யாகிலும், "ராஜ்யகாக்ஷீ" என்று-ஒரு ப்ரயோஜநோத்தேசமவா கிலுமித்தனை வேஷெஷிபண்ணினானென்றாகவுமாம். அன்றியிலே, ஸாவஸ்ரூபம் ஸமதியாய், ஸமதிஸ்ரூபம் ஸம்பந்தாவியானபோது, * கம. (ஸித்ரஸாவேந) என்று-தன் வாக்ஷியாலே நம்மை ஸித்ர மாக வறுதியிட்டு, நமக்செல்லாநன்மையு முண்டாகவேணுமென்று வந்தானாகவுமாம். அன்றிக்கே, * கக. ஸமதிஸ்ரூபம் ஸவநவாவி யானபோது, ஸித்ரஸாவத்தோடே வந்தானாகவுமாம். அன்றிக்கே, *கஉ. (ஸித்ரஸாவேந) என்று-ஸாவஸ்ரூபம் ஸத்தாவாவியாய், ஸித்ர மான நம்ஸத்தை கிடக்கைக்காக வந்தானாகவுமாம். அன்றிக்கே, * கங. (ஸித்ரஸாவேந) என்று - ஸாவஸ்ரூபம் ஸுஹ்வாயவா வியாய், போக்கற்று ராஜ்யகாக்ஷியாய் வந்தவனன்றியே, "பரித்ய க்தாமயாலங்காமித்ராணிவயநாநிவ । ஸவந்தரோராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுவாநிமே" என்று புறம்புள்ளவை யெல்லாவற்றையும் கைவி ட்டு நாமே உத்தேஸ்யமென்கிற நினைவோடே வந்தானென்றாகவுமாம். அன்றியிலே, * கச. (ஸித்ரஸாவேந) என்று - ஸாவஸ்ரூபம் ஜந்த வாவியாய், "ஸதாஸிஸ்ஸஹாரக்ஷாஹிஷுவஷஞ்ஶரணங்கத:" என் று-தானேவருகையன்றிக்கே பந்துஜநத்தோடே வந்தானென்றாக வுமாம். இத்தால், ஒற்றனாய் நலியவந்தானாகில்இத்தனை பேரோடே வரக்கூடாதிறே யென்கை. அன்றிக்கே, *கரு. (ஸித்ரஸாவேந)என் று - வருகிற விடந்தன்னில் ராவணனோடே ரோஷிஞய் பருஷஞ் சொல்லிப்போருகை யன்றிக்கே, "ஸகுஹ்ரதாவிரோராஜநுப்ர ஹிரோயஷ்டிஷ்வவி। ஜ்யேஷ்டோமாந்ய: பித்ருஸமோநசாயம்வயே ஷ்டித:" என்று-உன்னோட்டைக் * குடற்று டக்காலும், நீமௌர்க்ய ஞகையாலும், நீவாய்க்குத்தோற்றினதெல்லாம் சொல்லக்கடவை; நா னிதுக்கு வெறுக்கிலேன்; நீ யாஷிகனல்லாமையாலே, யதார்த்த வான வெனக்குச்சேராமையாலே போகிறேனித்தனை; "ஆத்மாநம்ஸ

✿ கோல்விழுக்காடு - அளவுகோலாலளக்க நடக்கிஷ்டமான இடத்தில் அக்கோல்விழுவது.

* குடற்றுடக்காலும்-சரீரசம்பந்தத்தாலும்.

வ்யாஜம்'' "ஸத்ஸங்கஸ்துமஹிஷ்யாபிஸர்வே ஸமயாவிநா" என்று- இனிமையோடேவந்தானென்று மாம. "ராகவம்ஶரணம்க தঃ" என்றான்; ஶரணாமதஸ்தாவேந என்னாதே, "ஸித்ரஸ்தாவேந" என்பானென்னென்னில்; பிறரைத்தாழவிட்டுத் தந்தாமையுயரவைத் துப்போரும்‡புல்லியர்களல்லாமையாலேசிறிதாகவருளிச்செய்கிறார். வேடரான ஸ்ரீகுஹப்பெருமாளையகப்பட, "உகந்ததோழனீ" என்னக்கடவவிவர், இவனைப்பெற்றால் விடுகிறாரோ? இதுதன்னை, "ஸுஹ்ருஜ்ஜ ஸம்ஸ்வா" என்று - பிறருஞ் சொல்லி, "ஸோஹம்ப்ரியஸ்வா ராஜঃ" என்று-அவர்தாமும் சொல்லும்படியிறே ‡ புரையறநடத்தி னபடி. "தேநமைத்ரீபவது" "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்" என்றருளிச்செய்தாரிறே.

ஸித்ரஸ்தாவம் பண்ணினவித்தால் ப்ரயோஜநமென்ன? அவன் ஸமுத்ரதீரத்திலேயன்றோ இருக்கிறதென்ன; * க. (ஸம்ப்ராப்தம்) அக்÷ கண்ணழிவுதீர்த்தானென்கிறார். *உ. (ஸம்ப்ராப்தம்) "ஸுஜமாகாஸஸ்தே" என்று- ஸமுத்ரத்துக்குமேலே கிளம்பக்கண்டோம்; இக்கரை யிலே நிற்கக்கண்டோம்; வந்தசடக்குகாணும். * ௩. (ஸம்ப்ராப்தம்) அக்கரையிலே ஶரணமென்றானாகில், மடுவின் கரைபட்டதுபட்டு அரைகுலையத் தலைகுலைய நமக்குச்செல்லவேண்டியிருக்கும்; இன் னுடியும் வந்து நமக் குபகரித்தான் காணும். * ௪. (ஸம்ப்ராப்தம்) "ஹ்ருஷ்டாசிறமாகத்ய" என்றும் - 'சிற்றஞ்சிறுகாலே வந்து" என்றும்-போதல்லாப்போதிலே வழியில்லாவழியிலே வந்த வரத்து காணுமென்று நெஞ்சாறற்படுகிறார். * ௫. (ஸம்ப்ராப்தம்) நாமிங் குவருகிற விடத்தில் ஶ்ருங்கிபேரவுரஹாஜாஶ்ரம சித்ரகூட தண்டகாரண்யவஸதிவமான எத்தனை யிடத்திலேதங்கித்⊙தாழ்த்து வந்தோம், இவனங்ஙனன்றியிலே, வழியிலேஒருதங்கு * தாவடி யற ஒரு க்ஷணத்திலே வந்தபடிகாணும். * ௬. (ஸம்ப்ராப்தம்) வருகிற விடந்தன்னிலழகியதாக வந்தான்காணும். அதாவது- ஸமயிஷ் க்குத்தன்பெண் கூநமையையிட்டு ஸுஶாஸவநம்ப ண்ணியும், ஹநமர்னை கலியப்புக உசிதமாகாதென்று விலக்கி யும், 'ப்ரீயதாம் ராஶாயாபமயிஷீ" என்று - ராவணனளவி

‡ புல்லியர்கள் - தாழ்மக்கள். ‡ புரையற-அதிஶயமில்லாமல். ÷ கண்ணழிவு - தடை. ⊙ தாழ்த்து - தாமஸித்து. * தாவடி - ப்ரயாணம்.

லே நல்வார்த்தைசொல்லியும், இப்படி பஹுவிதமாக உபகாரகனாயே வந்தானென்கை. *அ. (ஸாபராதஸ்த) தானிருந்தவிடத்திலே நாம் செல்லக்கொள்ள, "ஜநஸ்தாநே வஸந் கார்யம் க்ருதம் தே ராவணஸ்ய து" என்று-இருந்தமலையைவிட்டு வேறொருமலையேறப்போகையன்றிக்கே நாமிருந்தவிடத்திலே தானே வந்தான் காணும். * கூ, (ஸாபராதஸ்த) வருகிற விடந்தன்னில், "பாஹு ரோஷ: ப்ரஸாரித:" என்று - கைநீட்டி நம்மை ஸாந்த்வநம் பண்ணுகையன்றிக்கே, "பாதயோஶ்சரணாந்வேஷீ" என்று- காலைப்பிடித்துத்தன்னைத்தாழ விட்டுவந்தான்காணும். * க௦. (ஸாபராதஸ்த) "விஜிதாரிஸுதாரஸுராஜ்யஹிதவஸ்தித:" என்று-தம்மையொழியச்செல்லாத மனிதரை மின்னுக்கு மிடிக்குமிரையாக்கி வெறுத்த ராஜ்யதாரங்களோடே வாழ்கிறவனல்லன்காணும்; "த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத:" என்று - ராஜ்யதாரங்களைக்காற்கடைகொண்டு நம்மையே பற்றிவந்தான்காணும். * கக. (ஸாபராதஸ்த) நம்மைப்போலே ஒற்றனாய்வந்தானோ நலியவந்தானோ, நிராஶ்ரயனோ, ஸாஶ்ரயனோ, ஸ்வீகார்யனோ பஹிஷ்கார்யனோ, வத்யனோ அவத்யனோ, என்று § அளப்பது முகப்பதாகை யன்றிக்கே முதலடியிலே ப்ரஸித்தனாய் நம்மை விஶ்வஸித்து வந்தான்காணும். *க௨. (ஸாபராதஸ்த) ஸந்நிதேர்ஸ்வீகாரேயாய், தான் ராக்ஷஸனும் நாம் க்ஷத்ரியனுமாக வன்றிக்கே, "அஸ்மாபிஸ்துல்யோ பவது" என்கிறபடியே, நம்மிலேயொருவனும்படி வனசரஸனாய் வந்தான் காணும். * கங. (ஸாபராதஸ்த) "காணவாராய்" என்றும்- "கூவுதல் வருதல் செய்யாய்" என்றும் சொல்லுகிறபடியன்றிக்கே "யதோ ராம:" என்று-நாமிருந்தவிடத்திலே தான்வந்தான்காணும்.

தனேவந்தானென்று ஓரர்த்தமோ; நம்முடைய காலாலேயோ நடக்கிறது, ராவணாநுஜனாய் வாயகனை விவனை, "ஸுதாயிநோ யாஸ்ய ஹந்யாதேவாவிவாரயந" என்றும் ஶாஸ்த்ரமதியைப்பார்த்தால், வருகிறபோதே கொல்ல ப்ராப்தமாயிருக்க,கொல்லாதொழிந்தால் விடவாகிலும் ப்ராப்தம் காணுமென்ன; * க. (நத்யஜேயம்) நீர்சொல்லுகிற வார்த்தையைக் கைவிடுமத்தனை போக்கி அவனையொ

§ அளப்பது - பலவிதமாய்ச்சொல்லுகை.

ருகாலும் கைவிடோம். * உ. (யுத்தம்) "ஶக்திமாந்" என்று - ஸ்ரீஜாய், தோழனார் சொல்லுமாற்றுமைக்கு விட நினைத்தோமாகிலும் ஶக்திதானே யில்லை. *ந. (யுத்தம்) தோழனார் மஹாராஜராகையாலே த்யாகம்பண்ணுகிறீர்; தாபஸரான நாங்களென்ன த்யாகம்பண்ணுகிறது. * ச. (யுத்தம்) "பரித்யக்தா மயா லங்கா" "மித்ராணி ச தநாநி ச" என்று - நாட்டில் த்யாஜ்யமாய்ப் பிறந்தவையடைய அவன் கைக்கொண்டான்; நமக்கு த்யாகவிஷயந் தன்னைக்காண்கிறிலோம். * ரு. (யுத்தம்) நாம் விடப்பார்த்தாலும். "ஶரணாகதம் ந த்யஜேயம்" "இனி நான் போகலொட்டேன்" என்றும் - "திருவாணை நின்னாணை" என்றும் - "அமரவழும்பத்துழாவி யென்னாவி அமரத்தழுவிற்றினியகலுமோ" என்றும் - அவள் பற்றின ஊற்றத்தாலே நம்மால் விடப்போகாதுகாணும்.

ஆனால், அவனை விடவொண்ணாதாகில் விடலாவாரை விடுமத்தனை யன்றோவென்ன; *க. (ஆரண்யம்) அப்படி ஶ்ரீலக்ஷ்மணப்ரப்ருதிகளையெலாம்செய்யலாம், இது செய்யப்பார்க்கிறிலோம். "ப்ராணைர் ப்ரியதரோ மம" என்று - "ஓருயிரேயோ உலகங்கட்கெல்லாம்" என்கிற தேவரீர் திறத்திலேதீங்குவிளையில்செய்வதென்னென்ன; * உ. (ஆரண்யம்) "அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்" என்கிறபடியே, நம்ப்ராணன் றொருதலையாகவிடிலும் அவனைவிடோம். "ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்" என்கிற பிராட்டியை இழக்கவரில் செய்வதென்னென்ன ; * ந. (ஆரண்யம்) "த்வாம் வா ஸீதே" என்கிறபடியே, *ப்ராணேப்யோபி கரீயஸியான அவளை விடிலுமிவனைவிடோம். "ஸர்வதா ஹம் பரித்யஜ்ய லக்ஷ்மணேந ஸமாகதம்" என்றன்றோ? இளையபெருமாள் பக்கல் தேவரீர் திருவுள்ளமிருப்பது; "லக்ஷ்மணோ வா மஹாபாஹு:" என்கிறபடியே, அப்படிக்கொத்தவர்களிலொருதீங்குவரில் செய்வதென்னென்ன; * ச. (ஆரண்யம்) "ஸலக்ஷ்மணாம்" என்று - ஸஹோதரத்தைவிடப்பார்த்தால் ஸஹோதரவரிகரத்தை யொழியவோ? அப்படிக்கு ஸஹவாஸம் பண்ணுவான லக்ஷ்மணனைவிடிலும் இவனைவிடப்பார்க்கிறிலோம். "ஸ்வயிதிஷ்டாஸ்தவத்ரோ கிங்கார்யம் ஸீதயா மம" என்றன்றோ? என்னள

வில் தேவரிருப்பது; அப்படிக்கு தேவரீரைப்பற்றியிருக்கிற வடியே னுக்கு ஒரு தீங்குவரில் செய்வதென்னென்ன; * ரு. (கதஞ்சந) அப்படி ஆஶ்ரிதனைவிட்டுப் பற்றும்படியான உம்மை விடவுமாம் அவனை விடப்பார்க்கிறிலோம்.

அதென்! ஶரணாகதனை விடாமைக்காகில் தேவரீரருளிச்செய் கிறீது; என்னுடைய ஶரணாகதியிலே பாம்புசெற்றுக்கிடக்கிறதோ வென்ன; "அன்றீன்ற கன்றுக்காக முன்னீன்றகன்றைக் கொம்பி லும் குளம்பிலும் கொள்ளும்" என்னும் புதுச்சொல் மறந்தீரோ? "ஸம்ஸ்ராவகாரிணாத்யாகமேநஹ்ய ஸ்னோவிமீயதே" என்று - ஸாராவஹாரம் பண்ணின ராவணாநுஜனேற்றனாய் வந்தவிட மறிந்து நலியவந்தான்; நாம் தம்படைவீட்டில் செல்லாதிருக்கத்தா னே நம்பாளையத்திலேவந்து மூத்தீம்புசெய்த இத்தனைதோஷதுஷ்ட னைவிடக்காணுமடுப்பதென்ன; * க. (தோஷோயத்யபி) "மித்ர பாவேந ஸம்ப்ராப்தம்" என்று-அவன் நிர்தோஷனென்னுமிடத்தை யுங்களுக்குபதேஶித்தோம்; அதொன்றுஞ் செவியிற்புகாதே ஸ தோஷனென்றே ப்ரதிபத்தியாகில், நீங்கள் சொன்னவளவே யன்றி யிலே இன்னமும் சிலதோஷங்களுண்டாகிலும் கைவிடோம். * உ. (யத்யபிதோஷ:) உங்களுக்கேற மெய்ப்படவே தோஷமுண்டோ? (தஸ்யஸ்யாத்) தஸ்யாயிகார ஸம்பந்தயேஸ்யாத். அதாவது "ஸுஹ ஸ்வபராயாந்நா ஶாயுயோஉ கிநுநேநாஉமதி: । கூடஶோவாய ஹஶேதாஶேஷவ" என்றும் - "நயஷ்டிநிஷ்டாஷ்டி...ஶரணம் வ்ரஜேத்" என்றும்-ஶரணாகதனுடைய தோஷமன்றோ?. ஒரு யஷ்டி யைக்கைக்கொள்ளும்போது யஷ்டத்தைவிட்டோ கைக்கொள்ளுவது என்றுமாம். அன்றியிலே, * ந. (தோஷோயத்யபி தஸ்ய) என்று - அவனுக்கு தோஷமுண்டோவென்று ஶங்கித்து, (ஸ்யாத்) என்று - பரிஹாரமாகவுமாம். ஔபாதிகபாஷமுள்ள விடத்திலே ப்ர ஜை பண்ணினதப்பும் பொறுக்கவேண்டியிராநின்றதே; அத்தோபா தியும் பொறுதோ அவனுடைய தோஷமென்கிறார். * ச. (ஸ்யாத்) என்று ப்ராப்நாயாம் விஜ்ஞாய், அவனுக்கு தோஷமுண்டாகிலது

நமக் கஸஹ்யமாமன்றோ; ஒரு ஶரணவானை ரக்ஷித்தோமாகில் அதுக்கு விலையாய்ப்போம்; ஒருகுற்றவாளனை ரக்ஷித்தோமென்கிற இப்பேறுபெறுவதுகாணும். அன்றியிலே, அவனுக்கு முதலில் தோஷமில்லை; உண்டோ? * ௫. (தஸ்யதோஷ:) அவனுடைய தோஷமன்றோ! அவனிலும் ஶ்ராவ்யமன்றோ நமக்கென்கிறார். ஸஹிதவிஷயத்திலழுக் குகப்பாயிருக்குமாப்போலே. அன்றியிலே. * ௬ (தோஷோயத்யபி) தோஷமுண்டாகில், (தஸ்யஸ்யாத்) தஸ்யாஹிதவிஹிஸ்யாத். அவன்நினைத்து வந்தது பெற்றானாகிறானென்றுமாம். அன்றியிலே, * ௭. (தோஷோயத்யபி தஸ்யஸ்யாத்) "நஶ:" என்றாய்; அதுண்டாயிற்றாகில் அவனுக்குக்குற்றமாகிறது. ரக்ஷித்தநமக்குக் குற்றமில்லையே. அன்றியிலே, * ௮. (தோஷோயத்யபி தஸ்யஸ்யாத்) என்று - அவனுக்காகிற காலங்காணும். அதெங்ஙனே யென்றால், ஒருவன் ஸௌஹார்த்தமிருந்தபடி! தமயன் படைக்குறிய ழியாதேயிருக்க, படைவீடு கோப்புக்குலையாதே யிருக்க, உடம்பில் † வடுப்படாதேயிருக்க, விரோதியை யழித்துக் கொடுத்தபடிகாண் என்றுகொண்டாடும்படியிருக்கை. அன்றிக்கே, * ௯. (தோஷோயத்யபிஸ்யாத்தஸ்ய) அன்றோ? "தாராவாரோவிஶ்வாஸீ க்ருதக்நோ நாஸ்திகஸ்ததா । ஸமாஶ்ரயேதாதிதேவம் ஶ்ரத்தயா ஶரணம் யதி ॥ நிர்தோஷம் வித்தி தம் ஜந்தும்" என்றும்-"ஜ்ஞாநாக்நிஸ்ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே" என்றும்-"மனத்தினால் சிந்திக்கப் போயபிழையும் புகுதருவா நின்றனவும் தீயினில்தூசாகும்" என்றும் - "பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்" என்றும் சொல்லுகிறபடியே, முன்பு ஸதோஷனேயாகிலும், ஶரணாகதனானபோதே அவையெல்லாம் நஶித்து நிர்தோஷனாய் காணுமிருப்பது. * ௧௦. (தஸ்யதோஷோயத்யபி) நம்மைக்கொல்லவந்தானோ? (ஸ்யாத்) அதுண்டாவது காண். "அபிப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா" என்கிறபடியே, நம்மையழியமாறி ஶரணாகதரக்ஷணம்பண்ணினோ மென்று பேர்படைப்பதுகாண்.

---

† வடுப்படாதே - காயமில்லாமல்.

இப்படி ஸதோஷனேயாகிலும் விடாதொழிந்தால் ப்ரயோஜந மென்னென்னில்; *க. (ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) "சாதுகோட்டியுட்கொள்ளப்படுவார்" என்கிறபடியே, ஶரணாகதனை யயாதியை ரக்ஷித்த ஸௌப்ராதிமோக்ஷிக்கும்ஶ்ரீநர்ஸிம்ஹாதிகளை ரக்ஷித்தவிஶ்வாமித்ராதி மோக்ஷிக்கும்பஹிஷ்கரிக்கேபோகிறோம். * உ. (ஸர்வபாபேப்யஸ்) இதுஸத்தர்க்களான ஸாத்வான்களுக்கு விதிக்குமித்தனை போக்கி, வைராஜர்க்கு ஸர்வகதுர்ரானநமக்குக்கிடைக்கப்புகுகிறதோவென்றுமாம்.*ங. (ஸர்வபாபேப்யஸ்) கவோதவாநராதிதிர்யக்குக்களுக்குவிதிக்குமித்தனைபோக்கி,வைஷ்ணவஶரீரவாஸிருஹம் பண்ணினநமக்குவிதிக்கப்புகாநின்றதோ வென்றுமாம். *ச. (அஹம் த்வா) ஸர்வாவதாராதிபண்ணினால்ஸமமின்றியே யொழிந்தாலும் பண்ணாதபோது ப்ரத்யவாய முண்டாமாப்போலே, "க்ஷதாஸ்கிய தாயதஉத்யத்ரக்ஷத்ர ஸர்வஶர்போஹர்வரேநஷ்டரவஶ:" என்று க்ஷத்ரியரானநமக்குருவந்நிவாரணம்ஸர்வ ப்ரயச்சம். அதுபண்ணாதபோது மஹெறுபிறக்கும். தந்நிவ்ருத்தியைக்கொள்ளுவது. (அஹம் த்வா) என்கிற நஞுக்கு தஉந்யதஉஸாவ தவிரோயி என்று மூன்றுண்டாகையாலே, * ரு. (அஹம் த்வா) என்று - தஉந்யமான "ஸர்வம்ஸர்வதர்மமயோஉயே" என்று - ஸர்வாதிவிதி ப்ரயோஜகமென்றாகவுமாம். அன்றிக்கே, * சா. தஉஸாவமான ஸர்வாநிவ்ருத்தி ப்ரயோஜநமாகவுமாம். அன்றியிலே, * எ. "யஶஸ்ஸு" என்று - தவிரோயியான ஸ்வாவர்தெதானே விதிக்கு மென்றாகவுமாம்.

ஆக விந்தஶ்லோகத்தால் சொல்லிற்றாயிற்று, இவ்வயிகாரிக்கு வேண்டுவது கவுஶாங்கஸஹ்யம்; இவ்வளவாலே, "நஸ்ர்வத்வகாரணாம் ஶரவேர்த்வத்யா| கஶ்யம்விஉவகாரேணக்ருதேநைநகே நதஷ்டிதி" என்றும்- "க்ஷாந்திஉத்யப்ரவீஉபி:" என்றும் - "ஸாம் வ்ரஜ...ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றும்- "ஏகம் நயாமி வாஶாம் மதிம்" என்றும் - சிந்திப்பேயமையும்" என்றும்- "எண்ணி

னும் வரும்'' என்றும்-இத்யாதிகளில் சொல்லுகிறபடியே, அவனுக்கு ஏதேனுமாரேனும் ப்ரதிபந்தக முண்டாகிலும், ஓரளவிலும் கைவிடாதே தன்னைக்கொடுக்குமென்னு மர்த்தம் சொல்லுகிறது. கூஉ,

தாத்பர்யம்.:—இந்த விபீஷணன் கபடசரணாகதி பண்ணினாலும், சரணாகதன் சொல்லவேண்டிய சரணமென்னு முக்தியைச்சொல்லி நாமிருந்த விடந்தேடி வந்தானாகையால், இவனிடத்தில் தோஷமிருந்தாலும், இவன் ஸ்வீகாரத்கால் முன்புள்ள பந்துமித்ரர்தீகளையிழக்க வருமாகிலும், நானிவனை விட்டுவிட மனஸ்ஸாலும்சிந்திக்கவில்லை. நீங்களிவனை தோஷியென்றெண்ணினாலும், வாஸ்தவத்தில் தோஷமிருந்தாலும், ஸத்புருஷர்களுக்கு இது நிந்திக்கும் படியாயிராது; சரணாகதனிடத்தில் தோஷம், சரணாகதரக்ஷணத்தில் தீக்ஷையுடையவர்களுக்கு அதிசயத்தை விளைப்பதாகையால் ப்ரார்த்திக்க வேண்டியே யிருக்கும்; இவனாலொரு ப்ரயோஜநமில்லாவிடினும், இவனைக்கைவிடுவது ஸத்கோஷ்டியில் நிந்த்யமாகையால் அங்கீகரிப்பதே யுக்தம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், கஅ-ம் ஸர்க்கம், ௬-ம் ச்லோகம்.

அவதாரிகை. ராகவோக்தியைக்கேட்ட மஹாராஜர், அதி ஸாஹஸமென்று மிகவும் பயப்பட்டு ஒருவார்த்தை விண்ணப்பஞ் செய்கிறார்.

௩௦. ஸுக்ரீவ ஸ்து தத்வாக்யம் ஆபாஷ்ய வி்ம்ருஷ்ய ச ।
ததச் சுபதரம் வாக்யம் உவாச ஹரிபுங்கவ: ॥ கூச.

அர்த்தம். அத - அதுக்குப் பிற்பாடு, ஸுக்ரீவஸ்து - ஸுக்ரீவமஹாராஜர், தத் - அந்த, வாக்யம் - சொல்லை, ஆபாஷ்ய-அநுவதித்தும், விம்ருஷ்ய - ஆலோசித்தும், தத: - அந்தவாக்யத்தைக்கேட்டிலும், சுபதரம் - மிகுந்த அழகியதான, வாக்யம் - சொல்லை, உவாச - சொன்னார்.

வ்யா.(ஸுக்ரீவஸ்து)இதி.(து)கீழில்ஸர்க்கத்தில் ''நிகூயிகவா ஆயுதஃ'' என்கிற ச்லோகத்தால் ராவணபவனத்தில் நின்றும்வந்த விவன் நம்மை நலிகை நிச்சிதமென்று இவருடைய ஹ்ருத

யத்திற்பிறந்த வேறுபாட்டைச்சொல்லிற்று; "ஸதத்த்வ நம்ஸு க்ஷா" என்கிற-த்ஸுத்தால், பெருமாள் ப்ரக்ருதியையும் இஶ்ரோஷ்டியில் விலைச்செல்லும் வார்த்தையையு மறிந்து, "ராவணம்ஸர ணம்கத:"-என்றது, "நிவேதயத" என்று-இங்ஙனே சிலவார்த்தை ஷகாரமாகப்பிடிப்பதாகநின்றான்; இதுபெருமாள்செவிப்படுமாகில் நம் வார்த்தைகொள்ளாரென்று க்ஷமித்தவிஶேஷத்தைச் சொல் லிற்று. இந்த த்ஸுத்தால் பெருமாள் நாம்போனவழிவருவர், எதி ரிகளை அவரைக்கொண்டு வெல்லலாமென்றிருந்தார். பித்ருஸாவமு டையார் நம்மை நலிய வந்தார்களாகிலும் அதுக்கிசைந்தோமென்ற ருளிச்செய்கையாலே, இவரும் அவனுக்குக் கூட்டாயிருந்தார்; இனி யிவரைநோக்கலாவது என்செய்தாலென்கிற ஸயாதிஶயத்தாலே வேறுபட்டபடி. (கூ) ஸ்வாமி வார்த்தை சொன்னால், ஶேஷபூதனானவன், கருத்தையு மறிந்து தன் ஶேஷத்வத்தையும் பார்த்து விசாரித்து அதுக்குச்சேர வார்த்தை சொல்லவேண்டியிருக்க க்ஷதி ஸாஹஸம் விளைந்தபடியாலே க்ருஷ்ணம்பாராதே வார்த்தைமுடிவது க்குமுன்பே சடக்கென ப்ரதிவசநம் பண்ணத் தொடங்கினபடி. (த்வராஸ்ரு) மேல் பற்றில்லாத வார்த்தையை. அதாவது இவன் துஷ்டனென்றிறே சொல்லலாவது; அத்தையும் இசைந்தோ மென் கையாலே போக்கடியில்லையென்கை. (ஸுஹாஷிதம்) வசஸ்ஸும்திரள வும் ஸுஹாஷித்து. (விஶ்ருத) வேர்ப்பற்றியானவத்தைவிஶேஷி ப்பதுஞ்செய்து-க்ஷவாக்யாநுஹாஷணமும் அதினுடைய க்ஷவிஶேஷமு மென்னவுமாம். (ததஸ்ஸாதாரவாக்யம்) பெருமா ளருளிச்செய்தவாக்யம்ஸாரம்; அதிற்காட்டில்ஸாரமானவாக்ய த்தைச்சொன்னார். அதாவது-என்னைப் பற்றுவார்க்கு பித்ருஸாவமே யமையும்; அவர் குற்றம்பார்த்துவிடோம்; என்று தம்மைப்பற்றினார் க்கு இவ்வார்த்தையின் நிழலிலேஜீவிக்கலாம் வார்த்தையாகையாலே அதுஸாரம்; நீர்போனவழியேபோய் உம்முடையஸ்வபாவத்தையிழக் கமாட்டேன் என்றவார்த்தை யாகையாலேஇதுஸாரம். (ஹரி புங்கவ:) "ராஜவித்யா" என்கிறபடியே தம்முடைய கலக்கத்துக்குப் போரும்படி பெருமாளுக்கு அவ்வருகே விண்ணப்பஞ்செய்த ஆள வுடைமை.

தாத்பர்யம்:—ஸுக்ரீவமஹாராஜர், பெருமாள் சொன்னவாக்யத்தைத்தான் அநுவதித்து, இதினர்த்தத்தை நன்றாயாலோசித்தவாறே, தோஷங்களைச் சொல்லி இவ்வபிஸந்தியை மாற்றத்தகாதவாக்யமாகையாலே என் செய்வோமென்று பயந்து, பெருமாள் சொல்லிமுடிவதற்கு முன்பே, அவரை யநுஸரிக்கவேண்டும்படியான தம் ஸ்வரூபத்தையும் பாராதே, சடுதியாய்த்தன்ப்ரேமத்தால் மிகவும் அழகியதான வார்த்தையைச் சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௩௫-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. தோஷணாகுரம் சொல்லுவாராக ஸம்ப்ரதிபன்னதோஷத்தை யநுவதிக்கிறார்.

௩௫.—ஸதோஷோ வா யதோஷோ வா கிமேஷ ரஜனீசர:।
ஸூக்ஷ்மம் வ்யஸநம்ப்ராப்தம் ப்ராதரம் யஃபரித்யஜேத்॥ ௩௫.
கோ நாம ஸ ஭வேத் தஸ்ய யமேஷ ந பரித்யஜேத்।

அர்த்தம். ஸதோஷோவா - தோஷத்தை யுடையனாயாவது ஆகட்டும்; அதோஷோவா - தோஷத்தை உடைத்தாகாதவனாயாவது ஆகட்டும்; ஏஷஃ - இந்த, ரஜனீசரஃ - ராக்ஷஸன், கிம் - என்னப்ரயோஜநத்துக்காக. ஸூக்ஷ்மம் - இப்படிப்பட்ட, வ்யஸநம் - துஃகத்தை, ப்ராப்தம் - அடைந்திருக்கிற, ப்ராதரம் - ஸஹோதரனை, யஃ - எவன், பரித்யஜேத் - விட்டேனென்று நிந்திக்கிறானோ; ஏஷஃ - இவன், யம் - எவனை, நபரித்யஜேத் - விடமாட்டானோ; ஸஃ - அப்படிப்பட்டவன், தஸ்ய - அவனுக்கு, கோநாம - எவன் தான், ஭வேத் - ஆவான்.

வ்யா. (ஸதோஷோவாயதோஷோவா) குணங்களிலேயிறே விப்ரதிபத்தி; "ஸர்வ ஜாதிஷியம்ருஶா" என்னுமாப்போலே, ராக்ஷஸனென்னுமிடம்ஸம்ப்ரதிபந்நமன்றோ. (கிமேஷரஜனீசரஃ) கிம்க்ஷேபே. இவனால் என்ன ப்ரயோஜநமுண்டு. இவன் ராக்ஷஸனானாலும், "கிமேஷஃ" என்னக்கடவதோ? ஸர்வநிகூஷ்டம்வஸ்துமாக ஶரணம்புகுந்த நமக்கு ஸஹகாரியாம் என்ன ; சொல்லுகிறது. (ஸூக்ஷ்மம்)ராஜாவாகையாலேசூக்ஷ்மனவனை.(வ்யஸநம்ப்ராப்தம்) ஶத்ருக்களானநம்மாலே வீபிதனானவனை, வ்யஸநமாவது - ஶங்கா

த்யஜநம், பந்துவர்க்கம், இத்யாதிகள். (ஸ்ரீபகவத்) த்யஜநமின்றிக்கே யொழிந்தாலும் விடவொண்ணுத பந்துவுடையவனை. (யஸ்ஸாமி த்யஜேத்) யாவனொருவன் ஸஹஜமாக விட்டானென்று கருதுகின்றன். சாஸ்திரேயரத்வம் — கீழ்ச்சொன்னவை ஒரோன்றேவிடாமைக்கு ஹேதுவாயிருக்க எல்லாவற்றையு முடையனுயிருக்கிறவனை விட்டான் யாவனொருவன்; அந்த இவனுல் என்ன ப்ரயோஜநமுண்டென்று கீழோடே கூட்டிவகம். அபவா, “ஸம்ஸ்யம்” என்று வ்யஸநவிஶேஷணமாகவுமாம். அதாவது - மாதாபிதாக்களாலும் பரித்யாஜ்யராய் பாதாரராயிருப்பார்க்கு மும்முடையநிழலிலேயொதுங்கவேண்டும்படியிருக்கிற தேவர் புலிசீறினாற்போலே சீறி அழியச்செய்வதாக எடுத்துவிட்டிருக்கிற இந்தவ்யஸநத்தை யன்றோ அவன் த்யாகவுணுயிற்று. இப்படி யவனோடு ⊙தொத்தறவிட்டுப் போந்து நம்பக்கலிலே வந்தவன் நமக்கு ஸஹகாரியாகக்கூடாதோ வென்ன; சொல்லுகிறார்; (கோநாம) இதி. (தஸ்யாஸ்யகோ நாம ஸஹவேத், யஸ்ஷ விபீஷணோ நபரித்யஜேத்) யதாசாம்பவ தாதுகனுகவந்த இந்த விபீஷணனுக்கு அவன் ஆராவான்; யாவனொருவனை இந்தவிபீஷணன் விடான்; இவன்விடாதொழிகைக்கு ஒருத்தனில்லையென்கை. அதாவது-நாட்டில் பரித்யாஜ்யராவார் - ஸம்பத்திவிபத்திபந்துக்களைத் தனித்தனியேயுடையரா யிருப்பார் மூவரும், இவற்றிலிரண்டையு முடையார் மூவரும், ஸர்வதமாண னுயிருப்பாரொருவனும், ஆக எழுவருமாயிற்று; இவர்களில் ஸர்வதமாணனை ராவணனைவிட்ட இவனுக்கு அபரித்யாஜ்யனுயிருப்பானொரு அஷ்டமனில்லாமையாலே இவன் விடமாட்டாதானொருவன் முதலிலே இல்லையென்கை. கூஙு.

தாத்பர்யம். இவன்தோஷியாகவாவது ஆகட்டும்,தோஷஹீநனுயாவது ஆகட்டும்; இவனுல்நமக்கொருப்ரயோஜநமில்லாமையாலே இவனைவிட்டுவிடுவதே யுக்தம். நம்மிடத்திலிவன் சரணமென்று வந்தபடியால் நம் கார்யங்களை ஸாதித்துக் கொடுப்பனென் றெண்ணவேண்டா. ஏனென்றால், தன் ப்ராதாவுக்கு நகரமழிவது பந்துக்கள் சாவதான இப்படிப்பட்ட மஹத்தான ஆபத்துக்கள் நேரிட்டிருக்குங்காலத்தில், அவனை எவனொருவன்விட்டுவிட்டு நிந்திப்பதும் செய்கிறானே? அவன்,ஒருவனை யாஸ்ரயித்து ஆபத்காலத்தில் விடாமலிருந்து உதவி செய்யமாட்டான்? ஆகையாலிவனுல் நமக்கொரு உதவியும் நேரிடாது. இவனை விடுவதே யுக்தம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

⊙ தொத்தற - ஸம்பந்தமறும்படி.

யுத்தகாண்டம், ௧௮ - ம் ஸர்கம், ௭ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. மஹாராஜர் வார்த்தையைக்கேட்ட பெருமாள், தாம்நோக்க நினைத்தநன்மையையும்பார்த்து இதிலொருவ்யவஸாயமிருந்தபடி யென்னென்றுமுறுவல்செய்து, இவருடைய பரிகரத்தில் நமக்காளாவாருண்டோவென்றுபார்த்து, அங்கே ஒருவரைக்காணாமையாலே தம்முடையகருத்தறியு மிளையபெருமாளைக்குறித்து வார்த்தையருளிச்செய்கிறார்.

௨௯. வாநராதிபதேர்வாக்யம் ஶ்ருத்வா ஸர்வாநுதீக்ஷ்ய ச || ௩௬.

ஈஷதுத்ஸ்மயமாநஸ்து லக்ஷ்மணம் புண்யலக்ஷணம் |

இதி ஹோவாச காகுத்ஸ்தோ வாக்யம் ஸத்யபராக்ரமঃ || ௩௭.

அர்த்தம். ஸத்யபராக்ரமঃ - அப்ரதிஹதபராக்ரமத்தையுடைய, காகுத்ஸ்தঃ - ஸ்ரீராமன், வாநராதிபதேঃ - ஸுக்ரீவனுடைய, வாக்யம் - வசநத்தை, ஶ்ருத்வா - கேட்டு, ஸர்வாந் - எல்லாரையும், உதீக்ஷ்ய - பார்த்தும், ஈஷத் - கொஞ்சம், உத்ஸ்மயமாநঃ - புன்சிரிப்பையுடையராய், புண்யலக்ஷணம் - நற்குறிகளையுடைய, லக்ஷ்மணம் - இளையபெருமாளைக்குறித்து, இதி - இந்தப்ரகாரம், வாக்யம் - வார்த்தையை, உவாச ஹ - சொன்னார்.

வ்யா. (வாநராதிபதேர்வாக்யம்ஶ்ருத்வா) பேரளவுடையராகையாலே எட்டாநிலத்திலே வார்த்தை சொன்னவருடைய வார்த்தையைக்கேட்டு. தாம்போனவழி எல்லார்க்கும் ப்ரஸாவஹிக்க வேண்டும்படியான நிர்வாஹகத்வத்தையுடைய ரென்றுமாம். (ஸர்வாநுதீக்ஷ்ய) இவர்கள் நம்மையும் பார்ப்பார்களோ? இவர் போன வழியே போவார்களோ? என்றுபார்த்து. அதவா, "ஆசார்யவ்ருத்தாசார்யஸந்நிதாதே ஆசார்யஸ் ஸேவோபஸஜ்ஜாஹ்யঃ" என்கிற ந்யாயத்தாலே நாமும் மஹாராஜருமானால் நம்மை அநுவியாநம்பண்ணுவார்களோவென்றுபார்த்து என்றுமாம். (ச) ஶப்தத்தாலே ஸர்வம்பார்த்தவளவிலேயு மன்றிக்கே, இங்கிதங்களையும் ஹ்ருதயத்திலே ஓடுகிற வார்த்தையையும் பார்த்தபடியை ஸமுச்சயிக்கிறது. (ஈஷதுத்ஸ்மயமாநঃ) தாம்நோக்கப்புக்க நன்மையும்பார்த்தபடி ஆஶ்சர்யத்தைப்பண்ணுமளவன்றிக்கே, நாம்சொன்னபக்ஷத்துக்கு உபேக்ஷணஞ்சொல்லும்

படி தெளிவையும்பிறப்பிக்குமாகாதே! இதொரு வ்யுத்பத்திஸ்வபாவமிரு ந்தபடி யென்னென்று ஸூசிதம்பண்ணினபடி. "நலமேவலிதுகொல்" என்னக்கடவதிறே. (தது) மஹாராஜர் சொன்னவசநத்தைத்தள்ளி அதுக்கவ்வருகே வார்த்தைசொல்ல நினைத்தவேறுபாடு. அதாகிறது "யஸ்யைஷ நவரித்யஜேக" என்கிறவரைக்குறித்து, "வ்யஸநேஷு வ்யஹதப்ராஸுஸாநுயதிஹாமத:" என்றுவந்தான்; விட்டுப்போந்தானென்றுசொல்லுகை. (லக்ஷணம்) மஹாராஜர் வரிகாரத்தில்தன் வார்த்தைகேட்பாரில்லாமையாலே, "வ்யாமேவ தவமஹாவ்ராஜ்ஞ:" என்று-தம்நினைவுக்கு முற்படக்கடவரான இளையபெருமாளைக் குறித்து அருளிச்செய்தார். (வர்ணலக்ஷணம்) இவ்வளவு ப்ரணாமதரை விடாதவார்த்தையாலே மஹாராஜர் பக்ஷத்துக்கு அவ்வருகே வார்த்தைசொல்லக்கடவரென்று தஸ்மவண கௌதமஹஸம் வடிவிலே தோற்றும்படியான நற்குறியையுடையவர். (உதிவாக்யம்வாவ) மஹாராஜர் தம்மைக்கொண்டாடும்படி அவர் வ்யாதிஸயத்தைக் கொண்டாடின வ்யாகாரத்தையும், அவர் சொன்ன வசநத்துக்கவ்வருகேவார்த்தைசொன்னவ்யாகாரத்தையுஞ்சொல்லுகிறது. (ஹ) தம்மேன்மைபாராதே இப்படி கொண்டாடுவதே! இதென்னநீர்மை என்றும், அவர்வசநத்துக்கவ்வருகேஉத்தரங்காண்பதே! என்றும் ஐஷிகொண்டாடுகிறான். (காகஸ்யஸ்த:) உஜ்ஜாதிகளுக்கும் இக்குடியிற்பிறந்தாரைக்கொண்டு தங்கள் * வன்னியமறுத்துக்கொள்ளும்படியான குடியிற்பிறப்பால்வந்தமேன்மைபாராதேதாழவார்த்தைசொல்லுவதேயென்கை. (ஸத்யவரா க்ரஸ:) கூசோவஸ்வராக்ர ஸ:. வ்யாவரிக்க வொண்ணாதபடி எதிரிகள் முடுகினால் வராக்ரமிக்கவல்லாரைப்போலே பதகம்முடிந்தாலுமுத்தரங்கண்டு வ்யதிவாதிகளை வெல்ல வல்லவர். ௬௨,

தாத்பர்யம். இப்படி ஸுக்ரீவமஹாராஜர் சொன்னதைப்பெருமாள்கேட்டு இவருக்குத் தன்னிடத்திலுண்டான ப்ரீதியைக்கண்டு புன்சிரிப்பு சிரித்து.இக்கோஷ்டியில் நமக்கு ஸஹாயமுண்டோவென்று எல்லாரையும்பார்த்து ஒருவரையுங்காணாமையாலே, தன்னுடைய பராக்ரமத்தைக்கண்டுப்ரீதரான இளையபெருமாளைப்பார்த்து இப்படி யொருவார்த்தை சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

---

* வன்னியம்-ஆபத்து.

யுத்தகாண்டம், கஅ-ம் ஸர்க்கம், அ-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. அவர் தாஞ்சொல்லப்புகுகிற உத்தரத்தினுடைய ஏற்றந்தோற்றுகைக்காக இவர்சொன்ன வார்த்தையின் கனத்தைக் கொண்டாடுகிறார்.

உ௦. அநதீத்ய ஶாஸ்த்ராணி வ்ருத்தாநநுபஸேவ்ய ச ।
ந ஶக்யமீத்ருஶம் வக்தும் யதுவாச ஹரீஶ்வர: ॥ கூஅ.

அர்த்தம். ஹரீஶ்வர: - ஸுக்ரீவன், யத் - எத்தை, உவாச - சொன்னரோ, ஈத்ருஶம் - இப்படிப்பட்டவசநம், ஶாஸ்த்ராணி - சாஸ்த்ரங்களை, அநதீத்ய - ஓதாமலும், வ்ருத்தாந் -பெரியோர்களை, அநுபஸேவ்ய - அநுவர்த்தநம்பண்ணாமலும், வக்தும் - சொல்லுகைக்கு, நஶக்யம் - முடியாது.

வ்யா. (ஶாஸ்த்ராண்யநதீத்ய, வ்ருத்தாம்ஶ்சாநுபஸேவ்ய, ஈத்ருஶம்வக்தும்நஶக்யம்) ஒரு ஶாஸ்த்ரத்தையும் ஒரு ஆசார்யனையும் ஒரு ◊அடிப்பாடானவ்ருத்தியையுமுடையவனுக்குச்சொல்லலாம்வார்த்தையன்று. (ஈத்ருஶம்) இவ்வார்த்தை ஒருபிறர்க்குப் போலியாகவுஞ் சொல்ல வொண்ணாது. "ஶ்ருதஶாஸ்த்ர ஸம்ஹேஷு வ்ருத்த:" என்றும் - "வ்ருத்தோபஸேவீ" என்றும் - "ஸுந்தேஹஸுத்ய பூர்வாத:" என்றும்-மேலே சொல்லப்படுகிற தம்மாலுஞ் சொல்லப் போகாதென்று கருத்து. (யதுவாச) ஸாதரநிர்தேஶத்தால் இவர் வார்த்தையை அநுபாஷிக்கவும் முடியாதென்கை. (ஹரீஶ்வர:) இதுக்கு ஸத்ருஶமேதென்னில் இவர்பெருமைக்கு ஸத்ருஶமென்கை. கூஅ.

தாத்பர்யம். ஸுக்ரீவ மஹாராஜர் சொன்ன வார்த்தையானது சாஸ்த்ரங்களையதிகரியாமலும்பெரியோர்களைத்தொடர்ந்துவிஶேஷார்த்தங்களை யறியாமலு மிருக்கிறவர்களால் சொல்லப்போகாது.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், கஅ-ம் ஸர்க்கம், கூ-ம் ஶ்லோகம்.

அவதாரிகை.-இப்படி இளையபெருமாளை நோக்கி மஹாராஜரை ப்ரஶம்ஸித்து ஸ்ரீவிபீஷணாழ்வானை விஶ்வஸநீயனென்று தாஞ்

◊ அடிப்பாடான— ஸம்ப்ரதாயஸித்தமான.

சொல்லப்புகுகிற வார்த்தை ராஜாக்களெல்லார்பக்கலிலு முள்ள தென்று மஹாராஜரைக் குறித்து வார்த்தை சொல்லுகிறார்.

உ௬.—ஸூக்ஷ்மதரம் கிஞ்சித்ர ப்ரதிபாதி மே ।
ப்ரத்யக்ஷம் லௌகிகம் வாபி வித்யதே ஸர்வராஜஸு ॥ கூகூ.

அர்த்தம். அத்ர-இந்தவிஷயத்தில், ஸர்வராஜஸு-ஸமஸ்தராஜாக்களிடத்திலும், ப்ரத்யக்ஷம் -காணப்படுகிறதாயும், லௌகிகம்வாபி-லோகஸித்தமாயும், வித்யதே - இருக்கிறதோ, மே - எனக்கு, ப்ரதிபாதி - தோற்றுகிறதோ, ஸூக்ஷ்மதரம் - (அப்படிப்பட்ட) அதி ஸூக்ஷ்மமான, கிஞ்சித் - ஓரர்த்தம், அஸ்தி - இருக்கிறது.

வ்யா. (ஸூக்ஷ்மதரம்) மஹாராஜர் கீழ்ச்சொன்ன வார்த்தை ஸூக்ஷ்மம்; இது-ஸூக்ஷ்மதரம்; இதுக்குமேலொரு அர்த்த மில்லாமையாலே;ஒருதப்பைப்பொறுப்பதென்றில்லாமையாலேயும், எல்லார்க்கும் மேலான வார்த்தையென்கை. எங்ஙனே யென்னில்; மஹாராஜர் பக்கலிலு முக்தாநுபாஷண மொழிய அர்த்தாந்தர மில்லை; பெருமாளும் இவர் வைராக்யத்தைப் போக்குகைக்குத் தந்தோள்வலியைப் பேசுகிறாரித்தனை; ஆகையாலே, எல்லாவற்றுக்கும் மேலானவார்த்தையிது. (கிஞ்சித்) மஹாராஜர் வார்த்தைக்கு ※அவ்வருகாயிருக்கச்செய்தே, "கிஞ்சித்" என்று-ஸ்வாதீநயாகையாலே வைபவாகப்பேசுகிறார். (யத்ர ப்ரதிபாதி மே) விபீஷணவிஷயீகாரத்தில், (ப்ரத்யக்ஷம்) ஸர்வப்ரத்யக்ஷஸித்தம். (லௌகிகம்வாபி) ப்ரத்யக்ஷமேயாகிலும் ஜாதிவயம் தோஷமன்றோவென்னில்; எல்லார்க்குமேறுவதொன்று. எங்ஙனேயென்னில்; (வித்யதே ஸர்வராஜஸு) எல்லா ராஜாக்கள் பக்கலிலும் ⊕பரிமாறுவதொன்று. "ஸர்வராஜஸு" என்கையாலே, மஹாராஜர் பக்கலிலும் உள்ளதொன்று; நம்பக்கல் வைராக்யத்தாலே மறந்தாரித்தனை.

தாத்பர்யம். நீர் சொன்னதைக்காட்டிலும் மேன்மையை யுடையதாய் ஸமஸ்த ராஜாக்களிடத்திலும் காணப்படுகிற லோகஸித்தமான ஓரர்த்த மெனக்குத் தோற்றுகிறது என்று ஸுக்ரீவ மஹாராஜரைப்பார்த்துச் சொல்லுகிறார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

※ அவ்வருகாயிருக்கச்செய்தே - மேலாயிருக்கச்செய்தே.
⊕ பரிமாறுவதொன்று - நடப்பதொன்று.

யுத்தகாண்டம், கஎ-ம் ஸர்க்கம், க௦-ம் ஶ்லோகம்.

அவதாரிகை.— அவ்வளவன்றிக்கே மின்னதென்கிறார் அமித்ரா: இத்யாதியாலே.

௧௦.—அமித்ரா ஸ்தத்குலீநாஶ்ச ப்ராதிதேஶ்யாஶ்ச கீர்த்திதா: ।
வ்யஸநேஷு ப்ரஹர்த்தாரஸ் தஸ்மாதயமிஹாகத: ॥ ௧௦.

அர்த்தம். தத்குலீநாஶ்ச - அக்குலத்திற்பிறந்த ஜ்ஞாதிகளும்' ப்ராதிதேஶ்யாஶ்ச-அடுத்ததேசத்திலிருக்குமரசர்களும், வ்யஸநேஷு-ஆபத்துக்களிலே, ப்ரஹர்த்தார: - உபத்ரவிக்கிற, அமித்ரா: - சத்ருக்களாக, கீர்த்திதா: - சொல்லப்பட்டவர்கள்; தஸ்மாத் - ஆகையால், அயம் - இந்தவிபீஷணன், இஹ - இங்கே, ஆகத: -வந்தான்.

வ்யா. (வ்யஸநேஷு ப்ரஹர்த்தார:, தத்குலீநாஶ்ச, ப்ராதிதேஶ்யாஶ்ச, அமித்ரா: கீர்த்திதா:) ராஜாக்களுக்கு வ்யஸநங்கள் வந்தால், ப்ரஹர்த்தாக்களாவார் இரண்டுகோடி; தத்குலீநரான அமித்ரரும் ப்ராதிதேஶ்யரான அமித்ரரும். தத்குலீநராகிறார் - வீரஸஜாதர்; ப்ராதிதேஶ்யராகிறார்-ப்ரதிதேஶவர்த்திகள்; ஸமந்ததேஶவர்த்திகளென்றபடி. (வ்யஸநேஷு) அவர்களி லந்யதமனை வ்யஸநங்கள் ப்ராப்தங்களாயுள்ளவிடத்திலே. (ப்ரஹர்த்தார: கீர்த்திதா:) ப்ரஹரிப்பார்களென்று நீதிஶாஸ்த்ரவித்துக்களாலே சொல்லப்படாநின்றார்கள். "அமித்ரா: - கீர்த்திதா:" என்றுமாம். (தஸ்மாதயமிஹாகத:) ராவணன்தனக்கு நம்மாலே வ்யஸநங்கள் வந்தவாறே ஸ்ரீநஜான விவன் நம்மை ப்ரஹரிக்குமென்று அவன் நலியக்கூடுமென்று அத்தாலே வந்தான். ஜ்ஞாதிகளெல்லார்க்குமோவ்வாதோ? இவனுக்குவிஶேஷமென்ன? என்னவொண்ணாது; அவனுக்கு ஹிதஞ்சொல்லுகிற விடத்திலே நம்முடைய உத்கர்ஷமும் அவனுடைய அபகர்ஷமுந் தோற்றச்சொன்னான்; அத்தாலே இவன் பக்கலிலே ஶத்ருபாவம் பண்ணக்கடவன்; அத்தாலே வந்தான். அதவா, அவனுக்கு வ்யஸநம் வந்தவளவிலே அவனுக்கு இவன் ஜ்ஞாதியாகையாலே நம்மைக்கொண்டு அவனை நலியவந்தானாகவுமாமென்று ஒரு வ்யாவ்யாதாசொன்னான். இவையிரண்டிலும், "யதேஷநவரிதஞ்ஜேஸ" என்றுசொன்ன விவரைக்குறித்து இவ

ருடைய ப்ரக்ருதியே ஸாயிக்கிறாராகையாலும், மேல் "மாநயந்தி ஸ்வகாந் ஹிதாந்" என்று சொல்லுகையாலும், முற்பட்டதே பொருளாகக்கடவது.

ஆக, இஶ்லோகத்தால், அவனுக்கஞ்சிவந்தானாகிலும் ஸங்க்ராஹ்யன்; நம்மைக்கொண்டு அவனை நலியவந்தானாகிலும் ஸங்க்ராஹ்யன்; உபயபக்ஷத்தாலும் "யத்யேஷ நவநீதக்ருஜேஜ" என்னுமவனல்லன்; நமக்கு ஸஹகாரியென்றதாயிற்று. ௪00.

தாத்பர்யம். ஒருவனுக் காபத்து வந்த வளவில், அக்குலத்திற் பிறந்த ஜ்ஞாதிகளும், அடுத்ததேசத்து ராஜாக்களும் அவனிடத்தில் த்வேஷத்தைப்பண்ணி நலிவார்கள். ஆகையால், ராவணனுக்கு ஆபத்து வந்தவளவில், இவன் நமக்கு ஜ்ஞாதியாகையால் நம்மை நலிவனென்று கலங்கி ராவணன் தன்னை ஹிம்ஸிப்பனென்றெண்ணி இவனிவ்விடத்துக்கு வந்தான்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், க௮-ம் ஸர்க்கம், கக-ம் ஶ்லோகம்.

அவதாரிகை.—ஸ்வகார்யஜராய் அமித்ரராயிருப்பாரைக்கொண்டாடுமதொழிய நலியக்கூடுமோவென்னச் சொல்லுகிறார்.

கக.—அபாபா ஸ்தத்குலீநாஸ் ச மாநயந்தி ஸ்வகாந் ஹிதாந் |
ஏஷ ப்ராயோ நரேந்த்ராணாம் ஶங்கநீயஸ்து ஶோபந: ||

அர்த்தம். அபாபா: - தோஷஶூந்யரான, தத்குலீநா:- அக்குலத்திற்பிறந்தவர்கள், ஸ்வகாந் - தன்னைச்சேர்ந்த, ஹிதாந் - ஹிதர்களை, மாநயந்தி - கொண்டாடுவார்கள். நரேந்த்ராணாம் - ராஜாக்களுக்கு, ஏஷ: - இந்த, ஶோபந: - நல்லஸ்வபாவம், ப்ராய: - மிகவும், ஶங்கநீய:- ஸம்சயிக்கத்தக்கதாயேயிருக்கும்.

வ்யா. (அபாபா:, தத்குலீநாஸ், ஸ்வகாந்ஹிதாந் மாநயந்தி) ஸ்வகார்யஜராலும் அபாபராகவேணும். தனக்கு இஷ்டவிநியோகார்ஹனும்படி ஹிதானார் பாந்தவர்களைக்கொண்டாடும்போதென்கை. வ ஶப்த:.- அவதாரணே. அபாபரே யாகவேணுங்காணென்கை. (நரேந்த்ராணா மேஷ ஶோபந: ப்ராய ஶங்கநீய:) லோகத்தில் பாவிஷ்டர் பெருத்திருக்கையாலே, ராஜாக்களுக்கு பந்துஸம்ஹாவநாரூபமான இந்த ஶோபநஸ்வபாவம் ப்ராயஶ் ஶங்கநீயம்; இந்த ஸ்வபாவமுடையார்க்குச் சுருக்கமென்கை. ராஜாக்களில்வைத்துக்கொண்டு பந்துஸம்ஹாவநாரூபமான இந்தஶோ

ஸத்த்வஸ்வபாவத்தையுடையவன் ஶங்கநீயனென்று வாக்யஶேஷமாகவுமாம். நியதாரணேஷ்வபி. (தே) ஶங்க்ய: ஸ்வயமாரணே. ஶங்கநீயனேயென்கை. "ஹிதம்வாக்யம் ப்ரஶக்தவந்தம்" என்றும் "யோ ஹி தைக்ஷிணா" என்றும் * ஸந்தர்ஶநங்குறைகையாலே உக்தவிநியோகமாக்கிருந்தானேயாகிலும், விபீஷணன் பரஹிம்ஸா ராவியாய் பாவிஷ்ணுயப் போந்த ராவணனைக்கொண்டாட ஸம்பாவனையில்லை; ஹிம்ஸையே ஸம்பாவிதமென்கை. ௧௦௧

தாத்பர்யம். தனக்கு ஹிதபரரான ஸ்வஜநங்களை ஜ்ஞாதி, தர்மிஷ்டனானால் ஸன்மானிப்பன். ஆகிலும் ராஜாக்களுக்கு ஜ்ஞாதிகளைக்கண்டு ஆதரிப்பது அரிது, ஆகையால் நாம் ஹிதபரனாகிலும் ராவணன் ஹிம்ஸகனாகையால் நம்மையாதரியானென்றெண்ணி விபீஷணன் நம்மிடத்திலே வந்தான்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௧௨-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. "ஸுஜ்ஞயிகவாத்விஷதம்" என்று-ஶத்ருபக்ஷபரிக்ரஹத்தில் யாதொரு தோஷஞ்சொல்லப்பட்டது; அவ்வளவிலே ஒருவிஶேஷமுண்டு; அத்தை நான் சொல்லக்கேளுமென்கிறார்.

௨௭.—யஸ்ய தோஷஸ்த்வயா ப்ரோக்தோ ஹ்யாதானேऽரிபலஸ்ய ச।
தத்ர தே கீர்த்தயிஷ்யாமி யதாஶாஸ்த்ரமிதம் ஶ்ருணு॥ ௧௦௨.

அர்த்தம். அரிபலஸ்ய - சத்ருபலத்திலுடைய, ஆதானே - ஸ்வீகாரத்தில், ய: - எந்த, தோஷ: - தோஷமானால், த்வயா - உம்மாலே; ப்ரோக்த: - சொல்லப்பட்டதோ, தத்ர - அந்தவிஷயத்தில், தே - உமக்கு, யதாஶாஸ்த்ரம் - சாஸ்த்ரத்தை அதிக்ரமியாமல், கீர்த்தயிஷ்யாமி-சொல்லப்போகிறேன்; இதம்-இச்சொல்லை, ஶ்ருணு-கேளும்.

வ்யா. (அரிபலஸ்ய ஆதானே யோ தோஷஸ்த்வயாப்ரோக்த: தத்ர தே) ஶத்ருபக்ஷபரிக்ரஹமல்லவென்று தோஷங்களுக்கெல்லாம் நீர் தலைபாகச்சொன்ன அதிலே ஸஜாதீயனாயிருக்கைக்கொரு ஹேது வுண்டு; அந்த விஶேஷத்தைக்கேளுமென்கிறார். (யதாஶாஸ்த்ரம்) ஶத்ருபக்ஷபரிக்ரஹமென்று நீர் நீதிசொல்லுகிறீராகஉம்முடைய வ்யுத்பத்தை வெளியிட்டிரித்தனே.

---

* ஸாஜ்ஞைகையாலே - என்றுபாடாந்தரம்.

அப்படியன்றிக்கே, ஸாஸ்த்ராநதிக்ரமேண சொல்லுகிறோமென்கை. (ஹேதுமத்யபிஷ்யாமி) தோஷஞ்சொன்ன உம்முடைய ஹ்ருதயமிசையும்படிக்குச் சொல்லுகிறோமென்கை. (ஊசம்ஸ்ருணு) நான் சொன்னதுக்கு விரோதமென்றுதல், ராஜாக்களென்றுதல், நம்பக்கல் ஸஞ்ஜாத்ராலென்றுதல், உபேக்ஷியாதே இத்தைக்கேட்டுத்தாருமென்கை. க௦உ.

தாத்பர்யம். நீர், விபீஷணன் சத்ருவின் தம்பியாகையாலிவனை இங்கே சேர்க்கக்கூடாதென்று சொன்னவிஷயத்தில், பக்ஷபாதத்தை விட்டு சாஸ்த்ரத்தின்படியே இவன் ஸ்வீகார்யனென்னுமதை உம்முடைய நெஞ்சிற்படும்படி சொல்லுகிறேன் கேளும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், கஅ-ம் ஸர்க்கம், கங-ம் ஸ்லோகம்.

அவதாரிகை. கீழ் தர்ஸநத்தாலே சொன்ன விஸேஷம் இன்னதென்கிறார்.

ஸ்லோ.— ந வயம் தத்குலீநாஸ்ச ராஜ்யகாங்க்ஷீ ச ராக்ஷஸ: ।
பண்டிதா ஹி பவிஷ்யந்தி தஸ்மாத் க்ராஹ்யோ விபீஷண: ॥ க௦ங.

அர்த்தம். ராக்ஷஸ:-ராக்ஷஸனான விபீஷணன், ராஜ்யகாங்க்ஷீ ச-ராஜ்யத்திலிச்சையுடையவனுமிருக்கிறான்; வயம்-நாம், ந தத்குலீநாஸ்ச-அவனுடையகுலத்திற்பிறந்தவர்களுமன்று; பண்டிதா: -புத்திமான்கள், பவிஷ்யந்தி ஹி-இருப்பார்களன்றோ, தஸ்மாத்-ஆகையால், விபீஷண: -விபீஷணன், க்ராஹ்ய:-அங்கீகரிக்கத்தக்கவன்.

வ்யா. (ராக்ஷஸ: ராஜ்யகாங்க்ஷீ ச, ந வயம் தத்குலீநாஸ்ச, பண்டிதா ஹி பவிஷ்யந்தி, தஸ்மாத் க்ராஹ்யோ விபீஷண:) நாட்டிலே ஒரு ராஜாவுக்கு வ்யஸநம் வந்தவளவிலே தத்குலீநராயிருப்பார்க்கும் அந்த ராஜ்யஸ்ப்ருஹை யுண்டாகையாலே அவர்கள் தனக்கு ஸஹகாரிகளல்லாமையாலும், தத்குலீநனான வவனுடைய ராஜ்யத்தை யாசைப்படுகையாலும், தத்குலீநரல்லாமையாலே அந்த ராஜ்யத்தில் ஸ்ப்ருஹையுமின்றிக்கே வ்யவஸ்தராயிருப்பாரைப்பற்றி ராஜ்யத்தைப்பெறுகைக்கு யத்நம்பண்ணுநிற்கும். ஆகையாலே, இவனும், ராவணனுக்கு நம்மாலே ஓராபத்து வந்த

வளவிலே ராக்ஷஸகுலஸ்ரீ நசிக்க ந ராக்ஷஸராஜ்ய காங்க்ஷியாகையாலும், காருண்யத்தைப்பற்றி ராவணனை யழியச்செய்யக்கடவதாகப்பெரிய ஸங்கல்பத்தோடே கிட்டினதாக எடுத்துவிட்டிருக்கிற நமக்கு அந்த ஸ்ரீ நகரராஜ்யஸ்ப்ருஹை யில்லாமையாலும், நம்மைப் பற்றித் தன்னுடைய ராஜ்யம் பெறுகையில் தட்டில்லை. ஒரு ராக்ஷஸனுக்கு இந்த புத்தியெல்லாமுண்டாகக்கூடுமோ? உம்முடையபேரளவாலே யருளிச்செய்கிறீரித்தனை யன்றோவென்ன; (பண்டிதா ஹி பவிஷ்யந்தி) ராக்ஷஸனென்கிற ஜாதிமாத்ரங்கொண்டு எல்லாரையுங் கழிக்கவொண்ணாது. இவ்வளவு எண்ணவல்லாருமுண்டு காணுமென்கிறார். (தஸ்மாத்க்ராஹ்யோ விபீஷண:) நம்மைக்கொண்டு தான் ராஜ்யம் பெறவந்தவனை யழியச்செய்கை அப்ராப்தம்; மேல் ஹிதகாரியாகக் கடவனாகையாலும் நமக்கு க்ராஹ்யன். ௧௦௩.

தாத்பர்யம்:...ராவணன் இப்போது நம்மால் ஆபத்தை யடைந்திருக்கையில் இந்த விபீஷணன் அவனுக்கு ஜ்ஞாதியாகையால் அவனுடைய ராஜ்யத்தைவிரும்பி, அக்குலத்திற்பிறவாமல் இக்ஷ்வாகுவம்சஜராய் அந்த ராஜ்யத்தில் விருப்பமு மின்றிக்கே பலவான்களாயவனையெதிர்த்திருக்கிற நம்மைப்பற்றி ராஜ்யத்தைப் பெற வேணுமென்று நம்மிடத்தில்வந்தான்; எல்லாஜாதியிலும் இப்படி விமர்சிக்கும் புத்திமான்களிருக்கலாம்; ஆகையாலிவனை யங்கீகரிப்பதேயுக்தம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௧௪-௧௫-ம் ஶ்லோகங்கள்.

அவதாரிகை. திருவடி இவன் வரவுக்கு ஹேதுவாகப்பிறபடச்சொன்ன வைஸ்வர்யாதிகளும் தமக்கு ப்ரபலபக்ஷமாகையாலே அத்தை முற்பட உபபாதித்து அவனுடைய புத்திவைசக்ஷண்யத்தையே விஶதீகரிக்கிறார் அவ்யக்ரா: என்று தொடங்கி மூன்று அர்த்தத்தாலே.

௧௪.—அவ்யக்ராஶ்ச ப்ரஹ்ருஷ்டாஶ்ச ந பவிஷ்யந்தி ஸங்கதா: |
ப்ரணாதஶ்ச மஹானேஷ ததோऽஸ்ய பயமாகதம் ||௧௪||
இதி பேதம் கமிஷ்யந்தி தஸ்மாத்க்ராஹ்யோ விபீஷண: |

அர்த்தம். ப்ருஶதுஷ்டா꞉ - மிகவும் துஷ்டர்களான, தே - அவர்கள், ஸம்ப்ரமா꞉ - பதறுதவர்களுமாய், ஸம்ஹதாஸ் - சேர்ந்தவர்களுமாய், ந பவிஷ்யந்தி - இரார்கள்; அயம் . இந்த, ப்ரணாத꞉ - த்வநியும், மஹாந் - பெரிதாயிருக்கிறது; தத꞉ - அந்தராவணனிடத்தில் நின்றும், அஸ்ய - இவனுக்கு, பயம் - பீதி, ஆகதம் - உண்டாயிற்று; இதி - ஆகையால், பேதம் - வேறுபாட்டை, கமிஷ்யந்தி - அடைவர்கள்; தஸ்மாத் - ஆகையாலே, விபீஷண꞉ - விபீஷணன், க்ராஹ்ய꞉ - அங்கீகரிக்கயோக்யன்.

வ்ய. (ப்ருஶதுஷ்டாஸ்தே) மிகவும் துஷ்டராகிறார் - நினைவும் சொலவும் செயலும் ஹேஷித்திருக்குமவர்கள். (ஸம்ப்ரமாஸ்ஸம்பவிஷ்யந்தி) பதறுதேபுமிரார்கள். இங்குள்ளார், "வத்யதாம்" என்பாரும், "ஆராயவேணும்" என்பாருமாகாநின்றால், பதறுதிருப்பாரில்லை. இவர்கள் பக்கல் பதற்றங்கண்டிலோம். (ஸம்ஹதாஸ்ஸம்பவிஷ்யந்தி) "ஸுஶ்ரீவம் தாம் ஸஸம்ப்ரேக்ஷ்ய" என்றும் - "நிவேதயத மாம்" என்றுஞ் சொல்லுகிற விடத்தில் எல்லாரு மொருமிடறாயிருந்தார்கள். இவர்கள் தன்னிலே சேர்ந்தார்கள். (ப்ரணாதஶ்ச) இவனுடைய த்வநியும் நம்மோடே ஸம்பந்தந்தோற்றும்படியாயிருந்தது. "ப்ராணாநாம் ஶரணம் ஸர்வபூதாநாம்" இத்யாதி, (மஹாநேஷ꞉) த்வநிகேட்டார்க்கும் இவனபேக்ஷித ஸம்ரணம்பண்ணி யல்லது குடியிருக்க வொண்ணுதபடி ஆர்த்தி தோற்றியன்றோ இருக்கிறது. (அயம்) நான் கேட்டு உபதேஶிக்கிறேனோ ? நாமிருவருங்கூடக்கேட்ட தன்றோ. (ததோஸ்ய பயமாகதம்) "வ்யஸநேஷு ப்ரஹர்ஷா꞉" என்கிறபடியே, அவன் நம்மைக்கொல்லுமென்று ராவணனாலே பயப்பட்டு வந்தான். (இதி பேதம் கமிஷ்யந்தி) இதி꞉-ஹேதௌ. சிலராலே சிலர்க்குபயம் பிறந்தால், அவர்களை அவர்கள் விட்டுப்போவார்கள். (தஸ்மாத்க்ராஹ்யோ விபீஷண꞉), கம௬.

தாத்பர்யம்:—வஞ்சகர்களுக்கு இவ்வளவு பொறுமையும் ஒற்றுமையுமிராது; இவனுக்கு இவையிரண்டு மிருக்கையால் இவன் கபடியாய்வந்தவனல்லன், அன்றிக்கே, இவனுடைய கூக்குரலும் உள்ளடங்கிய ப்ரேமத்தையறிவிக்கிறது. ஒருவரிடத்தில் மற்றொருவர் பயந்தால் அவர்களையவர்கள் விட்டுப்போவர்களாகையால், இவன் ராவணனால் பயந்து அவனை விட்டுவந்தான்; ஆகையால் சேர்த்துக்கொள்ளலாம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௧௫-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. ஸுக்ரீவாதிகளோடு தேவர்பரிமாறப்போந்தவை தேவரருளிச்செய்யக் கேட்டிருந்தோம்; ஜ்யேஷ்டப்ராதா நலியப்புக இவன் அஞ்சிப்போனானாகையாலே, இவன் நமக்கு ப்ராதாவென்று தேவரருளிச்செய்கிறது யுக்தமோவென்ன ; சொல்லுகிறார்.

௨௦. — ந ஸர்வே ப்ராதரஸ்தாத பவந்தி பரதோபமா꞉ ॥ ௧௦௫.
மத்விதா வா பிது꞉ புத்ரா꞉ ஸுஹ்ருதோ வா பவத்விதா꞉ ॥

அர்த்தம். தாத! - அப்பா! ஸர்வே - ஸமஸ்தமான, ப்ராதர꞉ - ஸஹோதரர்கள், பரதோபமா꞉ - பரதனோடு ஸாம்யத்தையுடையவர்களாயும், பிது꞉ - தகப்பனாருக்கு, புத்ரா꞉ - பிள்ளைகள், மத்விதா வா - என்னைப்போல்வாரும், ஸுஹ்ருத꞉ - தோழர்கள், பவத்விதா வா - உம்மைப்போல்வாரும், ந பவந்தி - ஆகிறார்களில்லை.

வ்யா. (தாத ஸர்வே ப்ராதர꞉ பரதோபமா ந பவந்தி) பிள்ளை பரதனுடைய படி ப்ராத்ருத்வ ப்ரயுக்தமல்ல, பரதத்வ ப்ரயுக்தமென்கை. "படியில் குணத்துப் பரதநம்பி" என்னக்கடவதிறே. அதாகிறது-நடுவிலாய்ச்சி ராஜ்யஶுல்கையாகையாலும், தேவாஸுர ஸங்க்ராமத்தில் வரப்ரதாநத்தாலும், ஐயர் தமக்கு ராஜ்யங்கொடுக்க, நாமும் அவர் ஸந்நிதியிலே கொடையை அநுமதித்துக் காட்டிலே போனபின்பு, தாய்வழியே ஒருங்க ப்ராப்தமாயிருக்க அதுசெய்யாதே காட்டிலே தொடர்ந்துவந்து, "உம்முடைய ராஜ்யத்தை நீரே கைக்கொள்ளும்" என்று நிர்ப்பந்திப்பானொரு ப்ராதா உண்டோ? அதுக்குமேலே நமக்கு ப்ரீத்யர்த்தமாகத் தனக்குப்பொருந்தாத ராஜ்யத்தை எறிட்டுக்கொண்டு நான் காட்டிற்பட்ட க்லேஶத்தளவன்றிக்கே படைவீட்டிலே இருந்து படுவானொரு ப்ராதா உண்டோ? இதுவேயன்று லோகவ்யவஹாரத்துக்கு த்ருஷ்டாந்தம்; அன்றிக்கே, உல்லேகமாயிருப்பது இன்னம் சிலவ்யக்திகளுண்டென்று ப்ரஸ்துதவைஶேஷ்யமாக ப்ரதிபாதிக்கிறார். (மத்விதா வா பிது꞉ புத்ரா꞉) பித்ருவான்களில் நம்மோடொப்பாரில்லை. அறுபதினாயிரமாண்டு மலடு நின்று பின்பு, "மஹதா தபஸா" என்று-கனத்த தபஸ்ஸைப்பண்ணி நம்மைப்பெற்று நம்மைக்கொண்டு ப்ராணதாரணம் பண்ணிப்

போந்து நம்முடைய வ்யதிரேகத்திலே ஶோகாபஹ்ருதரான நம்மை யரைப்போலே யிருக்கும் பிதாக்களை யுடையராயிருப்பார் நம்மை யொழிய உண்டோ? நமக்கேயுள்ளதோரேற்றமன்றோவிது. மத்-விதா: புத்ரர்களில் நம்மோடொப்பாரில்லை; ராஜ்யத்துக்குரி யோமாய் நம்மையராலே ப்ரஸாதீக்ருதமாயிருக்கிற யௌவராஜ்யத் துக்கு நடுவிலாய்ச்சியாலே விக்நம்பிறக்க, அதில் விஷாதம்பண்ணாதே பித்ருவசநத்தையே யாதரித்து நெடுநாள் வநவாஸம் பண்ணப் போந்த நம்மைப்போலே யிருப்பாருஞ்சில ராஜபுத்ரருண்டோ வென்றுமாம். "ப்ராதரஸ்தாத:" என்றாற்போலே மஹாராஜர்தெ ளிவுக்குறுப்பான யதார்த்தோக்தியாகையாலே அத்ர ஸம்ஶயமில்லை. (ஸுஹ்ருதோ வா பவத்விதா:) உம்முடைய ஸௌஹார்த்தமும் ஸுஹ்ருத் த்வஸாமாந்ய மாத்ரமன்று. நீர்முன்வரக்கடவதாகப்பண்ணின ஸம யத்தை அதிலங்கிக்க, அதுபொறாதே "ஸ்வாம் தாஸத்யாதிகராஜம் ஹநிஷ்யாமி ஸபாந்தவம்" என்று நான் குபிதனைப்பிள்ளையைக் கொடுவரக்காட்ட, அவனும் அதிகுபிதனைச் சொல்லக்கடவதல் லாத வார்த்தையைச் சொன்னவிடத்திலும், பயத்தையேபார்த்து பீதராய், நம்பக்கல் ப்ரீதிஶயத்தாலே ஶரணம்புகுந்தவனை யும் ஶத்ருவென்று அஸாதுஸ்நேஹஶங்கிகளா யிருப்பார் சிலஸுஹ்ரு த்துக்கள் புறம்பேயுண்டோ? உமக்கேயுள்ளதொன்றன்றோ? ஆன பின்பு, லோகவ்யவஹாரத்தைப்பார்த்தால் ராவணன் இவனை நலிய நினைக்கையும், அவனோடு இவன் விருத்தனாய்ப் போருகையுங்கூடு மென்கை. ௧௦ரு௨.

தாத்பர்யம்:—தன் தாயான கைகேயி தான் பெற்றவரத்தினால் ஸம்பாதித்துத் தனக்குக்கொடுத்த ராஜ்யத்தையும்விட்டுக் காட்டில் பின்தொடர்ந்து ராஜ்யத்தை நீரேகொள்ளுமென்று பலாத்கரித்து, நமக்காக ராஜ்யதுக்கங்களை யநுபவிக்கும் பரதனைப்போல் ஸஹோதரரும், நெடுநாள்பிள்ளையில்லாமலிருந்து தபஸ்ஸுபண்ணி என்னைப்பெற்று நான்வநவாஸம் வருகையில் என்விஶ்லேஷம் பொறாமல் ப்ராணனைவிட்ட தஶரதமஹாராஜரைப்போல் தகப்பனாரும், எனக்கு முறையாய்வந்த ராஜ்யத்தை எனக்கு ஐயர்கொடுக்கிலும் என்னிளையமாதாவுக்காக அந்தஸுகத்தைவிட்டுத் தகப்பனை ஸத்யத்தில் நின்று ரக்ஷித்தவென்னைப்போல பிள்ளைகளும், நீர் முதல்செய்த ப்ரதிஜ்ஞை

யைத் தப்ப அதற்குக்கோபித்து இளையபெருமாளையனுப்ப, அவரும் குபிதராய் சொல்லத்தகாதவைசொல்லியும் அதைமதியாமல் ஸத்யத்தையேபார்த்து வந்த உம்மைப்போல ஸ்நேஹிதரும் இருப்பார்களா? ஆனபின்பு இந்தவிபீஷணன் லோகருடத்வதையைப்பார்த்து ராவணன் தன்னை ஈஷியனென்று அவனைவிட்டு இங்கேவருவது யுக்தந்தான்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், கஅ - ம் ஸர்க்கம், கஎ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. இப்படி ஶரணாகதனான விபீஷணாழ்வான் பக்கல் பெருமாளுக்குண்டான வாத்ஸல்யாதிஶயத்தைக் கண்டு, மஹாராஜரும் ஸாபேக்ஷிதஸித்திக்காக இளைய பெருமாளையும் கூட்டிக்கொண்டு ஶரணம்புக்கு ஒருவார்த்தை சொல்லுகிறார்.

ஶ்லோ. — வனவ ஂ கூ ஸா ராமேணை ஸுக்ரீவ ஸஹ லக்ஷ்மணஃ॥ கபசு.
உத்தாயேதம் மஹாப்ராஜ்ஞஃ ப்ரணதோ வாக்யமப்ரவீத்॥

அர்த்தம். ராமேண - ஸ்ரீராமனால், ஏவம் - இந்தப்ரகாரம், உக்தஃ - சொல்லப்பட்ட, மஹாப்ராஜ்ஞஃ - விஶேஷஜ்ஞாநமுடைய, ஸுக்ரீவஃ - ஸுக்ரீவமஹாராஜரும், ஸஹலக்ஷ்மணஃ-இளையபெருமாளோடு கூடினவராய், உத்தாய - எழுந்திருந்து, ப்ரணதஃ - நமஸ்காரம்பண்ணினவராய், இதம் - இந்த, வாக்யம் - சொல்லை, அப்ரவீத் - சொன்னார்,

வ்யா. (ராமேணைவமுக்தஸ்ஸுக்ரீவஸ்) பெருமாள் தம்மையநுஸரித்துச் சொன்னபடியாலும், தமக்குப்பதகம் முட்டினபடியாலும், அவர்வழியேபோக ப்ராப்தமாயிருக்க, பின்னையுமவரோடு வேறுபட்டு அவரைத்தம்வழியிலே போக்க யத்நம் பண்ணினபடி. (ஸஹலக்ஷ்மணஃ) தம்மிலும் பரிவரென்று, "லக்ஷ்மணஸ்ஸாமந்தஃ" என்று - ப்ரயாணத்திலே கூட்டிக்கொண்டாப்போலே, ப்ரபத்திக்குமவரைக்கூட்டிக்கொள்ளுகிறார். (ப்ரணதஃ) ஶத்ருக்கள்பண்ணும் ப்ரபத்தியேயன்றிறே ப்ரபத்தியாவது; அநுகூலர்பண்ணும் ப்ரபத்திக்கு மிரங்கவேண்டாவோ? என்று அவனுடைய ஒரு ஶரணா

மதிக்கு அவகாசமாக இரண்டு ஶரணாகதியைப்பண்ணுகிறாரென்று கருத்து (மஹாப்ராஜ்ஞ:) தமக்குப்பதம்முட்டின தஶையிலும் ஶரணாகதி ஸாத்யர் பெருமாளென்று அறிகை. (உத்தாய ப்ரணத: இதம் வாக்யமேவம் வித:) பெருமாள் தம்மை அள்ளியெடுத்து, "நீர் சொன்ன கார்யஞ்செய்கிறோம்" என்று சொல்லும்படி திருவடிகளிலேவிழுந்து இந்த வார்த்தையை விண்ணப்பஞ் செய்தார். [illegible]

தாத்பர்யம். ஸ்ரீராமனிப்படி யருளிச்செய்யக்கேட்ட ஸுக்ரீவன் இளையபெருமாளோடுகூட எழுந்திருந்து நமஸ்கரித்துத்திருப்பியும் ஸ்ரீராமனோடு இப்படி விண்ணப்பஞ்செய்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்கம், ௧௮-ம் ஶ்லோகம்.

அவதாரிகை இப்படி ப்ரஸந்நராய் ப்ரஸந்நவாக்யம்கேட்டருளுமவரென்று, "ராவணேந ப்ரணிஹித:" என்று முற்பட விண்ணப்பஞ்செய்ததை தன்னையே விண்ணப்பஞ்செய்கிறுர்

௨௭.— ராவணேந ப்ரணிஹிதம் தமவேஹி நிஶாசரம் ॥ ௧௦௭.
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம் க்ஷமவதாம்வர ॥

அர்த்தம். தம் - அந்த, நிஶாசரம் - ராக்ஷஸனை, ராவணேந - ராவணனாலே, ப்ரணிஹிதம் - கூடச்சாரியாயனுப்பப்பட்டவனாய், அவேஹி - அறியும்; க்ஷமவதாம்வர - பொறுமையுள்ளவர்களுக்குத் தலைவரே! அஹம் - நான், தஸ்ய - அவனுடைய, நிக்ரஹம் - கொலையை, க்ஷமம் - யோக்யமாக, மந்யே - எண்ணுகிறேன்.

வ்யா. ப்ரஸந்நவசநத்துக்கு ப்ரயோஜநம் - அவன் ஶரணமென்றவார்த்தையிலே அவஹ்ருத விக்ஷிப்தராயிருந்த வளவிலேயாயிற்று நாமவைசொல்லிற்று; நாம் ஶரணம்புக்கபின்பு தெளிந்து நல்வார்த்தை கேட்பரென்று முன்பு சொன்னவைதன்னையே திருவுள்ளத்திலே படுத்துகை. (நிஶாசரம்) கள்ளரைப்போலே மத்யராத்ரியிலே புறப்பட்டு ப்ரஹிம்ஸையைப் பண்ணிக்கொண்டு திரியும் ஜந்மமென்று இவன் தண்மை திருவுள்ளத்திற்படாமையிறே இவன்

நமக்கு ஸஹகாரியென்றருளிச்செய்தது; அத்தாலே "நிஶாசரம்"
என்கிறார். ௧௦௭ ௭.

தாத்பர்யம்.—தேவரீர், அவன்பண்ணின சரணாகதியைக்கண்டு மயங்கி நான்சொன்னவற்றைத் திருவுள்ளம்பற்றவில்லை; இப்போது நாங்களிருவருமாக சரணாகதிபண்ணி விண்ணப்பஞ்செய்கிறோம், கேட்டருளவேணும். இவன் ராவணனாலனுப்பப்பட்ட தூதன்தான்; இவன் பிறப்பிலேயே பிறரை ஹிம்ஸித்துத்திரியும் ஸ்வபாவமுடையவன்; வருமபோதும், ராத்ரியில் மறைந்துவந்தான்; இதையெல்லாம் ஆராய்ந்து இவனைக்கொல்வதேயோக்யம்; உம்முடைய க்ஷமாகுணத்துக்கு இவன் விஷயமன்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௧௧-ம் ஶ்லோகம்.

௨௯.—ராக்ஷஸோ ஜிஹ்மயா பு³த்³த்⁴யா ஸந்தி³ஷ்டோ(அ)யமிஹாக³த: ||
ப்ரஹர்தும் த்வயி விஶ்வஸ்தே ப்ரச்ச²ந்நோ மயி வா(அ)நக⁴ |
லக்ஷ்மணே வா மஹாபா³ஹோ ஸ வத்⁴ய: ஸசிவை: ஸஹ ||௧௦௯.

அர்த்தம். அநக⁴! - தோஷமில்லாதவரே! அயம் - இந்த, ராக்ஷஸ: - அரக்கன், ஜிஹ்மயா - குடிலமான, பு³த்³த்⁴யா - புத்தியாலே, ஸந்தி³ஷ்ட: - ஏவப்பட்டவனாய், த்வயி - நீர், விஶ்வஸ்தே - நம்பிக்கையுடையீராகையில், ப்ரச்ச²ந்ந: - மறைந்தவனாய், மயி - என்விஷயத்திலும், லக்ஷ்மணே வா - இளையபெருமாள் விஷயத்திலும், ப்ரஹர்தும் - அடிக்கைக்கு, இஹ - இங்கே, ஆக³த: - வந்தான். மஹாபா³ஹோ! - பெருத்தபுஜங்களையுடையவரே! ஸ: - அவன், ஸசிவை: ஸஹ - மந்த்ரிகளோடுகூட, வத்⁴ய: - கொல்லத்தகுந்தவன்.

வ்யா. (அயம் ராக்ஷஸ: ஜிஹ்மயா பு³த்³த்⁴யா ஸந்தி³ஷ்ட: ப்ரச்ச²ந்ந: இஹ ஆக³த:) நீசஜாதியானவிவன் ஸஜாதிக்குக் கார்யஞ்செய்யுமத்தனை போக்யராயிருக்கிற நமக்குக்கார்யஞ்செய்யான்காணும். (ப்ரஹர்தும் த்வயி விஶ்வஸ்தே) தேவர் விஶ்வஸித்தவாறே ஸஹகாரியன்றிக்கே யொழியுமளவன்றிக்கே உம்மை நலிவதுஞ் செய்யும். "தோ³ஷாயஸ்யாந்தி³ஷ்டமாக" என்று - அதுக்கு இசைந்தோமிறே யென்றவருக்கு பரிஹரிக்கைக்காக, (மயிவா) என்கிறார். "த்வயி கிஞ்சித்ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம" என்றும் -

“ஸுஹ்ருதோவாஹவதியா:” என்றும்-நீர்நினைத்திருக்கிறஎன்பக்கலி லும்நலியுங்காணுமிவன். (ஓக்ஷணேவா; “ஸுஹஸூநிஜீவாவ:” என்று- அருளினீராகில் உளராயிருக்குமவரையும் நலியும். ஶரணாகத ரக்ஷணமென்று ஒருவ்ரதத்தால் ஒரு ராக்ஷஸனுக்காக எங்களிருவ வரையும் நீர் இழக்கக்கடவீர் புகுகிறது. (கநவ) இந்தப்பொல்லாங்கு கள் உமக்கு வாராதொழிந்திடுகவென்று கருத்து. (ஶோவாஹோ) உம்முடைய தோளை அண்டை கொண்டிருக்கிற வெங்களை ஶத்ரு வின்கையிலே காட்டிக்கொடுக்கலாமோ? எங்கள் பக்கலிலே தண்ண ளியும் அவன் பக்கலிலே தோள்வலியுமாகையன்றோ யுக்தம். (ஸ: ஸவிவெஷஹவயு:) ஆகையாலே ஸவதிகாரனுக அவன்வத்யன்.

தாத்பர்யம்.—இந்த விபீஷணன், ராவணனுலனுப்பப்பட்டவனு கையால் தன் கபட வ்ருத்தியால் அனுகூலன்போலிருந்து தன்னிட த்தில் நம்பிக்கையைப்பிறப்பித்து, நாம் சேர்த்துக்கொள்ளுகையில் நம் மை உபத்ரவிக்கைக்காக இங்கே வந்தான். இவன் தோஷியாகிலு மி வனையங்கீகரிக்கத் திருவுள்ளமானல் ஸீதாதேவியையும் விட்டுப் பற்றும்படி ஸுஹ்ருத்துக்களில் ஶ்ரேஷ்டனுக தேவரீர் நினைத்தி ருக்குமென்னையும் தேவரீரை விட்டு க்ஷணகாலமும் தரிக்கமாட் டாத இளைய பெருமாளையும் இவன் உபத்ரவிப்பன். அப்போது ஒரு ராக்ஷஸனுக்காக ஆஶ்ரிதரான எங்களிருவரையு மிழக்க வே ண்டிவரும். ஆகையாலித் தீங்குகளொன்றும் வாராதபடி ஆலோ சித்துச் செய்தருளவேணும். உம்முடைய தோளின் கீழொதுங்கி நின்ற எங்களை அத்தோள் வலியால் சத்ருக்களை நிரஸநம் பண்ணி ரக்ஷிப்பதே தர்மமாகையால் இவனையுமிவன் பரிஜநங்களையும் கொ ல்வதேயுக்தம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், கஅ - ம் ஸர்கம், உ௦ - ம் ஶ்லோகம்.

உ௦.— வனவீக்ஷா ரவமேஶ்ரேஷ்டம் ஸுக்ரீவோ வாஹிநீபதி: ।
வாக்யஜ்ஞோ வாக்யகுஶலம் ததோமௌந முபாகமத் ॥ கக௦.

அர்த்தம். வாஹிநீபதி: - ஸேநாபதியாயும், வாக்யஜ்ஞ:-வசநங் களையறிந்திருக்கிற, ஸுக்ரீவ: - ஸுக்ரீவமஹாராஜர், வாக்யகுஶ லம் - வாக்யத்தில் ஸமர்த்தரான, ரவமேஶ்ரேஷ்டம் - ரகுக்களில் உத்தமரான ஶ்ரீராமனைக்குறித்து, வனவீ - இப்படி, உக்த்வா - சொல்லி, தத: - அதுக்குப்பிற்பாடு, மௌநம் - பேசாதிருப்பதை, உபாகமத் - அடைந்தார்.

வ்யா. (ராமேண ஶ்ரேஷ்டம்) ஶரணாகதனுக்காகத்தன்னை யழிய மாறின ராமனுடைய காருத்தார்க்கு ஸமமென்னும்படி ஶர ணாகதஸம்ரக்ஷணத்தில் வ்யவஸாயமுள்ளவரை. (ஸுக்ரீவோ வாஹி நீபதிஃ) தாம்போனவழியை யநுவியா நம்பண்ணும் வஸிகரத்தை யுடையவர். (வாக்யஜ்ஞஃ) ஸர்வவசநவ்யக்திகளுடைய குணதோஷங் களை யறியுமவர். (வாக்யகுஶலம்) எதிரிகளுடைய அபிப்ராயமனு ரூபமாக வார்த்தை சொல்லவல்லவரை. (அவஸ்தாதோ ஔத ஸேவாமஹே) தஞ்சீர்மையறியாதவரை நாம் சொல்லுவதண்டோ வென்று ப்ரணயரோஷத்தாலே பேசாதிருந்தார். ௧௧0.

தாத்பர்யம்.— ஸேநாபதியான ஸுக்ரீவன் ஆர்த்த ரக்ஷகர் களில் தலைவராய்ப்பிறரபிப்ராயத்தையறிந்து சொல்லவல்ல ஸ்ரீராம னைக் குறித்து இப்படி சொல்லிப் பின்பு நம்சொல்லைக் கேட்டில ரென்ற கலக்கத்தால் பேசாதிருந்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௨௬-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. தஶரதாத்மஜரான பெருமாள் மஹா ராஜருடைய அதிப்ராய ஹேதுவைத் தன் திருவுள்ளத்திலே நிரூபித்து தஶரதமவமாக வார்த்தை யருளிச் செய்கிறா ரென்கிறது.

மூ.— ஸுக்ரீவஸ்ய து தத்வாக்யம் ராமஃ ஶ்ருத்வா விம்ருஶ்ய ச |
ததஃ ஶுபதரம் வாக்யமுவாச ஹரிபுங்கவம் || ௧௧௧.

அர்த்தம். ராமஃ - ஸ்ரீராமன், ஸுக்ரீவஸ்ய - ஸுக்ரீவனுடைய, தத் - அந்த, வாக்யம் - சொல்லை, ஶ்ருத்வா - கேட்டு, விம்ருஶ்ய ச - ஆராய்ந்து, ததஃ - அதுக்குப்பிற்பாடு, ஹரிபுங்கவம் - வாநரஶ்ரேஷ் டனை ஸுக்ரீவனைக்குறித்து, ஶுபதரம் - ஶ்ரேஷ்டதரமான, வாக்யம் - வார்த்தையை, உவாச - சொன்னார்.

வ்யா. (ஸுக்ரீவஸ்ய தத்வாக்யம் ஶ்ருத்வா) வேறாயிராய் ஹ்ருத யமறியாதேசொன்ன வார்த்தையைக்கேட்டு. (ராமஃ) இவர் உப பத்தி ஸாமர்த்யரென்றென்றறிந்தவிஶேஷம். (விம்ருஶ்ய) வேறாயிரா யிருக்குமவர்க்கு பரிஹாரமேதென்று விசாரிப்பதுஞ் செய்து. (ததஃ) இனி இவர்க்கு நம்மைக்குறித்து வார்த்தையில்லை யென்று. நிஶ்சயித்தபின்பு வார்த்தைசொன்னார். (ஶுபதரம்வாக்யமுவாச)

வைராக்யஞ்செல்லா நிற்கச்செய்தே ஸ்வாமிக்கு எதிரிடுங்கலக்க மெல்லாந்தீர்ந்து தத்ஸ்வரூபம பண்ணிவைக்கும் வைசித்ர்யாலே. (ஹரிவம்ஸவத்) ராஜாக்களாயிருக்கச்செய்தே நீதிஸாமர்த்யராயிருக்கையன்றிக்கே யிருக்கிற வைராக்யத்தை யநுஸந்தித்து ஜ்ஞஷி கொண்டாடுகிறான். ககக.

தாத்பர்யம்.—இப்படி ஸுக்ரீவன் பெருமாளிடத்தில் தனக்குண்டானப்ரேமத்தால் விண்ணப்பஞ்செய்ய, ஸ்ரீராமன் கேட்டு இதற்குத் தகுந்த உத்தரமின்னதென்று ஆலோசித்து, தஞ்சொற்கேட்டிலரென்று கோபத்தால் பேசாதிருந்தஸுக்ரீவனைக் குறித்துச் சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், கஅ - ம் ஸர்க்கம். உஉ - ம் ஶ்லோகம்.

அவதாரிகை. மூன்றாமுன்னம் அதிக்ஷுத்ரனை ராக்ஷஸன் நம்பக்கலவகாரத்தை நினைக்கவும் ஶக்தனல்லனென்கிறார்.

ஶ்லோ.— ஸுதுஷ்டோ வா ப்ரதுஷ்டோ வா கிமேஷ ரஜநீசர: |
ஸூக்ஷ்மமப்யஹிதம் கர்த்தும் மமாஶக்த: கதஞ்சந || ககஉ.

அர்த்தம். ஏஷ:-இந்த, ரஜநீசர:-ராக்ஷஸனான விபீஷணன், ஸுதுஷ்டோவா - மிகவும் தோஷியானாலும், அதுஷ்டோவா - தோஷஹீநனானாலும், கிம் - என்ன; கதஞ்சந - ஒருபடியாலும், மம - எனக்கு, ஸூக்ஷ்மமபி-கொஞ்சமும், அஹிதம் - அநிஷ்டத்தை, கர்த்தும் - செய்ய, அஶக்த: - சக்தியில்லாதவனாயிருக்கிறான்.

வ்யா. (ஸுதுஷ்டோவா ப்ரதுஷ்டோவா) இவன் நீர்சொன்னபடியே துஷ்டனாகவுமாம்; நான்சொன்னபடியே அதுஷ்டனாகவுமாம்; இவையிரண்டுமவப்ரயோஜகம். எங்ஙனேயென்னில்; ஶரணாகதனானவன்பக்கலிலே பஹுவ்யகாரங்களாக தோஷங்களைச்சொன்னீரேயாகிலும், துஷ்டனென்று என்னெஞ்சிற்படமாட்டாது; உமக்கு மறுமாற்றமில்லாதபடி ஹேதுக்களாலேஇவனுடைய தௌஷ்ட்யத்தை ஸாதித்தாலும், அவ்யாஜ்ஜஹ்ருதயனான உம்முடைய நெஞ்சிற்படமாட்டாது (கிமேஷ ரஜநீசர:) நீர்நினைத்தபடியே பாபகனுய்வந்தவனாயிடுக ; ஆனாலுமிவன் றன்னைக்கண்டிலிரோ? (வா)

ஹிதபராத்ருஜனவிவன், நமக்கென்ன அபகாரம்பண்ணுவான்; இவ னுக்கஞ்சின நீரெங்ஙனே ராவணவயம் பண்ணக் கடவதாக எடுத்து விட்டிருக்கிறபடி. ஶத்ருவாயிருப்பாரை தௌர்ப்பல்யமென்று பரீக்ஷிக்க லாமோவென்ன; (ஜைஸஞ்க்ஷ ஜெவ்ருஹிதஜாந்த்ரஶக:) "பாஹூ ஸாயகஸம்ஜ்ஞௌ ஜேவஷ்டுஞ்ஜாயஸ்யேோர்கோஜேஹாத்ஜநः" என்று-கண்டார் கவிபா டுகிறதோளை இவன்கண்டால் நெஞ்சாலுமோ ரஹிதத்தை இவன் பண்ணஶக்தனல்லன். (கயம்வந) நீரநுகூலனென்று விஶ்வஸித்தால் நலியலாமேயென்ன; புலிகிடந்த தூறைக்கண்டஞ்சுவாரைப்போலே நந்தோள் வலியைக்கண்டு அவனெப்போதும் மாட்டான். ககஉ.

தாத்பர்யம்—இந்த விபீஷணன் நீர் சொன்னபடி துஷ்டனு கிலும் சரி; நான் சொன்னபடி துஷ்டனுகாவிடிலும் சரி. எப்படியா னுலும் நாம் பயப்படவேண்டியதில்லை. நமக்கெவ்விதத்திலும் அல் பம் கெடுதி செய்யவாகிலும் முடியாது என்றறியும்,

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், கஅ-ம் ஸர்க்கம், உங-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. இப்படியருளிச்செய்யச்செய்தேயும், எதிர்த் தலையில் ஜாதிப்ரயுக்தமான க்ரௌர்யமே மேற்கிடந்து நெஞ்சுதெ ளியாமையாலே, இவர் தெளிகைக்காக இவனளவேயல்ல, லோகத் திலே க்ரூரஜாதியென்று பேர்பெற்றவற்றையடங்க அநாயாஸேந அழிக்கவல்ல தம்வீர்யத்தை யாவிஷ்கரிக்கிறார்.

உங.—பிஶாசாந்தாநவாந்யக்ஷாந்ப்ருதிவ்யாஞ்சைவராக்ஷஸாந்

அங்குல்யக்ரேணதாந்ஹந்யாமிச்சந்ஹரிகணேஶ்வர ॥ ககங.

அர்த்தம். ஹரிகணேஶ்வர! - வாநரஸமூஹத்துக்கு ராஜாவான ஸுக்ரீவனே! பிஶாசாந் - பிசாசங்களையும், தாநவாந் - தனு புத்ரர்களான அஸுரர்களையும், யக்ஷாந் - யக்ஷர்களையும், ப்ருதிவ்யாம் சைவ - பூமியிலிருக்கிற, ராக்ஷஸாந் - அரக்கர்களையும், தாந் - அவர்களெல்லாரையும், இச்சந் - இச்சையுடையவனாய்க்கொண்டு, அங்குல்யக்ரேண - விரல்நுனியால், ஹந்யாம் - கொல்லக்கடவேன்.

வ்யா. (பிஶாசாந் தாநவாந் யக்ஷாந்) கள்ளர், பள்ளிகள், வலையர், கொலையரென்னுமாப்போலே ஹிம்ஸகஜாதியினுடைய ஸ்வாபாவிகமிருக்கிறபடி. இந்த ஶப்தமுடைய ஸம்ஸ்ப்ருஷ்டமுண்டான ஸஹஜஶாத்ரவத்தைப்பொகட்டு நம்மைநலிகைக்காக ஸந்நத்தராய்வருகை. (ப்ருதிவ்யாஞ்சைவ ராக்ஷஸாந்) ப்ருத்வியிலுள்ள ராக்ஷஸரளவன்றிக்கே பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணையான ப்ருத்வியிலுள்ள ராக்ஷஸஜாதியடங்கக் கீழ்ச்சொன்னவர்களோடே ஸந்நத்தராய் வருகை. (அங்குல்யக்ரேண தாந் ஹந்யாம்) இவர்களுடைய அழியச் செய்யுமிடத்தில்நம்பலமெல்லாம்வேண்டா, ஸஹாயமும்வேண்டாம், விரலின்நுனியிலேநகத்தாலே நலியவல்லோம். ஒரு வ்யாபாரத்தாலே கொல்லப்பாற்றம்போராத க்ருமிகீடாதிகளை விரல்தலையாலே தேய்க்குமாப்போலே தேய்த்துப்பொகடுகிறோமென்கை. ஆனால் நம்முடையவ்ருத்திவக்ஷங்குறியழியாதேயிருப்பானென்னென்னில்; (இச்சந்) அருமையாலன்று; செய்யநினையாமையாலே யென்கிறார். நம்முயிர்க்கு ஸமமான நிலையிலே நலிந்த ராவணனை நலிகைக்கு இசைவின்றிக்கேயிருப்பானென்னென்னில்; விபீஷணனைப்போலே உயிரோடே தலைசாய்க்குமாகில் வ்யூஹமேகொல்லுகிறதென்னென்னும் நினைவாலேயென்றுகருத்து. (இச்சந்) ஸுக்ரீவந்தானும் வேண்டா; நம்முடைய ஸங்கல்பமே ஹேதுவாக அழிக்கவல்லோமென்றிவருடைய பய நிவ்ருத்திக்காகத்தம்முடைய ஸர்வஶக்தத்வத்தை யாவிஷ்கரிக்கிறாரென்றுமாம். (ஹரிகணேஶ்வர) நாம் மாட்டாதொழிந்தால் ஸபரிகரரான நீரருளீரென்று கருத்து. வ்யக்ரராய் நம்மையறியாதொழிந்தாலும்மையுமறியாதொழியவேணுமோ? ௧௧௩.

தாத்பர்யம்.—ஸுக்ரீவனே! ஒரு விபீஷணனைக் குறித்து நீரேனிப்படி பயப்படுகிறீர்; இந்த பஞ்சாசத் கோடியோஜநம் பரப்புள்ள பூமியிலிருக்கும் ராக்ஷஸர்களெல்லாம் சேர்ந்து வந்தாலும், இன்னமும் அப்படி க்ரூரர்களான பிசாசங்களும் அஸுரர்களும் யக்ஷர்களும் கூடி இவர்களுக்கு ஸஹாயமாய் வந்தாலும் இவர்களைக் கொஞ்சமும் மதிக்கமாட்டேன். இவர்களைக் கொல்ல நினைத்தால் ஆயுதமும் வேண்டா. நுனிவிரலினால் புழுக்களைப் போல் தேய்த்து விடுவேன்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௨௮-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. தம்முடைய பக்ஷத்தைக்காட்டக்கண்ட மஹாராஜர் நெஞ்சு நெகிழ்ந்தவளவிலே, நாமும் பக்ஷஹீநராய் அவனும் நமக்கு அபகாரனானாலும் விடவொண்ணாமைக்கடியான ஸத்துக்களநுஷ்டித்த இதிஹாஸத்தைக் கேளீரென்று கபோதோபாக்யாநத்தை யருளிச்செய்கிறார்.

௨௮.— ஶ்ரூயதே ஹி கபோதேந ஶத்ரு: ஶரணமாகத: |
அர்சிதஶ்ச யதாந்யாயம் ஸ்வைஶ்ச மாம்ஸைர்நிமந்த்ரித: ॥ ௨௮.

அர்த்தம். ஶரணம் - இருப்பிடத்தைக்குறித்து, ஆகத: - வந்திருக்கிற, ஶத்ரு: - வைரியான வேடன், கபோதேந - புறாவினால், யதாந்யாயம் - சாஸ்த்ரத்தை யதிக்ரமியாமல், அர்சித: - பூஜிக்கப்பட்டவனாய், ஸ்வை: - தன்னதான, மாம்ஸைஶ்ச - மாம்ஸங்களினாலும், நிமந்த்ரிதஶ்ச - ஆஹாரமும் கொடுக்கப்பட்டான். (என்று,) ஶ்ரூயதே - கேட்கப்படுகிறதன்றோ.

வ்யா. (ஶ்ரூயதே) "ஸ்மர்யதே" என்னாதே, "ஶ்ரூயதே" என்கிறது - வேதம்போலே கேட்டுப்போருவதொன்று. ஸந்தாநநிர்தேஶம், "ஸம்ப்ரதாயபரிஶுத்தஸ்யைதிஹ்யாவயவஸ்ய" என்னும்படியே ஸம்ப்ரதாயவிச்சேதமின்றிக்கே போருகை. அங்ஙனன்றிக்கே, கேட்டே போமித்தனைபோக்கி அநுஷ்டிக்க அரிதென்கிறதென்றுமாம். (ஹி) இக்ஷ்வாகுராஜ்யத்தைப்போலே வாநரராஜ்யத்தில் இது ப்ரஸித்தமன்றோ?. (கபோதேந) ஶாஸ்த்ராதிகாரிகளாய் விவக்ஷிதரான நாம் விசாரியாநின்றோம்; ஒரு திர்யக் அநுஷ்டித்து நின்றதென்று கருத்து. வநசரவசநத்தாலே நம்மைப்போலே விலக்குகைக்கு வ்யக்தியில்லாமையாலும், தந்நிஷ்டநாஜந்மதையான பேடை ஸந்நிஹிதையாய் அதிலே மூட்டுகையாலுமிறே ஶரணாகதஸம்ரக்ஷணம் பண்ணலாயிற்றென்று கருத்து. (ஶத்ரு:) ஶத்ருஸம்பந்தத்தாலே நாம் விசாரியாநின்றோம்; ஸாக்ஷாச்சத்ருவிறே அவன். (ஶரணமாகத:) பந்துக்களையடையவிட்டு ஸநிகர்ஷவர்க்கமாகப்புகுந்த இவனை விசாரியாநின்றோம்; தானிருக்கிற நிழலிலே வந்ததுவே ஹேதுவாக ரக்ஷித்தது. (அர்சிதஶ்ச) நாம் இவனை ஸ்வீகரிக்கையிலே ஸந்தேஹியாநின்றோம்; அதுவும் அஜ்ஞரைப்போலே பூஜாயித்தது. அதாகிறது - ஶீதவாரிஹாராதிகளைப் பண்ணுகை. (யதா

ந்ராயம்) ஶத்ரு வையாஸாயித்ததுந்தனக்கோரேற்றமாக நினைத்தி ருக்கையன்றிக்கே ப்ராதுமென்றிருக்கை. ஸ்ரீதவர்ஸிஹாஸாஜிகள் ஜாதும் பண்ணுகையன்றிக்கே, (வெளஶ்ரூஜாம்வெளஸ:) பக்ஷிகளுக்கு ஜேஹாத்விஹாமஜாநமில்லாமையாலே, தாஞன ஜாம்ஸங்களாலே. ஸஶஜம் ஸாஜீவத்திலும்பதிக்கும்; ஸத்திலும் பதிக்கும். ப்ரக்ருத்யா த்விவேகம்பண்ணியிருக்கிறநாமிறே ஸஜேஹிக்கிறோம். (நிஜஷிர்தஸூ) தன்னையழியமாறி விருந்திட்டது. ககச.

தாத்பர்யம்.—பக்ஷிகளைக்கொன்று ஜீவிக்கிற ஸஹஜசத்ருவான ஒரு வேடன் ஒருகால் மழையிலகப்பட்டுக் குளிரினால் கைகால் வெறித்து ஆஹாரத்தைத் தேடவுமசக்தனாய், இருளினால் வழிதப்பி யோர் மரத்தடியில் வந்துசேர, அம்மரத்திலிருந்த புறா, தான் வஸிக்குமிடத்தில் வந்து பாதைபடுகிற தன்சத்ருவான வேடனைக் கண்டு இவன் பாதையைப் போக்க நினைத்துத் தன் மூக்கினாலுலர்ந்த கொம்புகளைப் பொறுக்கிச் சேர்த்து நெருப்பை மூட்டி அவனுக்கு சீதத்தைப் போக்கிப் பின்பு தானுமத்தீயில் விழுந்து தன்மாம்ஸங்களினால் அவனை த்ருப்தி பண்ணி வைத்தது. இந்த இதிஹாஸத்தை யோரண்வழியாய் நீரும் கேட்டிருப்பீர் ஜ்ஞாநசூந்யமான பக்ஷி, தனக்கு வைரியாயினும் சரணமடைந்த வேடனைத் தன் ப்ராணன்களைக் கூடவிட்டு ரக்ஷித்திருக்க, வைரியின் தம்பி சரணமென்று வந்தால் இக்ஷ்வாகு குலத்திற்பிறந்து எந்த விரோதம் வரினும் போக்க ஸமர்த்தனாயிருக்கிற நான் எப்படி விட்டுவிடலாம்; நன்றாய் யோசியும். பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், கஅ - ம் ஸர்க்கம், உரு - ம் ஶ்லோகம்.

ஜ.—ஸ ஹி தம் ப்ரதிஜக்ராஹ ஹார்யாஹர்தாரமாகதம் |
கபோதோ வாநரஶ்ரேஷ்ட கிம் புநர்மத்விதோ ஜந: || கசரு.

அர்த்தம். வாநரஶ்ரேஷ்ட - வாநரோத்தமனே! ஸ: .. அந்த, கபோத: - புறா, பார்யாஹர்தாரம் - பெண்டாட்டியைப்பிடித்தவனாய், ஆகதம் - வந்திருக்கிற, தம் - அந்த வேடனை, ப்ரதிஜக்ராஹ - அங்கீகரித்தது. மத்விதஃ-என்போல்பவரான, ஜந:-ஜநங்கள், கிம்புந: - என்ன செய்யவேணும்.

வ்யா. (ஸ:) பார்யாவிரஹத்தாலே தளர்ந்துள்ள. (தம்) ஜாதிப்ரயுக்தமான ஶத்ருவத்தையுடையவனாயுள்ளவனை. (பார்யாஹர்தாரம்) தமக்கு ஆபத்துக்கு உதவக்கடவளாய் ஸஹதர்மசாரிணியாய்த்தன்னைப்பிரிய மாட்டாத பார்யையை உடலையும் உயிரையும் பிரித்தாற்போலே பிரித்தவனை. (ஆகதம் ஹி) தானிருந்த

இடத்திலே வந்ததுவே ஹேதுவாக. (கபோத: ப்ரதிஜக்ராஹ) ரக்ஷணத்திலே அயோக்யமான ஜந்மத்திலேபிறந்த கபோதமானது, த்ராணஹேதுக்களநேகமுண்டாயிருக்க ஸ்வரக்ஷணத்தையும் பண்ணக்கடவதாக அபிமானித்தது. இந்த ஸ்திதாவஸரத்தால், ராவணன்தானேவரிலும் நமக்கு அபிமானிக்க வேண்டிக்காணுமிருப்பது. (வாநரஶ்ரேஷ்ட) வ்யாபாரஸம்வாதத்தாலும், நான் உங்கள் ஶரணாகதஸம்ரக்ஷணத்தில் தப்பினாலும் உமக்குத்திருத்த வேண்டிக்காணுமிருக்கிறது. (கிம்புந: மத்விதோஜந:) திர்யக்கினுடைய வசநமிதுவானால், ராவணவம்ஶத்திலேபிறந்த நமக்கு எத்தனை செய்யவேணும். "தோஷோயத்யபி தஸ்ய ஸ்யாத்" என்று - நான் சொன்ன ஏற்றமும்; திர்யக்குக்கொண்டு போயிற்றித்தனையிறே. அது செய்தாலும் அது செய்ததைச் செய்தோமித்தனையிறே, இவ்வளவிலே அருளாளப்பெருமாளெம்பெருமானார், அதிசேத்திற்சொன்னவாறெதென்னை ஸ்மரிப்பது. ககரு.

தாத்பர்யம்.—உடலில் நின்று மூயிரைப் பிரித்தாற் போல் அந்தப் புறாவின் பேடையை வலையினால் பிடித்துக் கொண்டவன் தானிருந்த விடத்துக்கு வந்த மாத்ரத்தினால் ரக்ஷித்திருக்க, நானென் செய்ய வேணுமோ சொல்லும். வேடனைக் காட்டிலும் விபீஷணனுக்குண்டான தோஷம் கொஞ்சம்; குணங்கள் மிகவு மதிகம். புறாவைக் காட்டிலும் எனக்கு ஜ்ஞாநமும் சக்தியும் அதிகம்; செய்ய வேண்டும் கார்யம் அத்யல்பம். புறாவைப் போல் நான் ப்ராணனை விடவேண்டுவதில்லை. நான் ரக்ஷிபாவிடினும் ஹிதமறிந்த வாநரர்களில் தலைவரான உமக்கு இப்படி சொல்வது தகுமா.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்

யுத்தகாண்டம், கஅ - ம் ஸர்க்கம், உசு - ம், ஶ்லோகம்.

அவதாரிகை. ஆக, கபோதத்தினுடைய வசநாநுஷ்டாநத்தாலும், ஶரணாகதஸம்ரக்ஷணம் கர்தவ்யம்; அதுக்குமேலே ஸ்ருததரானகண்டு வாக்யத்தாலும் ஶரணாகத ஸம்ரக்ஷணம் பண்ணக்கடவேன், அத்தைக்கேளுமென்கிறார்.

உசு.— ருஷே: கண்வஸ்ய புத்ரேண கண்டுநா பரமர்ஷிணா।
ஶ்ருணு காதாம் புரா கீதாம் தர்மிஷ்டாம் ஸத்யவாதிநா ||

அர்த்தம். கண்வஸ்ய - கண்வரென்கிற, ருஷே:-ருஷியினுடைய, புத்ரேண - பிள்ளையாகிய, ஸத்யவாதிநா-யதார்த்தத்தைச்சொல்லாநின்ற, கண்டுநா - கண்டு என்கிற, பரமர்ஷிணா - மஹாமுநிவரால், புரா - முன்னே, கீதாம் - சொல்லப்பட்ட, தர்மிஷ்டாம் - தர்மத்தில் நின்றும் தவறாமலிருக்கிற, காதாம் - ஶ்லோகத்தை, ஶ்ருணு - கேளும்.

வ்யா. ஜ்ஞாநஹீநமான திர்யக்கையும் ஜ்ஞாநஸ்ரேஷ்டரான ருஷி யையும் ஸரணாமதாரக்ஷணத்துக்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லுகை யாலே, ஸரணாகதரக்ஷணம் வைதிகவ்யாவ்ருத்தம்; ஜ்ஞாநஸங்கோ சவிகாஸஹேதுவான ஜந்மத்தில் தாழ்வேற்றங்கள் அப்ரயோஜகங் கள் என்றதாயிற்று. (ஜ்யேஷ்டஃஸ்வஸ்ய) ஸகலவேதாந்த தாத்பர்ய மான தத்வஹிதங்களை ஸாக்ஷாத்கரித்த ஸ்வஸமவானுடைய. (ஸ்ருத்வோத்தமஸ்ய நா) "ஸமோஹாவாவ்யாஸ: பாராஸர்ய:" என்று - பராஸரபுத்ரரென்று வ்யாஸருக்காக்ஷி சொன்னாற் போலே, கண்வபுத்ரரென்று கண்வவசநத்துக்காக்ஷி சொல்லுகி றார். (பரமர்ஷிணா) கண்வருக்குத் தபோபலத்தால் வந்த ஸாக்ஷாத்காரம், இவனுக்கு அவன்வயிற்றிற்பிறந்தாற்போலே ஸர்வ ஸாக்ஷாத்காரமும் பிறந்த ஏற்றஞ்சொல்லுகிறது. (ஸ்ருணு) முன் பேகேட்டுப்போராநிற்க "ஸ்ருணு" என்று - சொல்லுவானென் னென்னில்; தம்முடைய மிடுக்கைக் காட்டின விடத்திற்பிறந்த தெளிவையொழிய விபீஷண விஷயீகாரத்துக்காக இவர் சொல்லு கிற வசநங்கள் நெஞ்சிற் படாமையாலே, ஆனைக்குப்பாடுவாரை ப்போலேயிருக்க, "கேளீர்" என்கிறார், (புராகீதாம்) இப்போது உம்முடைய நெஞ்சில் தெளிவுக்காகச் சொல்லப்பட்டதல்ல; விப க்ஷணர்க்கு அநுஷ்டிக்கப்படுமதொன்றென்று முன்பேசொல்லப்பட்ட தொன்று. "உக்தாம்" என்னாதே "கீதாம்" என்றது - ஸமவசந்தி போலே அதிமௌரவத்தாலே சொல்லுகிறார். (தர்மிஷ்டாம்ஸமயாம்) தர்மங்களில் * வெளிறுகழிந்த தர்மம் ஸரணாமதாரக்ஷணமென்று சொல்லுகையாலே "தர்மிஷ்டாம்" என்கிறது. (ஸத்யவாதிநா) விப்ர லம்பகவாக்யமன்று, யதார்த்தவாதியாலே சொல்லப்பட்ட தென்கை. ஹிதஹிதவாதிநா என்றுமாம்.　　ககசு.

தாத்பர்யம்—இவ்விஷயத்தில் ஜ்ஞாநமில்லாத பக்ஷியின் நடத் தையேயல்லாமல் ஸம்பூர்ண ஜ்ஞாநத்தையுடைய கண்வபுத்ரரான கண்டு மஹாமுநிவரால் சொல்லப்பட்ட காதையுமுண்டு; அதையும் கேளும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

---

*வெளிறு - அஸாரம்,

யுத்தகாண்டம், கஅ - ம் ஸர்க்கம், உஎ - ம் ச்லோகம்.

அபகாரிகே. ஶரணம் புகுகிறவன் ஶத்ருவே யாகிலும், அவனுக்கு ஆர்த்தியான ஶரணாகதியில்லையே யாகிலும், ஹிம்ஸிக்க லாகாதென்கிறது பத்தாஞ்ஜலி இதி ச்லோகத்தாலே.

௨௦.— பத்தாஞ்ஜலிபுடம் தீநம் யாசந்தம் ஶரணாகதம் |
ந ஹந்யாதாந்ருஶம்ஸ்யார்த்தமபி ஶத்ரும் பரந்தப || கஎ.

அர்த்தம். பரந்தப - சத்ருக்களைத்தபிக்கப்பண்ணுகிறவனே! பத்தாஞ்ஜலிபுடம் -சேர்க்கப்பட்ட அஞ்சலியையுடையவனாயாவது, தீநம்-தயவுசெய்ய யோக்யனாயாவது, யாசந்தம்-ப்ரார்த்திக்கிறவனாயாவதுஇருக்கிற, ஶரணாகதம்-க்ருஹத்துக்குவந்திருக்கிற, ஶத்ருமபி-வைரியையும், ஆந்ருஶம்ஸ்யார்த்தம் - க்ரூரவ்யாபாரத்தை யுடைத்தாகாமைக்காக, ந ஹந்யாத் - கொல்லக்கூடாது.

வ்யா. (பத்தாஞ்ஜலிபுடம்தீநம் யாசந்தம்) காயிகமான அஞ்ஜலியாதல், மாநஸமான தைந்யமாதல், வாசிகமான ப்ரார்த்தனையாதல், ஒன்றே அமையுமென்கை. (ஶரணாகதம்) க்ருஹாகதம். அபி வா, பத்தாஞ்ஜலி ப்ரப்ருதிகள் கௌணம்; "ஶரணாகதம்" என்று அத்யவஸாயாத்மக ஜ்ஞாந விஶேஷத்தைச்சொல்லுகிற தென்னவுமாம். (ஶத்ருமபி ந ஹந்யாத்) கீழ்ச்சொன்னபடியே கௌணமாக ஶரணம்புகவுமாம், ஆர்த்தியாக ஶரணம்புகவுமாம்; ஶரணம்புகுந்தவனை ரக்ஷிக்குமித்தனை யொழிய, அவன்பக்கலிலே ஶத்ருத்வமுண்டிறே யென்று ஹிம்ஸிக்கக்கடவதன்று. (ஆந்ருஶம்ஸ்யார்த்தம்) ஹிம்ஸியாதொழிகிறது ரக்ஷகத்வப்ரஸித்திக்கோ, பாபம் போகைக்கோ, புண்யஸித்திக்கோவென்னில்; இத்தனைக்குமன்று; நாட்டார் க்ரூரரென்று கூசாமைக்காக. (பரந்தப) கேவலம் ஶத்ருவானாலன்றோ நீர் ஹிம்ஸிக்கக்கடவது; அவன் ஶரணாகதனானாலும் ஹிம்ஸிக்கக்கடவீரோ? கஎ.

தாத்பர்யம்—சத்ருவாகிலும் தன்னிருப்பிடத்துக்கு வந்து காயிகப்ரபத்தியான அஞ்சலியையாவது, மாநஸிகப்ரபத்தியான ஆதரத்தையாவது, வாசிகப்ரபத்தியான ப்ரார்த்தனையையாவது செய்தால் அவனை யெவ்வளவும் கொல்லக்கூடாது. எவனாவது சாஸ்த்ரமறியாமல் கொன்றால் அவனைக்கண்டு ஜனங்கள் இவன் நிர்த்தயனென்று பயப்படுவார்கள்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௨௮-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. ஏதேனும் ஒருவழியிலேயாகிலும் ஶத்ரு வந்து ஶரணம் புகுந்தால் ஹிம்ஸியாதே விடுமதுபோராது; ஆர்த்தனானால் தன் ப்ராணனை§நேர்ந்தாகிலும் ரக்ஷிக்கப்படுமென்கிறது ஆர்த்தோவா என்கிற ஶ்லோகத்தாலே.

௨௯.— ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: பரேஷாம் ஶரணாகத: |
அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா ||௧௧௮.

அர்த்தம். பரேஷாம்-சத்ருக்களுக்குள், ஶரணாகத:-சரணமடைந்த, அரி: - சத்ருவானவன், ஆர்த்தோவா - பயந்தவனாகிலும், த்ருப்தோவா - பயமில்லாதவனாகிலும், க்ருதாத்மநா - சீர்திருத்தப்பட்ட ஸ்வரூபத்தையுடையவனால், ப்ராணாந் - ப்ராணன்களை, பரித்யஜ்ய - விட்டு, ரக்ஷிதவ்ய: - காப்பாற்றத்தகுந்தவன்.

வ்யா. (ஆர்த்த: யதிவா த்ருப்த:) பீதனாய்வந்து ஶரணம்புகவுமாம்; அபீதனாக ஶாவித்துவந்து ஶரணம்புகவுமாமென்கிறார். (த்ருப்த:) ப்ரபந்நனும் ரக்ஷிக்கப்படுமென்கிறவித்தால், தாம் "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்" என்றதுக்கு ப்ராப்தவசநமு முண்டென்கிறார். (பரேஷாம் ஶரணாகத: அரி: ரக்ஷிதவ்ய:) ஶத்ருக்களில்வைத்துக்கொண்டு ஶரணாகதஶத்ருவானவன் ரக்ஷிக்கப்படும். "பரேஷாம்" என்கிறவிடத்திலே ஶாத்ரவந்தோற்றியிருக்கப்பின்பு அரிஶப்த ப்ரயோகம் பண்ணினது - அவனுடைய ஶாத்ரவாநுவ்ருத்தி த்யோதநார்த்தமாக. ஶரணாகதனானால் ஶாத்ரவமுண்டோவென்னில்; ப்ரக்ருதிவஶ்யராகையாலே க்ஷணாநுக்ஷணமாக ஶாத்ரவமநுவர்த்திக்கவுங்கூடும். அங்ஙனன்றிக்கே, "கொன்றேன்; அன்றேவந்தடைந்தேன்" என்கிறபடியே ரக்தஹஸ்தனாய்க்கொண்டு ஶரணம்புகுருகையாலே அக்காலத்திலும் ஶத்ருபாஷை பண்ணலாம்படியிருக்கையாலே சொல்லிற்றாகவுமாம். (ப்ராணாந் பரித்யஜ்ய) ப்ராணாநபி பரித்யஜ்ய என்னாதொழிந்தது - ஶரணாகத ரக்ஷணத்துக்கு ப்ராணனை பரித்யஜிக்கை ஓரேற்றமன்றென்றுதோற்றுகைக்காக. (க்ருதாத்மநா ரக்ஷிதவ்ய:) க்ருதஸ்வபாவனால் ரக்ஷிக்கப்படும்; ஆர்த்த

§நேர்ந்தாகிலும் - கஷ்டப்பட்டாகிலும்.

வானாலே ரக்ஷிக்கப்படுமென்கை. அங்ஙனன்றிக்கே ஶாஸ்த்ரோக்தமான ஸத்தாலே ஶாஸ்த்ரீக்ஷிதமான ப்ரஜ்ஞையுடையவனாலே ரக்ஷிக்கப் படுமென்றுமாம். ககஅ.

தாத்பர்யம்—பயப்பட்டாவது, பயப்படாமலாவது, சத்ருக்களு க்குள் எவனொருவன் சரணமென்று வருகிறானோ; அவனை குருகுல வாஸம்பண்ணி சாஸ்த்ரமர்யாதை யறிந்திருக்கிறவன் தன்ப்ராணன் களை விட்டுக் காப்பாற்ற வேணும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், கஅ-ம் ஸர்க்கம், உக-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. ப்ராணத்யாகத்தாலே ஶரணாகதனை ரக்ஷியாவிடில் வரும் தோஷத்தைச்சொல்லுகிறது.

மூ.— ஸசேத்பயாத்வா மோஹாத்வா காமாத்வாபி ந ரக்ஷதி |
ஸ்வயா ஶக்த்யா யதா தத்வம் தத்பாபம் லோககர்ஹிதம் || ககக.

அர்த்தம். ஸ: - அவன், பயாத்வா - ப்ராணபீதியினாலாவது, காமாத்வா - தநத்திலாசையினாலாவது, மோஹாத்வா - அஜ்ஞானத்தி னாலாவது, யதாதத்வம் - மெய்யாக, ஸ்வயா - தன்னதான, ஶக்த்யா - பலத்தினால், நரக்ஷதிசேத் - காப்பாற்றாமல்போனால், தத்பாபம் - அவனுடையபாபம், லோககர்ஹிதம் - ஜநங்களால் நிந்திக்கப்பட்ட தாயிருக்கும்.

வ்யா. (பயாத்வா) ப்ராணபயாத்வா. (காமாத்வா) இவனுக்கு வாயகனானவன்பக்கலிலே கைக்கூலி கொள்ளுதல், அவன்பக்கல் பக்ஷபாதத்தாலே யாதல். (மோஹாத்வா) இது கர்த்தவ்யம், இது அகர்த்தவ்யம், என்றறியாமையாலே யாதல். (ஸ: யதாதத்வம் ஸ்வயா ஶக்த்யா நரக்ஷதிசேத்) அவன் மெய்யாகத் தன்ஶக்தி யுள்ளவளவும் ரக்ஷியாதாகில்; தன்நெஞ்சறிய * யாவதாத்மபாவி ரக்ஷியாதாகி லென்கை. (தத்பாபம் லோககர்ஹிதம்) ஶரணாகதனை ரக்ஷியா தொழிந்த பாபம், "ஸதாமேதத்விகர்ஹிதம்" என்கிறவளவன்றிக்கே இருந்ததே குடியாக கர்ஹிக்குமென்கிறது. ககக.

தாத்பர்யம்.—தன்ப்ராணன் போமென்னும் பயத்தினாலாவது, எதிரியினிடத்தில் பக்ஷபாதத்தினாலாவது, யுக்தாயுக்த மறியாமலா வது, சரணாகதிபண்ணினவனைக் கபடத்தைவிட்டுத் தன் சக்தியுள்ள வளவும் காப்பாற்றாமல் போனால், அவனை மஹாபாபியென்று லோ கமெல்லாம்நிந்திக்கும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௩௦-ம் ச்லோகம்.

௨௯.— விநஷ்ட: பச்யதஸ்தஸ்ய ரக்ஷிண: சரணாகத: ।
ஆதாய ஸுக்ருதம் தஸ்ய ஸர்வம் கச்சேதரக்ஷித: ॥ ௧௨௦.

அர்த்தம். ரக்ஷிண: - ரக்ஷகனான, தஸ்ய - அவன், பச்யத: - (ஸத:) பார்த்துக்கொண்டிருக்கையில், அரக்ஷித: - ரக்ஷிக்கப்படாதவனாய், விநஷ்ட: - நசித்துப்போன, சரணாகத: - சரணமடைந்தவன், தஸ்ய-அந்த ரக்ஷகனுடைய, ஸர்வம்-ஸமஸ்தமான, ஸுக்ருதம் - புண்யத்தை, ஆதாய - வாங்கிக்கொண்டு, கச்சேத்-போவன்.

வ்யா. (ரக்ஷிணஸ்தஸ்யபச்யத: அரக்ஷித: விநஷ்ட: சரணாகத: தஸ்ய ஸுக்ருதம் ஸர்வமாதாயகச்சேத்) என்றந்வயம். ரக்ஷகனானவன் காணநிற்க அவனரக்ஷிக்கையாலேமுடிந்த சரணாகதனானவன், அற்றைக்குமுன்பு ஸமார்ஜித ஸுக்ருதத்தையடைய வாங்கிக்கொண்டு இவனுடைய ஸுக்ருத பலமான லோகத்தேறப் போம். ௨௧௦.

தாத்பர்யம்.—சரணாகதன், தன்னை ரக்ஷிக்க ஸமர்த்தனானவன் முன்பே ரக்ஷிக்கப்படாதவனாய் நசித்தால், அந்த ரக்ஷகனுடைய புண்யத்தை வாங்கிக்கொண்டு அத்தாலடையத்தக்க புண்யலோகங்களையடைவன்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௩௧-ம் ச்லோகம்.

அவதாரிகை. த்ருஷ்டாத்ருஷ்டங்களிரண்டிலும் வருமநர்த்தஞ் சொல்லுகிறது அஸ்வர்க்யம் என்கிற ச்லோகத்தாலே.

௨௯.— அஸ்வர்க்யம் சாயசஸ்யம் ச பலவீர்யவிநாசநம் ।

அர்த்தம். அஸ்வர்க்யம் - ஸ்வர்க்கப்ராப்திக்கு ஹேதுவாகாததாயும், அயசஸ்யம் - அகீர்த்திகரமாயும், பலவீர்யவிநாசநம் - புஜபலத்தையும் அநாயாஸமாய் நிர்வஹிக்கும் சக்தியையும் போக்கடிக்கிறதாயும் ஆகும்.

வ்யா. (ஸ்வர்க்யம்) "ஶரணாகதம் த்யக்த்வா ஸ்வர்க்கம் ந லபதே" என்று—அவன் கொண்டுபோக வேண்டாதே தானே நிஷ்ப²லமாம். (யஶஸ்) முன்புபலரையும் ரக்ஷித்து ஸம்பாதித்தயஶஸ்ஸு நஶிக்கும். (ப³லவீர்யம் விநாஶநம்) ப³லமாகிறது தோள்வலி; வீர்யமாகிறது ரக்ஷணயத்நத்தில் உத்ஸாஹமாகை. அவையிரண்டு முண்டாயிருக்க ஶரணாகதனை ரக்ஷியாமையாலே, இவைதானே நஶிக்கும்.

தாத்பர்யம்.—இப்படிசரணாகதனை ரக்ஷிக்க சக்தியிருக்க ரக்ஷியாமல் போனால், அவன் செய்த புண்யமும் அவனுக்கு ஸ்வர்க்கத்தைக் கொடாது; அவனுக்கு அபயசஸ்ஸு முண்டாகும்; சரீரபலமநோபலங்களும் போய்விடும்.

☞ ஸர்வம்ஹ்யேதே ஹதா நத்வ ப்ரபந்நாநாமரக்ஷணே என்ற வாக்யார்த்தம் ஸ்பஷ்டமாகையால் வ்யாக்யாநம்செய்யவில்லை.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௩௨-ம், ஶ்லோகம்.

அவதாரிகை. த்ருஷ்டாத்ருஷ்டங்களிரண்டிலும் நன்மையைத் தருவதாயிருந்துள்ள கண்வரிஷியுடைய வசநத்தை யநுஷ்டிப்பே னென்கிறார்.

௩௦.— கரிஷ்யாமி யதார்த்தம் து கண்வோ வசநமுத்தமம் |
தர்ம்யம் ச யஶஸ்யம் ச ஸ்வர்க்யம் ஸ்யாத்து ப²லோத³யே ||௩௨.

அர்த்தம். கண்வ: - கண்டுமெஹாமுனியினுடைய, உத்தமம் - ஶ்ரேஷ்டமாயும், யதார்த்தம் - மெய்பாயுமிருக்கிற, வசநம் - சொல்லை, கரிஷ்யாமி - அநுஷ்டிக்கப்போகிறேன். (அந்தவசனம்) தர்ம்யம் - தர்மத்தினின்றும்தவறாமலும், யஶஸ்யம் - கீர்த்திகரமாயும், ப²லோதயே - பலமுண்டாகுங்காலத்தில், ஸ்வர்க்யம் - ஸ்வர்க்கப்ரதமாயும், ஸ்யாத் - ஆகும்.

வ்யா. (கரிஷ்யாமி யதார்த்தம்) உத்தமமான வசநங்களில் ப்ரஶம்ஸாதிகளின்றிக்கே மெய்யாயேயிருக்கை. (கண்வோ வசநமுத்தமம்) வசநத்துக்கு உத்தமத்வமாவது - ஶரணம் புகுகிறவன்

ஶத்ருவென்றாலும், ரக்ஷிக்குமிடத்துத் தன்னை யழியமாறியிருந்ததேயாகிலும், அவனை ரக்ஷிக்கவேணுமென்னும் பாசுரத்தை யுடைத்தாயிருக்கை. (தர்மிஷ்டம் ச) அவனுடைய வசநாநுஷ்டாநம் தர்மஸமேதமாயிருக்கும். அதாகிறது-ஆந்ருஶம்ஸ்யமாகிற பரமதர்மத்தைப்பற்றியிருக்கை. (யஶஸ்யம் ச) நாட்டாரிருந்ததே குடியாகக் கொண்டாடும்படியான ஏற்றத்தை யுடைத்தாயிருக்கும். (ஸ்வர்க்யம் ஸ்யாத்து ஸமாகமே) ஸமாகமத்தில் ஸ்வர்க்கத்தைத் தரக்கடவதாயிருக்கும். ஸ்வர்க்கமென்கிறது. நிரதிஶயஸுகத்தை. "நிரஸ்தாதிஶயாஹ்லாதஸுகபாவ:".

தாத்பர்யம்.—கண்டு மஹாமுநி யதார்த்தமாய்ச் சொன்ன உத்தமமான வசநத்தை நான் செய்யப் போகிறேன். அதைச் செய்தால், இந்த லோகத்தில் பாபங்கள் போய் கீர்த்தியுண்டாகும்; பரலோகத்தில் உத்தமமான ஸுகமுமுண்டாகும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௩௩-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. இப்படிசொன்ன விடத்திலும் மஹாராஜர் நேராகத்தெளியாதே ஶங்கிதஹ்ருதயரா யிருக்கிறபடியைக்கண்டருளி, ஸ்வக்ருத்யாநுகுணமாக ப்ரபந்நபரித்ராண ப்ரதிஜ்ஞையைப்பண்ணியருளுகிறார் ஸக்ருதேவ என்கிற ஶ்லோகத்தால்.

மூ.— ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ॥ ௧௨௩.

அர்த்தம். ஸக்ருதேவ - ஒருதரமே, ப்ரபந்நாய - ப்ரபத்தி பண்ணினவன் பொருட்டும், தவ - உனக்கு, அஸ்மி - (அடியேனாய்) ஆகிறேன்; இதி - என்று, யாசதே ச - ப்ரார்த்திக்கிறவன் பொருட்டும், ஸர்வபூதேப்ய: - ஸமஸ்த்த ப்ராணிகளிடத்தில் நின்றும், அபயம்-பயநிவ்ருத்தியை, ததாமி-(பண்ணிக்)கொடுக்கிறேன். ஏதத்-இது, மம - எனக்கு, வ்ரதம் - விடக்கூடாத ஸங்கல்பம்.

அவதாரிகை. "மித்ரபாவேந" என்கிற ஶ்லோகத்தில் ப்ரக்ருதியருளிச்செய்தார். இதில் ததநுகுணமாக ப்ரதிஜ்ஞையைப் பண்ணுகிறார்

வ்யா. (ஸக்ருதேவ ப்ரபந்நாய) ஸக்ருச்சப்தத்துக்கு ஸஹஸா ஶப்தமாய், "ஸஹஸைவ ப்ரபந்நாய" என்கிறபடி. அதாகிறது, தன் யோக்யதையைப்பார்த்துத்தேங்காதே, நம் குணத்தை விஶ்வஸித்து ப்ரபந்நனாகை. இது ஆழ்வான் நிர்வாஹம். கீழநாதிகாலமும் ஸம்ஸரித்துப்போந்தவன் மேல் அநந்தகாலமும் ஸம்ஸாரம் பண்ணப்புகுகிறவனாகையாலே, யாவதாயுஷமநுவர்த்தித்தாலும், "ஸக்ருத்" என்கைக்குப்போருமத்தனையன்றோவென்று எம்பார் நிர்வாஹம். ஸம்ஸாரவிஷயீகாரத்துக்கு ஒருகாலமையும்; ஆவர்த்திக்கிறது உபாய வைபவத்தால்வந்த ரஸ்யதையாலேயென்று பட்டர் நிர்வாஹம். "ஸக்ருதேவ" என்கையாலே, உபாயத்துக்கு விஹிதமான அஸக்ருதாவ்ருத்தியை வ்யாவர்த்திக்கிறது. (தவாஸ்மீதி யாசதே) இதுக்கு மேல் உனக்கு அடியேனாகவேணுமென்று உபாயத்தையும் ப்ரார்த்திக்குமவனுக்கு. "ஸக்ருதேவப்ரபந்நாய" என்கிறது ப்ரபத்தி; "தவாஸ்மீதியாசதே" என்கிற பதத்தின் அநந்தர நிர்தேஶத்தால், அநபாய பாவநாரூபமான பக்தியைச் சொல்லுகிறதென்று நிர்வஹிப்பாருமுண்டு. (அபயம்ஸர்வபூதேப்ய: ததாமி) ஸர்வபூதங்கள் நிமித்தமாக பயநிவ்ருத்தியைப் பண்ணிக் கொடுப்பன். "ஸீதாயாநாம்ஸமயதோ ஹத:" இதி ஹேதௌ பஞ்சமீ. மஹாராஜர் எதிரிடிலுங்காட்டிக்கொடோம்; இவன்தான் அகலுமளவிலும் அவன்கையிலுங் காட்டிக்கொடோமென்றபடி. (ஏதத்வ்ரதம்மம) நமக்கு அநுஷ்டாநீயமான ஸங்கல்பமிது. அமோகஸங்கல்பரான நமக்கு ஸங்கல்பங்களடையக் குலையிலுங்குலையாத ஸங்கல்பமாகுமிது. ௧௨௩.

தாத்பர்யம்.—தன் தோஷத்தைப் பாராமல் என்னுடைய குணத்தையே பார்த்து நம்பி ஒருக்காலாவது வாசிகமாகவோ காயிகமாகவோ மாநஸிகமாகவோ ப்ரபத்தி பண்ணினவனுக்கும் அவனோடு ஸம்பந்தித்தவைகளுக்கும் ஸமஸ்த பூதங்களால் வருமாபத்தைப் போக்கித் தருவதே எனக்கு முக்யமான ஸங்கல்பம். எதைத் தப்பினாலும் இதைத் தப்பமாட்டேன். இந்த ஶ்லோகம் ராமசரம ஶ்லோகம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

ஶ்லோ॥ ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ॥

அவதாரிகை. “ஸர்வலோகஶரண்யஸ்ய ப்ராதா ஜநகநந்திநீம் உபா- ஸ்மாநாஜ்ஞாபயாமாஸ | தஸ்யாஸ்ஸஹாயா: ப்ரஹஸ்தாவகாஶோ(அ)யம் பஶ்சாதிவ ஸமுத்ரஸ்ய:” என்று-பெருமாளும் ஸபரிகரமுமாகக் கடற்கரையிலே குறுகவந்து விட்டார்களென்று கேட்ட ராவணன், ஸசிவஸமூஹத்தை உத்ரோ புரோஹிதாதி வர்க்கத்தைக் குறைவறக்கூட்டி, “ஸர்வக்ருத்யேஷு ராஜாநோ மந்த்ரிணாம் ஸம்ஶ்ரிதா:” என்று நியமித்து கார்யவிசாரம் பண்ணுகிறவதான செய்து நின்ற நிலைகளையும் செய்யவேண்டுங் கார்யங்களையுஞ்சொல்ல, “தஸ்ய காமபரீதஸ்ய நிஶ்சயம் பரிசிந்த்ய து | கும்பகர்ண: ப்ரசுக்ரோஶ வசநஞ்சேதமப்ரவீத்” என்று-இத்தைக்கேட்ட கும்பகர்ணனும் குபிதனாய், “யதா து ராமஸ்ய ஸுலக்ஷ்மணஸ்ய ப்ரஸஹ்ய ஸீதா ச ஹதா ஜநஸ்தாநாத் | ஸக்ருத்ஸமீக்ஷ்யைவ ஸுநிஶ்சிதம் ததா பஜேத சித்தம் யமுநேவ யாமுநம்” என்று-இவன் அபஹரித்தவன்றே இப்படி விளையுமென்றறுதி யிட்டோமேயென்று ஸ்வபாவிஸம்வாத-த்தை ஸம்வதித்து, “ஸர்வமேதந்மஹாராஜ க்ருதமப்ரதிமம் தவ | விதீயேத ஸஹாஸ்மாபி ராதாவேவாஸ்ய கர்மண:” என்று-செருக்கி நான் செய்தவற்றுக்கொப்புண்டோவென்ற ராவணனை யபிக்ஷேபி த்து, எங்கள் சொற்கேட்டுச் செய்யவிருந்தாயாகில் இந்த ஸீதாப ஹாரத்துக்கு முன்பேயன்றோ செய்வதென்றும், “ய: பஶ்சாத் பூர்வ கார்யாணி கர்மாண்யபிசிகீர்ஷதி | பூர்வம் சாபர கார்யாணி ந ஸ வேத நயாநயௌ” என்று-பௌர்வாபர்யகார்யங்களை க்ரம ஹீநமாகப் பண்ணுகிறவன் நயாநயங்களை யறியானென்றும், “திஷ்ட்யா த்வாம் நாபிஜக்நு: ஸ விஷமிஶ்ரமிவாமிஷம்” என்று-நஞ்சூ ட்டின பழம்போலே இனியராயிருக்கச் செய்தேயும் அறக்கொடிய பெருமாளவருன்னைக் கொல்லாதொழிந்தது உன் பாக்யமென்றும், அதிற்கோபித்து இவன்வெறுக்க வொண்ணாதென்று, “ஸமீகரிஷ்யாமி” என்று-பள்ளத்துக்கு மேட்டை நிரவுமாப்போலே யுன்ன நீதியை யென் தோள்வலியாலே பொக்கவிடுகிறேனென்று ஸமாதா நம்பண்ண, உஹா பார்ஶ்வனுமவனுக்கு ப்ரியமாகச் சில வார்த்தை-

(பா) ஜ ஸமிதௌ. (பா) ௧ அபிஜாநாதி விகீர்ஷதி.

களைச் சொல்ல, "நிஶாசரேந்த்ரஸ்ய நிஶம்ய வாக்யம் ஸ கும்பகர்ணஸ்ய ச கர்ஜிதாநி | விபீஷணோ ராக்ஷஸராஜமுக்யம் உவாச வாக்யம் ஹிதமர்த்தயுக்தம்" என்று - அவர்கள் நிரர்த்தகமாகப் பிதற்றின வார்த்தைகளைக் கேட்டு விபீஷணப்பெருமாள், ஹிதரூபமாக, "வ்ருதோ ஹி பாஹ்வந்தரபோகராஶிஶ்சிந்தாவிஷஸ்ஸுஸ்மிததீக்ஷ்ணதம்ஷ்ட்ர꞉ | பஞ்சாங்குலீபஞ்சஶிரோதிகாய ஸீதாமஹாஹிஸ்தவ கேந ராஜந்" என்று- * பாம்போடொரு கூரையிலே பயிலுவாரைப்போலே ஸீதையாகிற பெரும்பாம்பினருகே கையை நீட்டுவாருண்டோ; "யாவந்ந லங்காம் ஸமபித்ரவந்தி வலீமுகா꞉ பர்வதகூடமாத்ரா꞉ | தம்ஷ்ட்ராயுதாஶ்சைவ நகாயுதாஶ்ச ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ || யாவந்ந க்ருஹ்ணந்தி ஶிராம்ஸி பாணா ராமேரிதா ராக்ஷஸபுங்கவாநாம் | வஜ்ரோபமா வாயுஸமாநவேகா꞉ ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ" என்று தொடங்கி, குரங்குகள் கடலையடைத்துப்படைவீட்டை யடைக்கப்பார்க்கப்புகுகிறார்கள்; ராமஶரங்கள் குறுந்தெருவும் நெடுந்தெருவுமாகப்புகுந்து தலைகளைத்திருகப் புகுகிறது; அதுக்கு முன்னே பிராட்டியைப்பெருமாள் பக்கலிலேபோகவிடாயென்றாற்போலே சிலவார்த்தைகளைச்சொல்ல; ப்ரஹஸ்தேந்த்ரஜித்ப்ரப்ருதிகளும் அதுக்கு விபரீதமாகச்சிலவார்த்தைகளைச்சொல்ல, ஸ்ரீவிபீஷணப்பெருமாளும் குபிதராய், "ந தாத மந்த்ரே தவ நிஶ்சயோஸ்தி பாலஸ்த்வமத்யாப்யவிபக்வபுத்தி꞉ | தஸ்மாத்த்வயாப்யாத்ம விநாஶநாய வசோர்த்தஹீநம் பஹுவிப்ரலப்தம் || புத்ரப்ரவாதேந து ராவணஸ்ய த்வமிந்த்ரஜிந்மித்ரமுகோஸி ஶத்ரு꞉ | யஸ்யேத்ருஶம் ராகவதோ விநாஶம் நிஶம்ய மோஹாதநுமந்யஸே த்வம் || த்வமேவ வத்யஶ்ச ஸுதுர்மதிஶ்ச ஸ சாபி வத்யோ ய இஹாநயத்த்வாம் | பாலம் த்ருடம் ஸாஹஸிகம் ச யோத்ய ப்ராவேஶயந்மந்த்ரக்ருதாம் ஸமீபம்" என்றுதொடங்கி, உனக்கிவற்றில் நியோகமில்லை; பெற்றபிள்ளைநீதான்ஶத்ருவென்றொருஶத்ருவாயிருந்தாய், தகப்பனார்க்கநர்த்தத்தைஇப்படிப்பேசுவாருண்டோ? ஶத்ருக்களைக்கொல்லில் முற்பட உன்னைக்கொல்லவேணும்; அறிவில்லையாய்

§மகனென வுன்னை அழைத்தவனையும் புகுரவிட்டவனையும் கொல்ல வேணுமென்று வார்த்தைச்சொல்லி, "யேநாநிராத்ராநி விமர்ஷணாநி வாஸாம்ஸி திவ்யாநி ஶுபாநி தத்வா | ஸீதாம் ராமாய நிவேதயஸ்வ தேவீம் வஸேம ராஜந்நிஹ வீதஶோகா:" என்று - உபஹார பூர்வகமாகப்பிராட்டியையுடையவன் வசத்திலேவிட்டு உங்கள் முடியோடே நெஞ்சாறல் கெட்டிருக்கப் பாருங்கோளென்று ஸர்வர்க்கும் ஹிதஞ்சொல்ல, இத்தைக்கேட்ட ராவணன், "ஸுநிவிஷ்டம் ஹிதம்வாக்யமுக்தவந்தம் விபீஷணம் | அப்ரவீத் பருஷம்வாக்யம் ராவண: காலசோதித:" என்று-இப்படி ஹிதஞ்சொன்னால், "என்னைத்தீமனங்கெடுத்தா யுனக்கென் செய்கேன்" என்றும் - "அறியாதன வறிவித்தவத்தாநீசெய்தன" என்றும்-காலிலே விழவ்யாஜமாயிருக்கத் தன்வசமின்றியிலே காலபரவசனானபடியாலே பருஷங்களைச்சொல்லி, "த்வாம் து திக் குலபாம்ஸநம்" என்று திக்கரிக்க, "உத்பபாத கதாபாணி ஶ்சதுர்ப்பிஸ்ஸஹராக்ஷஸை:" என்று - ஸோதர ப்ராதாவுமாய் ஹிதோபதேசம் பண்ணின வென்னை இப்படி சொன்னவிவன் என்படப்புகுகிறானென்றுதளர்ந்ததடியூன்றியெழுந்திருந்து தனக்கு ஸத்ருஶராயிருப்பார் நாலுபேரோடே கிளம்பி, பின்னையும், "ஆத்மாநம் ஸர்வதா ரக்ஷ புரீஞ்சேமாம் ஸராக்ஷஸாம் | ஸ்வஸ்திதேஸ்து கமிஷ்யாமி" என்று - நாலுவார்த்தைச்சொல்லி, "ஸ்ருஜமாநோஹ்யநர்த்தேந யத்ராஸஸ்ஸுக்ஷண:" *நின்றவாநில்லா நெஞ்சு புரிவதற்கு முன்னே தம்பிசொல்லு ஜீவியாத ராவணகோஷ்டியில்நின்றும் தம்பிசொல்லு ஜீவிக்கிற ராமகோஷ்டியை நோக்கி வந்து, "நிவேதயத மாம் க்ஷிப்ரம் ராகவாய மஹாத்மநே" என்று-நெறிகெடமடுத்துக்கொண்டு புகலாகாது, அதிஶங்கையும் பண்ணுவர்கள், ஆஶ்ரமேஷிகளைக்கொண்டு பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்து, "ஆநய" என்னப் புகவேணுமென்று நின்ற நிலையிலே நின்று விண்ணப்பஞ் செய்ய, இத்தைக்கேட்ட மஹாராஜர், "ஏதத்து வசநம் ஶ்ருத்வா ஸுக்ரீவோ லகுவிக்ரம:" என்று - இவன் வார்த்தையைக்கேட்டுப்பெருமாள் முற்பாடராய்வருவதற்குமுன்னே தாம் கடுநடையிட்டுச் சென்று, ராஜகார்யங்கள் விசாரிக்க வேண்

(பா) § மைத்துனனை.

டாவோ; ஒற்றரைப்போக விடவேண்டாவோ, நம்மிலும் அவர்கள் முற்பட்டார்கள்; "ப்ரணிதீ ராக்ஷஸேந்த்ரஸ்ய ராவணஸ்ய பவேதயம்" இங்கே ஆகாஶத்திலே நிற்கிறவிவன் ஒற்றனாகவேணும்; ராவணன் தம்பியென்கிறான், நலியவந்தவன்; இவனைக்கழுத்திலுங்காலிலும் கோக்கவடுக்கு மென்பது; அது பெருமாள் செவிக்குப்பொறுத்தவாறே வந்தவர்களையு மவனையுங்கொல்ல ப்ராப்தமென்று சொல்ல, இத்தைக் கேட்டருளின பெருமாள் திருவுள்ளந்தனும்பி முதலிகளைப்பார்த்து, "யதுக்தம் கபிராஜேந ராவணாவரஜம்ப்ரதி| வாக்யம் ஹேதுமதர்த்யஞ்ச பவத்பிரபி தச்ச்ருதம்" என்று-தோழனார் ராஜாக்களாய்ச் செருக்கிச் சொன்ன வார்த்தையை ஶரணாகதரக்ஷணம் பண்ணின ஜாதியிலேபிறந்த நீங்களுங்கேட்டிகோளே; உங்கள் நினைவுகளைச் சொல்லுங்கோளென்ன, "ஸ்வம் ஸ்வம் மதிம் ஸ்வதந்த்ரா: | ஸோபசாரம் ததா ராமமூசுர்ஹிதசிகீர்ஷவ:" என்று - பெருமாளுக்காகமாட்டார்கள், மஹாராஜர்க் காகமாட்டார்கள், உபயாவிருத்தமாக பரீக்ஷித்து ஒழுக விசாரித்துக் கைக்கொள்ள ப்ராப்தமென்று சொல்லித் தலைக்கட்ட, இத்தைக்கேட்ட திருவடியுமெழுந்திருந்து, "ந வாதாந்நாபி ஸங்கர்ஷாந்நாதிக்யாந்ந ச காமத:| வக்ஷ்யாமி வசநம் ராஜந் யதார்த்தம் ராமகௌரவாத்" என்று-இப்பக்ஷங்களையழிக்கப்புகுகிறவனாகையாலே, சிலரோடே பிணக்குண்டாயல்ல, எல்லார்க்கும்மேலாய் நியாமகனாயல்ல, ப்ரதிவாதியாயல்ல, "கஸ்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்" என்கிறபெருமாளையிழக்கவருமென்று பெருமாள் பக்கலாதரத்தாலேசொல்லுகிறேனென்று அவையடக்குஞ்சொல்லி, புகுரவிட்டால் பரீக்ஷிப்பது, பரீக்ஷித்தால் புகுரவிடுவதென்று அந்யோந்யாஶ்ரயணம்வரும்; "ததுஷித்வா ப்ரதீக்ஷேத தியப்ரஷ்டும் ஸ்வாமதம்" என்று-ஸாமபேதம்பண்ணிக் குலைத்தழைக்க ப்ராப்தமாயிருக்கத்தன்னிடையே விஶ்வஸித்து வந்தவனை யதிஶங்கை பண்ணினால்குலைந்துபோம்; அப்போது ராஜநீதியல்ல, ஸாஹஸிகமென்று பரபக்ஷதூஷணஞ்சொல்லி, "ந த்வஸ்ய ப்ருவதோ ஜாது லக்ஷ்யதே துஷ்டபாவதா| ப்ரஸந்நம் வதநஞ்சாபி" என்றும் - "அஶங்கித மதிஸ்ஸ்வஸ்தோ ந ஶட: பரிஸர்ப்பதி" என்றுமிப்படிகளிலே ஸ்வபக்ஷ ஸ்தாபநத்தையும் பண்ணி, திருமுன்னே

நாமுஞ்சில வறிந்தோமாக வொண்ணுதென்று, “யதாஶக்தி மயோக்தம் து ராக்ஷஸஸ்யார்ஜவம் ப்ரதி। ப்ரமாணம் த்வம் ஹி ஶேஷஸ்ய ஶ்ருத்வா புத்திமதாம் வர” அடியேனுக்குத் தோன்றினவளவு விண்ணப்பஞ் செய்தேனத்தனை; “நல்லாரறிவீர் தீயாரறிவீர் இவ்வுலகத்தெல்லா மறிவீர்” என்று - தேவரீர்திருவுள்ளத்தி லகலத்துக்கு இதெங்கே; இனித்திருவுள்ளமானபடி செய்தருளீரென்று தலைக்கட்ட, “அத ராம: ப்ரஸந்நாத்மா ஶ்ருத்வா வாயுஸுதஸ்ய ஹ| ப்ரத்யபாஷத துர்த்தர்ஷ: ஶ்ருதவாநாத்மநி ஸ்திதம்” என்று - காற்றின்மகனை திருவடியாலே ஸ்வஸ்தரான பெருமாள் தன்திருவுள்ளத்தில் கிடந்த தருளிச் செய்வதாகக் கோலி, “மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்” என்கிற ஶ்லோகத்தாலே, “மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்” ஸதோஷனே யாகிலும் கைவிடேனென்று சொல்லி, “தஸ்யாநுஷங்காத் பாபாநாம் நஶ்யேந் நஶ்யதி தக்ஷணாத்” என்று - ப்ரபந்நனைபோதே நிர்தோஷன்; இப்படி ப்ரபந்நனாய் நிர்தோஷனானவனுக்கு உம்மாலு மென்னாலும் பிறராலு மெல்லாராலும் வரும பயங்களைப்போக்கக் கடவேனென்கிறார். இந்தஶ்லோகத்தால்.

“வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:” என்று- வேதோபப்ரும்ஹண ப்ரவண ப்ரபந்தமன்றோவிது. இவ்விடத்தில் உபப்ரும்ஹிக்கிற வேதார்த்தமேது, வேதவாக்யந்தானேதென்னில்; “தம் ஹ தேவமாத்மபுத்திப்ரகாஶம் முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே” “ப்ரயதபாணி ஶரணமஹம் ப்ரபத்யே” “ஸ்வஸ்தி ஸம்பாதயேஷ்வ பயதோஸ்து” என்றும் - சொல்லுகிற ப்ரபத்த்யுபாய வைபவம் இவ்விடத்திலுபப்ரும்ஹிக்கிறது. வாக்யமும், “ப்ரயதபாணி ஶரண மஹம்ப்ரபத்யே” என்கிறவிது, “சரணௌ ஶரண மஹம் ப்ரபத்யே” என்றும் - “சரணௌ மாம் நிவேஶ்ய” என்றும் - திருவடிகளைக் கையாலே பிடிக்கும்போது ஶூந்யஹஸ்தனாகவேணும், அந்த ஶூந்யஹஸ்ததையாவது- “ஸர்வதர்மாந் பரித்யஜ்ய” என்றும்-*பிதாமாதாஶ்ச தொடங்கி, “ஸர்வதர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந்” என்றும்-“வீடுமின் முற்றவும்” என்றும்-“மற்றொரும்பற்றிலேன்” என்றும் - உபாயாந்தரங்களைவிட்டுப் பற்றுகை. அத்தையிறே “ப்ரயதபாணி:”

என்கிறது. “ஶரணம் வ்ரஜ” “ஶரணம் ப்ரபத்யே” “ப்ராயஶ்சித்தானி ஶரணாகதி:” என்று உபாய ப்ராயஶ்சித்தானுஷ்டானத்தை “ஶரணம் ப்ரபத்யே” என்று சொல்லுகிறது.

இவ்வாக்யத்தை இந்தஶ்லோகத்தாலே உபப்ரும்ஹித்தபடி யென்னென்னில்; “ஸக்ருதேவ” என்கிற பதங்களாலே ஸுஸக்ருதாவ்ருத்தியாலே யெனான ஶக்திமய ப்ராபதிக்கையாலே, ஸபல்யஶாஸ்த்ரார்த்தமல் ப்ரதுகமான, “ப்ரபத்தவான்:” என்கிற பதத்தையும், “ப்ரபந்நாய” என்கிற பதத்தாலே, “ஶரணம் ப்ரபத்யே” என்கிற பதங்களையும், “தவாஸ்மீதி யாசதே” என்கிற பதங்களாலே, “ஸ்வஸ்த்யர்த்தம்” என்கிற பதங்களையும், “அபயம்ததாமி” என்கிற பதங்களாலே, “அபயஶ்ரேஷ்டம்” என்கிற பதங்களையும் உபப்ரும்ஹிக்கிறது.

ஆகவிது, “ப்ரபத்யே” என்று ப்ரபதநபக்ஷத்தில் ஏகவசநமாயிராநின்றது; ஶரணபக்ஷத்தில், “ந:” என்று-பஹுவசநமாயிராநின்றது; இது செய்யும்படி யென்னென்னில்; “வைஷ்ணவோ ந: குலே ஜாத:” என்று-ஏகவசநமாகச் சொல்லி, “தே ஸர்வே முக்திமாயாந்தி” என்று-பஹுவசநமாகவும், “யே ச வைஷ்ணவஸம்ஶ்ரயா: । தேநைவ தே ப்ரயாஸ்யந்தி” என்று - ஏகவசநபஹுவசநங்களாலும், இப்படி ஶாஸ்த்ரப்ரமாணங்களுண்டாகையாலும், லோகத்திலும் ஒருவன் ராஜஸேவைக்ருஷ்யாதிகளைப் பண்ண, அவன் புத்ரபௌத்ரமான அந்யனுபாநுபவஸாதிதபலங்களை அவனதீனத்திலே ஸாஸ்த்ராவஶ்யகமிஷ்ட்யாதாஸாதிகள் வருத்தமற பூஜிக்கக்காண்கையாலும், இப்படி லோகவேதங்களிலே ஸுப்ரஸித்தமாகையாலே, ஒருவன் ப்ரபன்னனாக அவனதீனத்திலே யொதுங்கினார்க் கெல்லாம் பலமாகக்கடவதென்கிறது.

ஆகிறது, ப்ரபத்த்யுபாயமென்பது - எம்பெருமானுபாய மென்பதாகாநின்றது; ப்ரபத்தியாவது- “த்வமேவோபாய பூதோ மேபவேதி ப்ரார்த்தநாமதி: । ஶரணாகதி:” என்று - சேதநனுடைய ப்ரார்த்தநாநுஷ்டானமாயிராநின்றது; எம்பெருமானாகின் - ப்ரார்த்தநீயனாயிருப்பானொருவன் ஸர்வசேதனனாயிராநின்றது; இது செய்யும்படி யென்னென்னில்; ஸர்வாத்ருஷ்டிஸாத்யமாயி

ருக்க, "ஶ்ருதோபாஸநாஜ்ஞாநம்" என்று - உபாஸநப்ராப்யா ந்யத்தைப்பற்ற, ஔபசாரிகமாக உபாஸநத்தைச்சொன்னாற் போலவும் "நீரஜ்ஞாநம் வீதஜ்ஞாநம்" என்றால்-ஜ்ஞாநத்துக்கொரு நைர்மல்ய வீதராகாதிகளற்றிருக்க விஷயகதமான நைர்மல்யவீத ராகாதிகளை விஷயியான ஜ்ஞாநத்திலே உபசரித்து, "நீரஜ்ஞாநம் வீதஜ்ஞாநம்" என்றாற் போலேயும், ஸ்வீகார வ்யாபாரத்தைப் பற்றஸ்வீகாரவிஷயமான ஸித்தஸாதநவ்யவஹாரத்தைவிஷயி யான ஸ்வீகாரரூப வ்யக்தி ஜ்ஞாநத்திலே உபசரித்துச் சொல் லுகிறதாகையாலே ஒரு விரோதமுமில்லை.

ஆகிறது, "ஸர்வஸ்யைவ ஸர்வஜ்ஞ: ஸர்வோபாஸ்யைவ நாராயண:" என்றும் - "ஶரண்யம் ... ஶரணம் வ்ரஜேத்" என் றும் - "இறைவாநீதாராய்பறை" என்றும் - "உன்தன்னோடுற்றோ மேயாவோமுனக்கே நாமாட்செய்வோம்" என்றும்- எம்பெருமானே உபாயமுமுபேயமுமென்றிறே சொல்லுகிறது; அந்த உபாயோ பேயங்களாகிறது-கார்யகாரணங்களிறே; "யத: ப்ரஸூதாஸ்ய தே தத்தத்காரணம்" என்றும் - "நியதபூர்வவ்ருத்திகார ணம்" என்றும் - பூர்வவ்ருத்தியுமாய் பூர்வகாலத்திலே ஸத்த மாயிறே காரணமிருப்பது; "நியதபஶ்சாத்பாவிகார்யம்" என்றும் - "ப்ராகஸத்தா யோகிகார்யம்" என்றும் - பூர்வகாலத்திலே ஸத்தமாயிராதே, அத்தாலே பிறக்கக்கடவது மாய் பஶ்சாத்பாவியுமாயிறே கார்யமிருப்பது; இப்படியிருக்க, "நித்யவிபும்" என்றும் - "ஸத்யம்ஜ்ஞாநம்" என்றும்-"ஏகமேவா த்விதீயம்" என்றும்- நித்யமுமாய் ஏகமுமாயிருக்கிற ஸர்வேஶ்வர னுக்கு பரஸ்பரவிருத்தமான பூர்வபஶ்சாத்பாவங்கூடும்படியென்; பூர்வோத்தர பாவங்கூடும்படி யென்னென்னில்; "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ஏகமேவா த்விதீயம்" என்றும் - "கவி காராய ஸம்ஸாயநித்யாய" என்றும் - கவிகாரமுமாய் நித்யமு மாய் ஏகமுமான ப்ரஹ்மத்துக்கு, "ப்ரஹ்மவநம் ப்ரஹ்மஸவ்ருக்ஷ ஆஸீத்" என்றும்-"ஸோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி"

“ஸர்வஸ்ய ஜ்ஞஸ்ய ஸர்வஶக்தேஸ்ஸ்ருஷ்டா ஸர்வப்ரக்ருதிர்வாப்யதேவ” என்றும் - த்ரவ்யகாரணத்வமும் ஸ்ருஷ்ட்ருஸ்ருஜ்யத்வமும் பரஸ்பர விருத்தமாயிருக்க, “ஸூக்ஷ்ம சிதசித்விஶிஷ்டம் ப்ரஹ்ம காரணம், ஸ்தூல சிதசித்விஶிஷ்டம் ப்ரஹ்ம கார்யம்” என்று - அவ்விருத்த தர்மங்கள் விசேஷணங்களிலேயாய் விஶிஷ்டைக்யத்தாலே நிர்வஹித்தாற்போலே, இங்கும், “யாதநாஃ ப்ரஸாதாநுக்ரஹிதா நீஶஸ்ய” என்றும் - “தஸ்மிந் ப்ரஸந்நே க்லேஶஸங்க்ஷய:” என்றும் - “ப்ரஹர்ஷயிஷ்யாமி” என்றும் - “ஸ்வப்ரீதயே” என்றும் - “திருவுள்ளமிடர் கெடுந்தோறும்...வியக்கவின் புறுதும்” என்றும் - ப்ரஸாதவிஶிஷ்டனுபாயம், ப்ரீதிவிஶிஷ்டனுபேயம் என்று விசேஷணபேதங்கிடக்கச் செய்தே விஶிஷ்டைக்யத்தாலே உபாயோபேயமெம்பெருமானென்கிறதாகையாலே யெல்லாம்கூடும். “இரக்கமுபாயம் இனிமை உபேயம்” என்றிறே ஜீயரருளிச் செய்யும்படியும்.

“அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே” என்று-ப்ரபத்த்யாதிஸாத்யமிறே மோக்ஷம்; ஸாத்யமாவது-முன்பின்றியிலே பின்பு உத்பந்நமாவது; “உத்பந்நஸ்ய விநாஶயோகாத்” என்று-உத்பந்நமாய் நசிக்குமாகில் உபேயமான பகவத்ப்ராப்திரூபமோக்ஷம் நசிக்குமாயிருந்ததீ யென்னென்னில்; நசியாது; இதுக்கிரண்டு ப்ரகாரமுண்டு; அதிலொன்று-ஸாத்யந்தான், உத்பாத்யம் என்றும், ப்ராப்யம் என்றும், விகார்யம் என்றும், ஸம்ஸ்கார்யம் என்றும், நாலு ப்ரகாரமாயிருக்கும். அவற்றிலுத்பாத்யமாவது - * கடம் கரோதி படம் கரோதி போலே முன்பின்றியிலே பின்புண்டாவது. ப்ராப்யமாவது - “க்ராமம் கச்சதி ராஜாநம் கச்சதி” “மாமேவைஷ்யஸி” என்று-முன்பே ஸித்தரூபமான வஸ்துவை கயிகாஸிக்கிடுகை. விகார்யமாவது - “க்ஷீரம் தத்யுத்பத்யதி” “த்ரவம் ஸீஸகுவதயதி” பாலைத் தயிராக்குகையும் ஈயங்களுருக்குகையும். ஸம்ஸ்கார்யமாவது- “வ்ரீஹீந் ப்ரோக்ஷதி” “வ்ரீஹீநவஹந்தி” வஸ்துதன்னை கார்யாஹர யோக்யமாகப் பண்ணுகை. இங்கும், “ப்ரஹ்மவிதாப்நோதி பரம்” என்றும் - “பராத்பரம் புருஷமுபைதி திவ்யம்” “பரஞ்ஜ்யோதிரூபஸம்பத்ய” என்றும் - “உன்னை யெய்தி”

என்றும் - பண்டே ஸம்ஸாரமென்ன ப்ரஸ்தாவமே இவன் கிட்டு கையால், ப்ராப்யமும் நித்யமேயாகிறது. இனிமற்றை ப்ரகாரம்; "நித்யோ நித்யாநாம்" என்றும் - "அஜோஹ்யேக:" என்றும் - "நஹிவிஜ்ஞாதுர்விஜ்ஞாதேர்விபரிலோபோவித்யதே" என்றும் - "பரநன்மலர்ச்சோதி" என்றும் - ஆத்மாக்கள் நித்யராகையாலும் இவர்களுக்கு தர்மமான ஜ்ஞாநாநந்தாதிகள் நித்யங்களாகையாலும், "தத்ஸாமர்த்யஸமஸ்தேஷு ப்ரகேதஷு" என்றும் - "தயா திரோஹிதத்வாச்ச ஶக்தி: க்ஷேத்ரஜ்ஞஸம்ஜ்ஞிதா" என்றும் - ஆத்மஸ்வரூப தர்மங்களுக்கு திரோதாயகமான ப்ரக்ருதி ஸம்பந்தம்போய், "ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே" என்றும் - "ஆவிர்பூதஸ்வரூபஸ்து" என்றும் - "அவபோதாதயோ குணா:" என்றும் - "ப்ரகாஶ்யந்தே ந ஜந்யந்தே நித்யா ஏவாத்மநோ ஹி தே" என்றும் - ஸ்வாபாவிகாகாரம் * விஶ்ருதமாய் - உத்பத்தியன்றிக்கே யொழிகையாலும் நித்யமாகிறது என்ற ப்ரகாரம்.

அவையுமப்படியாகிறது; இவ்வுபதேஶம் ப்ரபத்த்யுபப்ரும்ஹணம் பண்ணுகிறதாகில், "அஹமஸ்ம்யபராதாநாமாலயோऽகிஞ்சநோऽகதி:| த்வமேவோபாயபூதோமே பவேதி ப்ரார்த்தநாமதி:|| ஶரணாகதி:" என்கிற ப்ரபத்திலக்ஷணங்கிடந்ததோவென்னில்; "ராவணோநாம துர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர:| தஸ்யாஹமநுஜோ ப்ராதா விபீஷண இதி ஶ்ருத:" என்று - ராவண ஸம்பந்தத்தாலும், "பீஷயவேஷஸ்ஸீரோ" என்று நாமநிர்வசநத்தாலும், ஸதோஷத்தை முன்னிடுகையாலே, "அஹமஸ்ம்யபராதாநாமாலய:" என்னுமம்ஶஞ்சொல்லுகிறது; "ராஜ்யம்ப்ரார்த்தயாநஶ்ச" என்று - தனக்கு ராஜ்யம் வேண்டிவந்தவனாய்ப் பெருமாளுக்கொரு கிஞ்சித்காரம் பண்ணவந்தவனல்லாமையாலே, "அகிஞ்சந:" என்னுமம்ஶஞ்சொல்லுகிறது; "ஸ்வாம்த்யக்த்வாச வாம்ஸநம்" என்று - தள்ளிவிடும்படி ஸோதரஹ்ராதாவுக்குட்பட ஆளன்றிக்கே போருகையாலே, "அகதி:" என்னுமம்ஶஞ்சொல்லுகிறது; "ஸவஞ்ஶரணாகத:" என்கையாலே, "த்வமேவோபாயபூதோ

---

* (பா) - ஆவிர்ப்பூதமாய்.

ஸேபவேதிப்ராப்தநாதிஶ்ஶரணாகதி:” என்று தேஶஞ்சொல்லு கிறது; “பாதயோ ஶரணார்த்தநவஸீநிபாத” என்கையாலே, “ஸாம்த்ரமேவேடஸிநபாஜ்யதாம்” என்று காலஞ் சொல்லுகிறது; ஆகையால், இதுநேராகக்கிடந்தது. ஆநுகூல்யஸங்கல்பாதிகளுங்கிடந்ததோவென்னில்; அந்த லக்ஷணமும் புஷ்கலம்; “ஆத்மாநம் ஸர்வலோகாநாம் ப்ரியஞ்சைவ ஸராக்ஷஸாம் | ஸ்வஸ்திதேஸ்து” என்று ராவணனுக்கும் படைவீட்டுக்கும் நன்மையை யாஶாஸிக்கையாலே * ஆநுகூல்யஸ்யஸங்கல்பஞ்சொல்லிற்று; “உத்பபாத கதாபாணி:” என்று கையிலே தடியிருக்க, பரிபவித்தவனைக் கரையவடித்துப் போராமையாலே * ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம் சொல்லிற்று; “ஸாஹி நஞ்ஜ ஹதம் த்ருஷ்ட்வா ராவணம் ஸ்ரீமாந் ஹிம்ஸை ஷிதப்ரராஜ்யம் ப்ராப்யைமீ நஸ்து” என்று - ஸோதாஹரணமாக ராஜ்யந்தரவல்லரென்று அறுதியிட்டு வருகையாலே * ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸஞ் சொல்லிற்று; “பவந்தம் ஶரணம் கத:” என்று சொல்லுகையாலே, * கோப்த்ருத்வவரணஞ்சொல்லிற்று; “பவத்கதம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகாநி ச” என்று - ஆத்மஸமர்ப்பணம் பண்ணுகையாலே, ஆத்மநிக்ஷேபஞ்சொல்லிற்று; “ப்ராணாபஸ்ய ஜஹாரேதேஷஸ்தே தாஸ்யஹயஜோமதி:” என்று - ஸ்வரத்தில் தளர்த்தியாலும், “ஶீக்ரம் வ்யாதிஶஸேநாராஜந் வயாவெயஷாம் ஜராத்ரநாத” என்று - பெருமாள்பக்கல் போகவொண்ணாதபடி நடுவழியிலே கொல்லநிற்கையாலும், “தைந்யம் கார்ப்பண்யமுச்யதே” என்கிற கார்ப்பண்யஞ் சொல்லிற்று; ஆகையாலே இந்த லக்ஷணமும் புஷ்கலம்.

இப்படி புஷ்கல லக்ஷணையான ப்ரபத்தியைப்பண்ணி இதுக்கு பலமாக கொள்ளைக்குப் புக்குக் * கூளமெடுத்தவோபாதி, நாமிருக்க பதார்த்தங்களையாசைப்படாதே நம்மையே புகந்து வந்தவனுக்கு ஸகலபயநிவ்ருத்தியும் பண்ணுவேன்; இது நமக்கு வ்ரதமென்கிறார் இந்த ஶ்லோகத்தால்.

இப்படி அபயப்ரதாநம்பண்ணுவது ஆருக்கென்னில்; * க. (ஸக்ருதேவப்ரபந்நாய) ஸலக்ஷணப்ரபத்தி பண்ணினவனுக்கு. அதாவது - ஸக்ருதேவப்ரபந்நனாயிருக்கை. ஸக்ருச்சப்தத்துக்குப்பொரு

* கூளம் - குப்பை.

ளென்னென்றால்; "ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத்" என்றும் - "அநேகஜந்மஸம்ஸித்தஃ" என்றும் - பக்திபோலே ஸாதநநிஷ்பத்தியும் பலநிஷ்பத்தியும் விலம்பஸாபேக்ஷயன்றிக்கே, "தத்க்ஷணம் ஸ க்ருதக்ருத்யோ பவதி" என்றும் -"உபாயோயஞ் சதுர்த்தஸ்தே ப்ரோக்தஶ்ஶீக்ரபலப்ரதஃ" என்றும் - ஸாதநநிஷ்பத்தியும் பலநிஷ்பத்தியுமொருகாலேயாயிருக்கை. "ஸக்ருதேவ" என்கிற அவதாரணம் - ப்ரபதநமேஎன்றும், ஒருகாலே, இருகால்மட்டில்லைஎன்றும், அயோகவ்யவச்சேதமோ? அந்யயோகவ்யவச்சேதமோ வென்னில்; ப்ரபதநமேயென்றபோது, ப்ரபதநத்தை யநுவதித்து அவனுக்கு அபயப்ரதாநம் பண்ணுவனென்று வாக்யத்துக்கு விதேயமித்தனை போக்கி, ப்ரபதநமோ அப்ரபதநமோ வென்று விமர்சமாய் ப்ரபதநமே என்று விதேயமல்லாமையாலும், "ஸ க்ருதக்ருத்யோ பவதி" என்றும் - "ஸக்ருதேவ ஹி ஶாஸ்த்ரார்த்தஃ" என்றும் - ப்ரவ்ருத்தியாகில் ஸக்ருத்கர்த்தவ்யையாய் அஸக்ருத்கர்த்தவ்யை யல்லாமையாலே ஸக்ருதாவ்ருத்தியா யிருப்பதொரு ப்ரவ்ருத்தியில் வ்யவச்சேத்ய மில்லாமையும் அயோகவ்யவச்சேத மல்லாமையாலும், "அபயம்ததாமி" என்று - அப்ரபந்நனை பக்திநிஷ்டனுக்கும் அபயப்ரதாநம் பண்ணினபடியாலே அந்யயோகவ்யவச்சேத மல்லாமையாலும் வ்யாவர்த்யமில்லையென்றிட்டு வ்யர்த்தம். இனி "ஸக்ருதேவ" என்று - இங்கேகூட்டினபோது - "ஸக்ருதேவ ப்ரபந்நாய" என்று - ப்ரவ்ருத்திஸாபேக்ஷாபிதாநம் பண்ணுகிறதன்றிக்கே ப்ரபதநமொன்றாய் அபயப்ரதாநத்திலே தாத்பர்யமாகையாலே ஸக்ருத்தோடே கூட்டினாலும் வ்யர்த்தம். இந்த உபபத்திகளாலே ஸக்ருச்சப்தப்ரயோகமும் வ்யர்த்தம். "ஸக்ருதேவாபயந்ததாமி" என்றிங்கே அந்வயித்தாலோவென்னில்; ஒருசரீரிக்குப் பிறக்கக்கடவ பயங்களெல்லாம் ஒருகாலே ஸஹிதமாய் அவற்றினுடைய நிவ்ருத்தியை ஒருகாலே பண்ணுகிறதல்ல; பூதகாலத்தில் பயங்கள் பண்டேயநுபவித்துப் போயிற்றன; ஆகாமிகாலத்தில் பயங்கள் உத்பந்நமல்லாமையாலே தந்நிவ்ருத்தி இப்போது பண்ணவொண்ணாது. இன்னமும், "ததாமி" என்று ப்ராரப்தமாய் வர்த்தமாநமல்லாத பயங்கள் உத்பந்நங்களல்

லாமையாலேமேல்வருமவையடைய வரவாப்போக்குகிறே னென்கிற ஸந்தாநத்துக்கும்ஒருகாலேயென்கிற ஸக்ருச்சப்தத்துக்கும் வ்யாஹதி யும்வரும். அஸ்ய ப்ரஸாதநம்பண்ணுகிற இன்றுதொடங்கி ஸர்வவய ஸாத்ம்யமாகவும் ஸ்யங்களுக்கும் பரிஹாரங்களுக்கும் அவகாஶமில் லாமையாலே அநுஷ்டாந விரோதமு மாகையாலே, “ஸக்ருத்” என்றும் - “ஸர்வ” என்றும் - ப்ரபந்ந வசநங்களுக்கு வையர்த் த்யமும்வருமென்னில்; வாராது; ப்ரபந்நனென்றார் பெருமாள், அது க்கு அநுவ்ருத்தியாக மஹாராஜர், ஸக்ருத்ப்ரயோஜ்யான ப்ரப த்தியை, “ராகவம் ஶரணம் கத:” என்றும் - “பவந்தம் ஶரணம் கத:” என்றும் - “பாதயோ ஶரணாந்வேஷீ- நிவேதயத” என் றும்-முக்கால்பண்ணி ப்ரபத்திலக்ஷண ஹாநியும் ப்ரபத்த்ருஸ்வரூப ஹாநியும் ப்ரபத்தவ்ய ஸ்வரூபஹாநியும்பண்ணிற்றனென்று தூஷ ணஞ்சொல்ல, “ஸக்ருதேவ ப்ரபந்நாய” அவன் பலகால் பண்ணி ற்றிலன்; ஒருகால் பண்ணிற்றனென்கிறார். நாலுமூன்றுபண்ணை பண் ணிற்றாக எடுத்த ப்ரமாணங்கள் செய்யும்படி யென்னென்னில்; “ராக்ஷஸோர்ஹ்யதி பஶ்யத்வம் ஸாநுஹந்தும் நஸம்ஶய:” என்று- அபிஶாபஞ்சொன்ன உங்களைப்பார்த்து, “ஸோஹம் பருஷித ஸ்தேந தாஸவச்சாவமாநித:| த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராக வம்ஶரணம்கத:” என்கிறபடி விரோதியாய் வந்தவனல்லேன், அவ ன்தானே பரிஹவித்துப்போகச்சொல்ல அவனோட்டை ஸம்பந்தங் களையும்விட்டுப்பெருமாளை ஶரணம் புகவந்தேனென்று தன்னருள் பாடு சொன்னான் முற்பட “ஶரணம்கத:” என்கிற நிலையே; உம்முடைய வார்த்தைகளாலே கலங்கினோமோ வென்று ஶங்கித்து நம்மைத் தெளிய விடுகைக்கு, “பவந்தம் ஶரணம்கத:” என்று விண்ணப்பஞ்செய்தபடி; பாதகனாய் வந்தவனல்லன்; உம்மை ஶ ரணம்புகுவதாக வந்தவனென்று நமக்குப் ‡ பட்டாங்கு சொன்னா னிரண்டாம் பண்ணை; “ஆநய” என்று நாமழைத்து, “அஹஸாஹி ஸ்தோத்ர ஸவத:” “ஸவிஸ்வஜ்ஞாஸ்யாமவேதந:” என்று - நீ ரக்ஷைபண்ணின பின்பாயிற்று, “வாக்வாதாவநிம்” என்று ஸந்நிதியிலேயிழிந்து, “பாதயோ ஶரணாந்வேஷீ - நிவேதயத”

‡ பட்டாங்கு - வாஸ்தவம்.

என்று - நம்காலிலே விழுந்ததாகையாலே, ஒருகாலே யாயிற்று அவன் ஶரணம் புகுந்தது; ஒரு ஸாதநமும் பண்ணிற்றில னென்கிறார். ஆகையாலே, "ஸக்ருதேவ" என்கிற பதம் ஸப்ரயோஜநமாகிறது. அன்றியிலே, * ௨. (ஸக்ருதேவ ப்ரபந்நாய) என்று - "அநேகஜந்மஸாஹஸ்ரீம் ஸம்ஸாரபதவீம் வ்ரஜந்" என்கிறப்போலே, ஸக்ருதேவ நிஷ்பத்தி ப்ரபந்நனென்றாய், உபாயாந்தர ஸம்பந்தமில்லாத ஸ்வபாவமாய், "விசார்ய வர்த்மநி" என்று - த்ராஹ்மணோ அத்ராஹ்மணோ, ஶத்ருவோ அஶத்ருவோ, மித்ரனோ அமித்ரனோ, வத்யனோ அவத்யனோ, ஸ்வீகார்யனோ பஹிஷ்கார்யனோ என்று நாம் பட்டாற்போலே, ஜாதிக்ருதயதாதிகளை விடுவேனோ பற்றுவேனோ, ராவணனை விடுவேனோ பற்றுவேனோ, போகிறவிடத்தில் கைக்கொள்ளுவர்களோ தள்ளுவர்களோ, ராஜ்யங்கிடைக்குமோ கிடையாதோ, என்றிப்புடைகளிலே பஹுமுகமாய் விசாரித்து அளப்பது முகப்பதாகையன்றிக்கே * ஸக்ருத் ஸ்ரீர்யத்ர ஸ்மரிதம் தநா-போலே ஒருகாலே யறுதியிட்டு வந்தவனென்கிறாராகவுமாம். அன்றியிலே, *௩. ஸஹஸாஶப்தஸ்ய ஸக்ருதாதேஶமாய், ஸஹஸைவ ப்ரபந்நாய என்றாய், அதாவது-"ஆஜகாம முஹூர்த்தேந" என்றும்-"ஒல்லை நீபோதாய்" என்றுஞ்சொல்லுகிறபடியே, * நின்றவா நில்லா நெஞ்சிற்பிறந்த வாதகமயூம் புரிவதற்கு முன்பே வந்தானென்கை. அன்றியிலே, * ௪. (ஸஹஸாப்ரபந்நாய) என்று-ஒன்றையும் நிரூபியாதே ஸாஹஸிகனாய் வந்தான். அதாவது - ராவணன் கோஷ்டியிலே நின்று கடற்கரையிலிருக்கிற பெருமாளை ஶரணம்புக்கால், அவர்பிடித்துக்கொண்டுபோய் விலங்கிலே யிடில் செய்வதென்னென்று பயப்படாதே பட்டது படுகிறதென்று அவன் வந்த ஸாஹஸங்காணு மென்கிறாராகவுமாம். இப்படி ஶரணாகத ரக்ஷணம் பண்ணுகிறீராகில் அடியேன் ஶரணாகதியிலே ஸம்ஶயமுண்டோவென்ன; ※ ௫. (ஸஹஸாப்ரபந்நாய) * அன்றீன்றகன்றுக்காக முன்னீன்றகன்றைக் கொம்பிலுங் குளம்பிலுங் கொள்ளும் தாயைப்போலே பால்பாய ஶரணாகதனாய் ஸர்வமும்பெறுதவிவனுக்கே யாமத்தனைபோக்கி, ஸர்வஶரணாகதனாய் ராஜ்யதாரஸர்வமும் பெற்றவுமக்காமோம்.

இப்படியாவது அவன் தான் ஶரணாகதனாகிலன்றோ, "ஸீ வ்யம்வ்யாஜிஶஶேநாபராஜநு வயாமெயஷாம் ஜநாதநாஸ்" என்றும்- "வய்யாதாஸ்ஷதீவ்யணஜ்ஞேந ஸஹிஷெவஷஷ" என்றும் - நாங்கள் சென்ன வார்த்தையைக்கேட்டு வெருவிப்போக நிற்கிறவனன்றோவென்ன; * க. (வ்யவஸாயெவ) நாமிப்படி விவ்ருதிவஸான வளவிலும் அவன் வ்யவஸனே, போகான்காணுமென்கிறார். வ்யவஸனே காணுமென்றருளிச் செய்யாநின்றீர்; இவன் ஸக்திநிஷ்டரைப்போலே அங்கமாகச்சில யத்நாநுஷ்டாநம்பண்ணி, "வ்ரீயதாம் ஜாஶரயாய ஜெஷிதீ" என்று நல்வார்த்தை சொல்லுவதும், ஜாதவயமாகாதென்பதும், தன்மகள் ஜநநெயையிட்டு நல்வார்த்தை சொல்லுவதாய், ஜதேகம் வாராஶ்ரயணம் பண்ணியன்றோ வந்தது; ஆனபின்பு அவன் ஸக்திநிஷ்டனென்றார் ஶஹாராஜர்; பெருமாள், * உ. (வ்யவஸாயெவ) அவன் நல்வார்த்தை சொல்லிற்று நமக்காகவல்ல, "விஹீஷணவ்ய யதாதா நதராக்ஷஸவேஷிதஃ" என்று - வ்யக்தா யாதிநகைநகையாலும், "ஶராக்வாஜிதஹி வதா" என்று - தமயன் விஷயத்திலே, ஹிதவாணைகையாலும், "ஷுக்ஷவ்யவஹஜவஃ" என்று - வ்யவதியிகாரியாய்ச் சொன்னரித்தனை; ஆகையால், இதுஜக்யாவிஜம். "ஷேஸநயோராஹயோ ஜதேய்ய ஶயம்ஷாவப" என்று பள்ளரும்பறையரும், பார்ப்பாரும் §பார்க்கருமான விருபடைக்கு நடுவே, தேரைநிறுத்தி வரஶஶ்லோக முவதேஶித்தபோது, ஜஜநந னெங்கேகுளித்துக் குலேகுடுமியும் ||தோதவத்தியுமாய்நின்றான்; "இன்னமுறங்குதியோ" என்ன; "நங்கைமீர் போதருகின்றேன்" என்றும்-"தூயோமாய்வந்தோம்துயிலெழுப்பாடுவான்" என்றும் - திருவாய்ப்பாடியில்பெண்கள்நோன்புக்குப் போகிறபோது †அனந்தலிலே கண்ணையுங்கடைவாயையுந்துடைத்து வந்தார்களத்தனைபோக்கி எந்த ‡உவர்க்குழியிலே குளித்து வந்தார்கள்; அப்படியே இவனும், "யோவிஷ்ணும் ஸததம் ஷேஷி தம்வித்யாஜஹ்யே தவஸ்" என்று-விஷ்ணுஷேஷியாய், ஜநவணாஜனை

§ பார்க்கர் - பௌத்தர்கள். || தோதவத்தி - சுத்தவஸ்த்ரம். (பா) † அநந்தலிலே ‡ உவர்க்குழி - ஸமுத்ரம்.

ராவணன் கோஷ்டியிலே நின்று போருகிறபோது, "வஸுவஸவ்ய திஷ்டத" என்று- ஆகாசத்திலே நின்றுனித்தனைப்போக்கி என்னகடலாடி ‡புனலாடி வந்தான்; "யதி ஹரோ வ்ருஷேந்த்ரோ ஹரோஹவ் வ்ரஜேஸ்" என்றும்- "நாஹம் நாக்ஷத்ரஸம்பந்நோ நநிமித்தஸ்ஸ்மீக்ஷணம் ஸ்ருத்ஸைவகாரணம் நித்யஷாக்ஷரவஸிதோஹம்" என்றும் "போதுவீர்போதுமினோ" என்றும்-ராவிபிறந்தபோதே வந்தானத்தனை. மஜ்ஜையாடுவார்க்கு ஒரு உவர்க்குழியிலேகுளிக்கவேணுமோ? "ஸமவாநு பவித்ரம்வாஸுதேவ:" "பவித்ரம்" "பவித்ராணாம்பவித்ரம்" "பாவநஸ்ஸர்வலோகாநாம் த்வமேவ ரகுநந்தந" என்று பேசப்பட்ட நம்பக்கல் வருகிறவனுக்கு ஒரு ப்ராயஸ்சித்தம் வேண்டா வ்ருஷபனாகில் என்கிறார். அதிருந்தபடியென்! முக்திக்கு ஶாஸ்த்ரவிஹிதமான பஹூபாயங்களுண்டாயிராநின்றது; இதுக்கு, "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்று-உள்ள தர்மங்களையும் விடச் சொல்லாநின்றது; ஆகையாலே ப்ரபத்தியில் முக்தி¶ விலக்ஷணையாய்த் தோற்றுநின்றதீ என்னில்; அது சொல்லவொண்ணாது; "ஸம்ப்ரதாணகேஹ்யேப்ய யதாஸம்பவ்யவஸ்திதி:" என்று-ஶாஸ்த்ரகாரணகராணலது சொன்னபடி கொள்ளக்கடவோம்; அதாவது - "பஹவோஹிய்யாஷ மார்கா விஶந்த்யேகம் மஹாபுரம் | ததாஜ்ஞாநாநி ஸர்வாணி ப்ரவிஶந்தி தமீஶ்வரம்" என்று - ஒருருக்குப்போகவென்றால்,பலவழியாயிருக்குமாப்போலே, ஸமஸ்த்வாப்திக்குப்பல உபாயங்களுண்டென்றுசொல்லி, ஒரு உபாயம் ஸாத்யஸக்தமாகையாலே சில ஸஹகாரிகளை விதித்து, ஒரு உபாயம் ஸர்வஶக்தியாகையாலேஸஹகாரிகளை வேண்டாவென்கிறது; ப்ரகாரபேதத்தாலே ஒன்றுக்கொன்று வைலக்ஷண்யம்வாராது. ஸாங்க நிராங்க தர்மங்களென்றும் நிராங்கத்வ ஸாங்கத்தக்கு விசேஷஸம்பந்த தர்மங்களென்றுமுண்டு; அந்த விசேஷணங்களைப்பார்த்தால் ப்ரபத்தியே விலக்ஷணை; எங்ஙனேயென்னில், "ஸோந்வேஷ்டவ்யஸ்ஸவிஜிஜ்ஞாஸிதவ்ய:" என்றும் - "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" "ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாஶை:" என்றும் - "தமேவைகம்ஜாநதாத்மாநம், அந்யாவாசோவிமுஞ்சத, க்ஷ்ருத

‡ புனல் - ஆறு. ¶ விலக்ஷணை - ஸ்ரேஷ்டம்.

வைஶேஷிகோ தேஷு:" என்றும் - "ஶாஶ்வதோ ஶைவ ஶரணம் ஹம் வ்ரஜேத்" என்றும் - வேதாந்தவிஹிதமாயும் மோக்ஷாதிஸாதநமாயும் ஒத்திருக்கச்செய்தேயும், ஸித்தஸாதந ஸ்வரூபம்போலே "ஸாத்யஹேதோ: கஶோதவர:" என்று - இவனாலே ஸாத்யமாகவன்றிக்கே, ஸித்தஸாதநஸ்வரூபம் "ஸித்தரூபம் பரம்ப்ரஹ்ம" என்றும் - "நித்யம் நித்யாக்ருதிதரம்" என்றும் - பண்டே ஸித்தஸ்வரூபமாய், "த்யாயதே" "த்ருவா ஸ்ம்ருதி:" என்று - ஸ்ம்ருதிஸந்தாநரூபஜ்ஞாநமாய் அசேதநமாகையன்றிக்கே, "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" "ஸத்யம் ஜ்ஞாநம்" "ஸர்வம் ஸர்வத்ர ஸர்வதா ஜாநாதி" என்று - ஜ்ஞாதாவாய் ஸாதந ஜ்ஞாநஸ்வரூபமாய், ஸ்வீகரிக்குமிடத்தில், "ஆவ்ருத்திரஸக்ருதுபதேஶாத்" "அநேகஜந்மஸம்ஸித்த"மாய் சிரகாலஸாத்யமாயிருக்கையன்றிக்கே, "த்வயம் ஸக்ருதுச்சாரோ ஹவதி" "உபாயஸ்ஸக்ருதேவேதி ப்ராயஶ்சித்திஶ்ரவணாமதி:" என்று - ஸக்ருத்ப்ரயோகத்திலே கைபுகுரக்கடவதாய், "தஸ்ய தாவதேவ சிரம் யாவதயிகாரம்" என்று - விளம்பித ஃபலப்ரதமாகையன்றிக்கே, "உபாயோயஞ்சதுர்த்தஸ்தே ப்ரோக்தஶ்ஶீக்ரஃபலப்ரத:" "தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததா ஸுகம் । யாவந்ந யாதி ஶரணம்" என்று ஶீக்ரஃபலப்ரதமாய், "தவ ஸாடநாஶகேந" என்றும், "யஜ்ஞதாநம் தபஶ்சைவ" என்றும் - "வஹ்நிரூபோ யேவ த்ருணாதிகேதா:" என்றும் - "தவஸ்ஸந்தாவஷ்யபக்ஷே ஸோயம் யதிவஸிக்ருஹ:" என்றும் - "கார்த்ஸ்ந்யவிஷ்டிஹிஷேக்ஷ்ம காயேகாயேவ நித்யஶ:" என்றும் -

"ஒதிநாமங்குளித் தச்சி தன்னால் ஒளிமாமலர்ப் பாதநாளும்பணிவோம்" என்றும் - மாரி கோடையின்றியிலே உப்பு நீரிலும் § உவர் நீரிலும் சுட்டநீரிலும் சுனைநீரிலும் தோய்ந்தும் நாலுபாடு ‖ முச்சியிலும் ※ அழல் தூவநின்று க்லேஶிக்கும்படியாகையன்றிக்கே, "ஆநந்தோ ப்ரஹ்ம" "ஆநந்தம் ப்ரஹ்ம" "கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம" என்றும் - "ஸர்வகந்தஸ்ஸர்வரஸ:" என்றும் ஸர்வாநுபவமாய், "ப்ரியாவ்யயாஶ்லோயஜோ நம

---

§ உவர்நீர் - சவுநீர். ‖ உச்சி - மத்யாஹ்நம். ※ அழல் தூவ- நெருப்புவீச.

ஹிநஸ்தி" "ஜ்ஞாநதோஷ பரிஹ்ருஷ்டஸ்துர்ணாம் யோ நிர்கத:"
என்று - ஸ்வல்பத்தில் ஸகலபாபநாஶிக்கையன்றிக்கே, 'யதா கதாவாபி ஸக்ருத்க்ருதோஞ்ஜலி: | ததைவ ஸர்வம் த்ருஶ்யாஹாநி ரஶேஷ: ஶுபாநி புஷ்ணாதி நஜாது ஹீயதே" என்றும் - "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபி: | நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே"? ஸர்வாபராதயுக்தோபி ஶரணாகதிஸம்பந்தாத் ... நிர்தோஷம் விதிதம் ஜந்தும் ப்ரஹ்லாதாநந:" என்றும் - "பயனன்றாகிலும் பாங்கலராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்" என்றும் - அடைவுகெடப் பண்ணினாலும் தோஷங்களைப்போக்கித் திருத்தி ஸுஷ்டா தாவை உஜ்ஜீவிப்பிக்கக்கடவதாய், 'ஸவித்யாஸ்த்ரித்வம் தீர்த்தம் வித்யா ப்ரத்யக்ஷம்' "கஷாயபக்திகர்மாணி ஜ்ஞாநந்து பரமா கதி: | கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே' என்றும் - "தத்த்வம் ஶ்ருத்வாவித்யா" என்றும் - ஸ்வாதந்த்ர்ய ப்ரதிபந்தக நிவர்த்தகமாய், "ஸ்வதந்த்ரஸ்வாபாவ்ய தத்பதி" "நஹ்யப்ரமாணாத் ப்ராப்யதே" "ப்ராப்யதே ஸ்ரீயாயஜ்ஞபரை:" என்றும் - நஶ்யத்வேப்ராவகாரணமாய் நஶ்வரக்ரியாரூபமுமாய் ஸர்வஶக்தி தேவதாத்மகமுமாய் ஸர்வபரஸ்பரத்தாதி ஸஹாயாரணமுமான கர்மாதிகளை ஸங்கமாக அபேக்ஷிக்கையன்றிக்கே, "தமேவைகம் ஜாநதாத்மாநம் அந்யாவாசோ விமுஞ்சத" "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்றும் - "தமேவோபாய தாயாந்தம்" என்றும் - "மாமேவைஷ்யஸி" என்றும் - ஸ்ருஷ்டியில் த்ரியகாரணமுந்தானேயாகிறாப்போலே ஆத்யந்திக ப்ரளய மான மோக்ஷத்திலும் ஸங்கமும் ஸங்கியும் உபாயமும் உபேயமும் ஒன்றேயாய், ஸர்வஶக்தி ஸௌஶீல்ய ஸௌலப்யாதிகள் வாத்ஸல்யத்தாக அதிகாரி ஸாபேக்ஷா பாதகமான ஆகஸஶ்ஞாதி மாத்ரஸாபேக்ஷையாய், இப்படிக்கொத்த ஸர்வகுண வைலக்ஷண்யங்களாலே ஸக்தியில் ப்ரபத்தியே *ஸத்யவிலக்ஷணை. இப்படிக்கொத்த ப்ரபத்தியைப்பண்ணினவனுக்கு, *ந. (ப்ரபந்நா யைவ) "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே" என்று - கர்மயோகநிஷ்டரான உமக்குமாகோம்; "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு ஸர்வாவிவக்ஷண:" என்கிற ஜ்ஞாநயோகநிஷ்டரான ஜந்மாநுக்குமாகோம்; "பக்திநிஷ்டாவீர" என்கிற

ஸக்தியோ மநிஷரான ஸநகாதிகளுக்கு மாகோம்; "பரவசம்ஶரணம் மத:" என்று - ப்ரபந்நனை விபீஷணனுக்கே யாகக்கடவோம். * ௪. (ப்ரபந்நாயைவ) "சுகாராய ப்ராயைவ" என்றும் - "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்றும் - அவன் நமக்கேயா யிருக்குமாப்போலே, "எனக்கே தன்னைத்தந்தகற்பகம்" என்று-சுவியாஜ்ஞர் சொன்னபடியே நாம் ப்ரபந்நனுக்கே யாகக்கடவோம்.

அவன் ப்ரபந்நனாவது ஸ்வார்த்த ப்ரயோஜநத்துக்காகவன்றோ, "ராஜ்யம் ப்ரார்த்தயமாநஸ்து பாஹிமாம் ஶரணாகதம்" என்று - உம்முடைய ஸநகாதிகளன்றோ சொன்னானென்ன ;*௧ (தவாஸ்மீதி யாசதே) ஸநந்யப்ரயோஜநனாயே வந்தான் காணுமென்கிறார். அதாவது - உபகார ஸ்மரணாய ப்ராய், கருதவயமாகாதென்று தனக்குப்பண்ணின உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக ராஜ்யங் கொடுக்கவேணுமென்று சுவிப்ராயமாக ஸநகாதிகள் சொன்னதைப்போக்கி விபீஷணன் சொன்னது; "நதேவலோகாக்ரமணம் நாமரத்வம் மஹாப்ரபோ | ஐஶ்வர்யம் வாபி லோகாநாம் காமயே நத்வயாவிநா" என்றும் - "உன்னாலல்லால் யாவராலுமொன்றுங்குறைவேண்டேன்" என்றும் - லக்ஷ்மணனும் ஸங்கோசனும் சொன்னாற்போலே, "த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச" என்றும் - "பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச | பவத்கதம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகாநி ச" என்றும்- புறம்புள்ளவற்றையடைய விட்டு * சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாய் தாய் தந்தையும் தாமேயாக வந்தவனென்கிறார். * ௨. (தவாஸ்மீதி யாசதே) "தவைவாஸ்மி ஹஸ்தப்ராப்த" என்றும்-"உன்றன்னோடுற்றோமேயாவோமுனக்கே நாமாட்செய்வோம்" என்றும்- ஸநந்யப்ரயோஜநனாயேவந்தான். * ௩. (தவாஸ்மி) "நசேத்" "நாராயணஸ்ய"ஶேஷத்வமுமில்லை. பரவார் தந்த்ர்யமுமில்லை; ஸ்வதந்த்ர்யமேவ ஶரணமென்று வந்தவன். *௪.(தவைவாஸ்மி) அவன் நம்மை நோக்கி "தவைவாஸ்மி" என்றான் ; நாமும், "ஸாக்ஷாத் ஸோமாது விப்ராஹ்யது, தவோதேஶத்வஸாதக: | ஸ்ரீநாஸ்ரவணம் ப்ராப்ய ஸத்லோகம் ஸமஶ்நுதே" "போகம் நீயெய்திப் பின்னும் நம்மிடைக்கே போதுவாய்" என்றும் - ஸாம்ராஜ்யமும் கைங்கர்ய ஸாம்ராஜ்யமும், "தவைவாஸ்ய" என்னக்கடவோம். "ஸ்ரீமதாராஜ

ராஜேந ஆஜ்ஞயா அபிஷேசித:" என்றும் - விபீஷணஸ்யைவ ஹி ஸௌஹ்ருதம் க்ருதம்" "ஆஸாத்ய லங்காம் ராஜ்ஞாம் ப்ராப்தோ விபீஷண:" என்றும் - இப்படி இரண்டுங்கொடுத்துவிட்டருளினனிறே. அபயப்ரதானமென்னக்கோயிலாழ்வாரைக் காட்டுகிறபடியென்னென்னில்; "ததஸ்து ராமஸ் ஸீக்ஷார்த்த் கஸ்மைசித்தைவதம்" என்றும் "த்வந்த்வம் ஸமேதானாம் க்ஷத்ரியாணாமிதம் வ்ரதம் | அர்தே ச அர்தே ச காலே ச விஜானம் ஸர்வப்ராஜிதம்" என்றும் உபப்ராஹ்மணத்திலும், ப்ராஹ்மணஸ்ரீராமாயணத்திலும் ஸித்தமான த்வந்த இங்கே அநுஷ்டிக்கிறதாகையாலே குறையில்லை. * ௫. (ஸ்வாமி) "ஸ்வதந்த்ரநிரோஷிதம்" என்றும் "ஸ்வஸ்வதந்த்ரநிஸ்ஸ்ரூதம்" என்றும் "ஸ்வஸ்ஸாஸ்த்ரம்" என்றும் ஸ்வதந்த்ரயுண்டாகிறபோதே ரோஷமாயன்றோ இருப்பது. * ௬. (ஸ்வாமி) அஹம் ப்ருஹ்மாமி போலே ஸாதநாபிகரணத்தாலே சொன்னாலும் ரோஷரோஷிபாவம் ஸித்திக்குமிறே; அப்படி சொல்லாதே வ்யதிகரணமாகச் சொல்லிற்று, ஸம்வாதங்களாலும் ப்ரமாணங்களாலும் உபபாதிக்கவேண்டி கூவா தத்தில் ஸர்வசக்யம்போலேதோன்றி ஸ்திக்கவொண்ணாதென்று ஜீவபரபேதமும், வ்யக்தமாகைக்காக.

(இதி) இப்பாசுரம் ரஸித்தபடியாலே "ஸ்வாமி" என்ற வ்யாகரணத்தைச்சொல்லுவதேயென்று அநுஸந்தித்தருளாராகிறார். (இதி) "இத்யுக்தோ ராமேணைவ ஜீவந:" என்றாற்போலே யாராகச்சொல்லக்கடவ பாசுரத்தை யார்சொல்லுகிறார், ஸர்வஜ்ஞ ஸர்வஹாதிகளில் ஹாஸமாகச் சொல்லக்கடவபாசுரத்தை யொரு ராக்ஷஸன் சொல்லுவதே.

* ௧. (ஸ) உபாயாந்தரத்தை யபேக்ஷித்துவிடாதே ஸமத்தையும் வேண்டுவதே என்று - ஸர்வஸ்யாஸமாகவுமாம். * ௨. (ஸ்வாமீதி) "ஸர்வவித்யா ஹதேந்த்ராஜநா:" என்று - ஸர்வ ஸர்வஸாதாரணமான உபாயத்தை யபேக்ஷித்தால், உபேயங்களில் திவ்யத்தை யபேக்ஷியாதே பரஸ்வரூபமான ஸ்வபாவத்தை யபேக்ஷிப்பதே. (ஸ்வாமீதி) ஸர்வஸ்மாத்தில் உபாயத்தை யபேக்ஷித்து ஸரணாகதனைப்போகாதே உத்தராயத்தில் கைங்கர்யத்தையும் அபேக்ஷித்து அபநிஷண்ணுவதே.

* ௪. (தவாஜ்ஸீத்வ) "தவாஜ்ஸீத்யவி" என்றாய், அதாவது - "பரிவாரயமேநாராஜநு வயஸ்யாநாந்தீஸாவவைஸ:" என்ற ஐக்ஷிகளையும், "த்யாகத்வாகா: ஜஸாதோகம் ஸவம் வைவிவஹாரஹ" "த்ரீந்லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:" என்ற ஜயஷ்ணையும்போலே க்ஷாஉஶரீர ரக்ஷணத்துக்காகவன்றிக்கே, ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தமான நம்மையென்கை. *௫. ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தமும், "ஸ்ரீமதே நாராயணாய" என்றும் - "ஸஹவைதேஹ்யா ... கரிஷ்யாமி' என்றும் - இருவருமான சேர்த்தியிலேயன்றோ? தனித்திருக்கிற உமக்கு ஶேஷமானல் ஸம்பாவநையுண்டோவென்ன ; "வித்யாவமநிதக்ஷ:" என்கிற விடத்தில், "ஆத்மாவமநிதக்ஷ:" என்று - ஏகவசநமானாற்போலே, இங்கும், "தவாஜ்ஸீத்வ" என்றது, "வைதேஹ்யா வாஸி" என்று - ஏகவசநமாய் மிதுநவிஷயத்திலே காணும் விவக்ஷித்ததென்கை. *௬. அன்றியிலே, உங்களைப்போலே ஶாஸ்த்ரமாய் ஶாஸ்த்ரத்துக்குமேலே ஸஞ்சரிக்கையன்றிக்கே, "ஸுஹ்ருதாம் ஹிதகாமாநாம் ஶ்ருத்வா ... ஶத்ரு ரக்ஷஸாம்' என்னு மகத்துக்குள்ளே ஶாஸ்த்ரஸஞ்சாரியானவனுக்குத் தெரியுங்காணும். அதாவது - "ஶ்ரேயோ மே தேஹி" என்றும் - "நித்யம் வேஷா நவாயிநீ" என்றும் - "ஆநந்த்யாராமவேணாஹம் ஸாக்ஷிணைவ்யாஹாயமா" என்றும் - ஸ்வயம்ஶ்ரீ நித்யஸூரிமாய் அவ்வுக்குள்ளே உண்டென்றறிந்து சொன்னான் காணுமென்கிறானாகவுமாம்.

இப்படி யெல்லாமறிந்திருக்கிற இவன் ஶரணாகதனைச் செய்தபடி கண்டிருக்க த்யாகமித்தனைபோக்கி நிரூபிக்கப் பெறுமோவென்னில் ; * ௧. (யாவதே) தனக்கிது ஸஹஜமென்னு மிடந்தோற்ற விருக்கானிதனை. * ௨. (யாவதே) "ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்றும் - "ஸுயிஜ்தோ ... ஜஜ்ஞே" என்றும் "வேண்டித் தேவரிரக்க' என்றும் - அத்தலையிலிரப்பைநாம் பாரித்திருந்தபடியாலே யிருந்தான். * ௩. (யாவதே) "ஸஹா ஹஸைகோதிக நித்யகிக்ஷா: ப்ரஹஷயிஷ்யாமி" என்றும் - "வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்" என்றும் - ப்ரார்த்திக்கிறான், அவன் கண்குழியும் பையாப்புங்கண்டால் ஆர்க்கு மழுக்கலாம்.

இப்படி யிருந்தால் அவனுக்குச் செய்தருளப்புகுகிறதேதென்னில்; * க. (அபயம்ததாமி) "அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம" என்னும்படி பண்ணுவன். (அபயம்) தத் நிமித்தமான பயத்தை யாகிறது; ஆகையாலே, *உ. தந்நிமித்தமான பயங்களைக்கொடுப்பன். *௩. தந்நிமித்தமான அச்சமில்லாமையைப் பண்ணுவன். *௪. பரிகல்பிதமான அபயமே பயம்; தத் ஸம்பந்தியான இவன் ஸர்வதா ஸ்ம்ருதியான பரிராக்ஷமான ஸ்வரக்ஷையையுடையனாம்படி பண்ணுவன். * ௫ (அபயம்) "அபீதோ ஜாதவேதா:" "வஸந்த்யபயம்" "அபயம் ப்ரதிஷ்டாம்" என்றிறே லக்ஷணம்; ஆகையால் மேலொரு அநர்த்தம் வாராதபடி பண்ணுவன்.

ஆர்நிமித்தமாக பயநிவ்ருத்தி பண்ணுவதென்ன; * க. (ஸர்வபூதேப்ய:) ஏதேனுமாக பயஹேதுவா யுள்ளவையெல்லாம் நிமித்தமாக. * உ. (ஸர்வபூதேப்ய:) பூதங்களாகின்றன — ஸ்வஸ்வகர்மங்களிறே; அதாவது — தேவதிர்யங்மநுஷ்ய ஸ்தாவராத்மகமாயிறே யிருப்பது. இவை யித்தனையும் நலியாதபடி பண்ணுவன். * ௩ (ஸர்வபூதேப்ய:) ராவணனுல்பட்ட பரிஹவத்தாலே அவன்தம்பியென்று ஐந்த்ராதிகளால் வருமது, நம்பக்கலில் பரிவாலே, "வத்யதாம்" என்று — ஸுக்ரீவனும்மால் வருமது, ராவணவிஜயத்திலே பரிஹரித்ரான மருத்தன் தொடக்கமான மநுஷ்யராஜாக்களால் வருமது, ஸீதைத்தோடே பிடுங்குண்ட ஸ்தாவரமான செவ்வாய்மடியாக வருமது, இவ்வாபத்தடைய பரிஹரிப்பன். *௪. (ஸர்வபூதேப்ய:) "பஞ்சபூதாத்மகே தேஹே" என்றும் — "பௌதிகானீந்த்ரியாண்யாஹு:" என்றும் — ப்ரக்ருதியாலே வ்யாதிவ்யாதி பூதகார்யமான ஶரீரேந்த்ரிய விஷயாதிகள் நலியிலும் பரிஹரிப்பன். * ௫. (ஸர்வபூதேப்யஶ்ச ததாமி) "நானே நானாவிதநரகம் புகும் பாவம் செய்தேன்" என்கிற உன்னால்வரும் பயமும், "ஜகத்ஸர்வம் பரிவதஸ்யாமி" என்றும் — "க்ஷிபாமி" "நக்ஷமாமி" என்றும், நம்மால்வரும் பயமும், ஹிரண்யராவணாதி வித்யாதர வ்யாத்ரதிகளானபேரால் வரும் பயமும் போக்குவன். * ௬. (ஸர்வபூதேப்ய:) "ஸர்வபாபேப்ய:" என்று — ஸங்கேதமான பாபங்களும், அவ்வோ பாபங்களடியாக பாயிக்கும் ஜந்துக்களும், இதடியாகவரும் பயமும் அடையவேபோக்குவன். இப்படி, "ஸீதாயா நாம ஸமாஹத:" பணியாகவுமாம்.

அன்றியிலே ப்ரபந்நனாய், "தவாஸ்மீதி ச யாசதே" என்று - ஶரணாகதனாய், ஶத்ருவான விபீஷணனொருவனுக்குமோ அபயப்ரதானம் பண்ணுவதென்றால் ; "ஏதத்" என்கிற - வ்ரதத்தை இங்கேகூட்டி, * க. (ஸர்வபூதேப்ய:) அவனுக்கேயல்ல ; "சதுர்ப்பிஸ்ஸஹ ராக்ஷஸை:" என்று - அவனோடுகூடவந்தவர்களுக்கும் அவர் தங்களைப்பற்றினருக்கும் அபயப்ரதானம் பண்ணுவனென்றபடியாம். அபதம் சொல்லவேண்டாவோ வென்னில்; "ராவணேனாபவித்ரம்" என்கிறவிடத்திலுண்டோ? "அயம் அயாநாவேஹாஸிநி" என்கிற விடத்திலுண்டோ? அது தன்னடையேவரும். அன்றியிலே, 'ப்ரபந்நாய' என்று ப்ரபந்நருக்கேயோ பண்ணுவது? பக்திநிஷ்டருக்கும் ப்ராப்திஷ்காரநிஷ்டருக்குமில்லையோ ; * உ. (ஸர்வபூதேப்ய:) பக்திநிஷ்டரோடு ப்ரபத்திஷ்காரநிஷ்டரோடு வாசியற, "அஜ்ஞோ ஜந்துரநீஶோ ஸகலே நம்தவே தாவிதா:" என்று - அமவஜ்ஞானத்தாலே ஸத்தைபெற்றாரெல்லார்க்குமாம். இப்படி கைமுதலுடையரான விமுக்ஷணாதிகாரிகளுக்கோ கொடுத்தருளுவதென்றார் ; கிம்பஹுநா ; * ௩. (ஸர்வபூதேப்ய:) ஸமுக்ஷணோபாயநிஷ்டராகவேண்டா ; அதிப்ரஸங்கம் வாராதபடி, "ஸவிஷயவாஸிந:" என்று - நம்மெல்லைக்குள்ளே கிடக்கையேயுள்ளது. "யதிவா ராவணஸ்ஸ்வயம்" என்று - ஶத்ருவான ராவணனோடு, "விபீஷணோவா" என்று - மித்ரனான விபீஷணனோடு, 'பாதஶௌசம் மதிஷ்யாமி யாநஸம்வாஸிஷு' என்ற உதாஸீநையான ஶபரியோடு, "கூவஹ தாரோம திஷ்" என்று - க்ரூரமான வாலியோடு, "மஹோகா நந்தரோ" என்று - பக்ஷியான ஜடாயுவோடு, "பாஷாணமளதஶ வயுபவ ராவஹே தம:" என்று - ஸ்தாவரமான அஹல்யாஶிலையோடு, "ப்ரதிவேஶ ஸஶோபம்" என்று - ஜங்கமான ஜனங்களோடு, "புற்பாமுதலாப்புல்லெறும்பாதியொன்றின்றியே, நற்பாலயோத்தியில்வாழும் சராசரம்முற்றவும் நற்பாலுக்குய்த்தனன்" என்று - த்ருணம் ஜவீராயாதிகளோடு, "விதாஶேஹரோமாஶ்ம" என்று - அடியிலே நம்மைப் பெறவேணுமென்று ஸவேக்ஷித்தப்ருஹ்மாதிகளோடுவாசியற ப்ருஹ்மாதி பிபீலிகாந்தமான ஸர்வபூதங்களுக்குமாம்.

இவர்களுக்குச் செய்தருளுவதென்னென்னில், * க. (தாநாதி) த்யாகமுமல்ல, ஔதார்யமுமல்ல, உபகாரமுமல்ல, தானமாகவே பண்ணுவன். த்யாகமாவது - "கீர்த்யர்த்தம் ஶ்ரேயோர்த்தம் ஸர்வபாத்ரேஷு" என்று - பிரபலபேக்ஷித்தத்தைத் கீர்த்திஹேதுவாக நசையறக்கொடுக்கை. ஔதார்யமாவது - "ஸர்வவிஷயவிதரணம் ஔதார்யம்" என்று - விஷயவைஷம்யம்பாராதே முலைக்கடுப்பு சுரக்குமாப்போலே தன் பேறாகக்கொடுக்கை. உபகாரமாவது - "ப்ரத்யுபகாராபேக்ஷாரஹித உபகாரः" என்று - ப்ரத்யுபகார ப்ரயோஜனமாக ஆஸன்னருக்குக்கொடுக்கை. "அத்ருஷ்டார்த்தம் ஶ்ரேயோர்த்தம் ஸத்பாத்ரே தானம்" என்று - விலக்ஷணவிஷயத்தில் விலக்ஷணபதார்த்தங்களை அத்ருஷ்டஹேதுவாகக்கொடுக்கை.*உ. (தாநாதி) "மோக்ஷயிஷ்யாமி" போலே, "தாஸ்யாமி" என்று-காலவிலம்பமும் பண்ணோம். * ௩. (தாநாதி) "ததேவம்விதாநந்த ஏவ ஸம்பவதி", போலே, "உபாஸநப்ராரம்பே மோக்ஷப்ராரம்பः" என்று-அவன் நம்மை நோக்கிக் கிளம்பினபோதே நாமும் உபக்ரமித்தோம். இது யாவதாத்மபாவியாகக்கடவது. "ப்ராரப்தோ பரிஸமாப்தவ்ரத ஆநः" இறே, *ச. (ப்ரபன்னாயதாநாதி) "ந்யாஸமேவாஸ்ய பலாஸக்தி ஸித்திம்" என்றும் - "மேதஷாந்த பலாம் ந்யாஸ ஸித்திம் பலப்ரதம்" என்றும்-ஜதரோபாயங்களில் ப்ரபத்திவிலக்ஷணனையாறுப்போலே, "நாஹம்நிஶ்ரயஸஸ்ய க்ஷமாம்கோடிதாவேலி" என்று-அல்லாதவதிகாரிகளில் ப்ரபந்நாதிகாரி விலக்ஷணனையிறே இருப்பது.

இவ்விலக்ஷணாதிகாரியைக் கண்டால் தானம்பண்ணாதிருக்கப் போமோ; அதுதான் வாக்ஷிகமோ; நியமமுண்டோவென்னில்; * க. (ஸதத்ரதம்) இது நமக்கு நியதாநுஷ்டேயம். *உ.(ஸதச) ப்ரபன்னனுக்குப் பண்ணுகிற அபயப்ரதானம்."அநந்யாரதீயஸः" என்று-எதிரிட்டுக்கொண்டால் முடியுமளவும்விடாதே நடக்குமதிறே

ஷ்டமாயிற்று. "நசாஸ்ய திஜ்ஞாஸம்ஸ்ரயாத் ப்ராஹ்மணோஹ்ய விஸேஷதஃ" என்றபடியிலே சொன்னோமே. * ௩. (ஸதத்தம்) "ஸர்வத்ராணாயஸாயம்நாம்...ஸம்ஸாரி" என்றும்-"ஸரீரக்ரஹணம் வ்யாவிந யஃத்ராணாயகேவலம்" என்றும் - "பொழுதே மூங்காதல்பூண்ட." என்றும் - "காக்குமியல்வினன்" என்றும் -இது நமக்கு ஸத்தாவ்யாக்கும்.

இதனுஷ்டேயமாருக்கென்ன ; * க. (ஃஃ) "கயிமேதா ஃாநம் ஷேஷோகே" என்றும் - "வேண்டித்தேவரிரக்க" என்றும் - பரா வேக்ஷையாயதுக்கென்று இட்டுப்பிறந்த நமக்கு. *உ. (ஃஃ) ஸ்ருஷ்டாவான ப்ரஹ்மாவுக்கும் பணியல்ல; ஸம்ஹர்த்தாவான ருத்ரனுக் கும் பணியல்ல; "நஹிபாலந ஸாமர்த்யம்ருதே ஸர்வேஸ்வரா ஹரேஃ" என்றும்- "ரக்ஷாயாம் ஸர்வலோகாநாம் விஷ்ணுஸ்ஸர்வ ஜ்ஞாவாந்" என்றும் - ரக்ஷணை நமக்கே பணியென்கிறூர். * ௩. (ஃஐதத்தம்) நம்பக்கல் பரிவாலே விலக்குகையும் உமக்குப்ப ணியானாற்போலே ஆஸ்ரிதரக்ஷணமும்நமக்கும் த்தொழில்காணும். * ச. (ஸதத்தம்) "ஸதாஃதஐமஹிதம்" போலே ஸத்தா வ்யாக்கனுக்கு ப்ரயோஜநமில்லை; செய்யாதபோது கவோதவா நரவிஸ்வாமித்ராதிகளிருந்து"எங்கள்குழுவினில்புகுதலொட்டோம்" என்று கதவை யடைப்பார்கள். அதுசெய்யாதே, சாதுகோட்டி யுட் கொள்ளப்படுகிறதே ப்ரயோஜநமாக இது நமக்கநுஷ்டேயமென் கிறூர். * ரு. (ஸதத்தஜஃ) இது நமக்கநுஷ்டேயம் ; இத்தைத் தலைக்கட்டித்தாரீரென்று ஃஹாராஜரை இரக்கிறூர்.

இப்படி பெருமாள் ஃஹாராஜரைப்பார்த்து ஸ்வயவ்ரதநம் பண்ணி ஆஸ்ரிதனை விபீஷண ரக்ஷணம் பண்ணவேணுமென்று இந்த ஸ்லோகத்தில் தாத்பர்யமருளிச் செய்தாராயிற்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௩௪-ம் ச்லோகம்.

அவதாரிகை. "சித்ரஹாஸேந"விலே ப்ரக்ருதியறிந்தீர்; "ஸக்ருதேவ ப்ரபந்நாய"விலே நம்முடைய ஸங்கல்பமறிந்தீர்; அஞ்சாதே ஸ்வீகரிக்கைக்கு "விசாவாநு" என்கிறதிலே நம்முடைய மிடுக்குங்கண்டீர்; ஒருதிர்யக்குங்கூட அநுஷ்டித்ததாகையாலே நமக்கு அநுஷ்டிக்கவேணுமென்னுமிடமுங்கண்டீர். "சரணம்" என்றவனை ரக்ஷித்தார்க்கும் ரக்ஷியாதார்க்கும் உண்டான குணதோஷங்கள் கண்டூபாக்யாநத்திலே கண்டீர்; ஆன பின்பு, அவன் ஆரேனுமாகிலும், "ராகவம் சரணம் கத:" என்கிறபோதே அவனுக்கு அபயம் தத்தம்; அத்தை க்ரியை செலுத்தீரென்கிறார்.

௩௪— ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா |
விபீஷணோ வா ஸுக்ரீவ யதி வா ராவண: ஸ்வயம் ‖ ௧௨௪.

அர்த்தம்.— ஹரிஶ்ரேஷ்ட - வாநரோத்தமரான மஹாராஜரே! மயா-என்னாலே, அஸ்ய-இந்த விபீஷணனுக்கு, அபயம் - பயமில்லாமையானது, தத்தம் - கொடுக்கப்பட்டது; ஸுக்ரீவ-ஸுக்ரீவனே! விபீஷணோவா-விபீஷணனாகிலும், ராவண:ஸ்வயம்யதிவா-ராவணன் தானேயாகிலும், ஏநம்-இவனை, ஆநய-அழைத்துவாரும்.

வ்யா. (ஆநயைநம்) "நிவேதயத மாம்" என்று-ஸர்வேச்வரரான உம்மை புருஷகாரமாகப்புக ஆசைப்பட்டவன் நெஞ்சாறல் தீர்ந்து புகுந்தானாவதும், நாம் ஸ்வீகரித்தோமாவதும், நீர் அவனைச்சென்று அழைத்துவந்தாலன்றே. (ஹரிஶ்ரேஷ்ட) அவன் நெஞ்சாறல் தீருமளவேயோ? நம்பக்கல் பரிவுடையாரெல்லாராலும் ப்ரசஸ்யரான உம்முடைய அநுமதியையொழிய நாம் ஸ்வீகரிக்க சக்தரோ? (தத்தமஸ்யாபயம் மயா) (அஸ்ய) தன் பந்துவர்க்கத்தையடைய விட்டு ஸ்வநிக்ஷேபவர்க்கமாக சரணம் புகுந்தவனுக்கு (மயா) சித்ரஹாஸமே அமைந்திருந்துள்ள நம்மாலே சரணமென்றபோதே அபயம் தத்தம். "அபயம் ஸர்வதோ பவதி". நாம் ஸ்வீகரித்தோமாய் அவனும் ஸ்வீகரிக்கப்பட்டவனாம்படி அநுமதிபண்ணுவீர். அழைக்கப்போகிறவரை அழைத்து அருளிச்செய்கிறார். (விபீஷணோ வா ராவண: ஸ்வயம் யதிவா) விபீஷணனை யன்றே அழைக்கச்சொல்லி

ற்றென்று மீளாதே ராவணன் தானேயாகிலும் அழைத்துக் கொண்டுபோரும். விபீஷணனைக் கைக்கொண்டோமாகில், “விபீஷணஸ்ய ஜ்யேஷ்டா கந்யா” என்கிறபடியே, தன் பக்கலிலே ஒரு முதலுடையவனை ஸ்வீகரித்தோமாவுதோம்; “ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய” என்கிறபடியே, அந்த ந்ருஶம்ஸனை ஸ்வீகரித்தோமாகிற்காணும் நமக்கு நிறமுள்ளது. விபீஷணனை ஸ்வீகரித்தால் அவனோடேகூடின நால்வரும் பிழைத்துப் போருமித்தனை; ராவணனை ஸ்வீகரித்தால் துறப்புக் கூட்டோடே ராஜ்யமுடைய நோக்கினேமாவுதோம். (ஸுக்ரீவ) நமக்குவரும் ஏற்றமுடைய, “ஶக்யம் தேவம் ஸர்வம் ச நௌ” என்றிருக்கிற உம்முடைய ஏற்றமன்றோ? ௧௨௪.

தாத்பர்யம்.—நம்மிடத்தில் மித்ரபாவமாத்ரத்தையே பண்ணினவனுக்கும் தத்ஸம்பந்திகளுக்கும் ஸகலவித பயங்களையும் போக்கி மங்களங்களைத் தந்து ரக்ஷிப்பதே அவஶ்ய கர்த்தவ்யமாக வெண்ணி அப்படியே அதைநடத்திக்கொண்டுபோருகிற நாம், இப்படித் தன்னுடைய தாரபுத்ராதிஸகல பந்துக்களையும் விட்டு ஸலக்ஷண ப்ரபத்தி பண்ணிபரமபுருஷார்த்தமான பகவத்கைங்கர்யத்தை யர்த்தித்துவந்த இந்தவிபீஷணனுக்கு இவன் சரணமென்றபோதே அபயம் கொடுத்தோம். இவன் உம்மைப் புருஷகாரமாகக் கொண்டு நம்மை யாஶ்ரயித்தவனாகையாலே இவன் மனோரதப்படி நீரே இவனை யழைத்துக் கொண்டுவாரும். நீர்போய் பார்க்குமளவில் இவனைஸாது வ்ருத்தனான விபீஷணனாகாமல், துர்வ்ருத்தனான ராவணனாயிருந்தாலும், இவன் விபீஷணனன்று, அவன் தமையன் ராவணனென்று விட்டு விடாமல் அவனையும் அழைத்துக் கொண்டு வாரும். நாம் ராவணனை ரக்ஷித்தால் ஒருதேசத்தையெல்லாம் ரக்ஷித்தோமென்றும் சத்ருவையும் தோஷம்பாராமல் ரக்ஷித்தோமென்றும் புகழுண்டாகும். இப்புகழ் நம்மோடு ஸமஸுகதுக்கரான உமக்குமுண்டாமாகையால் நம்ஸங்கல்பத்தைச் செய்து தலைக்கட்டிவையும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௩௫-ம் ஶ்லோகம்.

———:0:———

அவதாரிகை. பெருமாள் அருளிச்செய்த வார்த்தையைக் கேட்டு கடல் தெளிந்தாற்போலே தெளிந்து ப்ரீதராய் ஒருவார்த்தை சொன்னார்.

ததோ—ராகவஸ்ய வச: ஶ்ருத்வா ஸுக்ரீவ: ப்லவகேஶ்வர: |
ப்ரத்யபாஷத காகுத்ஸ்தம் ஸௌஹார்தேநாபிசோதித: ||

அர்த்தம்.—ப்லவங்கமேஶ்வர: - வாநரராஜாவான, ஸுக்ரீவ: - ஸுக்ரீவமஹாராஜரும், ராகவஸ்ய - ஶ்ரீராமனுடைய, வச: - வார்த்தையை, ஶ்ருத்வா - கேட்டு, ஸௌஹார்தேந - மித்ரபாவத்தினாலே, அபிசோதித: - ஏவப்பட்டவராய், காகுத்ஸ்தம் - ஶ்ரீராகவனைக்குறித்து, ப்ரத்யபாஷத - உத்தரம் சொன்னார்.

• வ்யா. (ராகவஸ்ய வச: ஶ்ருத்வா) தம்முடைய வடிவு கண்டார்க்கு உண்டானுக்க வொண்ணாதாற் போலே, கேட்ட ஶ்ரீவசனத்துக்கு உண்டானுக்க வொண்ணாத வார்த்தையைக்கேட்டு. (ப்லவங்கமேஶ்வர:) ராவணனாய்ப் பெருமாளோடு விரோதித்த நிலைகுலைந்து பெருமாளோடு வணக்கரான வேறுபாடு. (ஸுக்ரீவ: ப்லவங்கமேஶ்வர:) இவருடைய வஶிகரமும் முன்புநின்ற நிலைகுலைந்து இவரைப்போலே வணக்கர்களானார்களென்றுகருத்து. (ஸௌஹார்தேநாபிசோதித:) தம்பக்கல் பெருமாளுக்குண்டான ஸௌஹார்த்தத்தாலே ப்ரேரிதராய்ச் சொன்னார். ஸௌஹார்த்தமாவது—"உபகர்த்ருஸ்நேஹயோ:" என்று ஸ்வாமிகளான தாஞ்செய்தனத நமக்குப்பின் செல்லவேண்டியிருக்க, நம்மை பஹுமானமாகத் தெளிவித்து நாம் இசைந்தால் ஸ்வீகரிக்கக் கடவோமென்னும் நீர்மை. (காகுத்ஸ்தம் ப்ரத்யபாஷத) இந்நீர்மைக்கடியான குடிப்பிறப்பையுடையவரை ஒரு வார்த்தை சொன்னார். தம்முடைய ஸௌஹார்த்தம் ப்ரேரகமாக வொண்ணாதிறே; அது கலக்கத்துக்கு ஹேதுவாகையாலே. ௧௨௫.

தாத்பர்யம்.—இப்படி பெருமாளருளிச் செய்தவார்த்தையைக் கேட்டு ஸுக்ரீவமஹாராஜர், தன் பரிகரமான வாநரர்களுடன்கூட முன்புள்ள கலக்கத்தைவிட்டு, பெருமாள் தன்னிடத்தில் பண்ணின ப்ரேமாதிஶயத்தைக்கண்டு மறுத்துச் சொல்லமாட்டாமல் அவ்வார்த்தைக்கநுகூலமாகவே பெருமாளுக்குப் ப்ரத்யுத்தரம் சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௮ - ம், ஸர்க்கம், ௩௩ - ஶ்லோகம்.

—(0)—

அவதாரிகை. ஶோகத்தில் ரக்ஷகாபேக்ஷையுடையாருடைய இவ்வார்த்தையின் நிழலிலே ஒதுங்கலாம்படி வார்த்தை சொன்னீரென்னுமிது தேவர்க்கு ஏற்றமோவென்கிறார்.

௩௦—கிமத்ர சித்ரம் தர்மஜ்ஞ லோகநாத ஶிகாமணே |
யத்த்வமார்யம் ப்ரபாஷேதா: ஸத்த்வவாந் ஸத்பதே ஸ்தித: ||

அர்த்தம்.— தர்மஜ்ஞ - தர்மஸ்வரூபத்தை யறிந்தவரே! லோகநாத - ஜகத்துக்கு ஸ்வாமியே! ஸுகாவஹ - ஸுகத்தைக் கொடுக்கிறவரே! ஆர்ய - பூஜ்யரே! ஸத்த்வவாந் - ஸத்வகுணத்தையுடையராய், ஸத்பதே - நல்மார்க்கத்தில், ஸ்தித: - நிலையையுடையருமான? த்வம் - நீர், ப்ரபாஷேதா: யத் - சொன்னீரென்பது யாதொன்று; அத்ர - இந்த விஷயத்தில், கிம் - என்ன, சித்ரம் - ஆச்சர்யம்.

வ்யா. (கிமத்ர சித்ரம்) உம்மை யொழிந்தார் இவ்வார்த்தை சொன்னார்களாகிலன்றோ? ஆஸ்சர்யமாவது; தேவரீர் அருளிச்செய்தீரென்றால் ஆஸ்சர்யமோ? ஆஸ்சர்யமன்றென்னு மிடத்துக்கு ஹேதுக்கள் சொல்லுகிறது மேல்; (தர்மஜ்ஞ) தர்மங்களில் வெளிறு கழிந்த தர்மம் சரணாகதரக்ஷண மென்று அறியு மவரல்லீரோ. (லோகநாத) அவ்வளவேயோ? சிறியதைப்பெரியதுநலியாதபடி நோக்காதொழிந்தால் குறையாம்படியான ஸ்வநிர்வாஹகத்வத்தையுடையீரல்லீரோ? (ஸுகாவஹ) உம்முடைய நிர்வாஹகத்வம் து:க்கநிவர்த்தகமான வளவேயோ? ஸுகாவஹத்வமுமாகவன்றோ இருப்பது. (ஸத்த்வவாந்) "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே" என்று போந்த நீர், நான் "வத்யதாம்" என்ன, "ந த்யஜேயம்" என்று நெஞ்சில் தூய்மையையுடையவரல்லீரோ? (ஸத்பதே ஸ்தித:)-அபிமதமானவர்களையும் பஹிஷ்கரித்துச் செய்யவேண்டும்படி சரணாகதரக்ஷணத்தில் நிஷ்டரானவரல்லீரோ? (ஆர்யம் த்வம் ப்ரபாஷேதா: யத்) ஸர்வலோகமும் உம்மை யொழியவே உம்முடைய வார்த்தையின் நிழலிலே ஒதுங்கலாம்படி நீர் சொன்னீரென்றது யாதொன்று; அதாகிறது-"தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்" என்றும்-"அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம" என்றுஞ்சொன்ன வார்த்தையை இஸ்ஸ்வபாவங்களையுடைய தேவரீர் அருளிச்செய்தீரென்று இதொரு ஆஸ்சர்யமோ? உம்மையொழிந்தாரொருவர் சொல்லிலன்றோ ஆஸ்சர்யமாவது.

கஉசு

தாத்பர்யம். ஸ்வாமி! ஸத்வகுண ப்ரதாநராய், உத்க்ருஷ்ட தர்மம் இன்னதென்றறிந்து, அதினால் ஜநங்களை யொரு உபத்ரவம் வாராதபடி ரக்ஷித்து, ஸுகப்ரதராய், இப்படி ஸந்மார்க்கத்தில் சலியாமலிருந்த ஸர்வலோக பூஜ்யரான தேவரீர், ஆஸ்ரித விஷயத்திலிப்படி யருளிச்செய்தது ஒரு ஆச்சர்யமா.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம், ஸர்க்கம், ௬௭-ம் ஶ்லோகம்.

—:o:—

அவதாரிகை. நம்முடைய வார்த்தையை நீர்கொண்டாடின இத்தால் ப்ரயோஜநமென் ! உம்முடைய நெஞ்சு தெளிந்தாலன்றோ இவனை ஸ்வீகரிக்கலாவது என்ன ; அதுக்கும் ஒருகுறையில்லை யென்கிறார்.

ஶ்லோ.—மம சாப்யந்தராத்மாயம் ஶுத்தம் வேத்தி விபீஷணம் ।
அநுமாநாச்ச பாவாச்ச ஸர்வத: ஸுபரீக்ஷித: ॥ ௧௨௭॥

அர்த்தம்.—மம-என்னுடைய, அயம்-இந்த, அந்தராத்மா-ஹ்ருதயமும், விபீஷணம்-விபீஷணனென்பவனை, ஶுத்தம்-தோஷரஹிதனாக, வேத்தி-அறிகிறது; அநுமாநாச்ச-ஹேதுவினாலும், பாவாச்ச-அபிப்ராயத்தினாலும், ஸர்வத:-எல்லாப்ரகாரங்களினாலும், ஸுபரீக்ஷித: (இவன்) செவ்வையாய்ப் பரீக்ஷிக்கப்பட்டான்.

வ்யா. (அநுமாநாச்ச) முகவிகாராதி லிங்கங்களாலும். (பாவாச்ச) அவனுடையவார்த்தை யுக்திகளாலே ப்ரகாஶிப்பிக்கப்பட்ட நெஞ்சில் மேன்மையாலும். (ச) ஶப்தத்தால் நான் "வத்யதாம்" என்றபோதோடு, நீர் "நத்யஜேயம்" என்றபோதோடு, திருவடி "விஜ்ருதேஷ்வஸ்யஸஜ்ஜந:" என்றபோதோடு வாசியறவனுகரவனு இருந்தபடியாலும். (ஸர்வத:) இப்படி ஸர்வப்ரகாரங்களாலும். (ஸுபரீக்ஷித:) ஸம்ஶயவிபர்யய ரஹிதமாக பரீக்ஷிக்கப்பட்டான். ௧௨௭

தாத்பர்யம். இந்த விபீஷணன் கபடத்தைவிட்டு ருஜுவாயே சரணாகதி பண்ணினானென்று எனக்கும் தோற்றுகிறது. ஏனென்றால், இவனுடைய முகமலர்த்தியாலும் கண்டத்வநி முதலானவைகளாலும் இப்படி ஸர்வப்ரகாரங்களாலும் இவனுடைய மநஸ்ஸை யாராய்ந்தோம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௬௮-ம் ஶ்லோகம்.

—:o:—

அவதாரிகை. இப்படி ஶுத்தஸ்வபாவனாகையாலும், அத்தாலே தேவர்க்கு ஸ்வீகார்யனாக ப்ராப்தனாகையாலும், நாங்களெல்லாரும் பெற்ற பேற்றை இவனொருவனும் பெறவேணுமென்கிறார்.

௧௭.— த்வரஸ்வ க்ஷிப்ரம் ஸஹாஸ்மாபி ஸ்வாமித்ரே ஸ்வத்து ராகவ |
விபீஷணோ மஹாப்ராஜ்ஞ ஸ்வாமித்வம் வாப்யுபைது ந:||

அர்த்தம்.—ராகவ - ரகுகுலத்திலவதரித்த ஸ்ரீராமனே! த்வரஸ்வ-ஆகையாலே, மஹாப்ராஜ்ஞ:-அத்யந்தம் புத்திமானான, விபீஷண:-விபீஷணாழ்வான், க்ஷிப்ரம்-சீக்ரமாக, அஸ்மாபிஸ்ஸஹ - எங்களோடுகூட, மித்ர:-ஸமாநராக, ஸ்வத்து-ஆகட்டும்; ந:-எங்களுக்கு ஸ்வாமித்வம்-தோழமையையும், உபைது-அடையட்டும்.

வ்யா. (த்வரஸ்வ-க்ஷிப்ரம்) "க்ஷிப்ரமேவ ஸமாகதே" என்று பதறிவந்தபடியாலும், "த்வம் ஸர்வம்" என்ற தேவர்படியாலும் விலம்பிதமா வின்றிக்கே யிருக்க, என்னாலே யாயிற்று அவனை ஸ்வீகரிக்கையில் விலம்பமுண்டாயிற்று; நான் தெளிந்த பின்பு சடக்கென விஷயீகரிக்கவேணும். (ஸஹாஸ்மாபிஸ்வாமித்ரே ஸ்வத்து) எங்களை எல்லாரையுங் கொண்டுகொண்ட அடிமையை இவனை யொருவனையுங் கொண்டு கொண்டருளவேணும். "கண்ணன்வானோடமருந் தெய்வத்தின மோரனையீர்களாய்" என்று நித்யஸூரிகளெல்லாரையும ஆழ்வார்க்கு ஒப்பாகச்சொல்லக்கடவதிறே. (ஸஹாஸ்மாபி:) இவரை அடிமைகொள்ளுமிடத்தில் இவர் ப்ரதானராய் இவர்க்கு நாங்கள் பரிகரபூதராய் அடிமைசெய்யும்படி விஷயீகரித்தருளவேணும். "ஸஹபத்ந்யா ப்ரயாதே". (ராகவ) ப்ரபந்ந பரித்ராணம் பண்ணுகைபோது ஸ்வரூபத்தை அழிக்கும்படியான குடிப்பிறப்பையுடையீரல்லீரோ. (விபீஷணோ மஹாப்ராஜ்ஞ:) ஜ்ஞானையாவது-நம்மை வருமையே பற்றாக விஷயீகரிப்பரென்றிருக்கை; ப்ராஜ்ஞனாகையாவது-ராவணஸம்பந்தத்தால் வந்த தோஷங்களைப் பாராதே விஷயீகரிப்பரென்றிருக்கை. மஹாப்ராஜ்ஞனாகையாவது-எத்தனையேனும் ஸுக்ரீவர் "வத்யதாம்" என்றாலும் தாம் பிற்காலியாதே இவனைத் தெளியவிட்டு விஷயீகரிப்பரென்றிருக்கை. இப்படி உம்மை உள்ளபடி அறியும் பேரறிவாளனல்லனோ? (ந: ஸ்வாமித்வமுபைது) "ஸஹாஸ்மாகம்" என்னும் படியே நான் பெற்றபேறு பெறவேணும்; எங்களுக்கு ஸ்வாமித்வத்தை அடையவேணுமென்றுமாம். "தோழன் நீ" என்று நீர் அடிமைகொள்ளுமாப்போலே அவனும் எங்களை அடிமைகொள்ளவேணும். ௧௮.அ

தாத்பர்யம். இந்தவிபீஷணனும் தேவரீருடைய த்ருடவ்ரதத்தையறிந்து சரணாகதிபண்ணி தேவரீரும் இவருக்கு அபயப்ரதானம் பண்ணினபடியாலே ஶீக்ரமாய் இவர் எங்களுடன் கூடி நாங்கள் செய்யுமடிமையைச்செய்து எங்களுக்கு மித்ராயிருக்கட்டும்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௩௯-ம் ஶ்லோகம்.

———(o)———

அவதாரிகை. மஹாராஜர் சொன்னபடியே தன் பேறாகக் கிட்டினாரென்கிறது.

ஶ்லோ.—ததஸ்ஸுக்ரீவவசோ நிஶம்ய தத் ஹரீஶ்வரேணா-
பிஹிதம் நரேஶ்வர: | விபீஷணேநாஶு ஜகாம
ஸங்கமம் பதத்ரிராஜேந யதா புரந்தர: ‖ ௧௨௯.

அர்த்தம்.—தத:-அதுக்குப்பிற்பாடு, தத்-அந்த, ஸுக்ரீவவச:-ஸுக்ரீவமஹாராஜருடைய வார்த்தையை, நிஶம்ய-கேட்டு, நரேஶ்வர:-ஜனங்களுக்கு நியாமகரான பெருமாள், ஹரீஶ்வரேண-வாநராதிபதியான ஸுக்ரீவனாலே, அபிஹிதம்-சொல்லப்பட்ட, விபீஷணேந-விபீஷணாழ்வானோடு, ஸங்கமம்-ஸமாகமத்தை, புரந்தர:-இந்த்ரன், பதத்ரிராஜேந யதா-பக்ஷிராஜரான கருத்மானோடு போல, ஆஶு-ஶீக்ரமாக, ஜகாம-அடைந்தார்.

வ்யா. (ததஸ்ஸுக்ரீவவசோ நிஶம்ய தத்) "வயஸ்யதாம்" என்ற மஹாராஜருடைய அநுகூலமான அந்த வார்த்தையைக்கேட்ட பின்பு, ப்ரீதியாலே பிறந்தவிசேஷம். (நிஶம்ய தத: நரேஶ்வரோ ஹரீஶ) அவ்வார்த்தையைக்கேட்ட பின்பு நரேஶ்வரருமானார். திருவடி வார்த்தையைக் கேட்டபோது தாம் உளரானார்; மஹாராஜர் வார்த்தையைக் கேட்டபின்பு ஸர்வநிர்வாஹகரானார். (ஹரீஶ்வரேணாபிஹிதம் விபீஷணேந ஸங்கமம்) ஸசிவராய்க்கொண்டு புகுரவொட்டோமென்றதாயே ஸசிவராய்க் கொண்டு விஷயீகரிக்கவேணுமென்கிறாரென்று கருத்து. (ஆஶு ஜகாம) கட்டுவிடப்பட்ட தர்ணவத்ஸயேநு கன்றின்பேரிலே விழுமாப்போலே சடக்கெனக்கிட்டினார். மஹாராஜருடைய வேஶ்மே

மறுவலிடில் செய்வதென்னென்று அவர் இசைந்தபோதே சடக்கெனக் கிட்டினுனென்னுமாம். (வாஸவஸ்ஸ வஜ்ரபாணிர்யதா) இந்த்ரன் தன் பேறாகப் பெரிய திருவடியைக் கிட்டினுற்போலே இவரும் தம் பேறாகக் கிட்டினுரென்கை. ௧௨-௬.

தாத்பர்யம். இப்படி ஸுக்ரீவ மஹாராஜர்சொன்ன வார்த்தையைப்பெருமாள்கேட்டு அவர் அநுமதி பண்ணினபடியே, த்ரிலோகாதிபதியான இந்த்ரன் கருத்மானேடு கலந்தாற்போலே, ஆகாசத்தில் நின்று மிறங்கிவந்த ஸ்ரீவிபீஷணுழ்வானேடு கலந்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

இதி ஸ்ரீயுத்தகாண்டே ஷோடசஸ்ஸர்க்க꞉.

யுத்தகாண்டம், ௧௭-ம் ஸர்க்கம், ௧௨-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. அநந்தரம்பெருமாளும் விஷயீகரித்து மஹாராஜரும் இசைந்ததுக்குப் பின்பு ஸ்ரீவிபீஷணுழ்வான் செய்தபடி சொல்லுகிறது.

௨௭.—ராகவேணாபயே தத்தே ஸந்நதோ ராவணாநுஜ꞉ |
விபீஷணோ மஹாப்ராஜ்ஞ꞉ பூமிம் ஸமவலோகயந் || ௧௩.
காத்பபாதாவநிம் ஹ்ருஷ்டோ பக்தைரநுசரைஸ்ஸஹ.

அர்த்தம்.—ராகவேண - ரகுகுலத்திலவதரித்த ஸ்ரீராமனுலே, அபயே-பயநிவ்ருத்தியானது, தத்தே-கொடுக்கப்பட்ட வளவில், ராவணாநுஜ꞉-ராவணஸுக்கு தம்பியுமாய், மஹாப்ராஜ்ஞ꞉-நல்லறிவையுடையருமாய், ஸந்நத꞉-செவ்வையாய் வணங்கி யிருக்கிற, விபீஷண꞉-விபீஷணப்பெருமாள், பூமிம்-பூமியை, ஸமவலோகயந்-பாராநின்றுகொண்டு, அநுசரை꞉-பின்தொடர்ந்துவந்த, பக்தைஸ்ஸஹ-ப்ரீதியுக்தராண ராக்ஷஸர்களோடுகூட, ஹ்ருஷ்ட꞉-ஸந்தோஷத்தையுடையவராய், அவநிம்-தரையிலே, காத்-ஆகாசத்தில் நின்றும், பபாத-விழுந்தார்.

வ்யா. (ராகவேண) வ்யவஸாயிதாணம் தமக்கு ஏற்றமன்றிக்கே குலமுயர்ச்சியென்கை. (அபயேதத்தே) "தத்தமஸ்யாபயம் மயா" என்றுதுஜீவித்தது மஹாராஜர் இசைந்ததுக்குப்பின்பென்கை.

(ராவணாநுஜ:-விபீஷண:ஸஞ்ஜாத:) "நநசேயம்" என்றிருந்த ராவணன் தம்பியாயிருந்து வைத்துப் பிறர் அள்ளியெடுக்க வேண்டும்படி திருவடிகளிலே வந்து விழுவதே! என்று ஐதி கொண்டாடுகிறான். (ஸுக்ரீவராஜ:ஸஞ்ஜாத:) தமக்கு க்ருதஜ்ஞராயிருந்துள்ள ஸுக்ரீவராஜப்ரப்ருதிகள் "வத்யதாம்" என்ன "நத்யஜேயம்" என்று விஷயீகரித்த உபகாரத்தை அறிந்தவனாகையாலே விஷயீகாரமாகிற ஸுக்ரீவோபகாரத்துக்குத் தோற்றுத் திருவடிகளிலே விழுந்தானென்கை. (ஹர்ஷம்ஸம்வேதயாமாஸ ஸஞ்ஜாத:) "ஏழையேதிலன் கீழ்மகனென்றிரங்கி" என்கிறபடியே என்னுடைய நிகர்ஷமும் பாராதே தம்முடைய பேறாக மேல்விழுவதே! என்று க்ருதஜ்ஞாவிஷ்டனாய்க்கொண்டு திருவடிகளிலே விழுந்தபடி. (பாத்வா தாவநிம் ஹ்ருஷ்ட: ஸக்தைரநுசரை: ஸஹ) ஸுக்ரீவராஜர் "வத்யதாம்" என்றபோது தரையிற்கால்பாவ விரகின்றிக்கே ஆகாஶஸ்தனாய் நின்றவன், அவர் தாமேசென்று அழைத்தபின்பு பிறந்த ப்ரீதிவ்யக்ஷத்தாலே பெருமாள் திருவடிகளளவுஞ் செல்லாதே ப்ரியவசீகரனாய்க்கொண்டு ஆகாஶத்தில் நின்றுங்கரையிலே விழுந்தான். "உத்பபாதகதாபாணி ஶ்ருதாஹி ஸஹராக்ஷஸை:" என்று அவன் ஶ்ரத்தாஸம்பத்ய மற்றபோது தாங்களும் ஸம்ப்ரமமற்றுப் போந்தார்கள்; "வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவைஸ்ஸஹ" என்று பயத்திலும் ஸாமிகளானார்கள்; ஸ்வீகாரத்திலும் அக்ஷம்பூதரானார்கள்.

இத்தால் சொல்லிற்றாயிற்று - ஒருவனைக் கண்ணழிவற்ற வைஷ்ணவனென்று நிரூபித்தால் அவனைப் பிரியமாட்டாத ஸ்நேஹத்தையுடையாரை ஸ்வீகரிக்கக்கடவதல்லவென்று கருத்து.

தாத்பர்யம். சரணாகதவத்ஸலரான பெருமாள், ஸர்வ ஸங்கங்களையும்விட்டுத்தம்மிடத்தில் சரணம்புகுந்த விபீஷணனுக்கு, தானவதரித்தகுலத்தில் பெரியோர்களநுஷ்டித்து பரம்பராப்ராப்தமான அபயப்ரதானம் பண்ணினபின்பு, விபீஷணப்பெருமாள், இவருடைய சத்ருவின் தம்பி யாயினும் பெருமாள் பண்ணின உபகாரத்தை யறிந்தவராய், தன்னுடன் ஸமஸுகதுக்கராய்ப் புறப்பட்டுவந்த நாலு ராக்ஷஸர்களோடு கூட மிகவும்ஸந்துஷ்டராய் பூமியைக் குனிந்துபார்த்து ஆகாசத்தில்நின்றும் பூமியிலிறங்கிவந்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௯-ம் ஸர்க்கம், ௩-ம் ச்லோகம்.

———(०)———

அவதாரிகை. பின்பு பதற்றந்தீர்ந்து பெருமாளுடைய திரு வடிகளைப் புகலிடமாக நினைத்து ஸபரிகரனாய் வந்து விழுந்தா னென்கிறது.

௨௧.—ஸ து ராமஸ்ய தர்மாத்மா நிபபாத விபீஷண: । ௧௩௧.
பாதயோ: சரணாந்வேஷீ சதுர்ப்பி: ஸஹ ராக்ஷஸை: ॥

அர்த்தம்.—ஸ:-அப்படிப்பட்ட, தர்மாத்மா-ச்ரேயோமார்க்கத்தில் மநஸ்ஸையுடைய, விபீஷணஸ்து - விபீஷணாழ்வானும், சரணாந்வேஷீ-புகலிடத்தைத்தேடினவராய், ராமஸ்ய-பெருமாளுடைய, பாதயோ:-திருவடிகளிலே, சதுர்ப்பி: - நாலுபேர்களாயிருக்கிற, ராக்ஷஸைஸ்ஸஹ-ராக்ஷஸர்களோடுகூட, நிபபாத-விழுந்தார்.

வ்யா. (ஸது) இப்படி கலங்கின கலக்கந்தீர்ந்த வேறுபாடு. (விபீஷணோ தர்மாத்மா) எல்லாவவஸ்தையிலும் சரணாகதிதர்மத்தில் நின்றும் நெஞ்சுகுலையாதே யிருக்குமவன். அதாகிறது-"வத்யதாம்" என்ற போதோடு, "சிக்ஷ்யதாம்" என்ற போதோடு, "ந த்யஜேயம்" என்ற போதோடு, "ஆநயைநம்" என்ற போதோடு, "ஸுக்ரீவஸ்யாபி ராகவம்" என்ற போதோடு வாசியற, "ராகவம் சரணம் கத:" என்று-தான்பற்றின பற்றிற் குலையாதொழிகை. (ராமஸ்ய பாதயோ: சரணாந்வேஷீ நிபபாத) தன் பக்கத்தில் சூடராகிமயத் தோற்றும்படி ஸுகுமாரமான வடிவையுடையராயுள்ளவருடைய. (பாதயோ: சரணாந்வேஷீ) ஸ்தநந்த்யப்ரஜை தாயினுடைய ஸ்தநாக்ரத்தையே ஆச்ரயமாகச் செல்லுமாப்போலே திருவடிகளிலே தனக்குப் புகலிடத்தை நினைத்தபடி. (நிபபாத) சிலர் அள்ளியெடுக்கும்படி விழுந்தான். (சதுர்ப்பிஸ்ஸஹ ராக்ஷஸை:) "தாளுந்தடக்கையுங் கூப்பிப்பணியுமவர்" என்னுமாப்போலே தன்னுடைய விழுக்காட்டிலே அவர்கள் அநுவ்ருத்தராம்படி விழுந்தான்.

௧௩௧௨.

தாத்பர்யம். விபீஷணன், சரணாகதிதர்மத்தையுறுதியாய் அவலம்பித்து ஆகாசத்தில் நின்றும் இறங்கி ப்ரஸந்ந முகராய், தனக்குப்

புகலிடத்தை யாராய்ந்து கொண்டு தன்னை யநுஸரித்து வந்த நாலு ராக்ஷஸர்களோடு கூட பெருமாள் திருவடிகளில் விழுந்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௮-ம் ஸர்க்கம், ௪-ம் ஶ்லோகம்.

———:0:———

௨௭.—அப்ரவீச்ச ததா ராமம் வாக்யம் தத்ர விபீஷண: | ௧௩௨.
தர்மயுக்தம் ச யுக்தம் ச ஸாம்ப்ரதம் ஸம்ப்ரஹர்ஷணம்||

அர்த்தம்.—விபீஷண:-விபீஷணாழ்வான், ததா - அப்போது, தத்ர-அக்கோஷ்டியில், தர்மயுக்தம்- தர்மத்தோடு கூடினதாயும், யுக்தம்-யோக்யமாயும், ஸாம்ப்ரதம்-இந்தக்காலத்தில், ஸம்ப்ரஹர்ஷணம் - ஸந்தோஷ ஜநகமாயுமிருக்கிற, வாக்யம் - வாக்யத்தை, ராமம்-ஸ்ரீராமனைக்குறித்து, அப்ரவீச்ச-சொன்னார்.

வ்யா (விபீஷண: அப்ரவீச்ச) "பாதயோர் ந்யபதத்" என்று காயிகமான ஶரணாகதியைப்பண்ணினான் கீழ்; அவ்வளவே பெருமாளுக்கும் அமைந்திருக்க அவ்வளவில் தனக்கு த்ருப்தியில்லாமையாலே வாசிகமாகவும் ஶரணம் புகுந்தான். (ததா) திருவடிகளிலே விழுந்த ஸமயத்திலே. (தத்ர) பெருமாளும் மஹாராஜரும் முதலிகளும் ஸந்நிஹிதராயிருக்கிற கோஷ்டியிலே. (ராமம்வாக்யம்) "ஸுக்ரீவம் சாப்ரவீத் ஸம்ப்ரேக்ஷ்ய" என்று-தன்னை நிவேதிக்கைக்காக மஹாராஜரையும் முதலிகளையும் குறித்துச்சொன்ன வார்த்தையன்றிக்கே ஶரண்யரான பெருமாள் தம்மைக் குறித்துச் சொன்ன வார்த்தை. (வாக்யம்) ஸ்வாபிப்ராயத்தை ஸவிஸ்தரமாகச்சொல்லுகை. (தர்மயுக்தம்) ஶரணாகதிக்கு அங்கங்களான தர்மங்களோடே கூடியுள்ளதை. (யுக்தம்) ஶரண்யவிஷயத்தைக் குறித்து ப்ரயோகிக்கிறதாகையாலே யுக்தமாயிருக்கை. (ஸாம்ப்ரதம் ஸம்ப்ரஹர்ஷணம்) "ராகவம் ஶரணம் கத:" என்றதுபோலே மஹாராஜருக்கும் வாநரர்க்கும் ஶ்ரவணகடுகமாயிருக்கையன்றிக்கே இப்போது எல்லார்க்கும் ஹ்ருதயங்கமமாயிருக்குமதாக. ௧௩௨.

தாத்பர்யம். விபீஷணன், வாநரஸேனையின் மத்யத்தி லெழுந்தருளியிருக்கிற பெருமாளைத் திருவடிதொழுது, அதுக்கு உபயுக்தமாயும், தத்கால யோக்யமாயும், அப்பொழு தெல்லாருக்கு மாநந்தஜநகமாயுமிருக்கிற வார்த்தையைச் சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௬-ம் ஸர்க்கம், ௫-ம் ஶ்லோகம்.

அவதாரிகை. அவ்வாக்யம் இன்னதென்கிறதுமேல்.

௨௭.—அநுஜோ ராவணஸ்யாஹம் தேந சாஸ்ம்யவமாநித: | ௧௩௩.

பவந்தம் ஸர்வபூதாநாம் ஶரண்யம் ஶரணம் கத: ||

அர்த்தம்.—அஹம்-நான், ராவணஸ்ய-ராவணனுடைய, அநுஜ:-தம்பியாயும், தேந-அந்த ராவணனாலே, அவமாநித:-திரஸ்கரிக்கப்பட்டவனாயும், அஸ்மி - ஆகிறேன். ஸர்வபூதாநாம்-ஸமஸ்தப்ராணிகளுக்கும், ஶரண்யம்-ரக்ஷகராயிருக்கிற, பவந்தம்-தேவரீரை, ஶரணம்-தஞ்சமாக, கத:-அடைந்தவனாக ஆகிறேன்.

வ்யா. (அஹம் ராவணஸ்யாநுஜ: தேநாவமாநிதோஸ்மி) இப்பாசுரத்தைச்சொல்லி முன்பே ஶரணம் புக்கானன்றோ? பின்னரவி இப்படி ஶரணம்புகுகிறது என்னென்னில், "ஸுக்ரீவம் தாம்ஶ்ச ஸம்ப்ரேக்ஷ்ய" என்று-ஸுக்ரீவரையும் பரிகரத்தையுங் குறித்து "நிவேதயத" என்கிற ப்ரயோஜநத்துக்காக, "ராகவம் ஶரணம் கத:" என்று - பரோக்ஷரூபேண சொன்னான் அங்கு, இங்கு "பவந்தம் ஶரணம் கத:" என்று இவர் தம்மையே குறித்துச் சொல்லுகையாலே பௌநருக்த்யில்லை. "அநுஜ:" என்கிற ஸ்வதோஷ ப்ரகாஶநம், ஆகிஞ்சந்யத்துக்கும் உபலக்ஷணம். (ஸர்வபூதாநாம் ஶரண்யம்) பாபிஷ்டனாயிருந்துள்ள ராவணன் கிடந்துள்ள குடலிலே கிடந்து அவனிலுந் தண்ணியனாகையாலே, "ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்ராதா" என்று-உம்முடைய ரோஷத்துக்கு ஆகாதவளவேயன்றிக்கே, "த்வாம் தாயிக்ஷ்வாவாஸநம்" என்று-அவனுக்கும் ஆகாதவெனக்கு ஶரணார்ஹரான தேவர்க்கும் ஆகாதாருண்டோ? (பவந்தம் ஶரணம் கத:) ஜ்ஞாநஶக்த்யாதிகளாலும் பூர்ணரான தேவரைப் புகலாகப்பற்றினேன். ௪௩௩-2

தாத்பர்யம். நான், மஹாபாபியான ராவணனுடைய தம்பி; அவன் என்னைப் போர அவமானமும் பண்ணினான்; ஆகையாலே நான கதிகனாய், ஸர்வர்க்கும் ரக்ஷகரான தேவரீரை சரணமாகவடைந்தேன்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

யுத்தகாண்டம், ௧௯ - ம், ஸர்கம், ௬ - ஶ்லோகம்.

——(०)——

ஶரணாகதியின் அங்கமான ப்ராப்யத்யாகத்தை வெளியிடுகிறான் விபீஷணன்.

மூ.—பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச | ௧௩௯.

ஹவதம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகாநி ச ||

அர்த்தம்.—மயா-என்னாலே, லங்கா - லங்காநகரமும், பரித்யக்தா-விடப்பட்டது; மித்ராணி-ஸ்நேஹிதர்களும், த்யக்தாநி-விடப்பட்டார்கள்; தநாநி - ஸம்பத்துக்களும், த்யக்தாநி - விடப்பட்டதுகள்; மே-என்னுடைய, ராஜ்யம்-ராஜ்யமும், ஜீவிதம்-ப்ராணனும், ஸுகாநி-ஸுகங்களும், (இவையெல்லாம்) ஹவத்கதம்-தேவரீரதீநமாயிருக்கிறது.

வ்யா. (பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச) ராவண ஸம்பந்தத்தால் வந்த லங்கையென்ன, தத் ஸம்பந்திகளென்ன, தத் ஆராவஸம்பாதமான தநமென்ன, மற்றும் போகாயிகங்களான ஸம்பந்தங்களை ஸவாஸநமாக விட்டு வந்தவன். இது ஶரணாகதிக்கு ப்ராதாநிகமாக த்யாஜ்யமான ப்ராப்யோபாஸகர்களுக்கும் உபலக்ஷணம். (ஹவத்கதம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகாநி ச) "ராஜ்யம்" என்று பரிக்ரஹங்களுக்கெல்லாம் உபலக்ஷணம்; "ஜீவிதம்" என்று யாவதாத்மபோஷகாஹாரங்களுக்கும் உபலக்ஷணம்; "ஸுகாநி" என்று உபயத்தாலும் வந்தஸுகங்களும் தேவர் திருவடிகளே; ஸகலமானங்களும் தேவர் திருவடிகளில் கைங்கர்ய வர்த்தத்திலே ஶேஷத்வம். "ஶாதாவிதாயாஸதயः" "ஹ்ராதாஸதஶ்ரவணாய ஶ்ருவிதாவஶராவவः" "சேலேய்கண்ணியரும்" என்னக்கடவதிறே. விட்டவை ஓர் உறவாக மாட்டாது. "ஸம்பந்தோவி நஸம்பந்த கூதநः வ்யாணகாயயோः | பாத்ர மித்ரகளத்ராதி ஸம்பந்தஃ ஶேஷதா" எல்லா உறவும் ஆக

வல்லீர் தேவர்; "வித்தாநி ச ஸுஹ்ருதஶ்ச தாராஶ்ச ராஜ்யாதயோ விதா: | த்வத்கைங்கர்யஸாம்ராஜ்யஸாம்யஸ்ய லேசவ:" என்னக் கடவதிறே. ௧௩௪

தாத்பர்யம். நான் என்னுடைய ஜ்யேஷ்ட ப்ராதாவான ராவணனாண்டுவரும் லங்கையையும், அதைச்சேர்ந்த ராஜபந்துக்களையும், மற்றுமங்குள்ள செல்வங்களையும் நசையறவிட்டு வந்தேன்; அல்பமான அவைகள் எனக்கு உபாதேயங்களன்று; ஏனென்றால், இந்த ராஜ்ய ஸுகமும், தந்மூலமான தநஸுகமும், அங்கபாநாதிஸ்ரக் சந்தநாதி ஸுகமும் இதெல்லாம் தேவரீருடைய கடாக்ஷ லப்யமான தேவரீருடைய கைங்கர்ய ஸுகத்தில் ஏகதேசங்கள்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௯-ம், ஸர்க்கம், ௭-ம் ஶ்லோகம்.

—:o:—

அவதாரிகை. இவர் தம் ஸர்வஸ்வதாநமான வார்த்தையைக் கேட்டு தமக்கு இவர்பக்கலுண்டான ப்ரீத்யதிசயமெல்லாம் கடாக்ஷத்திலே தோற்றும்படி விசேஷ கடாக்ஷம் பண்ணியருளி ஒரு வார்த்தை யருளிச்செய்கிறார்.

௨௭.—தஸ்ய தத்வசநம் ஶ்ருத்வா ராமோ வசநமப்ரவீத் | ௧௩௫.
வசஸா ஸாந்த்வயித்வைநம் லோசநாப்யாம் பிபந்நிவ ||

அர்த்தம்.—ராம:-ஸ்ரீராமன், தஸ்ய-அந்த விபீஷணனுடைய, தத்-அந்த, வசநம்-சொல்லை, ஶ்ருத்வா-கேட்டு, ஏநம்-இந்த விபீஷணனை, வசஸா-வார்த்தையினாலே, ஸாந்த்வயித்வா-நல்வார்த்தை சொல்லி, லோசநாப்யாம்-கண்களினாலே, பிபந்நிவ-பாநம்பண்ணுகிறவர்போல், வசநம் வார்த்தையை, அப்ரவீத்-சொன்னார்.

ஸ்ய (தஸ்ய) தன்னுடைய ஸர்வஸ்வங்களையும் விட்டுப் பெருமாளுடைய திருவடிகளையே சரணமாகப்பற்றினவனுடைய. (தத்வசநம் ஶ்ருத்வா) பெருமாள் திருவடிகளில் கைங்கர்யமே எனக்கு

ஸகமஹோஹாமங்களும் என்று சொன்னவார்த்தையைக்கேட்டு. (ஸ நம வவஸாவஸாநயிகா) ஸமவஸ்வ்ருத்தம் பாராதே நம்மை இங்ஙனே விஷயீகரிப்பதே! என்று ஹ்ருஷ்டராயிருந்துள்ள இவரைக் குறித்து ஶ்ராவணாயன்க்ஷாவணம் பண்ணுமாப்போலே வாயாலே இன்சொல்லைச்சொல்லி—அதாகிறது - நம்முடைய வைஹவத்தைச் சொன்னதே ஹேதுவாக, ராவணன் "கோநு ஹ்ஸவம் விபஸ்யாஸ வாக்யேதந்நிஶாவா ஸ்ருஷ்டு ஹஸ்தே நஹவேஸ்வாநுயிக்ஷு வாஸநமு" என்று-வரிஹவிக்கிற ஊமையிலே வந்து கைக்கொள்ளவேண்டாவோ? குறைவாளர்கள் செய்ததைப் பொறுக்கு மித்தனை யன்றேயென்கை. (யோவநாஷ்ராஸ்விபந்நிவாரஸ்வநஸ்ப்ர வீக்ஷ) அந்த இன் சொல்லாலே இவனை நீராக்கிக் கண்ணாலே பருகுவாரைப்போலே விஶேஷகடாக்ஷம் செய்தருளா நின்றுகொண்டு பெருமாள் ஒருவார்த்தை யருளிச்செய்தருளினார். "என்னில் முன்னம் பாரித்துத்தா னென்னை முற்றப் பருகினான்" என்னக்கடவதிறே. ௧௩௨.

தாத்பர்யம். விபீஷணப்பெருமாள் சொன்ன ப்ரார்த்தநா வாக்யத்தைப் பெருமாள்கேட்டு, அவர் மநோக்லேசங்கள் நீங்கும்படி நல்வார்த்தை சொல்லி, பூர்ணமாகக் கடாக்ஷித்து, அக்கடாக்ஷத்தாலவரையுருகும்படிபண்ணி, அவருடன் ஸம்பாஷித்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௯-ம் ஸர்க்கம், ௭-ம் ஶ்லோகம்.

—:0:—

கவதாரிகை. உம்முடைய விரோதிகளை அழியச்செய்து ராஜ்யத்திலே உம்மை அபிஷேகம் பண்ணக்கடவோம்; உம்முடைய எதிரிகளுடைய பலமிருக்கும்படி சொல்லீர் என்கிறார். அதாவது, நம்பக்கல் அநந்யப்ரவ்ருத்தியே உமக்கு ப்ரயோஜநமாகச் சொன்னீரே, காயிகமான வ்ருத்தியைப் பின்னைக் கொள்ளுகிறோம்; வாசிகமாயிருப்பதொரு வ்ருத்தியைப்பண்ணீர் என்கிறார். "யாயாவேஷாதஃவநு" ஸ்ரீவிபீஷணாழ்வானுடைய ஞானமலர்த்தி காண்கைக்காக.

௭௦.—வ்யாக்யை ௭௭ தஸ்ய ராக்ஷஸாநாம் பலாபலம் ௧௩௯.

அர்த்தம்.—ராக்ஷஸாநாம்-ராக்ஷஸர்களுடைய, பலாபலம்-ப்ராபல்யதௌர்ப்பல்யங்களை, மே-எனக்கு, தத்த்வத:-யதார்த்தமாக, ப்ரூஹி-சொல்லும்.

வ்யா. (ப்ரூஹி ராக்ஷஸாநாம் பலாபலம்) அவர்களிலே ஒருத்தனாயிருக்கிற அவனை விஜாதியருடைய பலங் கேட்பாரைப் போலே கேட்பானென்னென்னில்; "ந த்வம் ராக்ஷஸவேஷித:" என்னுமளவன்றிக்கே ராக்ஷஸஜாதியருமல்லர்; இவர் ஐக்ஷ்வாக வம்ஸ்யர் என்னும் நினைவாலே "பண்டைக் குலத்தைத் தவிர்ந்து" என்றும்-"குலந்தரும்" என்னுஞ் சொல்லலாம்படியிறே ஸமஸ்லேஶ்ரயணவைஷம்யமிருப்பது. "விப்ராத்த்விஷட்குணயுதாத்" ந தயாவிதமெய்தேந:' "தமராவார்". (மே தத்த்வத: ப்ரூஹி) ராக்ஷஸபலத்தை யழியச் செய்யக்கடவோமாய், அந்த பலத்தினுடைய அளவறியாத நமக்கு நிலவராயிருந்துள்ள நீர், நம்முன்பே எதிரிகளுடைய மிடுக்கைச் சொல்லுவதென்னென்றிராதே உள்ளபடி யெனக்குச் சொல்லுமென்கிறார். ௧௩.௭.

தாத்பர்யம். நாம் ராக்ஷஸர்கள் மேலெடுத்து விட்டிருக்கிறோம்; அவர்கள் பலம் நமக்குத் தெரியாது; நீரறிவீராகையால் அதை உள்ளபடி சொல்லும்; என்று பெருமாள் விபீஷணாழ்வானைப் பார்த்தருளிச்செய்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௧௯-ம் ஸர்க்கம், ௨௩-ம் ஸ்லோகம்.

அவதாரிகை. "அஹத்வா ராவணம் ஸங்க்யே ஸபுத்ரஜநபாந்தவம் । அயோத்யாம் ந ப்ரவேக்ஷ்யாமி த்ரிபிஸ்தைர்ப்ராத்ருபி: ஶபே" என்று-இவருடைய அபிஷேகபரிபந்தியாக பலத்தை நிர்ணயித்தார் பெருமாள்; இவரும், "ராக்ஷஸாநாம் வதே ஸாஹ்யம் லங்காயாஶ்ச ப்ரதர்ஷணே । கரிஷ்யாமி யதாப்ராணம் ப்ரவேக்ஷ்யாமி ச வாஹிநீம்" என்று-தாம் அடிமை செய்யும்படியைச்சொல்லுகிறார். பெருமாள் அருளிச்செய்தபடியே தாமும் விஜாதீயராய்ப்பேசுகிறார்.

௨௭.—ராக்ஷஸாநாம் வதே ஸாஹ்யம் லங்காயாஶ்ச ப்ரதர்ஷணே |
கரிஷ்யாமி யதாப்ராணம் ப்ரவேக்ஷ்யாமி சவாஹிநீம் || ௧௬௭.

அர்த்தம்.—ராக்ஷஸாநாம்-ராக்ஷஸர்களுடைய, வதே-கொலையிலும், லங்காயா:-லங்காபுரியினுடைய, ப்ரதர்ஷணே-சின்னாபின்னமாக்குகையிலும், ஸாஹ்யம்-ஸஹாயத்தை, யதாப்ராணம்-ப்ராணனுள்ளவளவும், கரிஷ்யாமி-செய்வேன்; வாஹிநீம் - ஸேனையை, ப்ரவேக்ஷ்யாமி-ப்ரவேசிப்பதும் செய்வேன்.

வ்யா. (ஸாஹ்யம்) என்றது-தேவர் அபிஷேகித்த கார்யத்தில் என்னுடைய ஸ்வரூபவைலக்ஷண்யம் தோன்றாதபடி அம்பெடுத்துக் கொடுக்கிறேனென்கிறார். (யதாப்ராணம்) என்று "ராவணாதேஸாத்ப்ராஜாவப்ராணேஷூபாதிதஷயாம்" என்கிற முதலிகளுடைய நிலையிலே நின்று பேசுகிறார். ௧௬௭.

பட்டர் ஸ்ரீபாதத்திலே அபயப்ரதாநங்கேட்டாரொரு ஸ்ரீவைஷ்ணவர் இவ்வுபகாரணத்திற்செய்ததாயிற்றென்னென்றுகேட்க, "ஸந்தோஷராயிருப்பார்ஶரணாகதராகார்" என்று உடையவர் வசனத்தாலே வசனத்தாலே தாவதேக்ஷித்து, "தோஷமூணங்கள் அப்ரயோஜகங்கள், வேதகர் நின்ற நிலையிலே ஶரணாகதிக்கு அர்ஹர்" என்று பெருமாள் திருவுள்ளத்தாலே ஸித்தாந்தம்.

தாத்பர்யம். தேவரீர் லங்கையி லெழுந்தருளி ஸமஸ்த பலத்தையுமழியச்செய்து ராவணனைக் கொல்லும் விஷயத்தில் என்ப்ராணனிருக்குமளவும் தேவரீருடைய ஸேனையிற் புகுந்து ஸஹாயம் பண்ணுகிறேன். என்று பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீவிபீஷணப்பெருமாள் சொல்லுகிறார்.

அபயப்ரதாநஸாரம் முற்றிற்று.

———:0:———

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௫௦ - ம் ஶ்லோகம்.

———:0:———

௨௮.—ந வாநா ஹாநி ஸஜ்ஜஷ்டா ஹாயிக்யா ஹுவ காஉதஃ |
வக்ஷ்யாமிவ நம் ராஜநு யதாஸ்டுமாஉஷளாவாஸ || ௧௬௮.

அவதாரிகை. ஸ்ரீவிபீஷணப் பெருமாள் ராவணனைவிட்டுப் பெருமாள் திருவடிகளிலே ஶரணம் புகுகிற இத்தைக்கேட்ட மஹாராஜர், வ்யதிக்ரமஜ்ஞனவிவன் விப்ரலம்பிக்கிறான், வத்யன் வத்யனென்று வார்த்தை சொல்ல; நமக்கு‡மூப்பானவிவர் நினைவு இதுவாயிராநின்றது; நம்முடைய நினைவு ஶரணாகதரக்ஷணம் பண்ணுகையா யிராநின்றது; மேல் செய்யும்படி யென்னென்று ஸந்தேஹப்பட்டு இத்திரளில் நமக்காவாருண்டோ வென்று, "ஸுஹ்ருதா ஹ்யர்த்தக்ருச்ச்ரேஷு யுக்தம் புத்திமதா ஸதா | ஸமர்த்தேநாபி ஸந்தேஷ்டும் ஶாஶ்வதீம் பூதிமிச்சதா" என்று-பத்தும் பத்தாக வெண்ணவல்லனாய், ராமகோஷ்டியின் றியிலேஸஜீவநனாய், அறுதியிட்டாற்போலே செய்து முடிக்கவல்லனாய், நின்ற நிலைக்கு நன்மைவேணுமென் றிருக்குமவனுமான பந்துவால், கார்யஸந்தேஹங்களிலின்னபடி செய்யத் தகுமென்று சொல்லுகை ப்ராப்தமன்றோ வென்று ஸாசிவ்யத்திலே பெருமாளருளிச்செய்ய, "அஜ்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித் த்ரிஷு லோகேஷு ராகவ | ஆத்மாநம் பூஜயந் ராம ப்ருச்சஸ்யஸ்மாந் ஸுஹ்ருத்தயா" என்று-தேவரீர் திருவுள்ளத்தில் கிடவாததுண்டோ? ஒன்றுமறியாத வடியோங்களைக் கேட்டருளுகிறது எங்களைத்திருவுள்ளம் பற்றின நன்மையிறே; இதெல்லாங்கூடப் பெருமாள் நீர்மையிருந்தபடி யென்னென்று நாட்டார் தேவரீரைக் கொண்டாடுகைக்கிறே என்று விண்ணப்பஞ்செய்து பின்னையுஞ் சோறிட்டுவளர்த்த மஹாராஜர்க்காக மாட்டாதே, அவர் தமக்குங் கூடமுதலியாரான பெருமாளுக்காகவும் மாட்டாதே அவிமர்ஶமாக, பரீக்ஷித்துக் கொள்ளவேணுமென்பாரும், ஸர்வதா ஶங்கநீயனென்பாரும், ஸஹஸா விஶ்வாஸயோக்யனல்லனென்பாருமாய்க் கொண்டு, அங்கதஶரப ஜாம்பவத்ப்ரப்ருதிகள்,*ஸம்ஶயிதமாகச் சொன்ன வார்த்தைகளைக்கேட்ட திருவடி, இவர்கள் நினைவு நினைவாகப் பெருமாளை யிழக்கவாகாதே புகுகிறதென்று பயப்பட்டு யுக்திகளாலே இவர்கள் பக்ஷங்களை யழித்து, பெருமாள் திருவுள்ளத்துக்கநுகுணமாகவும், ஶாஸ்த்ரோசிதமாகவும், அவஸரோசிதமாகவும், வார்த்தை சொல்லக்கோலி, முதலிகள் சிவட்கென்னாதபடி அவையடக்கமாக ஹேதுவாதங்களாலே சொல்லுகிறவனல்லேன், பெருமாள் பக்கலா

‡ மூப்பர் - ப்ரதாநர்.

ஷாரத்தாலும், ராஜகார்ந்தா னிதுவாகையாலும், கஷு்ஷூகியினு டைய இனிமையாலும், நானுமொரு வார்த்தை சொல்லப்புகுகிறே னென்கிறான்.

வ்யா. (நவாஷானாவி ஸஜ்ஷ்ர ஞாயிகஸ்ரஹ வகாரத:) நாட்டாரொரு ஸஷஸூக்களிலே யிருந்தா லொருத்தருக்கொருத்தர் மிகைக்க வார்த்தை சொல்லும்போது இவ்வோ ஹேதுக்களாலே யிறே, அவை யொன்றுமல்ல இப்போதென்கிறான். (நவாஷாக) மௌரவரான உங்களோடே எனக்கொரு விவாதமுண்டாய், அத் தாலே ஶூத்ரஹஸஹிதனய்ச்சொல்லுகிறே னல்லேன். (நாவிஸஜ் ஷ்ரக) விஹீஷணன் பக்கலி லெனக்கொரு பக்ஷபாதமுண்டாய் அத்தாலே அது செய்துதரவேணுமென்று நிர்ப்பந்தத்தாலே சொல் லுகிறேனல்லேன். (நாயிகஸ்ரக) "ஜத: ப்ரத்யவர: கஶ்சி ஸ்ரீவஸநியௌ" என்றிருக்கிறவனுகையாலே உங்களிற்காட் டில் நான் மிகைக்கச் சொல்லுகிறே னல்லேன். (நவகாரத:) பிச்சனாய் நிவாரகனின்றியே வேண்டிற்றுச் சொல்லுகிறவ னல் லேன்.

அன்றியிலே, (நவாஷானாவி ஸஜ்ஷ்ரஞாயிகஸ்ரஹவ காரத:) வாதவித்ணாஜல்ஹிநிவேஶங்களாலல்ல. (நவாஷாக) "வீதராமகயாவாத:" என்று ப்ராமணயுக்திகளாலே தக்வநிஷ் ஷ்ம் பண்ணிவிடுகையென்றொரு பாரஷாஷமாய்ச் சொல்லு கிறவனல்லேன். (நாவிஸஜ்ரக)வைதண்டிகனய் கஸதூரஞ் சொல்லியாகிலும் பிறரை யழிக்கவேணுமென்று ஶூத்ரஹஸனய் அத்தாலே சொல்லுகிறவனு மல்லேன். (நாயிகஸ்ரக) "ஜல்போஸ்ய விஜய:ஹவழ" என்று ஜல்கமாய்ச்சொல்லிப் பிறரைஜயித்து ஓராயி கஸ்த்துக்காகச்சொல்லுகிறவனுமல்லேன். (நவகாரத:)விஹீஷணன் பக்கலிலே ஒருகஷ்லஸ்நேஹயாலேசொல்லுகிறவனு மல்லேன். ஒருநஞ்ஞையிட்டு இவை தோறும் அழித்துக் கொள்ளாதேதனித னியே நஞிட்டது-இவை தனித்தனியே நிரபேக்ஷஹேதுக்களென் லும்,இவை யித்தனையும் தன் பக்கலில்லை யென்கைக்குமாக.

(வக்ஷ்யாமி) ||அமைத்துச்சொல்லுகிறவனல்லேன்; உங்களுக்கும் பக்ஷமாய் ஈஹாராஜருக்குந் திருவுள்ளமாகில் அப்போது சொல்லக் கடவேனத்தனை. (வவநடு) "வக்ஷ்யாமி" என்னச்செய்தே, வவநமென்னென்னில்; * வாகஂவவதிபோலே யாகவுமாம். அன்றியிலே சொல்லுமிடத்தில் கிடக்கிற காரியவெள்ளத்திலு மிதொரு காரியக்ஷேபமோ என்று முடியாதபடி, * கஷூ஡ஂவக்ஷி" இதிவவநமாய் பாகுபப்பரப்பற்று, விவக்ஷிதாகஷ஡வாவுகமாகச் சுருக்கினாற்போலே, சொல்லுகிறேனென்று ஸ்வப்ரயோஜநமாகவுமாம்.

* க. (ராஜநு) நீங்கள் ராஜாக்களாகையாலே, எதிர்த்தாரை யழிக்கவும், அடைந்தாரைக் காக்கவும் வேணுமென்று சொல்லுகிறேன். * உ. (ராஜநு) நீங்கள் ராஜாக்களாய் நான் ஈக்ஷியாய்க் காரியஞ் சொல்லுமவஸரமாகையாலே சொல்லுகிறே னென்றுமாம். * ங. (ராஜநு) "விஷீண஡ாமாயஉநவோராஜாநஃ" என்று நாங்கள் சொல்லப்புகுகிற வகூ஡ந்தான் உம்முடையநெஞ்சிலே தோற்றும்படியான நெஞ்சில் அகலமுடையராய்த்தோற்றினாலு மடக்கி வைக்குமவருமாகையாலேசொல்லுகிறே னென்றுமாம். * ச. (ராஜநு) நாங்க ளேதேனுஞ் சொல்லப்புக்கால் ஈவத்தைக் கடுத்துக்கொண்டிருக்கையன்றிக்கே, "வ்யஜாஸ்ராவ்யநாமஞ்ஜுநத" என்றும் "ரஞ்ஜநாத் ராஜா" என்றும், குளிரமுகந்தந்து கேட்டபடியாலே சொல்லுகிறே னென்றுமாம்.

முகந்தந்தோமென்றால் தோற்றிற்றுச்சொல்லுமத்தனையோவென்ன; * க. (யயாகூ஡ம்) ஸம்ப்ரதிவஞமல்ல, ஶாஸ்த்ரங்களில் யயோக்தமானவகூ஡ம். * உ. (ராஜநுயயாகூ஡ம்) "ஸத்யஂராஜஸாஷோஹதே" என்றுஉண்மையொழியராஜாக்கள் பாடடேறுமோ. * ங. யயாகூ஡ம்) ப்ரமாணயுக்திகளாலே தன்னுண்மை யன்றிக்கே கூவாயித மாயிற்றிருப்பது.

ஹேதுவசநங்களில்லை யென்றாகிலும் சொல்லுகிற ப்ரகார மென்னென்னில்; * க. (ராஜமௌரவர்சு) ஹேதுஹாஸங்களில்லையென்றே னத்தனைபோக்கி ஸர்வஜ்ஞ ஹேதுவுமில்லை யென்

|| அமைத்து - நியமித்து.

றேனே. * உ. (ராமகௌரவாத்) இதுக்கு முன்பு பிறந்த வார்த்தைகள் "அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்... நது ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய" என்ற பெருமாளுக்கு அஸஹ்யமாகையாலே இச்சிரித்த முகத்தையிழக்கப்புகுகிறோமென்கிற பயத்தாலே சொல்லுகிறேன். அன்றியிலே,* ௩. (ராமகௌரவாத்) என்று "ஶரணாகதவத்ஸல:" என்கிறபடியே "ஶரணாகதரக்ஷணேராமகௌரவாத்" என்றாய், ஶ்ரணாகதரக்ஷணத்திலே பெருமாள் விருப்பத்தாலே சொல்லுகிறேனென்றாகவுமாம். நம்முடைய வக்ஷத்துக்கு விருத்தமாக நம்முடைய வஶிகரமான நீ சொல்லப்பெறுவையோவென்ன; * ௪. (ஸவதோதாவிராமகௌரவாத்) உமக்குங் கூடப்பேணவேண்டும்படியான பெருமாள் கௌரவத்தாலே சொல்லுகிறேனென்றாகவுமாம். "ஆசார்யவிஷ்வோகாநாம் ஶாஸ்தா நாராயணோ குரு:" அன்றோ? அன்றியிலே,*ரு. "ராஜந்ராம" என்று-இருவரையும்ஸம்போதித்து "ஸவதோமௌரவாத்" என்றாய், நீங்கள் ஶாஸ்தாக்களாய் குருக்களாயிருக்க,நாங்கள் ஶாஸ்யராய் ஶிஷ்யர்களா யிருந்தால் "நியமாதிக்ரமம் ரஹஸி போதயேத்" என்று தப்பினவை விண்ணப்பஞ்செய்யவேணுமென்று சொல்லுகிறேனென்றாகவுமாம். அன்றியிலே,* ௬."ராஜந்" என்று மஹாராஜரை ஸம்போதித்து, (ராம கௌரவாத்) என்றாகிலுமாம். அன்றியிலே, * எ. (கௌரவாத்) என்று ஶத்ருபக்ஷத்தில்நின்றும் ஸேவம்பண்ணிக்குலைத்தழைப்பிக்க ப்ராப்தமாயிருக்க, வந்தவனை விடுகிறதென்னென்று ராஜகார்ய கௌரவத்தாலே யென்றுமாம். அன்றியிலே, * அ. (கௌரவாத்) என்று "அபி:ப்ராணாந்பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா" என்று ஶரணாகதரக்ஷணம் கர்தவ்யம் என்கிற விதிபலத்தாலே யென்றாகவுமாம். அன்றியிலே, * ௯. (கௌரவாத்) என்று ஶரணாகதரக்ஷணம் பண்ணிகோளென்று உங்களுக்கு ஓரேற்றம் வரவேணுமென்கிற இதுவே ஹேதுவாகச் சொல்லுகிறேன். அன்றியிலே, * ௧௦. (ராமகௌரவாத்) என்று "ஸ்வமத்ருஜாயஶஸ்யஞ்ச பலவீர்யவிநாஶநம்" என்றும், "ஶரணாகதஸந்த்ராணாம் நிஷ்க்ருதிர் நவித்யதே" என்றும், "ஆஸ்ரயஸ்ய க்ருதக்ஞஸ்ய ஸ்வம்ஸமத்வேஷ-

ரக்ஷித:" என்றும், ஶரணாகதரக்ஷணம்பண்ணுதபோது வரும் ஆந்ரு ஶம்ஸ்யப்ராவண்யத்தாலே சொல்லுகிறேனென்றாகவுமாம். அன்றி யிலே, * ௧௧. (ஶௌரவாஸ) என்று "விபீஷணஸ்து தர்மாத்மா ந துராக்ஷஸசேஷ்டித:" என்று எதிரிகையாலே *விடுத்திட்டு அவர்கள் தாங்களே வத்யோஸ்யனென்று சொல்லும்படியாய், தான் ஸாமாந்யயத்நமன்றியிலே ஶரணாகதியான விஶேஷயத்நநிஷ்டனு மான ஸ்ரீவிபீஷணப்பெருமாளுடைய வைலக்ஷண்யத்தாலே யென் றாகவுமாம். அன்றியிலே, * ௧௨. (ஶௌரவாஸ) என்று "ஜ்யேஷ்டா கந்யாநலா நாம விபீஷணஸுதா கபே। தயாஸௌ தேதாவ்யா தம்" என்று தன் பெண்பிள்ளையையிட்டுப் பிராட்டிக்கு ஆஶ்வாஸம் பண்ணுவித்தும், "நதூதவதம்ஸாஹஸந்தி" என்று - ராவணன் என்னைநலியப்புகவிலக்கியும், "ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ" என்று பிராட்டி விஷயத்தில் நல்வார்த்தை சொல்லியும், "யாவந்ந க்ருஹ்ணந்தி ஶிராம்ஸி பாணா ராமேரிதா ராக்ஷஸபுங்கவாநாம்" என்று-நமக்காக அண்ணனைப்பாராமற் சொல்லியும், "பாலஸ்த்வமத்யாவிபக்வபுத்தி:" என்றும் - "ஸ்வேவவத்யஶ்சதுர்மதிஶ்ச" என்றும்-இந்த்ரஜித்தைப் பாராமற்சொல்லியும், இப்படி அவன் நமக் குப் பண்ணின உபகாரப்ராசுர்யத்தாலே யென்றுமாம். அன்றி யிலே, * ௧௩. (ஶௌரவாஸ) என்று "ஸ்வஸ்தி தேஸ்து" என்று ஆகாஶஸ்தனாயும், "உத்பபாத கதாபாணி:" என்றுகையிலேபிடி த்த கதையிருக்கஸ்ப்ருஷ்டித்தவனைக்கரைய வடியாமையாலே ப்ராதிகூல்ய வர்ஜநமும், "வாலிநஞ்ச ஹதம் ஶ்ருத்வா ஸுக்ரீவஞ்சாபி ஷேசிதம்। ராஜ்யம் ப்ரார்த்தயமாநஶ்ச" என்று ஸோபாதிகாரணமாக விஶ்வஸித்துப் பற்றுகையாலே ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸமும், "பவந்தம் ஶரணம் கத:" என்கையாலே கோப்த்ருத்வவரணமும், "பவத்கதம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகாநி ச" என்கையாலே ஆத்மநிக்ஷேப மும், "ப்ராணாத்ஸ்வஸ்ஹாரே நஷ்டஸ்ஸேதாஉஸ்யாஸ்யாமிதம்" என்று தைந்யரூப கார்ப்பண்யமுமாகிற ஶரணாகதிலக்ஷணபௌஷ்க ல்யத்தாலே யென்றுமாம். அன்றியிலே, * ௧௪. (ஶௌரவாஸ) என்று- "நசாஸ்ய ப்ரவதோ ஜாதுலக்ஷ்யதே துஷ்டபாவதா। ப்ரஸந்நம்வ

* விடுத்திட்டு - தள்ளுண்டு.

உநஞாவி" என்றுதொடங்கி, வாஜெதசொல்லுகிற விடத்தில் ஒரு தோஷங்கண்டிலோம்;ஈவங்குளிர்ந்திருந்தது;சுஷ ஹூயனிப் படித்தேங்காதவன்; வாஜெ தடுமாறுதல், குழறுதல், வ்யாஹத மாகுதல், நாக்கு வறளுதல் செய்கிறதில்லை; சுவிவ்யயம் மறைத் தாலும்பின்னையும்பிட்டுக்கொண்டுபுறப்படும்; அதுகண்டிலோமாகை யாலே ஊஷனல்லன்,ஶஸஶாவன் என்கைக்கீடான யக்தவ்யாவ ரூத்தாலே யென்றாகவுமாம். ௧௩.௮

தாத்பர்யம்—லோகத்தில்நாட்டார்சொல்வதுபோல்என்னுடைய வாதஸாமர்த்யத்தால் பிறரை ஜயிக்கவேணு மென்றாவது, விபீஷண னிடத்தில் ப்ரீதியினாலே உம்மை நிர்ப்பந்திததாவது, உங்களைக்காட் டிலும பெரியவனென்றாவது, யதேச்சையாய்ப் பிதற்றுகைக் காவது நான்சொல்லவில்லை. என்னைப்போல தாஸர்கள் சொல்லும்வார்த்தை களைச் செவிகொடுத்து ஸந்தோஷமாய்க் கேட்கிறவரன்றோ தேவர். இப்போது நான்சொல்லுகிறது, விபீஷணன் நமக்குப்பண்ணின உப காரவிஶேஷத்தாலும், உத்க்ருஷ்டமான சரணாகதியை ஸலக்ஷணமாக ப்பண்ணினபடியாலும், இப்படிப்பட்ட இவரை ரக்ஷியாதபோது அந ர்த்தம் வருமாகையாலும், இவரை ரக்ஷித்தால் உங்களுக்குக் கீர்த்தி யுணடாகுமாகையாலும், இப்படிப்பட்டவரை ரக்ஷிக்கவேணுமென்று சாஸ்த்ரத்தில் விதிக்கிறபடியாலும், அன்றியிலே, ராஜகார்ய மிப்படி யேசெய்யவேண்டு மாகையாலும், ராஜாக்களான நீங்கள் மறந்ததை மந்த்ரியான நான் ஸமயத்தில் அறிவிப்பிக்க வேண்டு மாகையாலும், உமக்குங்கூட பூஜ்யரான பெருமாளுக்கு இவரைரக்ஷிப்பதிலுண்டான அபிநிவேஶத்தாலும் இது செய்யாவிடில் பெருமாள் ஸத்தை யழியு மாகையாலும், இப்படிப்பட்ட ஸமீசீநமான அநேக யுக்திகளாலே அபாதிதமாய் சாஸ்த்ரோக்தமான வர்த்தம்;இதைக்கேளீரென்று திரு வடி மஹாராஜரைப் பார்த்துச் சொல்லுகிறார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

ஸுந்தரகாண்டம், ௧௬ - ம் ஸர்க்கம், ௩௦ - ம் ஶ்லோகம்.

—(௦)—

ஹிமஹததநளிநீவ நஷ்டஶோஹா வ்யஸநபரம்பரயா திவீட்யமாநா | ஸஹசரரஹிதேவ சக்ரவாகீ ஜநகஸுதா க்ருபணாம் தஶாம் ப்ரபந்நா ‖ ௧௩.௯.

அர்த்தம்.—ஹிமஹததநளிநீவ - பணியினாலழிந்த தாமரைப் பூப்போல், நஷ்டஶோஹா - நசித்துப்போன அழகையுடைய, வ்யஸநபரம்பரயா-துக்கங்களின் வரிசையினால், அதிவீட்யமாநா - மிகவும்நெருக்குப்பட்டவளுமான, ஜநகஸுதா-ஜநகமஹாராஜாவின் பெண்ணான பிராட்டியானவள், ஸஹசரரஹிதா - தன்னுடன்கூட

ஸஞ்சரிக்கும் ஆண்பக்ஷியோடு பிரிந்த, சக்ரவாகீவ - சக்ரவாகப் பேடைபோலே, க்ருபணாம் - தீநமான, தஶாம் - அவஸ்தையை, ப்ரபந்நா - அடைந்தவளாக ஆனாள்.

ஏவ தாஸிகெ, பெருமாளைப்பிரிந்த வாற்றாமைதோற்ற எழுந்தருளியிருந்த பிராட்டிக்குப் போலி சொல்லுகிறார்.

இப்படி விரோதியைப் போக்கிச் செய்த தென்னென்னில், * ௧. (ஆஸீத்) வடிவில் புகரிலே தொடை கொள்ளலாம்படி யிருந்தார். *௨. (ஆஸீத்) நடுவுண்டான ராஜ்யப்ரம்சவநவா ஸாதிகளால் பிறந்த $ செறுப்புத் தீர்ந்து இப்போது லோககண்டகனை நீபட்டவாறே பெரிய தேஜஸ்வியாயிருந்தார். * ௩. (ஆஸீத்) “சவிஷிவஜ்ஞாயாராக்ஷஸேந்த்ரம்விசேஷண । க்ருத க்ருத்யஸ்ததாராம:” என்றும்ஸ்ரீ தகாரஞ்செய்யப்பெறுகையால் வந்த தீப்தியாகவுமாம். * ௪. (ஹதவாந் ஆஸீத்) ராவணனைக் கொன்றது ஜயத்தை யிட்டென்றிருந்தோம்; அங்ஙனன்றியிலே “நிஹத்ய ஹோதவிகராகர்த்த: க்ருத்ஸ்நேந சுக்ஷுஷா” என்று வ்ரதாவத்தைபிட்டுச் சுட்டுவிட்டா ரத்தனையா யிருந்தது. * ரு.

$ செறுப்பு - வருத்தம்.

(உபாத்யாதி:) "ததைவ ஸாங்க்யே நம: ஸாதிஸர்வஜ்ஞஸர்வஸாக்ஷி ஸர்வ ஸிதப்ரியோ" என்று நீபுகர் கொள்ளுகைக்குப்பற்றின க்ஷாத்ர தேஜஸ்ஸையுடைய கரிக்கொள்ளியாம்படி நிரவதிக தேஜோரூபரான வர். * சு. (உபாத்யாதி:) "ஸாரூப்யம்" என்றும் "தேஜஸாம் ராசிமூர்ஜிதம்" என்றும் "ஒண்சுடர்க்கற்றை" என்றும் தேஜ: பதார்த்தங்களையுடையத் திரளப்பிடித்து ஓரச்சுப்பிட்டாற்போலே யிருந்தார்.

(ஸஹஸ்ரநாமத்தில்) "விநாஶாய ச துஷ்க்ருதாம்" என்று உமியான க்ருதோதநத்தை யிட்டு உமியான வ்ருத்தத்தை ஸாதிக்க ஒண்ணாதாயிருந்தது; உதாஹரண விரோதி ராக்ஷஸனை வுன்னைக் கொன்றார். (உபாயோபேய ஸஹஸ்ரநாமத்தில்) ஸௌர்யவீர்யபராக்ரமாதி ஸர்வ கல்யாண குணங்களையுடைய இவர், "க்ரூராத்ம க்ஷுத்ரஸுத ஸர்வஸமர்த்த: ப்ரபோ நீஷ்ட ரூப ஶோபநவர: | ந்ருஶம்ஸ: பாபிஷ்ட:" என்று சொல்லுகிற ஸர்வ ஹேய குணரூபனை வுன்னைக் கொன்றார். (ப்ரஶாஸ்தா ஸஹஸ்ரநாமத்தில்) எல்லாருக்கும் நியாமகராயிருக்கிறவர் எல்லாருக் கும் கீழாய் நியாம்யனை உன்னைக் கொன்றார். (உபகாரக ஸஹஸ்ரநாமத்தில்) உபகாரகத்வ லக்ஷணரானவர் அபகாரக ஷனை வுன்னைக் கொன்றார். (ஸநாதந ஸஹஸ்ரநாமத்தில்) எப் போதுமுளராயிருக்கிறவர் காலைகதேஶவர்த்தியான வுன்னைக் கொன்றார். (அநாதிநிதந ஸஹஸ்ரநாமத்தில்) முதலும் நடுவும் முடிவுமில்லாத இவர் ஜந்மமும் ப்ராயமுமுடைய வுன்னைக்கொ ன்றார். (உபாதாந ஸஹஸ்ரநாமத்தில்) உபாதாநரான இவர் "வக்ஷோடணம் ராக்ஷஸ" என்கிற வுன்னை ஶரீரவிஶிஷ்டம்படி பண்ணினார். (தேஜஸ்வ ஸஹஸ்ரநாமத்தில்) க்ருதஜ்ஞராயிருக்கிற இவர் க்ருதக்ந னை வுன்னைக்கொன்றார். (யாதாஸஹஸ்ரநாமத்தில்) ஜயஸ்தாராயிருக்கிற இவர் யாத்ருக்களில் ஏகதேஶனை வுன்னைக் கொன்றார். (ஶரண்ய ஸஹஸ்ரநாமத்தில்) அப்ராப்யமான இவர் க்ஷுத்ர ப்ராப்யனை வுன்னைக் கொன்றார். (ஶ்ரீவத்ஸவக்ஷா ஸஹ

ஹதவாந்) பரத்வசிஹ்நங்களை யுடையவர் அபரத்வசிஹ்நங்களையுடைய உன்னைக் கொன்றார். (நித்யஶ்ரீ:ஸ்த்வாம் ஹதவாந்) நித்யாநபாயிநியான ஶ்ரீயையுடையவர் ஸாபாயிநியான ஶ்ரீயையுடைய உன்னைக் கொன்றார். (அஜேயஸ்த்வாம் ஹதவாந்) அபராஜிதரானவர் தன் பக்கல் பராஜயமேயான வுன்னைக்கொன்றார். (ஶாஶ்வதஸ்த்வாம் ஹதவாந்) போது செய்யாதவர் போது செய்கிற வுன்னைக் கொன்றார். (த்ருவஸ்த்வாம் ஹதவாந்) ஸ்திரஸ்வபாவராயிருக்கிறவர் அஸ்திரனான வுன்னைக்கொன்றார். (மாநுஷம் வபுராஸ்தாயஸ்த்வாம் ஹதவாந்) மாநுஷ்யமுடையவர் மாநுஷ்யமில்லாத வுன்னைக் கொன்றார். (விஷ்ணுஸ்த்வாம் ஹதவாந்) வ்யாபகரானவர் வ்யாப்யைகதேஶனான வுன்னைக்கொன்றார். (ஸத்யபராக்ரமஸ்த்வாம் ஹதவாந்) உண்மையான பராக்ரமங்களையுடையவர் அஸத்யபராக்ரமனான வுன்னைக்கொன்றார். (ஸர்வை: பரிவ்ருதோ தேவைஸ்த்வாம் ஹதவாந்) விலக்ஷணராலே சூழப்பட்டவர். ஹேயராலே சூழப்பட்ட வுன்னைக்கொன்றார். (வாநரத்வமுபாகதை: பரிவ்ருதஸ்த்வாம் ஹதவாந்) ராக்ஷஸனாய் ப்ரபலனான வுன்னை க்ஷுத்ரஜந்மங்களைக் கொண்டு கொன்றார். (ஸர்வலோகேஶ்வரஸ்த்வாம் ஹதவாந்) ஸர்வநிர்வாஹகராயிருக்கிறவர் ஏகதேஶநிர்வாஹகனான வுன்னைக் கொன்றார். (ஸாக்ஷாத்ஸ்த்வாம் ஹதவாந்) நேரே தனக்கொரு குற்றஞ் செய்யாமையாலே வாலியை மறைந்து நின்று கொன்றவர் நீ தீரக்கழிய தனக்குக் குற்றஞ் செய்தபடியாலே நேர்கொடு நேரே நின்று உன்னைக் கொன்றார். (லோகாநாம் ஹிதகாம்யயாஸ்த்வாம் ஹதவாந்) லோகஹிதத்துக்காக அஹிதனான வுன்னைக்கொன்றார். (மஹாத்யுதிஸ்த்வாம் ஹதவாந்) பெரியதேஜஸ்ஸையுடையவர் தேஜோஹீநனான வுன்னைக்கொன்றார். எதிரியைப்பெருப்பித்து அவனைக்கொன்றானென்றாலல்லவோ நாயகனுக்குப்பெருமையாவது; பெருமாள் பெருமையும் ராவணனுடைய அபகர்ஷமும் சொல்லப்பெறுமோவென்னில்; இவ்விடத்தில் நாயகனுடைய உத்கர்ஷாபகர்ஷங்களில் தாத்வ

ஹமில்லை; "மானுஷாணாம் விஷயே ஸ்த்ரீகாமோ விஜ்ஞ:| விநாஶ ஸ்த்ரவராக்ஷேணஸ்வயம்மேவ நாவஸ்த்ருதே" என்று பெருமாளைச் சிறியராகவும், ராவணனைப்பெரியனாகவும் ஹ்ருதித்துப்பெருமாளாலிவ னுக்கு வயங்கூடாதென்று நினைத்திருந்து அவரை யுக்திகளாலே தெளிந்து பெருமாள் பெரியர், ராவணன் ஓராஹாஸன் என்றறுதி யிடுகிறாளாகையால் ஓரநுவவத்தியுல்லை.

ஆகவிஷுதஶ்லோகியால் சொல்லிற்றாயிற்று, இவருடைய முன் செய்வினை வெளிப்பட்டு "ஸக்ருஜாநுஷோத்ரேண ராமேணய யிநிஜிதத: | நஹ்யவத்ரவஸோராஜநு கிலிஷம்ராக்ஷஸஷ்ஷஹ" என்று ராவணனை உத்க்ஷிப்த்துப் பெருமாளை உபாலம்ஹித்து ஸா வராயெயான மந்தோதரி ஶநதவ்யையாய் அவனுடைய ஸ்வ ரூபாரூபகுண விஹூதித்வவைஷகளைத் தெளிந்துபேசி ஸ்தோ த்ரஸவத்தாலே ப்ராயஶ்சித்தம்பண்ணி ஸம்ம்ருதையாகிறாள். ௧௪௪.

தாத்பர்யம்.—ஸர்வலோகஜேதாவான ராவணன் பெருமாள்திரு ச்சரங்களால் பட்டுவிழுந்திருக்க, தன்பதியான அந்த ராவணனையும் முன்னே எழுந்தருளியிருக்கிற பெருமாளையும் மந்தோதரி பார்த்து, இவர் இந்த்ராதிகளிலொரு தேவரோ வென்று விசாரித்து அவர்கள் ராவணனால் பலகால் தோற்றோடினவர்களாகையால் இவன் வதத்தி லவர்களாகக்கூடாதாகையால் இவர்ஸர்வவிலக்ஷணரான ஶ்ரியப்பதி, ராவண வதார்த்தமாக தேவர்கள் ப்ரார்த்திக்க ப்ரஹ்மாவின்வரத்து க்கு விரோதம்வாராமல் தன் ஸ்வரூபத்தைமறைத்து மநுஷ்யனாயவ தரித்தார் என்றுதான் நிர்ணயித்து, அவ்வர்த்தத்தை ராவணாதிகளு க்கு முபதேசிக்கிறாள்.

உபதேசிக்கிறபடி யென்னென்னில்; நாம், இவரொருமநுஷ்ய ரென்று எளிதாகநினைக்கும்படி நின்று கரன்முதலான துஷ்டர்களை ஸம்ஹரித்து தர்மத்தை நிலைநிறுத்தி அவ்வவர்க ளபேக்ஷித்தபடி தர் மாதிமோக்ஷாந்தமான புருஷார்த்தங்களையருளின ஸர்வ சக்தரானவி வர், ஸமஸ்த கல்யாணகுண பூர்ணருமாய் ஜகத்ரக்ஷணத்தி லுத்ஸா ஹித்து அதினுபாயங்களை யாராய்ந்து அதற்குவேண்டும் ஸஹாயங் களை ஸம்பாதித்து ஸர்வோத்தரயுக்திகுசலருமாய், ஸர்வாந்தர்யாமியு

மாய், ஸத்யஸங்கல்பருமாய் அப்ராக்ருத திவ்யவிக்ரஹ யுக்தருமாய் இக்குணங்கள் வந்தேறி யன்றிக்கே ஸார்வகாலிகமாக வுடையரு மாய், ஜந்ம ஜராமரணங்கள் முதலான விகாரசூந்யருமாய், கார்ய வர்க்கங்களில் பெரிதான மஹத்தத்வத்துக்கும் அதுக்கும் மேலான அவ்யக்தப்ரக்ருதிகளுக்கும் உத்க்ருஷ்டருமாய், ஸர்வாதாரமுமாய் ஸர்வசரீரியுமாய் ஸகல பலப்ரதருமாய் ஸர்வபோஷகருமாய், ஆச்ரிதரக்ஷணார்த்தமாகஎப்போதும் சங்கசக்ராதிபஞ்சாயுதங்களை யுடையருமாய், சேதனதோஷங்களைக் காணவொட்டாமல் மறைத்து அவர்களை அங்கீகரிப்பித்தும் அவர்களுக்கு ப்ராப்யையாயுமிருந்து ஒரு க்ஷணமும்பிரியாத ஸ்ரீதேவியையும் அவளுக்காவாணமாய் அசித்தத்வாபிமாநியான ஸ்ரீவத்ஸ மென்னும் மறுவையும் மார்விலுடையருமாய், ஸர்வதேசஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வர்க்கும்ஸர்வப்ரகாரத்தாலும் ஜேதாவுமாய், ஸர்வாதிகருமாய், ஸ்திரருமாயிருக்கிற ஸர்வேஶ்வரன்.

ஸமஸ்தவஸ்துக்களிலும் ப்ரவேசித்து அவைகளை வ்யாபித்து இருக்கிற அவர் தான் ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாயிருந்து, தேவர்களாலழிவில்லை யென்று ராவணனுக்கு வரங்கொடுத்த படியாலும் தேவர்களுக்கு முன்புராவணவதார்த்தமாக வரங்கொடுத்தபடியாலும் அவ்வரங்களை ஸத்யமாக்குகைக்காக உருவைமாறுடி ஸமஸ்த கல்யாணகுண பூர்ணராய் சத்ருக்களை யழிக்கைக்காக அதிக்ஷாத்ரமென்று ராவணன் கழித்துவிட்ட மநுஷ்ய சரீரத்தைப்பூண்டு, உன்னை யித்தனைகாலம் ஜயிக்கப்பட்டு அவமானத்தை யடைந்து தேஜோஹீநராய் ஸஞ்சரிக்கவும் பேசவும் பெறுதேயிருந்து இப்போது வாநரங்களாகத் தங்கள் ஸ்ரூபத்தை மறைத்து வந்தவதரித்து பெருமாளைப் பற்றி தேஜஸ்விகளாய் யுத்தத்தில் புகுந்து உன்னை ஜயிக்கயத்நித்து வீரவாதங்களைப்பண்ணி பெருமாளைப் புகழ்ந்துகொண்டு அவருக்கு சத்ருவதத்திலுபாயங்களைக் கற்பித்துக்கொழித்துக்கொண்டு நிற்கிற தேவர்களால்சூழப்பட்டு, எல்லார்கண்களுக்கும் விஷயராய், தனக்கு ரக்ஷணீயர்களான ஜநங்கள் க்ஷேமத்துக்காகவும். அபராதியை தண்டியாதபோது ராஜாவான தனக்குநேரிடும் பாபம் வாராமைக்காகவும் பாபியான உன்னைத் தண்டித்து உன் பாபங்களைப்போக்கி உனக்கு நன்மையைத் தருகைக்காகவும் பரதாராபஹாரமும் தேவ ராஜ பந்து

த்ரோஹங்களும் பண்ணிநின்ற உன்னை இந்தக் கார்யங்களில் ஸஹகாரிகளாய்ப் போந்த உன் பரிவாரத்துடன் தன் தேஜஸ்ஸினால் கொன்று மஹாதேஜஸ்வியாய் நின்றார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

— —

யுத்தகாண்டம், ௧௧௩-ம் ஸர்க்கம், ௪௪-ம் ஶ்லோகம்.

——:0:——

பிராட்டியுடைய அபயப்ரதாநஶ்லோகம்.

——(௧)——

பாபாநாம் வா ஶுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம |
கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்யதி || ௧௪௫.

அர்த்தம்.—ப்லவங்கம - வாநரமான (ஹநுமானே)! பாபாநாம் வா - பாபிகள் விஷயத்திலும், ஶுபாநாம்வா-புண்யவான்கள் விஷயத்திலும், வதார்ஹாணாம் - வதத்துக்கு யோக்யமானவர்கள் விஷயத்திலும், ஆர்யேண - உத்தமபுருஷனாலே, கருணம் - தயையானது, கார்யம் - பண்ணத்தகுந்தது; கஶ்சித் - ஒருவனும், நாபராத்யதி - அபராதம் பண்ணுகிறதில்லை (என்கிறது) ந - இல்லை.

அவதாரிகை. ராவணனும்பட்டு பெருமாளும் விஜயிகளானாரென்று பெரிய ப்ரியத்தைப் பிராட்டிக்குத் திருவடி விண்ணப்பஞ்செய்ய, பிராட்டியும் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே, விம்மல் பொருமலாய் ஸ்தப்தையாயிருக்க, இவனும் விக்கலுக்கு வெம்மாற்றம்போலே "கிந்நு சிந்தயஸே தேவி கிந்நு மாம் நாபிபாஷஸே" என்று பெரியப்ரியத்தை விண்ணப்பஞ்செய்தவெனக்கு ஒருமறுமாற்றஞ் சொல்லாதே தேவர் எழுந்தருளியிருந்த விருப்பென்னதானென்று திருவடி விண்ணப்பஞ்செய்ய, பிராட்டியும் உனக்கு ஸத்ருசமாகத் தரலாவதொன்றில்லாமைகாண் நான் பேசாதிருந்ததென்ன; இவனுமிவ்வளவிலே நம்மபேக்ஷிதத்தை விண்ணப்பஞ்செய்து கொள்வோமென்று பார்த்து தேவரைச்சுற்றும் முற்றும் நலிந்த ராக்ஷஸிகளாகி

ரூர்க்கு ஸ்த்ரீகளாய்த்து நம்மைணா நம்ஹாஸ்த்ரீகளாயிற்று; ராவண னுக்கு முன்னே சொல்லவேண்டுவதுஇப்பெண்பிள்ளைகளையாயிற்று; அவனுமிவர்களோபாதி கேடனல்லன்; இவர்களிப்போது பாம்புபட மடங்கினுற்போலேஇருக்கிறூர்களித்தனையாயிற்று; இவர்களைபஹு ப்ரகாரமாக ஹிம்ஸிக்கப்பாராநின்றேன்; "உஷ்டிஹி:பாணிஹி ஶ்ரேவ" என்று கையாலே குத்தியும், காலாலே துகைத்தும், நவ ங்களாலே ஶோஷித்தும், பற்களாலே கடித்தும், துண்டித்தும் "ஹிஹம்ஹிஹம்ஸ்ரைஷ்டூ" என்று பெருமாள் திருச்சரங்கள் செய்ததெல்லாம் நானே பண்ணப்பாராநின்றேன்; ஸமவஷவரமி களையும், ஊணிக்கும் க்ஷேத்திலே ஊணிக்கமுயலாநின்றேன்; முன்பு வந்தபோது இடமில்லாமல் விட்டுப்போனேனித்தனை; இப்போது எனக்கு எல்லா ப்ரத்யவகாரங்களும் பண்ணியருளிற்ருகலாம், இத்தனையுந் திருவுள்ளமாகவேணுமென்ன; "வாவா நாம்வா" என் றருளிச்செய்கிறுள்.

வ்யா. (வாவா நாம்வாஸாஹா நாம்வா) இவர்கள் நீ நினைத்திரு க்கிறபடியே வாஸ்த்ரீகளாகவுமாம், நான் நினைத்திருக்கிறபடியே ஸாஹைகளாகவுமாம்; அதுதானேயன்றே உத்தேஶ்யம்;"ஷோஷோ யஷ்விதஸ்ஸ்ராக" என்றூற்போலே. அழுக்குடையவனன்றோ குளிக்க ப்ராப்தியுடையான். அவர்கள்வாஸ்த்ரீகளாகிலன்றோ நாம் உவம் கொடுக்கவேண்டுவது. ஸாஹைகளாகில் உன்பால் வேணு மோ? அவர்கள் வணங்களே கைகொடுக்குமே. கைமுதலில்லா தார்க்கன்றோ கைமுதலாக வேண்டுவதென்றுள். (வயாணூணாஷ) ஊணூனை ஊணிக்கவும் அல்லாதாரைத் தவிரவுஞ் சொல்லுகிற யஷ்டி ஶாஸ்த்ரம் தேவரைத் தோற்றிக்கழித்துப் புகக்கடவதோ வென்ன; ஆரேனுமாக் ஶரணாமதரை ரக்ஷிக்கக்கடவதென்கிற விஶேஷ ஶாஸ்த்ரம் உன்னை தோற்றிக்கழித்துப் புகக்கடவதோ வென்கிறுள். (ஹூவஜூஉ) பின்னையுமவன் பாஸிதிரியவிடாமையாலே, ஹரிஹரி யென்கிறுள். "ஹூவஜூஉ" என்று நச்சினத்தை நச்சுஞ் ஜாதியான மை கண்டோமென்கிறுள். வஸிஷ்ட ப்ரஹ்ருதிகள் உஜ்ஜீவிக்கும்படி யான இக்ஷ்வாகுவம்ஶத்தில் பிறந்தாயில்லை; யோனிகளாய் ஜநக

க்ஷத்ரத்திலே பிறந்தாயில்லை; காட்டிலே பனையோடு பனைதாவித்திரிகிற ஜாதியிலே யிறே பிறந்தது; அங்ஙனொத்தாருக்கு ஸமாநமதியோட்டையது தெரியாதென்கிறாள். "வாநரோத்தம" என்றவள் தானேயிறே "ப்லவங்கம" என்கிறாள். ராஜாக்களுமாய் மூலையடியே நடக்கவுரியருமா யிருக்கிற பெருமாளும் எங்கள் முன்னித்தனை கோபித்தறியார்; நீ வாநரஜாதியா யிருந்துவைத்து இங்ஙனே கோபிக்கக் கடவையோ. (கார்யம் கருணமார்யேண) இவர்கள் பாருண்யவாதங் கிடக்க, இப்போ தோடுகிற ஊயநீயக்ஷமை யைப்பாராய். இவர்களுக்கு ஒரு ரக்ஷகனில்லையே, இப்போதிவ்வளவிலே நாமிரங்கவேணுங்காண். (ஆர்யேண) இவையெல்லா மிப்போது நான் கற்பிக்கவேண்டும்படியாவதே உனக்கு. (ஆர்யேண) வேதவ்யாகரணவித்தனென்கிறது பொய்யோ? அவையுமெல்லாங் கற்றுக் கேட்டிருக்கச் செய்தேயு மிப்போது ராஜகோஷ்டியில் வஸிவயமானபடி யாகாதே. அந்த கோஷ்டியில் வஸிவயம்-பழக்கமிறே. நீ இங்ஙனே சொல்லவல்லையாயிற்று, நான் பிறந்தபின் அக்கோஷ்டி இங்ஙன்னிறத்த தாகாதென்று கருத்து. (நகஶ்சிந்நாபராத்யதி) ஸம்ஸாரத்தில் குற்றமில்லாதாரார்? திரைநீக்கிக்கடலாடப்போமோ? நமக்குத்திரையனுக ஹாவித்திருக்கிற பெருமாள்தான் குற்றவாளரல்லரோ? நான்தான் குற்றப்பட்டவளல்லேனோ? நீதான் குற்றவாளனல்லையோ? பெருமாள் குற்றவாளரானபடி யென்னென்னில்; தாம்காடேறப்போந்தார்; அவர்பின்னே மடலூருவாரைப்போலே இளையபெருமாளும் போந்தார்; தம்மோடே வநவாஸஹோமம் பண்ணக்கடவதாக இலையகலப்படுத்திக்கொண்டு நானும் போந்தேன்; என்னைப் பிரிந்து பத்துமாஸமிருந்தார்; தான் வாராவிட்டால் தன்னதோரம்பு இயங்கமாட்டாமையில்லையிறே. இவ்வழி இத்தனை நாள் பிரிந்திருக்க வல்லரானபோதே பெருமாள் பக்கலிலே யல்லவே குற்றம்; பாரதந்த்ர்யத்துக் கநுரூபமாகப் பேசாதிராதே அதுதன்னைச் சொன்ன வென்பக்கலன்றோ குற்றம்; இன்றையகன் சொன்ன கார்யஞ்செய்த வடியாளை தண்டிக்கப் பார்த்தவன்று பெரு

மாளருளிச்செய்த கார்யஞ்செய்யப்போந்த வுன்னை முற்பட தண்டி த்துக் கொண்டன்றோ ராவணன் சொன்ன கார்யஞ்செய்த விவர்களைத் தண்டிப்பது ; ஆகையாலே நீ யல்லையோ குற்றவாளன். எல்லாப்படியாலும் பெருமாளொரு விஷயத்தை முனிந்தவன்று ஆறவிடுகைக்கு நானுண்டு; நானுமவர்வழியோடு போகவேண்டியிருந்தவன்று எனக்கு நீயுண்டென்றிருந்தேன்; நீயுமிங்ஙனேயானால் க்ரூரகார்யஞ்செய்வார்க்குப் புகலாவாருண்டோ வென்கிறாள். ௧௪௫.

தாத்பர்யம்.—திருவடி, லங்காபுரியில் ராவணவதாநந்தரம் பெருமாள் நியமநத்தைப் பெற்றுப் பிராட்டியை யழைத்து வருவதாக அசோகவநிகையிற் சென்று பிராட்டியை உபத்ரவித்துவரும் ராக்ஷஸிகளைக்கண்டு, இவர்களை சின்னபின்னமாக்கிக்கொன்றுவிடுகிறேன், இதையெனக்கு அநுமதிபண்ணவேணுமென்றுயாசிக்க, அப்பொழுது பிராட்டி, நீர் இவர்களை பாபிஷ்டர்களாக வெண்ணினீர்; ராஜாஜ்ஞையினால் தங்கள் ஜாதிக்குசிதமான கர்மங்களையநுஷ்டித்தபடியால் இவர்களைப் புண்யம் செய்தவர்களாக நினைக்கிறேன். இவர்கள் பாபிகளென்றீராகிலும் புண்யம்செய்தவர்களைப் புண்யமே ரக்ஷிக்குமாகையால் நமக்கு தயநீயர்பாபிகளே. நாமும் இவர்கள் பாபத்தையேயிறே அபேக்ஷித் திருப்பது. ஸாபராதரான இவர்கள் வதத்துக்கு யோக்யர்களேயாகிலும் துர்பலர்களாகையால் உத்தமபுருஷன் தயவுசெய்து இவர்களை ரக்ஷிப்பதே யுக்தம். சாஸ்த்ரத்தினுட்பொருளானவிது கிளையோடு கிளைதாவி மேல்மேலே ஸஞ்சரிக்கிற உமக்குத் தெரியாது. ஸாபராதனைத்தண்டியாவிடில் சாஸ்த்ரவிரோதம் வருமே யென்னில், ஸர்வஜ்ஞரான பெருமாள் தன்னை நம்பிவந்த வென்னைப் பத்துமாஸமாய் உபேக்ஷித்தார் ; நான் பாரதந்த்ர்யத்தை விட்டும் இவைகளைச் சொல்லவும் யத்நித்தேன் ; ராஜாஜ்ஞாபாலநம் இவர்களுக்கு தோஷமாகில் நீரும் ராமாஜ்ஞையை யநுஷ்டித்தீர் ; இதரர்கள் அபராதிகளென்பது கைமுதிகந்யாயஸித்தம். நிரபராதியான புருஷனில்லாமையால் தயைக்கும் விஷயமில்லாமல் போய்விடும். ஆகையாலிவர்கள் ரக்ஷணீயரென்று அபயப்ரதாநம் பண்ணினாள்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பாலகாண்டம், ௬-ம், ஸர்க்கம், ௮-ம் ஶ்லோகம்.

———:0:———

௨௯.—த்ருஷ்டும் ஶக்யமயோத்யாயாம் நாவித்வாந் ந ச நாஸ்திக꞉ ।
ஸர்வே நராஶ்ச நார்யஶ்ச தர்மஶீலா꞉ ஸுஸம்யதா꞉ ॥ ௧௪௩ ॥

அர்த்தம். அயோத்யாயாம் - அயோத்யாநகரத்தில், அவித்வாந்- பண்டிதனாகாதவன், த்ருஷ்டும்-பார்க்க, ந ஶக்யம்-யோக்யனல்லன்; நாஸ்திகஶ்ச -வைதிகமான வர்த்தமில்லை யென்பவனும், த்ருஷ்டும்-பார்க்க, ந ஶக்யம் - யோக்யனல்லன்; ஸர்வே-ஸமஸ்தமான, நராஶ்ச-புருஷர்களும், நார்யஶ்ச - ஸ்த்ரீகளும், தர்மஶீலா꞉ - தர்மத்தையே ஸ்வபாவமாகவுடையவர்களாயும், ஸுஸம்யதா꞉ - இந்த்ரிய ஜயமுடையவர்களாயு மிருக்கிறார்கள்.

ஸ்ரீ. அறுபதினாயிரமாண்டு வந்நியமறுத்து நன்மைகளையு முண்டாக்கிப்போந்த சக்ரவர்த்திக்கு மிரண்டு பொருளுண்டாக்கப் போச்சுதில்லை; ஓரவித்வானையாதல் வைதிகமான வஸ்துக்களை இல்லையென்பானொருத்த நாஸ்திகனை யாதலுண்டாக்கப் போச்சுதில்லை. அப்படை வீட்டிலுள்ளார் ராஜபுத்ரர்களாரேனுமொருவர் முடி சூடவமையாதோ என்றிருக்குமவர்களல்லர்; பெருமாளே முடிசூடாவிடில் "உபவேக்ஷ்யாமஹே ஸர்வே நஸேவவா | ராமேண ரஹிதாநாம் து கிமர்த்தம் ஜீவிதம் ஹி ந꞉" என்று பெருமாள் அபிஷேகம் பண்ணாத படைவீட்டிலிருப்பதில்லை. விழுந்தவிடமே சுடுகாடாகப் போகவமையும். என்றிருப்பர் புருஷர்கள்; ஸ்த்ரீகளும் "ராமமேவாநுகச்சந்த்வ ஸ்ருதிம்வாவிமஹத" என்று பெருமாள் வழி மாறிப் போனாரென்று திறக்கவழைத்த ஹஸ்தங்கள் ரக்தம் பிளக்க தள்ளிக்கதவடைத்துக்கொள்ளுவர்கள். (தர்மஶீலா꞉) ராமாநுவ்ருத்தியே தர்மமென்றிருக்குமவர்களிறே; ஸ்வப்ரயோஜனத்திலே நெஞ்சு செல்லாதவர்களாயிற்று. ௧௪௩.

தாத்பர்யம்.—அயோத்யா பட்டணத்தில் வேத சாஸ்த்ரங்களை யறியாதவனையும், தேவதா பரலோகங்களில்லை யென்பானையு மொருவனைக்காணவும் முடியாது. அங்கிருக்கும் ஸ்த்ரீபுருஷர்க ளெல்லாரும் ஸ்வப்ரயோஜனங்களை விட்டு பரமதர்மமான ராமாநுவ்ருத்தியிலேயே ஆஸக்தியுடையவர்களா யிருக்கிறார்கள்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

———

அயோத்யாகாண்டம் - ௧௭ - ம் ஸர்க்கம் - ௧௪ - ம் ஶ்லோகம்.

—(০)—

௨௯.—யஶ்ச ராமம் ந பஶ்யேத்து யம் ச ராமோ ந பஶ்யதி |
நிந்தித꞉ ஸ வஸேல் லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே ||

அர்த்தம்.—ய꞉-எவன், ராமம்-ஸ்ரீராமனையும், ந பஶ்யேத்து-காணாதிருப்பனோ; யம் - எவனை, ராமஶ்ச - ஸ்ரீராமனும், ந பஶ்யதி-பாராதிருக்கிறாரோ; ஸ꞉ - அவன், லோகே - உலகத்தில், நிந்தித꞉-தூஷிக்கப்பட்டவனாய், வஸேத் - வாஸம்பண்ணுவன்; ஸ்வாத்மாऽபி-தன்னுடைய ஆத்மாவும், ஏநம் - இவனை, விகர்ஹதே - நிந்திக்கிறது.

வ்யா. (யஶ்சராமம் ந பஶ்யேத்து) (ராமம்) என்கிறது கண்ணுக்கு வகுத்த விஷயத்தை ; காணாதிருக்கிறான் யாவனொருவன். (ய꞉) எத்தனையேனு முயர்ந்தவனாகவுமாம். (து) இது தப்பினாலும். தப்பாதது தப்பினால் வருமது இவ்வளவன்றென்கைக்காக விஶேஷிக்கிறது. (யம் ராமோ ந பஶ்யதி) எத்தனையேனும் சிறியாரும் இவர் கண்பார்வைக் கிலக்காகாதாரில்லை. (யம்) எத்தனையேனும் சிறியவனென்கிறது. எத்தனையேனும் சிறியாரிறே இவர்கண்ணிற் பார்வைக்கிலக்காவார். "யாருமோர் நிலைமையனென வறிவரியவெம்பெருமான் யாருமோர் நிலைமையனென வறிவெளிய வெம்பெருமான்". ப்ரஹ்மாதிகளுடைய ஜ்ஞாநத்துக்கும் அவிஷயமாயிருக்கும் ; ஓரிடைச்சிக்கும் வேடனுக்கும் கைபுகுந்திருக்கும். எத்தனையேனும் உயர்ந்தவனாகிலும் பெருமானுடைய ஒருவேளை புறப்பாடு காணானாகில் அவன் பெரியனல்லன்; எத்தனையேனும் சிறியனானவன் பக்கலிலும் தப்பாது அவருடைய பார்வை; தப்புகிறான் யாவனொருவன், அவன் அஸத்துக்களோடும் எண்ணப்படான்; எண்ணப்படாமையிலே எண்ணப்படும்; எல்லாரும் நிந்தித்து "சீ, சீ" என்னப்படும். இவனை நிந்திப்பார் வஸிஷ்டாதிகள் தொடக்கமானார் நால்வரிருவரோ வென்னில் ; (நிந்தித꞉ ஸ வஸேல்லோகே) (லோகே நிந்தித꞉) இவனை நிந்திக்கைக்குரியரல்லாதாரில்லை. விஷயப்ரவணனானவன், இப்போது பழியாய் மேல் நரகமாயிருக்கச்செய்தே, தான் "நல்லதுசெய்கிறோம்" என்றிருக்குமிறே; அப்படி தான் "நல்லது செய்கிறோம்" என்றிருக்குமோ வென்னில்; (ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே) தானும் தன்னை நிந்திக்

துக்கொள்ளும். திருக்கைத்தல மிழந்தவன், "இற்றைப் புறப்பாடு காணப்பெறுதபோம் கருப்பூரமும் எலுமிச்சங்காயும் பெற்றோமாகில் முடிந்து பிழைக்கலாயிற்று" என்றிருக்குமிறே. ௧௫௭.

தாத்பர்யம்.—எவ்வளவு பெரியனாகிலும் ஸ்ரீராமனைஸேவிக்காதவனும் ஸ்ரீராமன் கடாக்ஷத்துக்கு பாத்ரமாகாதவனும் லோகத்தில் நிந்திக்கப்படுவதே யல்லாமல் தன்னையும்தானே நிந்தித்துக்கொள்ளுவன். ௧௫௭.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அயோத்யாகாண்டம், ௧-ம் ஸர்க்கம், ௧-ம் ஶ்லோகம்.

௨௯.—கச்சதா மாதுலகுலம் பரதேந ததாநக:|
சத்ருக்நோ நித்யசத்ருக்நோ நீத: ப்ரீதிபுரஸ்க்ருத:|| ௧௫௮.

அர்த்தம்.—அநக: - தோஷமில்லாதவராயும், நித்யசத்ருக்ந: - எப்போதும் ஆத்மவிரோதியான இந்த்ரியங்களை ஹிம்ஸிக்கிறவராயும், சத்ருக்ந: - லவணாஸுரன் முதலான விரோதிகளைக் கொன்றவருமான சத்ருக்நாழ்வான், ப்ரீதிபுரஸ்க்ருத: - ப்ரேமத்தினால் முன்னே செய்யப்பட்டவராய் (ப்ரேரேபிக்கப்பட்டவராய்), ததா - அப்போது, மாதுலகுலம் - மாமாவான யுதாஜித்தினுடைய க்ருஹத்தைக்குறித்து, கச்சதா - போகாநிற்கிற, பரதேந - பரதாழ்வானாலே, நீத: - அடைவிப்பிக்கப்பட்டார்.

வ்யா.—(கச்சதா) என்கிற வர்த்தமாநநிர்த்தேசத்தாலே போகிறவிடத்தில் தனக்கொரு ப்ரயோஜநமுண்டாயாதல், இங்கே மாதாபிதாக்களைக் கேள்விகொள்ளுதல், ஸர்வஜ்ஞரான பெருமாளைக் கேள்விகொள்ளுமிவ்வளவுமின்றிக்கே அவனையொழிய ஜீவிக்கமாட்டாதபடியாலே போனானென்கை. (மாதுலகுலம்) யுதாஜித்தழைத்தது அவனை யாகையாலே போக்கிலபேக்ஷையு மவனுக்கு; இவனும் அவனபேக்ஷையைப் போனானென்கை. (பரதேந) ஸர்வத்தையும் துஞ்சி, பெருமாளும் ராஜ்யத்தைப் பொகட்டுப்போய், இளையபெருமாள் "தொடர்ந்து அடிமை செய்யவேணும்" என்றுபோய், சத்ருக்நாழ்வானும் "நின்னை யல்லதறியேன்" என்றிருக்கும் தசையிலும் ராஜ்யத்தை ஸ்பர்சிக்கக்கடவன்

என்றாயிற்று ஸ்ரீவஸிஷ்டபகவான் திருநாமம் சாத்திற்று; "பரத இதி ராஜ்யஸ்ய பரணாத்" என்றானிறே ஸ்ரீஶதாநீகன். (ததா) இருவரும் ராஜபுத்ரர்களாய் நக்ஷத்ர பேதமுண்டானால் பிரித்து ஸம்பத்தைவிட்டுப்போக ப்ராப்தமாயிருக்க அவன்போனதுவே ஸம்பத்தாகப் போனானென்கை. "மஹாத்மா" என்கிறதிலே ஸ்வபாவிகமன்றோ; "ததா" என்றதென்னென்னில்; அங்கு ஏகாநிவ்ருத்தியைச்சொல்லிற்று; இங்கு அதுக்காஶ்ரயமான ஸங்கல்பநிவ்ருத்தியைச் சொல்லுகிறது; ஆகையாலே புநருக்திதோஷமில்லை; ஶேஷத்வவிரோதியிறே இரண்டும். (அநக:) அகமில்லாதது இவனுக்கேயிறே. அகமாவது - உத்தேஶ்யவிரோதியிறே; இவ்விடத்திலகமாவது ராமபக்தி. இத்தை பாபமென்னப்போமோ வென்னில்; பாபத்தில் புண்யமும் நன்றாயிருக்க மோக்ஷவிரோதியாகையாலே புண்யமும் "ஸ்வஶ்ரேயோவிரோதீநி பாபாநி" என்று பாபஶப்தவாச்யமாயிற்றிறே; ஆகையாலே பரதாநுவ்ருத்தியாகிற உத்தேஶ்யத்துக்கு விரோதியாகில் ராமஸௌந்தர்யத்தில் கால்தாழுமதுவும் பாபமாமித்தனையிறே; "ராமே ப்ரமாதம் மா கார்ஷீ:" என்று ராமாநுவ்ருத்திக்கு இடைச்சுவராகச் சொல்லிற்றிறே ராமஸௌந்தர்யத்தை; பரதாநுவ்ருத்திக்கு இடைச்சுவரென்னுமிடம் சொல்லவேண்டாவிறே. (ஶத்ருக்ந:) பிள்ளைகளுடைய ஸந்நிவேஶங்களைப் பார்த்துத் திருநாமம் சாத்துகிற ஸ்ரீவஸிஷ்டபகவான், பெருமாள் கண்டாரையழகாலே துவக்கவல்லராகத் தோற்றுகையாலே "ராமன்" என்றும், இளையபெருமாளுக்குக் கைங்கர்யமே நிரூபகமாகத் தோற்றுகையாலே "லக்ஷ்மணன்" என்றும், திருநாமம் சாத்தினாற்போலே, இவருடைய ஸந்நிவேஶத்தைக் காணவே ஶத்ருக்கள் மண்ணுண்ணும்படியிருக்கையாலே "ஶத்ருக்நன்" என்று திருநாமம் சாத்தினான். (நித்யஶத்ருக்ந:) பாஹ்யஶத்ருக்களையன்றிக்கே ஆந்தரஶத்ருக்களான இந்த்ரியங்களை ஜயித்திருக்குமென்கை. அவ்விந்த்ரிய ஜயத்தினெல்லை எவ்வளவென்னில்; "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்கிற ராமஸௌந்தர்யத்திலும் துவக்குண்ணாதொழிகை. அதாகிறது - பெருமாளைப் பற்றும்போதும் தன்னுகப்பாலேயாதல், அவருடைய வைலக்ஷண்யத்தாலேயாதலன்றிக்கே தனக்குஶேஷியான இவனுகந்த விஷயம்

என்று பற்றுகை. (நீத:) ராஜாக்கள் போம்போது உடைவாள் மற்றொன்று கொண்டுபோமோபாதி அவன் கொடுபோகப்போனான். த்ரவ்யத்துக்கு த்ரவ்யாந்தரங்களோட்டை ஸம்யோகம் உபயநிஷ்டமாயிருக்குமிறே; அதுபோலன்றிக்கே ஜாதிகுணங்களோபாதி போனான். (ஸ்ரீமதா ராக்ஷஸ:) "ஜ்யேஷ்டாநுவ்ருத்திகதர்வம்" என்று போனானல்லன்; "ஸுஹாவஸ்தம்ஸ்யதி" என்றுபோன இளையபெருமாளைப்போலே போனவிடத்திலே ஸ்வஶேஷவ்ருத்தியும் பண்ணவொமென்று பாரித்துக்கொண்டு ஸ்ரீமதேர்பிக்கப்போனான். படைவீட்டி லிருந்தால் பலருண்டாகையாலே விழுக்காட்டோபாதியிறே விஸிப்பது. "நீத:" என்கையாலே ஶேஷத்வத்தில் கவிதத்வனாயிருக்கக்கடவன்; "ஸ்ரீமதா ராக்ஷஸ:" என்கையாலே ஸர்வாநுபவமான வ்ருத்தியிலே வைதந்த்யயாதாத்ம்யமான யஜ்ஞங்களுண்டாயிருக்கை; "படியாய்க் கிடந்துன்பவளவாய் காண்பேனே" என்றிறே குலியாழ்வார் வார்த்தை. "அநவ: நித்ய ஶத்ருக்ந:" என்று வாவநத்தாலும் ஹோமத்தைதயாலும் அவனையே பற்றினானென்னவுமாம். "அநவ:, நித்ய ஶத்ருக்ந:" என்றதுக்கு ப்ரயோஜநமென்னென்னில்; "ஸ்ரீஶத்ருக்நாழ்வான் பெருமாளுக்கு நல்லனானபடி, அவனை யல்லதறியாத ஸ்ரீபரதாழ்வானை யல்லது வேறொன்றறியாதபடியானான்" என்று எம்பெருமானாருளிச் செய்தார். இதுவே ப்ரயோஜநமாகில் சொன்னமிகையெல்லாம் பொறுக்குமிறே. கசஅ.

தாத்பர்யம்.—திருவயோத்யையில் தசரதசக்ரவர்த்தி தன்குமாரர்களுடன் ஸுகமே வஸிக்குங்காலத்தில், கேகயமஹாராஜன் தன்னுடைய தௌஹித்ரனான ஸ்ரீபரதாழ்வானைப் பார்க்கக்கோலி அவரை யழைத்து வரும்படி தன்னுடைய பிள்ளையான யுதாஜித்தை அனுப்ப, அவர் திருவயோத்யைக்குவந்து ஸ்ரீபரதாழ்வானை அழைக்க, ஸ்ரீபரதாழ்வானும் தன்னுடைய மாமாவான யுதாஜித்மஹாராஜருடைய திருமாளிகைக்கெழுந்தருள, அப்போது ஸ்ரீஶத்ருக்நாழ்வான், தன்னை யழைக்காமலிருக்கச் செய்தேயும் ஸ்ரீபரதாழ்வானிடத்திலுண்டான ப்ரீதியினால் அவரைவிட்டு அரைக்ஷணமும் தரிக்கமாட்டாதவராய், ஜிதேந்த்ரியராகையாலே தனக்குத்தேஶ்யமான கைங்கர்யத்துக்கு விரோதிகளான ராமஸௌந்தர்யாதிகளிலும் சாபல்யத்தைவிட்டுபாகவதகைங்கர்யத்தையேபரமபுருஷார்த்தமாகவெண்ணி, ப்ரயாணத்தில் தனக்கொரு கூபதிகம் பாராமல் அவரொழுந்தருளுகிற

போதே அவரை யநுவர்த்தித்து நிழல்போலே அத்யந்தம் பரதந்த்ரராயெழுந்தருளினார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அயோத்யாகாண்டம், ௫௩ - ம் ஸர்க்கம், ௩௧ - ம் ஶ்லோகம்.

—(:०:)—

ஶ்லோ.—ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ।
முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ॥ ௧௪௯.

அர்த்தம்.—ராகவ - ரகுவம்ஶத்தி லவதரித்த ஸ்ரீராமனே! த்வயா - உம்மாலே, ஹீநா - ரஹிதையான, ஸீதா - ஸீதாதேவி, ந - பிழைக்கமாட்டாள்; அஹமபி - நானும், ந ச - பிழைக்கமாட்டேன்; அபி ஜீவாவ: - பிழைத்தோமாகில், ஜலாத் - ஜலத்தில் நின்றும், உத்த்ருதௌ - எடுக்கப்பட்ட, மத்ஸ்யாவிவ - மீன்கள்போலே, முஹூர்த்தம் - க்ஷணகாலமே (ஜீவிப்போம்).

வ்யா. தேவரை யொழிந்தவன்று பிராட்டியு முளளாகாள்; அடியேனு முளனாகேன். தேவரையொழிந்தவன்று முதலிலே ஜீவிக்குமதுதானில்லை. (அபி ஜீவாவ:) யதிஜீவாவ:. (முஹூர்த்தம்) ஒரு க்ஷணகாலம். (ஜலாந்மத்ஸ்யாவிவ) ஜலத்தைப் பிரிந்த மத்ஸ்யம் ஜீவிப்பது அந்நீர் நசையறுமளவுமிறே; அப்படியே நில்லென்று சொன்னவார்த்தை உம்முடைய திருவுள்ளத்திலேயு முண்டென்றறியு மளவுங்காண் நாங்கள் ஜீவிப்பது. ௧௪௯.

தாத்பர்யம்.—ஸீதாபிராட்டியும் அடியேனும் தேவரீரைப் பிரிந்தால் ஜீவிக்கமாட்டோம். ஜீவித்தாலும் ஒருக்ஷணமே ஜீவிப்போம். எப்படியென்றால், மத்ஸ்யத்தை ஜலத்திலிருந்து வெளியிலெடுத்தால் அந்த ஈரமிருக்கும்வரையிலும் ஜீவித்து உலர்ந்தவாறே நசிக்குமாப்போலே, தேவரீரருளின வார்த்தை தேவரீர் திருவுள்ளத்திலோடுகிறதென்று அறியுமளவுமே ஜீவிப்போம்; அது தெரிந்தால் உத்தரக்ஷணமே முடிந்துபோவோம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அயோத்யாகாண்டம், ௮௬ - ம் ஸர்க்கம், ௧ - ம் ஶ்லோகம்.

—(०)—

ஶ்லோ.—ஆசசக்ஷேऽத ஸத்பாவம் லக்ஷ்மணஸ்ய மஹாத்மந:।
பரதாயாப்ரமேயாய குஹோ கஹநகோசர:॥ ௧௫௦

அர்த்தம்.—அத - இதுக்குப் பிற்பாடு, மஹாவநே வஸத: - காட்டில் வஸிக்கிற, குஹஸ்ய - குஹப்பெருமாள், மஹாத்மந: - மஹாநுபாவரான, லக்ஷ்மணஸ்ய - இளையபெருமாளுடைய, ஸத்வ்ருத்தம் - நல்நடத்தையை, அப்ரமேயாய - அபரிமித ப்ரபாவத்தையுடைய, பரதாய - பரதாழ்வானையும் பொருட்டு, ஶ்ரவணே - சொன்னார்.

அவதாரிகை. (ஶ்ரவணேலக்ஷ்மணஸத்வ்ருத்தம்) இத்யாதி. ஸ்ரீபரதாழ்வான் வாராநின்றானென்று ஸ்ரீகுஹப்பெருமாள் கேட்ட வநந்தரம் இளையபெருமாள் செய்ததை யெல்லாம் சொல்லத் தொடங்கினார். "வந்தபோது செய்யும்படி சொல்லுகிறதென்; ஓடம்நின்றதே, கோலிருந்ததே, தானும் தன் பரிகரமும் அக்கரைப்படும்படி காண்கிறேன்" என்று ஶங்கிதனாயிருந்தான்; அநந்தரம் ஸுமந்த்ரனுள்ளிட்டார் வந்து, "இளையபெருமாள் ஸ்வபாவம்போலே காண் பரதாழ்வானுடைய ஸ்வபாவமிருப்பது, அவனை நீ காணவேணுங்காண்" என்ன, இவனும்போய்க் கண்ட வநந்தரம் "இவனுடைய ஸ்வபாவமிருந்தபடியென்" என்று ஆஶ்சர்யப்பட்டு இவனுக்கு நம்மால் கொடுக்கலா முபஹாரமென்னென்று பார்த்து, இவனுக்கு ஸத்ருஶமான உபஹாரம் இளையபெருமாள் ஸ்வபாவங்களாமித்தனை என்று அவற்றைச் சொல்லத் தொடங்கினான்.

வ்யா. (ஶ்ரவணேலக்ஷ்மணஸத்வ்ருத்தம்) ஸத்வ்ருத்தமாகிறது - ஸத்துக்களுடைய ஆசாரம். "ஸஞ்சயஸாயம்ஸாவஶ:" "ஸாயவ: க்ஷீணதோஷாஸ்து" என்கிறபடியே ஸத்துக்களாவார் க்ஷீணதோஷரிறே. ஸாவம் ஆசாரம். ஒருவன் அபிஜ்ஞன், அபிஜாதன், விதான், என்றறிவது அவர்கள நுஷ்டாநங் கொண்டிறே; அப்படியேயிறே இவனுடைய வநுஷ்டாநமும். பெருமாள் கண்வளர்ந்தருளுகைக்குப்பூக்களறுப்பது, படுக்கைபடுப்பது, தாமரையிலையைப் பறித்து தண்ணீரை முகந்து திருவடிகளை விளக்குவது, பின்னையும் தண்ணீரை முகந்து அமுதுசெய்யப்பண்ணுவது, ஶேஷித்தத்தை பிராட்டியை யமுதுசெய்யப்பண்ணுவது, கண்வளர்ந்தருளப்பண்ணி கையும் வில்லுமாய்க்கொண்டு நம்மையுங்கூட வசிர்த்து நோக்குவதாய் காணுமவருடைய ஆசாரமிருந்தபடி என்று அவர்வ்ருத்தாந்தத்தைச் சொல்லத் தொடங்கினார். (லக்ஷ்மணஸ்யமஹாத்மந:) கடலைச்கையாலே இறைக்கத் தொடங்கினார். (லக்ஷ்மணஸ்யமஹாத்மநஸத்வ்ருத்தம்

ஸுஹ்ருதேயாயஸாதாய ஸ்ரூவவக்ஷ) கழியின் பெருமையைக் கட லுக்குச்சொல்லத்தொடங்கினார். (ஸாதாயாவஸ்யேயாயாவவக்ஷ) ஶேஷஸமதனானல் "நான்பணி செய்யக்கடவேன்" என்று சொல்லியோ பணிசெய்வது; அதுகிடக்க, "அஹம்ஸர்வம்கரிஷ்யாமி" சொல்லிற்றெல்லாம் செய்யக்கடவேனென்று வ்ருதிஜெஜ்பண்ணி "ராஜ்யத்திலேஇரீர்" என்ன, மாட்டேனென்று பின்போகை ஶேஷ ஸ்வரூபமோ? நெருப்பிலே புகச்சொன்னாராகில் அத்தைச் செய் தல், அதிநன்றும்படியான ராஜ்யத்திலிருக்கச் சொன்னாராகில் அத் தைச் செய்தல், பின்போகச் சொன்னாராகில் அத்தைச் செய்தல், இப்படி சொல்லிற்றுச் செய்கை யன்றோ ஶேஷஸ்வரூபம். (மஹ:)நெடுநாள் வலிவயித்த ஸாதனுக்கு ஒருநாள் ஶிஷித்த மஹன் சொல்லும்படி யாவதே; இன்னாரின்னார்க்குச் சொல்லுகை என்றில்லையாகாதே; கற்றவர்களா மித்தனையாகாதே வேண்டுவது. (மஹநமோஸ:) காட்டில் மரத்திலும் மட்டையிலும் பழகிப்போந்த விவன் இளையபெருமாள் படிகளைப் பேசிப்போந்தபடி கண்டதே! என்று ஜஷிகொண்டாடுகிறான். அங்ஙனன்றிக்கே, பெருமாளுடைய வ்ருதிரேகத்தில் தூற்றிலே தலைமடுத்துக்கொண்டு கிடந்தவன் ஸாதனைக் கண்டவாறே புறப்பட்டானென்னுதல். ௧௫௦.

தாத்பர்யம்.—சித்ரகூடத்தி லெழுந்தருளியிருக்கிற பெருமானைத் திருவயோத்யைக்கு மீட்கஉத்தேசித்து ஸ்ரீபரதாழ்வானெழுந்தருள, அவ்வரண்ய வாஸியான குஹப்பெருமாள், ஸ்ரீபரதாழ்வானுடைய ராமபக்தி முதலான அமேயமான ப்ரபாவங்களைக் கண்டு ஆச்சர்யப் பட்டு இவருக்கு உபஹாரமாக அபரிமிதவைபவரான இளையபெருமாளுடைய பெருமாள் விஷயமான ப்ரீத்யதிசயத்தையும் அவர்கைங்கர்யத்தி லபிநிவேஶத்தையும் இன்னும் இப்படிப்பட்ட ஸதாசாரங்களையும் சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அயோத்யாகாண்டம்-௨௩-ம்ஸர்கம்-௨௪-ம் ஶ்லோகம்.

௪௦.—ராஜ்யஞ்ச தவ ரக்ஷேய மஹம் வேலேவ ஸாகரம் |
ப்ரதிஜாநாமி தே வீர மாபூவம் வீரலோகபாக் || ௧௯௪.

அர்த்தம்.—ஸாகரம் - ஸமுத்ரத்தை, வேலேவ-கரைபோலே, அஹம் - நான், தவ - தேவரீருடைய, ராஜ்யஞ்ச - ராஜ்யத்தையும்,

ரக்ஷயிஷ்ய - ரக்ஷிக்கக்கடவேன்; வீர - ஸமர்த்தரானவரே! தே - தேவரீருடைய (எதிரில்), ப்ரதிஜாநாமி - ப்ரதிஜ்ஞை பண்ணுகிறேன். (இப்படி செய்யாவிடில்), நாஹம்ஸ்யாம் - (வஸ்துவாக) இருக்கமாட்டேன், வீரலோகபாக் - வீரரான தசரதர் அடைந்த லோகத்தை யடையக்கடவேன்.

வ்யா. (ராஜ்யஞ்சதவரக்ஷயிஷ்ய) "ரக்ஷயிஷ்யதி ஸௌம்ய" என்கிறபடியே உம்முடைய ரக்ஷணம் பண்ணுகை யன்றிக்கே உம்முடைய ராஜ்யத்தையும் ரக்ஷிக்கக்கடவேன். எனக்கு தாஸ்யம் ஸ்வரூபமானாலும் உம்மாலென்னை மீறவொண்ணாது காணும். (ஸமுத்ரஸ்யேவ வேலா) கடலுக்குக்கரை சேஷமாயிருக்கச் செய்தேயும் கரையை அதிக்ரமிக்கமாட்டாதிறே கடல்; அப்படியே, "நீர்பெரியீர்" என்று, உம்மாலென்னை விஞ்சவொண்ணாது காணும். (ப்ரதிஜாநாமி) நானிப்படி ப்ரதிஜ்ஞை பண்ணுகிறேன். (தேவீர) ஒருகோழை முன்னேயோ நான் ப்ரதிஜ்ஞை பண்ணிற்று; ப்ரதிஜ்ஞை பண்ணினால் அத்தைத் தலைக்கட்டித் தரவல்ல ஆண்பிள்ளைத் தனமுடைய உம்முடைய முன்னே யன்றோ? (நாஹம்ஸ்யாம்) இப்படி செய்திலேனாகில் உம்முடைய ஸந்நிதியில் வதிக்கப்பெறா தொழிகையன்றிக்கே உம்முடைய ராஜ்யத்திலும் வதிக்கப்பெறாதவனாகிறேன். (வீரலோகபாக்) உம்மை முடிசூடி யநுபவிக்கப் பாரித்து அதுபெறாதேபோன சக்ரவர்த்தி புக்க லோகம் புகுகிறேன்.

தாத்பர்யம்.—ஸமுத்ரத்தின் கரை ஸமுத்ரத்தைக் காப்பதுபோல் தேவரீருடைய சேஷபூதனான அடியேன் தேவரீரையும் தேவரீருடைய இந்த ராஜ்யத்தையும் காப்பாற்றக்கடவேன். இதை தேவரீர் தலைக்கட்டிவைப்பீரென்று தேவரீர் முன்னில் ப்ரதிஜ்ஞைபண்ணுகிறேன். இப்படி செய்யாவிடில் என்னுடைய ஸ்வரூபமழிந்து தேவரீரைவிட்டு தசரதர்போன லோகத்துக்குப் போகக்கடவேன்; என்று வநவாஸம்போக யத்நித்தகாலத்தில் வருந்திக்கொழுந்தருளக் கூடாதென்ற அபிப்ராயமாக ஸ்ரீகௌஸலையார் முன் பெருமாளைப் பார்த்து இளையபெருமாளருளிச்செய்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அயோத்யாகாண்டம், ௧௭ - ம் ஸர்க்கம், ௧௪ - ம் ஶ்லோகம்.

——(०)——

உ௩. யேதாநராஜ்ஞோ லாநஹ்ந்த ஸ்வேஷ்டே தே உபஸ்தேஷ்டதவ:|

ஶோகபாரேண வாக்ராந்தா ஶயநம் ந ஜஹௌ ஸ்ம ஹி|| க௫௨.

அர்த்தம்.—ராகவே - ஸ்ரீராமனுக்கு, ஸுஹ்ருத: - ஸ்நேஹிதர்கள், யேது - எவர்களோ; ஸர்வே - ஸமஸ்தமான, தே - அவர்கள், ஶோகபாரேண - துக்காதிக்யத்தினால், ஆக்ராந்தா: - ஆக்ரமிக்கப்பட்டவர்களும், விசேதஸ: - அறிவில்லாத மனஸ்ஸையுடையவர்களுமாய், ஶயநம் - படுக்கையை, ததா - அப்போது, ந ஜஹு: - விட்டார்களில்லை.

வ்யா. (யேது) வக்ஷ்யதியிற் போக்கைய நுஸந்திப்பண்ணினன், ஸ்ரீகௌஸல்யையார் அநுஶாஸநம் பண்ணிவிட்டாள்; அவ்வளவன்றிக்கே பத்தொன்பதாம் ஸர்க்கையாயிற்று தோழன்மார் படி. (ராகவே ஸுஹ்ருத:) தாய் தகப்பனுக்கு மறைத்ததையும் வெளியிடும்படி யுட்புக்கவர்களிறே தோழன்மாராகிறார். தங்களைப் பேணாதே அவனுக்கே நன்மையை யெண்ணிப்போந்தவர்கள் படுகுலைப்பட்டார்களென்கிறது. (ஸர்வே தே) ஒரு விஶேஷியாக ஸாத்விகதிபெற்றிருக்குமாப்போலே. (விசேதஸ:) ஸுஹ்ருத்துக்களாகில் எழுந்திருந்து காலைக்கட்டி மீளாதொழிவானென்னென்னில்; அறிவுகலந்தால் செய்யுமத்தை நெஞ்சில் வெளிச்செறிப்பில்லாதபோதும் செய்யப்போகாதிறே. அறிவு கெடுகைக்கு ஹேது வென்னென்னில்; (ஶோகபாரேணாக்ராந்தா:) மலையமுக்கினாற் போலே ஶோகம் அமுக்காநிற்கச் செய்வதென். (ஶயநம் ந ஜஹுஸ்ததா) படுக்கையை விட்டெழுந்திருந்தார்களாகில் மீட்டுக்கொண்டு புகுந்த வாசியன்றோ; தாந்தாமே படுக்கையிற் கிடந்து போந்தவர்களன்றே.

கஙு௨.

தாத்பர்யம்.—திருவயோத்யையில் பெருமாள் காட்டுக்கெழுந்தருளின வநந்தரம், பெருமாளுக்கு நன்மையை யெண்ணிப்போருகிற தோழன்மார்கள் ராமவிரஹத்தை ஸஹிக்கமாட்டாமல் துக்கத்திலே அமுக்குண்டு செய்யவேண்டுவதின்னதென்றறியாமல் படுக்கைவிட்டெழுந்திருக்கமாட்டாமலிருந்தார்கள்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஆரண்யகாண்டம், கஙு-ம் ஸர்கம், உக-ம் ஸ்லோகம்.

—:0:—

௩௦.—ஸாவஜ்ஞந க்ருதஜ்ஞந யஜ்ஞந வ லக்ஷ்மண।

ஶபா ஷ்டேந யஜ்ஜா நவப்யுத: வித்ா ௩௦கஙு௩.

அர்த்தம்.—லக்ஷ்மண - லக்ஷ்மணனே! ஸாவஜ்ஞ - அபிப்ராயத்தை யறிந்தவராயும், க்ருதஜ்ஞ - பண்ணவேண்டும் ப்ரகாரத்தைத் தெரிந்து கொண்டவராயும், யஜ்ஞ - தர்மஸ்வரூபத்தை யறிந்தவராயும், புத்ரேண - புத் என்கிற நரகத்தில் நின்றும் ரக்ஷிக்கத்தக்கபிள்ளையுமான, த்வயா - உம்மாலே, உதாரசிலரான, பிதா - தகப்பனாரான தசரதர், மே - எனக்கு, நஷ்ட: போகவில்லை.

வ்யா. (ஸாவஜ்ஞ) "க்ரியதாம்" என்று சொல்லுகிறவரிறே இளையபெருமாள்; இப்படி செய்யவல்ல நீர் நம்மைக் கேட்டதென்னென்கிறார். வண்ணமான யைச்சமைத்த வநவாஸம்சொல்லுகிறவாறெதையிறே. (ஸாவஜ்ஞ) அல்லாதவை சொன்னாலும் தாமும் பிராட்டியுமாய் வனவாஸமாயிருக்குமிடங்கள் சமைக்கும்படி இளையபெருமாளுக்குப் பெருமாளருளிச் செய்யாரிறே; நெஞ்சாலே நினைக்கு மித்தனையிறே; இன்னினைவறிந்து செய்தார். (க்ருதஜ்ஞ) அதுவேயன்றிக்கே, செய்து போரும்படி யறிந்து செய்தார். அறுபதினாயிரமாண்டு ஜீவித்த வஸ்வதிக் கெடுநாள்மலடுநின்று பிள்ளை பெற்றவனைகையாலே இவரென் னினைத் திருக்கிறாரோ என்று நினைவை யாராய்ந்தும், இவர்க்கெத்தாலே என்னகுறைவருகிறதோ வென்று பொருந்து மிடங்கள் பார்த்தும், அவன் செய்து போருமடைவு அறிவராயிற்று. (யஜ்ஞ) நினைவறிந்தாலும் செய்துபோருமடைவறிந்தாலும் தானும் ராஜபுத்ரனை பின்பு எனக்குமோரிருப்பிடம் வேண்டாவோ வென்மிருக்கு மவனுக்கு இது செய்யவொண்ணாதிறே; அங்ஙனன்றிக்கே, அத்தலையில் காதசையே நமக்கு ஸ்வரூபமான பின்பு பின்னை யத்தலைக் குறிப்பாகச் செய்து போருமதே நமக்கு வகுத்தது என்று அத்தலைக்காகச் செய்யுமத்தையே தமக்கு கதமென்றிருப்பர். (த்வயேதி). தாமுள்ளவன்று தாமுளராய் தாம் போனவன்றைக்கும் உம்மைவைத்துப் போனாரேயென்கிறார். (புத்ரேண) "புத்" என்று ஒரு நரகவிசேஷமாய் அதில் புகாதபடி நோக்குமென்றாயிற்று புத்ரனென்று பேராகிறது; ஐயருக்கு நம்முடைய ஸந்நிதியன்றிக்கேயொழிகைதனக்கு மேற்பட நிரயமில்லையிறே; அவர்க்கது வாராதபடி நோக்குகிறீர் நீரிறே' (உதாரா) வஸுவதிவஸுதனைவாறே, நம்மையரை யொப்பாருண்டோ? அவரு மொருவரே: தாமிருந்தநாள் தாம் வேண்டுவன

வெனக்குச்செய்து தாம் போனவன்று நமக்குவேண்டுவன செய்கை க்கு உம்மைப்பெற்றுத் தண்ணீர்ப்பந்தல் வைத்துப்போவதே. (ஐஐ) இருவருக்கும் விதாவானமை யொத்திருக்கச்செய்தே “ஐஐ” என்கிறாராயிற்று; அவர் நமக்குச் செய்யுமவை நீரிருந்து செய்கையாலே நாமவரை இழந்திலோம்; நீரிழந்தீராகில் இத்தனையிறே. கருக.

தாத்பர்யம்.—லக்ஷ்மணா! என் மநஸ்ஸிலிருக்கும் அபிப்ராயத்தையும் செய்யவேண்டும் விதத்தையுமறிந்து இந்த கைங்கர்யமே உத்தமதர்மமென்று தெரிந்துகொண்ட நீர் அதிஸுந்தரமான பர்ணசாலையை நிர்மித்துத்தகப்பனார் செய்யவேண்டும் கார்யங்களைச் செய்தீராகையால், என் தகப்பனார் போனதினாலெனக்கொரு குறைவுமில்லை என்று பர்ணசாலை கட்டினபிற்பாடு ஸ்ரீராமன் இளையபெருமாளைக் குறித்துச் சொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஆரண்யகாண்டம், ருக-ம் ஸர்க்கம், கஉ-ம் ஸ்லோகம்.

———(૦)———

ஐஒ.—ஐஷிநு யா ஸாஸ்ஸாஸி உடாரஶீலா ஶிலாதலேஸ்மிந் ஸஹிதா மயா ஸ்ரீ | காந்தஸ்மிதா லக்ஷ்மண ஜாதஹாஸா த்வாமாஹ ஸீதா பஹு வாக்யஜாதம் || கருச.

அர்த்தம்.—லக்ஷ்மண — லக்ஷ்மணனே! ஐஷிநு - இந்த, ஶிலாதலே-பாறையின்பேரில், ஸஹிதம் - முன்பு, மயா ஸாகம் - என்னோடேகூட, உடாரஶீலா - தாராளமான ஸ்வபாவமுடையவளும், காந்தஸ்மிதா - மநோஹரமான புன்சிரிப்பை யுடையவளுமான, ஸீதா - ஸீதாபிராட்டி, உபோபவிஷ்டா-நாற்புறமும் ஸமீபத்தில் உட்கார்ந்தவளாய், ஜாதஹாஸா - உண்டான சிரிப்பை யுடையளாய், த்வாம் - உம்மைக்குறித்து, வாக்யஜாதம் - வசநஸமூஹத்தை, பஹு-அநேகவிதமாய், ஆஹ - சொன்னாள்.

அவதாரிகை. (ஐஷிநு) முன்புதாமும் பிராட்டியும் ஐஷிநு வாதிகள்பண்ணி ஸரஸமாகப் பரிமாறிற்றோரிடத்திலே பிராட்டியைப்பிரிந்துதாமுமிளையபெருமாளுமாய்த் தேடிக்கொண்டுவாராநிற்கச்செய்தே அவ்விடத்தைக்கண்டு இளையபெருமாளைப் பார்த்து அருளிச்செய்கிறார்.

வ்யா. (ஐஷிநு) இப்படி வெறுந்தரையாயிருக்கிற விடத்திலே காண் அன்று நாமெடுப்பெடுத்தது. (மயா ஸாகம்) ஸ்ருணய

பாரெயில் தம்மைத்தாம் சால மதித்திறே யிருப்பது. நாமுங்கூட
க்காணவந்த சோழரோபாதியாகக் கடக்க நிற்கும்படி அவனுடைய
அளவுடைமையும் விசேஷமாகப் பரிமாறினபடியுங் காண். (உஷித்வா
ஸீதயா) படைவீட்டிலிருந்த நாள் மாமனார் மாமியார்க்குக் கூசிப்படி
விடுவாரோபாதி அளவுபடவாயிற்று போகம் செல்லுவது; இப்
போது அவ்வளவன்றிக்கே ஏகாந்தமாகையாலே தன்னை முற்
றாட்டாக ஸம்ச்லேஷம் பண்ணிக் கொண்டிருந்தா ளாயிற்று.
(ஸீதாயாஸ்ஸஹ) ஜலக்ரீடை பண்ணுகிற தோரிடத்திலே
ஸீதையுமாய் இளைத்தவிடத்திலே அதிலே ஏறுவதாகப் பெருமாள்
முற்கோலிக்கணிசிக்க, "ஷேசூஷி தஜ்ஞாஸ்த்வகோவஸா:" என்கிறவ
திலேயுமொரு ஸம்பந்தமுண்டிறே இவளுக்கு; அத்தை இவரு
டைய ஊஹிதாதிகளைக் கொண்டறிந்து இவரை இளைப்பிக்க வேணு
மென்று பார்த்து பெருமாளேறுவதாகக் கணிசித்த துறையை யடை
த்துக்கொண் டிருந்தாள். (உபோபவிஷ்டா) அப்படியா யிருக்
குமிறே யெங்கும். (காகுத்ஸ்தா) வெறும்புறத்திலே தானே துவ
க்கவல்லவள்; முறுவலைச் சேர்த்தாற்போலே யாயிற்று ஹர்ஷந்தானி
ருப்பது; அதுக்குமேலே அப்போது பிறந்த வெற்றியாலே ஜாத
ஹர்ஷையானாளாயிற்று. (ஸ்வாமிநா) இதுக்கு முன்பு தொடங்கி
னவற்றில் தலைக்கட்டாதே யிருமதில்லையிறே பெருமாள்; இதொன்
றும் தலைக்கட்டப் பெற்றதில்லை; அத்தாலே லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்
டார் பெருமாள்; அவரைவிடா, இவரைப்போரப் பொலியச்சொல்லி
க்கொண்டாடு மிளையபெருமாள் ஹர்ஷத்தைப்பார்த்தாள்; "பாரீரோ
தம்பியீர்! நீங்கள் நினைத்த தெல்லாம் தலைக்கட்டினிகோளிறே;
நீங்கள் வல்லவலிய ஆண்பிள்ளைகள்; நாங்கள் பெண் பெண்டுகள்; நீங்
கள்வேட்டைக்கும் வினைக்கும்போய் வ்யவஸிக்குமவர்கள்; நாங்கள்
வீடுவிட்டுப் புறப்பட்டறியோம்; உங்களுக்கு நினைத்த வகைகளெல்
லாம் தலைக்கட்டலாமிறே; உங்கள் தமயனார் வென்றாரிறே" என்று
ஸஹாஸமாகக்கொண் டிவ்வார்த்தையருளிச் செய்தாளாயிற்று.

தாத்பர்யம்.—லக்ஷ்மணா! குருஜநங்களான மாமனார் மாமியார்
ப்ரதிபந்தகமில்லாத இந்த ஏகாந்தமான விடத்தில் முன்பு ஸீதாதேவி
தாராளமாகத்தன்னை எனக்கு அதீநமாக்கி என்னை ரஸிப்பித்துக்கொண்டு
போருகையில், ஒருநாள் ஜலக்ரீடைபண்ணி இளைத்து இந்த கற்பா
றையின்மேல் இளைப்பாறநான் நினைத்திருக்கையில், என்னுடையமுக

விகாஸாதிகளால் என்னுடைய அபிப்ராயத்தை, யறிந்து என்னைப்பரிஹஸிக்க நினைத்து, எனக்கு முன்னமேதான் அந்தப்பாறைமேலேறி, நான் எந்தவழியாய் ஏறயத்நித்தாலும் அங்கங்கெல்லாம் எனக்கேற அவகாசமில்லாமற் செய்து, அதிஸுந்தரமாயும் புன்சிரிப்பையுமுடைய முகமுடையவளாய், ஓரங்களிலுட்கார்ந்து என்னை ஜயித்து அப்பொழுது பெரியசிரிப்புடன், தம்பியாரே! நீங்கள் புருஷ ஸிம்ஹங்கள், நான் ஸாமர்த்யமில்லாத பெண்பிள்ளை ; நீங்கள் நினைத்தது நினைத்த ப்ரகாரம் நிறைவேற்றுவீர்கள், நானொன்றும் செய்யவறியேன் ; இப்போது உம்முடைய தமயனார் என்னை ஜயித்தாரே அதைப் பார்த்தீரன்றோ ; என்றிப்படி அநேக பரிஹாஸோக்திகளை உம்மோடு சொன்னாளன்றோ என்று ஸீதா தேவியைத் தேடுங்காலத்தில் இளையபெருமாளோடு ஸ்ரீராமன் அருளிச்செய்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

கிஷ்கிந்தாகாண்டம், ௨௮-ம் ஸர்க்கம், ௨௮-ம் ஶ்லோகம்.

———(o)———

௨௭.—நாந்ருக்வேதவிநீதஸ்ய நாயஜுர்வேததாரிண:।
நாஸாமவேதவிதுஷ: ஶக்யமேவம் ப்ரபாஷிதும்॥ ௧௫,

அர்த்தம், அந்ருக்வேதவிநீதஸ்ய - ருக்வேதத்தில் சிக்ஷிதனுகாதவனுக்கு, ஏவம் - இப்படி, ப்ரபாஷிதும் - ஸம்பாஷிக்கைக்கு, ந ஶக்யம் - ஸாத்யமன்று ; அயஜுர்வேததாரிண: - யஜுர்வேதத்தைத் தரியாதவனுக்கும், ந - ஸாத்யமன்று; அஸாமவேதவிதுஷ:- ஸாமவேதத்தை யறியாதவனுக்கும், ந - ஸாத்யமன்று.

வ்யா. (நாந்ருக்வேதவிநீதஸ்ய) அநேந ஶ்லோகேந வாக்யப்ரகாஶகமான ருக்வேதம் ஶிக்ஷிதனானவனுக்கல்லது இப்படி வார்த்தைசொல்லவொண்ணாது. (நாயஜுர்வேததாரிண:) யஜுர்வேதம் தாரணந்தானே அரிது ; அத்தை யறிந்தவனுக்கல்லது இவ்வார்த்தைசொல்லவொண்ணாது. (நாஸாமவேதவிதுஷ:) ஸாமவேதம் கானவிஶேஷங்களறியவரிது ; அதறிந்தவனுக் கல்லது இப்படி வார்த்தைசொல்ல முடியாது. (ஶக்யமேவம் ப்ரபாஷிதும்) இத்தை யெல்லாவற்றையு மப்யஸித்தவனுக்கல்லது நம்முன்னே இப்படி வார்த்தைசொல்லலாமோ வென்றாரிறே பெருமாள். ௧௫.

தாத்பர்யம்.—ருக்யஜுஸ்ஸாமவேதங்களை ஸுசிக்ஷிதமாயறியாதவன் இப்படிவார்த்தை சொல்லவறியாள் என்று திருவடி விஷயமாய் இளையபெருமாளைப் பார்த்துப் பெருமாளருளிச்செய்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

கிஷ்கிந்தாகாண்டம், க-ம் ஸர்க்கம், ௧௧௫-ம் ஸ்லோகம்.

௭௭.—பத்மஸௌகந்திகவஹம் ஸிவம் ஸோகவிநாஸநம்|
த்ந்யா லக்ஷ்மண ஸேவந்தே பம்போபவநமாருதம்||௧௧௫.

அர்த்தம்.—லக்ஷ்மண-லக்ஷ்மணனே! பத்மஸௌகந்திகவஹம் - தாமரஸம் ஆம்பல் இந்த புஷ்பங்களின் பரிமளத்தை அடைவிப்பியாநிற்கிறதாயும், ஸிவம் - பரிசுத்தமாயும், ஸோகவிநாஸநம் - துக்கத்தைப் போக்கடிக்கிறதாயும் இருக்கிற, பம்போபவநமாருதம்- பம்பாஸரஸ்ஸின் தீரத்திலிருக்கிற வநங்களில் நின்றும் வீசுகிற காற்றை, த்ந்யா: - புண்யவான்கள், ஸேவந்தே - ப்ரதீக்ஷிக்கிறார்கள்.

வ்யா. (பத்மஸௌகந்திகவஹம்) கலம்பகஞ் சூடுவாரைப்போலே. (ஸிவம்) இதினத்தனை நன்மையுடையாரொருவருமில்லை. இதுக்கு நன்மையென்னென்னில்; (ஸோகவிநாஸநம்) நம்மை விதுவயம்பண்ணுது. ஸோகம் மறுவலிடாதபடி பண்ணும்போலே யிராநின்றது. (த்ந்யா:) தநமுடையராயிருப்பார் க்ஷாமத்துக்கு அஞ்சார்களிறே. (ஸேவந்தே) அஞ்சாமையே யன்றிக்கே இத்தை யநுபவிக்கைக்கு வநகாதமான ஸ்தலம் தேடாநிற்பர்கள். (பம்போபவநமாருதம்) "சூகரத்திலே நெருப்பு" என்னுமாப்போலே. ௧௧௫.

தாத்பர்யம்.—லக்ஷ்மண! பம்பாதீரத்திலிருக்கும் தோட்டங்களிலிருந்து புறப்பட்டு அங்குள்ள தாமரைமுதலான அநேக புஷ்பங்களின்மேல்விழுந்து அதின் ஸுகந்தங்களைக்கொண்டு குளிர்ந்துவீசுகிற இந்தக்காற்றானது,இப்போது விரஹியான என்னைமுடித்து என்னுடைய துக்கத்தைப் போக்கப்பார்க்கிறது. தன் ப்ரியைகளுடன் கூடினபுண்யவான்கள் இந்தக்காற்றை எதிர்பார்த்துக்கொண்டன்றோ அந்தந்த இடங்களில் வஸிக்கிறார்கள்; என்று மலயமாருத தப்தரான பெருமாளருளிச் செய்தார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

ஸுந்தரகாண்டம், ௩௪-ம் ஸர்க்கம், ௨௩-ம் ஶ்லோகம்.

௨௭.—ஸ்வப்நேபி யத்யஹம் வீரம் ராகவம் ஸஹலக்ஷ்மணம் |
பஶ்யேயம் யதி ஜீவேயம் ஸ்வப்நோபி மம மத்ஸரீ ||

அர்த்தம்.—அஹம் - நான், ஸஹலக்ஷ்மணம் - லக்ஷ்மணனோடு கூடின, வீரம் - ஸமர்த்தரான, ராகவம் - ஶ்ரீராமனை, ஸ்வப்நேபி - ஸ்வப்நத்திலேயாவது, பஶ்யேயம்யதி - பார்ப்பேனேயானால், ஜீவேயம் - பிழைத்திருப்பேன்; ஸ்வப்நோபி - ஸ்வப்நமும், மம - என்னுடைய விஷயத்தில், மத்ஸரீ - பொறாமையுடையதாயிருக்கிறது.

வ்யா. (ஸ்வப்நேபியத்யஹம்வீரம்) ஸ்வப்நத்திலே கண்டாலும் உஜ்ஜீவநிவர்த்தகராகவல்லராயிற்று. (ராகவம்ஸஹலக்ஷ்மணம்) பிரிகிறபோது இருவரையுங்கூடப் பிரிகையாலே காணுமிடத்திலும் இருவரையுங்கூடக் காணவேணுமென்றிறே ஆசைப்படுவது. அப்போது இருவரும் பிரிகையாலே தங்களில் கூடினார்களோ இல்லையோ என்னும் அதிஶங்கைபண்ணியிருக்குமே. (பஶ்யேயம்யதிஜீவேயம்ஸ்வப்நோபிமமமத்ஸரீ) என்னவஸ்தை யறிந்து முகங்காட்டாமைக்கு அவரே யன்றிக்கே இதுவும் என்னை நலியவேணுமோ என்றாளிறே.

தாத்பர்யம்.—ஸ்வப்நத்திற் கண்டாலும் என் துக்கங்களைப் போக்கவல்லரான பெருமாளையும் இளையபெருமாளையும் ஸ்வப்நத்தில் பார்த்தாவது ஜீவிக்கலாமென்றால் அதுவும் என்னிடத்தி லஸூயைபண்ணி வாராமலிருக்கிறது; என்று ராக்ஷஸிகள் மத்யத்திலிருப்பவளான பிராட்டி யருளிச்செய்தாள்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

ஸுந்தரகாண்டம்- ௧௬-ம் ஸர்க்கம், ௪-ம் ஶ்லோகம்.

௨௮.—ராமஸ்ய வ்யவஸாயஜ்ஞா லக்ஷ்மணஸ்ய ச தீமத: |
நாத்யர்த்தம் க்ஷுப்யதே தேவீ கங்கேவ ஜலதாகமே || ௧௫௮.

அர்த்தம்.—ராமஸ்ய - ஶ்ரீராமனுடையவும், தீமத: - புத்திமானான, லக்ஷ்மணஸ்ய - லக்ஷ்மணனுடையவும், வ்யவஸாயஜ்ஞா - உத்யோகத்தை யறிந்தவளான, தேவீ - ஸீதாபிராட்டி, ஜலதாகமே - மழைக்காலத்தில், கங்கேவ - கங்காநதிபோலே, அத்யர்த்தம் - மிகவும், நக்ஷுப்யதே - கலங்குகிறாளில்லை.

ஸ்ரீ: (ராக்ஷஸீப்ரஸாதஜா) "ஸாதஸ்து தத்ஸமீ" என்றும் "ஸுமஹாப்ராணஸம்ஸ்ரவம்" என்றும் சொல்லுகிறபடியே அறிந்திருக்குமவளாகையாலே பரித்திருந்தாள். ஶ்ரீராமஸந்நிதியுடையாரை ஒருநாளும் விடேனென்றும், அவர்களை விடவேண்டிற்றாகில் நானுளேனாகேனென்றுமிறே அவர் சொல்லிவைப்பது. "ஸர்வதாஹம் ஜீவிதம் ஜஹ்யாம்" என்றிருக்குமவரிறே. (லக்ஷ்மணஸ்யபீதை:) அவர் தம்முடைய ஏவலாலே ராமாஶ்ரமத்தின் பின்னே அது ராமனை என்றறியாதேபிடிக்க வொருப்பட்டபோதும் "இதுராமாஶ்ரமம்" என்று சொல்லும்படி அவ்வளவிலும் தெளிந்திருக்கும் இளையபெருமாள் படியை யறிந்திருக்கையாலும். (நாதஸ்ய லக்ஷ்மணஸ்ய தேவீ) அவர் தலையாலே சுமக்கும்படி வஸ்துவாய்ப் போந்தவளாகையாலே க்ஷாமக்ஷோமதாக்களுண்டாயிருக்கச் செய்தேயும் க்ஷாந்தியைதபாயிற்றிலள். ஸத்தாநாஶம் பிறக்குமளவாயிருக்கச்செய்தேயும் பரித்திருந்தாள். (மஹேவஜலதாமதி) நிரந்தரமாக வர்ஷிப்பர்ஷெ விழாநிற்கச் செய்தேயும் கங்கை தெளிந்திருக்குமாப்போலே.

தாத்பர்யம்.—ஸீதாதேவி ராக்ஷஸிகளினால் பீடிதையாயிருக்கச் செய்தேயும் பெருமாளுடைய ஆஶ்ரிதரக்ஷணவ்ரதத்தையும் அவரை உத்ஸாஹிப்பிக்கும் இளையபெருமாளுடைய வ்ரதத்தையும் அறிந்தவளாகையால், எவ்வளவு மழைபெய்தாலும் கங்காநதி எப்படி கலங்காதோ, அப்படியே கொஞ்சமும் விகாரமின்றி யிருந்தாள்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம், ௫-ம் ஸர்க்கம், ௫-ம் ஶ்லோகம்.

௨௦.— ந மே து:கம் ப்ரியா தூரே ந மே து:கம் ஹ்ருதேதி வா।
ஏதத்தேவாநுஶோசாமி வயோஸ்யா ஹ்யதிவர்த்ததே. ௧௫௬.

அர்த்தம்.—ப்ரியா - அபிமதையான ஸீதை, தூரே - தூரத்தில் (இருக்கிறாளென்று), மே - எனக்கு, து:கம் - வ்யஸநமானது, ந - இல்லை; ஹ்ருதா-(ராவணனால்) அபஹரிக்கப்பட்டாள்; இதிவா- என்றாவது, மே - எனக்கு, து:கம் - வ்யஸநமானது, ந - இல்லை; அஸ்யா: - இவளுடைய, வயோஹி - வயஸ்ஸன்றோ, அதிவர்த்ததே- கழிகிறது; ஏதத்தேவ - (என்கிற) இத்தைக்குறித்தே, அநுஶோசாமி - துக்கிக்கிறேன்,

வஸ்ரா. வைதேஹீ நம்மைப் பிரிந்து தூரத்திலே வர்த்தியா நின்றாளென்றதுக்கு வெறுக்கிறேனுமல்லேன்; இனி வலிய ரக்ஷஸ்ஸாலே பிரிவுபிறந்தது; இனி யெங்ஙனே நாம் ஸாதிக்கும்படி என்றதுக்கு வெறுக்கிறேனுமல்லேன். அதாகிறது - கடக்கவிருந்தாளாகில் கடலை யணைசெய்து நாலுபயணம் உள்ளே எடுத்துவிட்டுத் திருகிறது; இனி பிரிவுக்கு ஹேதுபூதனானவனை பையலைக் கிழங்கெடுத்துப் போகடத்திருகிறது அக்கார்யம்; நானிதொழிந்த அல்லாதவற்றுக்கு வெருவேன்; இதொன்றுக்குமே நான் ஶோகிப்பது. அதேதென்னில்; (வயோஸ்யா ஹ்யதிவர்த்ததே) இவைபோலேகாணும், என்னம்பால் மீளவிடலாவதொன்றன்றே? அணைக்குக் கிழக்குப்பட்ட நீரை மீட்கப்போகாதிறே. ௧௫௬

தாத்பர்யம்.—ஸீதை வெகு தூரதேசத்தி லிருக்கிறாளென்றுவது, அவளைக்கொண்டுபோன ராவணன் பலவானாகையால் அவனை யெவ்விதத்தில் ஜயிப்போமென்றுவது நான் சிந்திக்கவில்லை; ஆகிலும், அநுபவயோக்யமான இந்த யௌவநம் வ்யர்த்தமாய்ப் போய்விடுகிறதே; இதுமறித்தும் வாராதே என்று இதுக்கே நான் சிந்திக்கிறேன் என்று ஸமுத்ரதீரத்தில் காற்று ஸுகமாக வீச அப்பொழுது ஸீதையை நினைத்துப் பெருமாளருளிச் செய்கிறார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

———

உத்தரஸ்ரீராமாயணம், ௪௦-ம் ஸர்க்கம், ௧௬-ம் ஶ்லோகம்.

———(:o:)———

௨௮.—ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித:।
பக்திஶ்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி॥ ௧௬௦.

அர்த்தம்.—ராஜந் - ஸ்வாமியே! மே - எனக்கு, பரம: - உத்க்ருஷ்டமான், ஸ்நேஹ: - ப்ரீதியானது, த்வயி - தேவரிடத்தில், நித்யம்-எப்போதும், ப்ரதிஷ்டித:-ஸ்திரப்படுத்தப்பட்டது, பக்திஶ்ச-பக்தியும், நியதா - நித்யமாகச் செய்யப்பட்டது; வீர - சூரனானவரே! பாவ: - அபிப்ராயமானது, அந்யத்ர - வேறிடத்தில், ந கச்சதி - போகிறதில்லை.

வ்ரா. (ஸ்நேஹோபூர்வ:) "என்றனளவன்றால் யானுடை-யவன்பு". (ராஜநுக்ஷயி) இதுதானும் என்னால் வந்ததன்று, *அதுவு-மவனதின்னருளே. (நித்யம் வ்யதிஷ்டத:) இன்றன்றாகில் மற்றொ-ருபோது கொடுபோகிறோமென்ன; அங்ஙன் செய்யுமதன்று, யதிஷ்-டையைப்பற்றி வருகிறதாகையாலே; "நின்னலாலிலேன்காண்" என்னு-மாப்போலே. (ஹத்திஸ்நியதா) ஸ்நேஹமாவதென்; ஹத்தியாவதென்-னென்னில்; பெருமாளை யொழியச் செல்லாமை பிறந்து வர்த்திரே, க்ஷத்தில்முடிந்த வக்ஷ்வதிஷ்டநிலை ஸ்நேஹம்; ஹத்தியாவது-"நில்" என்ன "க்ஷாமாஷ்வ" என்னும்படியாய் முறையறிந்து பற்றின இளையபெரு-மாள் நிலை. (வீர) தன்னைத் தோற்பித்த துறை. உம்முடைய வீர-ங்கொண்டு புறம்பே வென்றீரென்று இங்கு வெல்ல முடியாது. தானும் வீரனாகையாலே தோற்பித்த துறையைப் பிடித்துப் பேசுகி-றார். (ஹாவோநாந்த்ருமஹதி) என்னை மீட்டீராகிலும் என்னு-டைய நெஞ்சை மீட்கப்போகாது. "க்ஷந்த்ரு" என்கிறது "மற்றா-ரானுமுண்டென்பார்" என்னுமாப்போலே கொடுபோக நினைத்த தேஶத்தின்பேருங்கூடத் தனக்கு க்ஷஸஹ்யமாயிருக்கிறபடி. கசாo.

தாத்பர்யம்.—பட்டாபிஷேகமான வநந்தரம் அவ்வவர்கள் கோ-ரின அபீஷ்டங்களை அவ்வவர்களுக்குத் தந்து உமக்கென்ன வே-ணுமென்று திருவடியைப் பெருமாள் கேட்க, திருவடி, ஸ்வாமீ! தே-வரீரைவிட்டுப் பிரிந்தால் நிற்கப்போகாத ப்ரீதியும், ஸ்வரூபாநுரூப-மாக ப்ராப்தமான கைங்கர்யங் கொள்ளுகைக்குண்டான அபிநிவேச-மும் தேவரீருடைய இந்த ராமாவதாரத்தையே எப்போதும் பற்றி-யிருக்கும். தேவரீருடைய ஸாமர்த்யத்தினால் என்னை மோக்ஷத்துக்-குக் கொண்டுபோகத் திருவுள்ளம் பற்றினாலும் என்னுடைய மநஸ்ஸு இதைவிட்டு வேறெங்கும் செல்லமாட்டாது என்றுசொன்னார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

ANCIENT ORIENTAL MANUSCRIPTS

தனிஶ்லோகம் முற்றிற்று.